# தித்திக்கும் தேனே...!

என்.சீதாலெட்சுமி



Optimized by www.ImageOptimizer.net

# தித்திக்கும் தேனே...!

## 1

''அசாத்திய சாதக சுவாமின அசாத்தியம் தவ கிம் வத
ராம தூத கிருபா சிந்தோ மத்காரியம் சதாய பிரபோ!''

தன் இஷ்டத் தெய்வமான ஆஞ்சநேயரை துதி பாடிக் கொண்டே, பெட்டியினுள் தனது துணிகளை அடுக்கிக் கொண்டிருந்தான், புகழேந்தி - நம் கதையின் நாயகன்!

''புஜ்ஜு கண்ணா! ஓவர் பக்தி உடம்புக்கு ஆகாது ராசா... ஆகாது!!''

''ஆமா... இந்த சமஸ்கிருத ஸ்லோகமெல்லாம் எங்கடா கத்துக்கிட்டே?''

Optimized by www.ImageOptimizer.net

''எனக்கென்னமோ நீ சாமியாரா போய்டுவேன்னு தான் தோணுது! ஹப்பா... கல்யாண செலவு மிச்சம்!''

அவனுக்கு ஒரு சிறு உதவிகூட செய்யாமல், கட்டிலில் ஒய்யாரமாக அமர்ந்து கொண்டு, கைகள் இரண்டையும் மெத்தையில் ஊன்றி, முதுகை சாய்வாய் வைத்து, கால்களை நன்றாக நீட்டி அனாயாசமாய் அமர்ந்திருந்தவர் யாரென்று எண்ணினீர்?!

ஆருயிர் தோழி என்றா? ம்ஹூம்!

குவார்ட்டர் அடிக்கையில் சேர்ந்து கொள்ளும் நண்பன் என்றா? கிடையாது!

செல்லமாய் சண்டையிடும் தங்கை என்றா? நோ சான்ஸ்!

அனைத்திற்கும் போட்டி போடும் தம்பி என்றா? இல்லையே

விட்டுக் கொடுத்து வாழும் அக்கா என்றா? நஹி... நஹி!

கட்டிப் புரளும் அண்ணன் என்றா? லேது!

அத்தை மகளோ? மாமன் பெற்ற மாதரசியோ? ம்ஹூம்! வாய்ப்பே இல்லை!

அவள் - மாதங்கி! புகழின் அன்னை! (அப்படிப் போடு!)

''நீங்க ஏன் பேசமாட்டீங்க? நல்லா பேசுங்க! படுத்திட்டுப் பேசுங்க... உருண்டுட்டு பேசுங்க... என் தூங்கிட்டே பேசினா... அதுக்கு பேர் உளறல்! லூஸ் டாக்!)

''ஹோ... இந்த வாக் இங்கிலீஷ்... டாக் இங்கிலீஷ்... பாத் இங்கிலீஷ்... ஸ்விம் இங்கிலீஷ்... அது மாதிரி சொல்றே?'' - மண்டையைத் தட்டி மாதங்கி யோசிக்க,

''ஹான் அதே தான்!''



''நீ சொல்லி செய்யாம இருப்பேனா? கண்டிப்பா செஞ்சுடுறேன்!'' என்று அவனது கையைப் பிடித்து, அதில் அடித்து ஓர் சத்தியம் போட்டார்.

கையை உருவிக் கொண்டு, ''செய்ங்க! செய்ங்க! உங்களுக்கெல்லாம்... அப்பாவும் நானும் சம்பாரிச்சுப் போடற கொழுப்பு! உழைக்கிற மனுஷனைக் கேலி பண்றீங்க?'' என்றவனின் குரலில், அவன் கொண்டு வர முயன்ற கோபம் ஒரு சதவீதம் கூட இல்லை... மாறாய் சிரிப்பே பரந்து விரிந்திருந்தது!

''உழைக்கிற மனுஷன்!? ஹ்ம்ம்! உழைக்கிற மனுஷன்! ஹ்ம்ம்!'' என்று இரண்டு முறை அவர் சொல்லிப் பார்க்கவும்,

அடுத்த தாக்குதலுக்கு ஏதுவாய், தாயின் முகத்தையே சுவாரஸ்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் புகழ்.

''ஹோ... நீ கடலுக்குப் போனாயா? இறால் பிடித்தாயா? பிடித்த இறாலை பண்ணையில் விட்டாயா? அதுக்கு சோறு தான் போட்டாயா? இல்லை... அதை சாகடித்து... பெட்டியில் அடைத்தாயா? இவையனைத்தும் போகட்டும் மகனே, சும்மாடு சுமந்து சென்று வெள்ளைக்காரனின் கப்பலில் ஏற்றினாயா? கடலில் இறங்கி கப்பலைத் தள்ளித் தான் விட்டாயா? எதைச் செய்தாய் மகனே... எதைச் செய்தாய்? உன்னை நான் உழைப்பாளி என்று ஒப்ப?!'' - தகுந்த ஏற்ற இறக்கங்களுடன், மாதங்கி பேச, புகழ் சிரிப்பு தாங்க முடியாமல், வயிற்றைப் பிடித்துக் கொண்டு மெத்தையில் அமர்ந்து விட்டான்.

அவர்களது இறால் ஏற்றுமதி வாணிபத்தை நாளைக்கொரு முறையாவது கேலி செய்துவிட வேண்டும் மாதங்கிக்கு!

Optimized by www.ImageOptimizer.net

அம்மா! என்னால முடியல!'' என அவன்
''ஹய்யோ... அம்மா! என்னால முடியல!'' என அவன் பேச்சிற்கு இடையே மூச்சு வாங்க, மாதங்கியோ இல் லாத மீசையை நன்றாக நீவிவிட்டுக் கொண்டு, கர்வப் பார்வை பார்த்தார்! (லேடி கட்ட பொம்மன்! இல்லை யில்லை... இறால் கட்டபொம்மன்!)

''மாதி!'' - புகழின் தந்தை வரவேற்பறையிலிருந்து குரல் கொடுத்தார்.

அவ்வளவு தான், மாதங்கி கப்சிப்பென்று வாய் மூடி, இதுவரை பேசியது தானில்லை என்ற பாவனையில், பவ்யத்துடன் வரவேற்பறை நோக்கிச் சென்றார் என்று கூற ஆசை தான்...

ஆனால்... அவரோ!

''வந்துட்டாருய்யா! வந்துட்டாரு! ஜாக்சன் துரை வந்துட்டாரு!'' என்று சலிப்பு ராகம் இழுத்து,

''வாங்க தொர... நாங்க இங்க இருக்கோம்!'' என்று தனது கணவனான கோவர்த்தனை அழைத்தாள். (அதானே பார்த்தேன்! கட்ட பொம்மனாவது அடங்குறதாவது!)

''அப்பா மேல கொஞ்சம்கூட பயமே இல்லையா மா?'' என்று புகழ் வியக்க,

''அவரென்ன... தூத்துக்குடி சிட்டியோட போலீஸ் கமிஷனரா? நான் பயப்படறதுக்கு?'' என்று திருப்பிக் கொடுத்தார் மாதங்கி.

''ஆமா... என்னமோ போலீஸ்க்கு பயந்தவங்க மாதிரி... ஒரு வாட்டி போலீஸ் வெரிஃபிகேஷனுக்கு வந்த கான்ஸ்டபிளை கூட்டி வச்சு, கேரம் போர்டு விளையாடின வங்க தானே நீங்க?'' என்றான் புகழ், நக்கல் விரவிய பாவனையில். (மிலிட்டரியே வந்தாலும்... எங்களை அசைச்சுக்க முடியாது! அசைச்சுக்க முடியாது!)



தன் மீது பாய்ந்த கேலி அம்பை அப்படியே கிடப்பில் போட்டவர்,

''ஆமா... இதெல்லாம் என்னடா சட்டை? அறுபது வயசுக்காரன்... எழுபது வயசுக் கிழத்துக்கு எடுத்துக் கொடுத்த மாதிரி... வெறும் கோடும்... கட்டமுமா! யூத் டேஸ்டே தெரியலைடா உனக்கு!''

''என்னமோ ஃபாஷன் டிசைனிங் கோர்ஸ்ல எம்பி எம்பி எம்.பி.ஏ. வாங்கின மாதிரி நீங்க போடற சீன் இருக்கே! அய்யய்யோ! முருகப் பெருமானுக்கு மொட்டை போட்டா கூட அடங்காது போல இருக்கு!''

''ச்சே, பாவம் டா மில்க்சார்! அவருக்கு இருக்கிறதே... ஒண்ணு ரெண்டு முடி... அதுவும் பின் மண்டையில் தொத்திக்கிட்டு நிக்குது! அதையும் எடுக்க வழி பண்ணாதடா!'' (மில்க்சாரா? அதென்ன புது வகையான மில்க்சாரா? ஹேறா... ஹேறா... கோவர்த்தன்ல இருக்க 'கோ'வை 'மில்க்' ஆக்கி, கூட மரியாதைக்காக சார் ஆக்கும்! கிழிஞ்சது!)

''நான் உங்களுக்கு மொட்டை போடறதைப் பத்திப் பேசுறேன்!''

''யாருக்குப் போட்டா என்னடா? நானும் உங்க அப் பாவும் ஈருடல் ஓருயிர்! யூ... சி... வி ஆர் லவ்வர்ஸ்!''

''அதான், எனக்கு இன்னைக்கு வரைக்கும் புரியவே இல்லை! ரெண்டு வரி சேர்ந்த மாதிரி பேசாத அப்பா, உங்களை எப்படிம்மா லவ் பண்ணார்? அதுவும், குடும் பத்தை எதிர்த்துக்கிட்டு?''

''நீ லவ் பண்ணும்போது... புரியும்டா புஜ்ஜு!''

Optimized by www.ImageOptimizer.net

"பாப்போம்! பாப்போம்!" என்றவன்,

"உங்களுக்கு எத்தனை வாட்டி சொல்லியிருக்கேன்... "உங்களுக்கு எத்தனை வாட்டி சொல்லியிருக்கேன்... என்னை புஜ்ஜூன்னு கூப்பிடாதீங்கன்னு? ஏதோ நாயை சோறு சாப்பிட கூப்பிடுற மாதிரி இருக்கு!" என்று அலுத்துக் கொண்டதோடு நில்லாமல்,

"நான் சொன்னதை மதிக்காம... மேலும் மேலும் புஜ்ஜூன்னு கூப்பிட்டுட்டே இருந்தீங்க... மாதங்கி அம்மா... மங்கி மம்மி ஆகிடுவீங்க! ஜாக்கிரதை!" என்றான் எச்சரிக்கும் பாவனையில்! (வேணாம்... அப்புறம் மங்கி மம்மி... ஜம்ப் பண்ணி... ஜம்ப் பண்ணி அடிப்பாங்க!)

போடா பொடிப் பயலே என்பது போல் அவனைப் பார்த்த மாதங்கி,

"சரி... சரி... பெட்டியை அடுக்கி முடி! நம்ம சண்டையில... உன்னோட ஷார்ட்ஸ்க்குப் பதிலா... அப்பாவோட கைலியை எடுத்தாலும் பரவாயில்லை... ரொம்ப மோசத்துக்கு என்னோட பாவாடையை எடுத்திட்டுப் போய்டப் போறே!" என்றார் பேச்சை மாற்றும் விதமாய்.

"எப்படி? ஒரு வாட்டி... சித்தி வீட்டு கிரகப் பிரவேசத்துக்குப் போகும்போது, இலா (இலா என்றழைக்கப்படும் இலக்கியா புகழின் தங்கை) ஸ்கூல் பிக்னிக் போறதுக்காக பாக் பண்ணி வச்சிருந்த பெட்டியைத் தூக்கிட்டுப் போனீங்களே? அப்படியா?" - தாடையில் ஓர் விரலால் தட்டி, புகழ் யோசித்ததில், கிண்டல் மிகவுற்று இருந்தது!

"எங்க இருந்துடா வந்தது உனக்கு இந்த ஞாபக சக்தி? பத்து வருஷம் முன்னாடி நடந்ததெல்லாம் இப்போ சொல்லிக்கிட்டு... வருங்காலத்தில் ரொம்பக் கஷ்டப்படுவே சொல்லிட்டேன்! மறதி தான்... திருமணத்துக்கான சக்சஸ் ஃபார்முலாவே!"



"அப்போ... நீங்க ஞாபக மறதி பேர்வழின்னு சொல்லுங்க!"

"ச்சே! ச்சே! பொண்ணுங்களுக்கு எப்பவுமே ஞாபக மறதி வராதுடா... குறிப்பா கல்யாணம் ஆனதுக்கு அப்புறம்... வரவே வராது! இந்த சட்டம் ஆண்களுக்கு மட்டுமே!" (இது நல்ல சட்டமா இருக்கே!)

"ஹுக்கும்! அப்போ... அப்பாவை கழண்ட கேஸ்ன்னு சொல்றீங்க?"

"டேய்... டேய்! ஏன்டா? ஏன்டா? உனக்கு இந்த உண்மை வெறி!?" என்று பதில் கொடுத்த மாதங்கி, மகனைப் பார்த்துக் கண்ணடித்தார். (அடப்பாவிகளா, சீன்ல இல்லாத ஒருத்தரை... இந்த கலாய்யாடா கலாய்க்கிறது?)

அவர் கூறியதன் அர்த்தத்தை, சில வினாடிகள் சென்ற பின்னே உணர்ந்தவன்,

"திஸ் இஸ் டூ மச், அம்மா!" என்றான் ஒரு விரல் நீட்டி. ஆனால், அதற்கு மாறாய், முகத்தில் ஏகப்பட்ட சிரிப்பு.

"போடா! போடா! இதை விட டூ மச் எல்லாம் நான் செய்திருக்கேன்! இதுக்குப் போய்!" - பெரிய ரௌடி போல் அல்டாப்பாய் பேசியவர்,

"எத்தனை வாட்டி... உங்கப்பா கண்ணு முன்னாடியே நூறு ரூபாய்க்கு வாங்கின பொருளை இருநூறு ரூபான்னு கணக்கு எழுதி, அவர்கிட்ட வாங்கியிருக்கேன்! இப்படிப்பட்ட ஞாபக சக்தியை... நீ தான் மெச்சிக்கணும்!" என்று கணவனின் புகழ் பாடினாள்.

Optimized by www.ImageOptimizer.net

''ஹே! பொய் கணக்கு எழுதினீங்களா? வீட்டுக்குள்ளேயே கொள்ளை அடிச்சிருக்கீங்க? இதுக்கு என்ன தண்டனை கொடுக்கிறது? நம்ம வீட்டு எம்.பி.சி. (மாதங்கி ஃபைனல் கோர்ட்) சட்டப்படி... மூணு நாளுக்கு நான்-வெஜ் கிடையாது!'' என்று புகழ் அறிவிக்க,

''சட்டத்தை உருவாக்கின எனக்கே தண்டனையா!? என்ன கொடுமை மில்க் சார் இது?'' - தலையில் கை வைத்து, கணவனை 'செல்லமாய்' பேச்சின் உள்ளே இழுத்தார் மாதங்கி.

உடனேயே ''நாட்டாம தீர்ப்பை மாத்து!'' என மாதங்கி, கர்ஜிக்க,

''முடியாது போங்க! சட்டம் சட்டம் தான்!'' என்றுவிட்டு, உணவுண்ணும் அறைக்கு விரைந்த புகழேந்தி, சமையல்கார அம்மாவிடம் ''ரங்கம்மா பாட்டி... இன்னைக்கு என்ன சிக்கனா? மட்டனா?'' என வினவினான்.

''இறால் தொக்கு, தம்பி!''

''வரே வாவ்! அம்மாவோட ஃபேவரட் ஆச்சே! அப்போ... கண்டிப்பா தண்டனையை அமல் படுத்திட வேண்டியதுதான்!''

அங்கே உணவு மேஜையில் அமர்ந்து மதிய உணவை உண்டு கொண்டிருந்த கோவர்த்தன், ''எதுக்குடா தண்டனை?'' - முதன் முறையாக வாய் திறந்தார்.

''உங்ககிட்ட பொய் கணக்கு காட்டி இருக்காங்கப்பா, அம்மா!'' என்று விஷயம் புதிது என்பது போல் கூறியவன்,

''நீங்கள் ஏமாற்றப் பட்டு இருக்கிறீர், மிஸ்டர் கோவர்த்தன்!'' என்றான் கோர்ட் பாணியில். (கலாய்க்கப்பட்டும் இருக்கிறீர்)



''எல்லாம் எனக்குத் தெரியும்! என்னை ஏமாத்தி... காசு வாங்குறதில அவளுக்கு ஒரு அல்ப சந்தோசம்! அதை... ஏன் கெடுப்பானேன்னு நானும் விட்டுறது!'' என்று சாதாரணமாய் கூறியவர்.

''அப்படி வாங்குற பணத்தை... அவளுக்கு நகை... துணின்னா வாங்கிக்கிறா? ஒரொரு வருஷம் ஆரம்பிக்கும் போதும்... ''என்னோட கிஃப்ட்''னு சொல்லு நம்ம எல்லாருக்கும் கொடுக்கிறாளே... அது இதில வரது தான்!'' என்றார் பின்னணி விளக்கத்துடன். (நீங்க... இவங்களை விட தில்லாலங்கடியா இருப்பீங்க போலவே! பேசுறவனை நம்பிடலாம்... ஊமைச் சாமியாரைத் தான் நம்ப முடியாதுன்னு நிரூபிக்கிறீங்களே பாஸ்!)

''அம்மாவை வெறும் சிரிப்பு போலீஸ்ன்னு நினைச்சிட்டு இருந்தேன்... அவங்களுக்குள்ளேயும் ஒரு கேரக்டர் ஆர்ட்டிஸ்ட் ஒளிஞ்சிருக்காங்க... பாருங்களேன்!'' என்று புகழின் வியப்பில், கோவர்த்தனின் முகத்தில் கோடென புன்னகை.

அதற்குள், ''வீட்டுக்கு சாப்பிட வரதே... மாசத்தில ஒரு நாளோ... ரெண்டு நாளோ... அப்பவாவது என்னோட சேர்ந்து சாப்பிடலாம் தானே?'' என்றவாறே வந்த மாதங்கி, கணவனின் தட்டில் குறைந்திருந்த காய்களை இட்டு நிரப்பினார். (நீங்க வந்தா தானே!)

''நீங்க ரெண்டு பேரும்... ரொம்ப சுவாரஸ்யமா சண்டை போட்டுட்டு இருந்தீங்க. எதுக்கு உங்களைத் தொந்தரவு பண்ணுவான்னேன்னு தான் நானே சாப்பிட வந்துட்டேன்.''

இதுதான் கோவர்த்தன்! நான் ஆண்! வேலை பளுவின் நடுவே, பசியோடு வீட்டுக்கு வரும் என்னைக் கவனிக்

Optimized by www.ImageOptimizer.net

காமல், அப்படியென்ன அரட்டை என்று ஒரு வார்த்தை கேட்க மாட்டார்!

வறுமையை மட்டும் அனுபவித்து வந்த அவரது இளமைக் காலத்தை, வெறுமையின் பிடியில் சிக்க விடாமல் காத்தது, மாதங்கியின் இந்தப் பேச்சு தான்!

அதற்காக, மாதங்கி ஒன்றும் பெரிய பணக்கார வீட்டுப் பெண் இல்லை! அன்றாட உணவிற்கும், உடைக்கும் இழுபறியாக இருந்த குடும்பம் தான் அவளுடையதும், ஆனால்... அவளோ, இருப்பது இம்மி என்றாலும் கிடைத்தது கோடி என்று எண்ணும் ரகம்!

காதல் கொண்டதால் குடும்பத்தாரால் ஒதுக்கி வைக்கப்பட்டபோதும் சரி, வாழ்க்கையை ஆரம்பித்த காலத்தில் நிலவிய வறுமையின் போதும் சரி, இப்போது அவர்களது சுய தொழில்... பெரும் இறால் பண்ணையாக உருமாறிய பின்னர் நிறைந்த செழுமையின் போதும், சரி மாதங்கியின் குணத்தில் மாறுதல் இல்லை!

எதையுமே, மிக தீவிரமாய் எடுத்துக் கொண்டு, மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொள்ளும் ரகமல்ல, மாதங்கி!

மனைவியின் குணத்தை, மகள் இலக்கியாவிடமும், மகன் புகழேந்தியிடமும் காணும் போது, கோவர்த்தனுக்கு நிறைவாய் இருக்கும்!

என்ன கஷ்டம் வந்தாலும், சமாளித்து விடுவார்கள் என்ற நிறைவு அது!

அதே நிறைவுடன், ''நீயும் சாப்பிடு, மாதி!'' என்றார் நாற்காலியை மனைவிக்கு இழுத்து விட்டவாறே.



''உங்க பொண்டாட்டி மட்டும் தான் உங்க கண்ணுக்குத் தெரிவாங்களோ? தடி தாண்டவராயன் மாதிரி... இங்க ஒருத்தன் நிக்கிறது தெரியலையோ?'' என்று புகழ் கேட்க,

''தடி தாண்டவராயன்னு சொல்லாதடா... ஏதோ ரௌடி கும்பலுக்கு நடுல நிக்கிற எஃபெக்ட் வருது! ஷார்ட் அண்ட் ஸ்வீட்-டா பீம் பாய்ன்னு சொல்லு!''

''அம்மாமாமாமாமாமாமா!'' என்று புகழ் பல்லைக் கடிக்க,

''பல்லைக் கடிக்காத... இந்தா இந்த ப்ரானைக் கடி!'' என்று அவன் கை பிடித்து, அருகே உட்கார வைத்துக் கொண்டார்.

உணவின்போது, அன்றிரவு புகழ் மேற்கொள்ளவிருக்கும் அமெரிக்கப் பயணம் பற்றி பேசப்பட்டது.

அமெரிக்காவின் சில மாகாணங்களுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருந்த அவர்களது நிறுவனம், ஒஹியோ... இல்லினோயிஸ்... நோர்த் கலிபோர்னியா ஆகிய மாகாணங்களை இந்த முறை குறி வைத்திருந்தது. அதற்கான சுற்றுப் பயணமாய் தான் புகழ் அமெரிக்கா பறக்கிறான்.

''டேய், புஜ்ஜு! கொலோம்பஸ் (ஒஹியோ மாகாணத்தின் தலைநகரம்) போகும்போது சரளா ஆன்ட்டி வீட்டிலேயே தங்கிடுடா. அவ ரொம்ப சொல்லிட்டே இருந்தா... அவங்களோட காண்டாக்ட் நம்பர்... அட்ரஸ்... வொர்க் போன் நம்பர் எல்லாம் உன்னோட ஈமெயில்க்கு ஏற்கனவே அனுப்பிட்டேன்! `ப்ளீஸ் ராஜா! போய்டுடா!'' என்றாள் மாதங்கி.

Optimized by www.ImageOptimizer.net

''அம்மா... இதை இதோட நூறு வாட்டி சொல்லிட்டீங்க... நான் போறேன்னு சொல்லிட்டா போவேன்!'' என்று புகழ். அழுத்தம் கொடுத்து முடிக்கவும், கோவர்த்தன் ''பேசாதே'' என்பது போல் மனைவியிடம் கண்ணைக் காட்டினர்.

புகழிடம் ஓர் பழக்கம் உண்டு! ஒரு விஷயத்தைத்... திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தால்... எரிச்சல் மட்டும் பட மாட்டான்! வேண்டுமென்றே அதைச் செய்யாமல் விட்டு விடுவான்!

''ஏன்டா'' என்று கேட்டால்,

''நான் செய்ய மாட்டேன்னு நினைச்சுத்தானே... சொன்னதையே சொல்லிட்டு இருந்தீங்க! நீங்க நினைச்ச மாதிரியே... நான் செய்யலை!'' என்று முடித்து விடுவான். (அம்புட்டு ரோசனக்காரனாடா நீ!)

அதன் பின், நிறைய கேலி... கொஞ்சம் பாக்கிங் என்று நேரம் விரைந்தோட, தூத்துக்குடி விமான நிலையத்தில் சென்னை விமானம் ஏறுவதற்காக, குடும்பத்துடன் காத்திருந்தான் புகழ்.

பயணிகளுக்கான அழைப்பு வரவும், பெற்றோரிடம் விடை பெற்றவன்,

''ஏன்மா... உங்களோட ஒரே புத்திரன்... செல்ல மகன்... கிட்டத்தட்ட ரெண்டு மாசத்துக்கு உங்களை விட்டுப் பிரிஞ்சிருக்கப் போறானே? அதுவும், கண்ண காணாத அமெரிக்காவுக்குப் போறானேன்னு கொஞ்சம் கூட உங்களுக்கு வருத்தமே இல்லையாமா?'' என்று தாயிடம் - வினவவும், (மேப்-ல கூட நல்லா... பெருசா தானே தெரியுது? அது எப்படி கண்ண காணாமப் போகும்?)



''நீ என்ன நிலாவுக்கா போற? தோ... இங்க இருக்க அமெரிக்காவுக்கு! என் செல்லப் பொண்ணு இலா போன அதே அமெரிக்காவுக்குப் போகப் போறே... அதுக்கு ஏன்டா நான் சீரியல் அம்மா மாதிரி அழணும்?''

''இலா போனதும்... நான் போறதும் ஒன்னா? அவ கல்யாணம் பண்ணிக்கிட்டு... புருஷனோட போனா! நான் தனியா இல்ல போறேன்!'' - மூக்கைச் சிந்தி கீழே போட்டான், புகழ்.

''நீயும் வேணும்னா ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிக் கூட்டிட்டுப் போ! நானா வேண்டாம்னு சொன்னேன்! லவ் பண்ணுடா... லவ் பண்ணுடான்னு தலை தலையா அடிச்சுக்கலை?!''

''ஒரு பொறுப்பான அம்மா மாதிரி பேசுங்க! இந்த இடத்தில... ''நானும் எத்தனையோ பொண்ணை உனக்குப் பார்த்துட்டேன்... நீ தான் மாட்டேங்குற... சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கிட்டு... எனக்கு ஒரு பேரனோ... பேத்தியோ பெத்துக் கொடுடா''ன்னு வசனம் பேசணும். அதை விட்டுட்டு... லவ் பண்ணு... லவ் பண்ணுன்னு ஐடியா கொடுக்கிறீங்க.''

''லவ் பண்றதில் என்னடா தப்பிருக்கு? லவ் பண்ணா... லைஃப் நல்லா இருக்கும் புஜ்ஜு!'' என்று கண்ணடித்த மாதங்கி, மகனின் தோளில் தட்டி, வழியனுப்பி வைத்தார்.

அந்தப் பயணம் முழுதும் ''லவ் பண்ணா.. லைஃப் நல்லா இருக்கும், புஜ்ஜு!'' என்ற வசனமே புகழேந்தியின் மனதில் அடிக்கடி வந்து போனது!

Optimized by www.ImageOptimizer.net

# 2

சார்லெட் (நோர்த் கலிபோர்னியா மாகாணத்தின் தலைநகரம்) விமான நிலையத்தில் இறங்கிய புகழேந்தி, அங்கிருந்த சுற்றுலாத் துறை தகவல் மையத்தில், அருகிருக்கும் நல்ல தங்கும் விடுதிகளின் முகவரியை அறிந்து கொண்டான்.

சார்லெட்டில் அவர்களுக்கு நெருங்கிய சொந்தம் யாரும் வசிக்கவில்லை. இலக்கியாவின் புகுந்த வீட்டு உறவு - அதாவது இலக்கியாவின் நாத்தனாரின்... பெரிய மாமியார் மகளின் மகள்... அடேங்கப்பா, புகழேந்திக்கு யோசித்து முடிப்பதற்குள் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது! இதில் அவர்கள் வீட்டில் தங்குவதாவது? ஒன்றாவது? (எவ்வளவு நெருங்கின சொந்தமா இருக்கு!)

இலக்கியாவின் நாத்தனார், அவர்களிடம் கொடுக்கும்படி ஒரு பையைக் கொடுத்துவிட்டு ''நீங்க அங்கேயே கூடத் தங்கிக்கலாம், தம்பி! என்ன ஒண்ணு... அவங்க ரெண்டு பேரும் வேலைக்குப் போறவங்க... கிடைக்கிறதைச் சாப்பிட்டு... அப்படி... இப்படின்னு இருப்பாங்க!'' என்றார் இழுவையாக. (இதற்குப் பெயர் தான் - விருந்தோம்பல்!)

இதற்கு இவர் போகாதே என்றே சொல்லியிருக்கலாம் எனத் தோன்றியது புகழேந்திக்கு!



அவர் சென்றபின்னர், மாதங்கியும் புகழேந்தியும், அவரது ஒலிஎடுப்பிலேயே பேசி... விழுந்து விழுந்து சிரித்தது தனிக் கதை!

''ஒரு கிலோ கூட இல்லாத ஒரு பையைக் கொண்டாந்து கொடுத்திட்டு... ஒன்பது நாளைக்கு மொக்கிட்டுப் போயிட்டான்னு மனசுக்குள்ளேயே திட்டுடுவானுங்க!

பாவம்... இந்தப் பச்ச மண்ணு... பசியாற முடியாம வாடிப் போய்டும்!'' என்று புகழ், தன் கன்னத்தைத் தானே தடவிக் கொடுத்து, பரிதாபப் பட்டுக் கொள்ளவும்,

''மண்ணு ரொம்பவே பசையா இருக்குப் போலடா... தாடி சும்மா புதர் கணக்கா வளந்திருக்கே!'' என்று மகனின் இரண்டு நாள் தாடியைக் கிண்டல் செய்த தாயும்,

''ஹோட்டல்லேயே தங்கிடு, புஜ்ஜூ! ஒரு நாள் ஈவ்னிங் டீ-க்குப் போயிட்டு... இதைக் கொடுத்திட்டு வந்திடு!'' என்றார், அவனுடன் ஒத்துப் போய்.

''ஆனாமா... அந்த அக்கா... அவங்க அப்படி... இப்படி இருப்பாங்கன்னு சொன்னாங்க இல்லம்மா.. அப்படி... இப்படின்னா என்னம்மா? இப்படி அப்படியா?'' என்று அவன் பால் வடியும் முகத்துடன் கேட்க,

''அப்படி அப்படித்தான்டா புஜ்ஜூ!'' என்று தாயும் கண்ணடித்து, கலாய்த்து நெஞ்சில் நிழலாட, ஓர் புன்னகையுடன் வாடகை கார் நிற்கும் இடம் நோக்கி நடந்தான். (நெசமாலுமே... உனக்குத் தெரியலையாடா ராசா?!)

வழியில், ஓர் இளம் ஜோடி, சுற்றுப்புறம் மறந்து பின்னிப் பிணைந்து, இருவர் ஒருவராய் இதழோடு இதழ்

Optimized by www.ImageOptimizer.net

பொருத்தி நிற்க, ''அப்படி... இப்படி'' வேறு பொருத்தமாய் நினைவு வர,

இதழ்களில் இருந்த புன்னகை காது வரை நீண்டிருந்த வேளையில்,

''புக்கி. கிகிகிகிகிகிகிகிகி'' என்று வந்த அழைப்பு, அனைத்தையும் மறக்கச் செய்து, திகைத்து நிற்க வைத்தது! (ஹையா... இந்தப் பேர் நல்லா இருக்கே!)

''நம்ம இலந்த வட!'' என்று மூளைக்கு வெட்டிய மின்னலின் விளைவாய் அவன் திரும்புவதற்குள்,

பின்னாலிருந்து ஓர் இன்பத் தாக்குதல் நடத்தப்பட்டு, அவனது கழுத்தை ஓர் மென் பெண் கரம் வளைத்தது.

துள்ளிக் குதித்த தங்கையை முன்னே இழுத்து, அவளது கன்னத்தில் ஓர் முத்தம் வைத்தவன்,

''ஹே இலந்த வட... இங்க என்ன பண்றே? முகில் எங்க?'' என்றான், ஆச்சரியமாக. (பேர் வைக்கிறாய்ங்க பாரு! இலந்த வட... உளுந்த வடன்னு!)

ஆனால், இலாவின் முகம் வாடிவிட்டது.

''என்னை யாருமே எப்படி இருக்கேன்னே கேட்க மாட்டேங்குறீங்க... எல்லாருக்கும் முகில் தான் இப்போ முக்கியமா போய்ட்டார்? அமெரிக்கா வந்ததில் இருந்து... என்னை நீங்க மறந்துட்டீங்க!'' என்றவளின் குரலில், நிறைய ஏக்கம்... கொஞ்சம் வருத்தம்.

''ச்சே! ச்சே! எங்க வீட்டு இளவரசியை நாங்க மறப்போமா? டெய்லி... ஒரு பத்து தடவையாவது அம்மாவும் - அப்பாவும் உன்னைப் பத்திப் பேசாம இருக்க மாட்டாங்க... தெரியுமா?''



''நீ என்னை நினைக்கவே மாட்டியா, அண்ணா?'' - அப்போது தான் பூத்திருந்த மலர் போலிருந்த தங்கை, அவனை அண்ணாந்து கேட்ட கேள்வியில், எல்.கே.ஜி. படிக்கும் சிறுமியாய் தெரிந்தாள் அவள்.

அவள் மிகவும் உணர்ச்சி வசப்படும் சமயங்களில் மட்டும் தான், ''அண்ணா'' என்ற அழைப்பு வரும்!

அவள் பூப்படைந்த போது, ஒரு முறை!

அவளுக்கு ஒருவன் லவ் லெட்டர் கொடுத்தபோது, ஒரு முறை!

ஓர் சாலை விபத்தை நேரில் கண்டபோது, ஒரு முறை!

அவளது தோழி அவளை ஏமாற்றியபோது ஒரு முறை!

கடைசியாய், திருமணம் முடிந்து விடைபெறும்போது, ஒரு முறை!

அடுத்ததாய், இப்போது!

மெல்ல அவள் தலை கோதி, ''அவங்கெல்லாம் பத்து முறை நினைச்சா... நான் இருபது முறைன்னு வச்சுக்கோ'' என்றவன்,

அவளது நம்பாத பாவனையில், மீண்டும் பேசினான் ''அவங்க சொல்ற போது... ஒரு பத்து முறையாச்சா...'' எனக் கூறி, ஒரு வினாடி நிறுத்தியவன், தங்கையின் கண்களில் ஆர்வம் படியவும், மெல்ல ஆரம்பித்தான்.

''அடுத்தது... கார்னெட்டோ ஐஸ் கிரீம் சாப்பிடும்போது, ஹப்பாடா இந்த இலந்த வட இல்லை... நம்ம ஐஸ் கிரீம்ல பங்கு போட வராதுன்னு ஒரு வாட்டி...''

அவள் லேசாய் சிணுங்கியதைப் பொருட்படுத்தாமல்,

Optimized by www.ImageOptimizer.net

"அம்மாவோட மடில படுத்திட்டு டி.வி. பார்க்கும் போது... "போடா புக்கி... பக்கி... எங்கம்மா மடில நீ ஏன் படுக்கிற"ன்னு என்னைக் கீழ தள்ள, இலா குட்டி இல்லையேன்னு ஒரு முறை."

"சாமி ரூம்க்குள்ள போகும் போதெல்லாம்... நீ "ராஜ ராஜேஸ்வரி... அம்பா..."ன்னு பாடுற மாதிரி."

"கார் டிரைவ் பண்ணும்போது, ஓட்டறவன் தூங்கிடுவானேங்கிற எண்ணமே இல்லாம... இரவு நேர இளையராஜா பாட்டா போட்டுக் கேட்கும் அந்தக் குட்டி கழுதைன்னு ஒரு வாட்டி..."

"ஸ்டாண்ட்ல ஒழுங்கா அடிக்கி இருக்கிற செருப்பைப் பார்த்தா... இலா பேபி இருந்தா... இங்க ஒரு படி உயர ஹை ஹீல்ஸ் இருக்குமேன்னு ஒரு தடவை..."

அவன் சொல்லிக் கொண்டே போக, "போதும்... போதும்! நீ என்னை நினைக்கிறன்னு ஒத்துக்கிறேன். அதுக்காக என்னோட மானத்தை வாங்க வேண்டாம்" என்று இலக்கியா சிரித்தபோது, அவளது முகத்தில் பழைய குதூகலம் குடி வந்திருந்தது.

"சரி! வா போலாமா? முகில் எங்க வெயிட் பண்றாங்க?" - கணவனுடன் தான் தங்கை வந்திருக்கிறாள் என்ற அனுமானத்தில், புகழ் கேட்கவும்,

"உன்னோட மச்சான் ஒண்ணும் வரலை... நான் மட்டும் தான் வந்தேன்" என்று நொடித்தாள், இலக்கியா.

"நீ மட்டும் தனியாவா? சியாட்டல்ல இருந்து நீ மட்டும் தனியாவா வந்தே?" என்று வியப்பை மறைக்க முடியாமல், அண்ணன் திரும்பத் திரும்பக் கேட்கவும்,



"நான் என்ன சின்னப் பப்பாவா? நம்ம ஊர்ல இருந்து டெல்லி போற மாதிரி தான் இதுவும்! நீயும்... அவர மாதிரியே ஓவர்றா சீன் போடாத புக்கி! எனக்கு எரிச்சலா வருது!" என்று சுள்ளென விழுந்தாள் இலக்கியா.

"ஓகே! ஓகே! கூல் இட்!" என்று அவளது முதுகைத் தடவிக் கொடுத்தவன்,

"முகில் இங்க எப்போ வருவார்?" என்றான் தங்கையின் முகத்தை ஆராய்ந்தவாறே.

"அவரு தானே... அவரோட கம்பெனியே அவர் தோள்ல தானே நிக்குது? இவரு பாட்டுக்கு இங்கிட்டு அங்கிட்டு அசைஞ்சா... கம்பெனி தொபக்கடீர்ன்னு கீழ சரிஞ்சுடாது?!" என்றபோது, இலக்கியாவின் முகத்தில் அப்பட்டமான கோபம்.

புகழ் பேசுவதற்கு வாய் திறக்கும் முன்னர் "ஏன்? அவரு வந்தா தான் உனக்கு இனிக்குமா? உனக்காக... அங்கிருந்து நான் லொங்கு... லொங்குன்னு ஒருத்தி ஓடி வந்திருக்கேன்... அது பத்தாதா?" என்றாள் கடுப்பாக.

அதற்குப் பதிலாக "அதென்ன இலந்த வட.. லொங்கு... லொங்குன்னு ஓடி வரது? எழுபது கிலோ வெயிட் இருக்க நீ... தரையில ஓடி வந்தா... டங்கு டங்குன்னு தானே அதிரும்? லொங்கு... லொங்குன்னா அதிரும்?" என்று புகழேந்தி, படு தீவிரமாக வினவவும்.

"ஐயோ! தாங்கலைடா உன்னோட மொக்கை!" என்று தலையில் அடித்துக் கொண்டாள் இலக்கியா. (புக்கி, டேய்! உன்னை கதாநாயகன்னு வேற சொல்லியிருக்கேன்... கொஞ்சம் நல்ல ஜோக்கா அடிக்கலாம் இல்ல... இப்படி மொக்கை மன்னனா இருக்கியே!)

Optimized by www.ImageOptimizer.net

இருவரும் மனம் விட்டுச் சிரித்த பின்னர், வாடகைக் காரில் அருகிருக்கும் நல்ல தங்கும் விடுதியில், அறை எடுத்துத் தங்கினர்.

குளித்துவிட்டு வந்ததும், ''பசிக்குதே'' என்று இலக்கியா ராகம் இழுக்கும் முன்னர்,

''பக்கத்தில ஒரு இந்தியன் ரெஸ்டாரண்ட் இருக்கு... போலாமா?'' என வினவினான்.

''இந்தியன் சாப்பாடு... சாப்பிட்டு... சாப்பிட்டு ஒரே போர்! வேற ஏதாவது ட்ரை பண்ணுவோம்... புக்கி!'' என்றவள், கடைசியில் ஓர் இட்டாலியன் உணவகத்தைத் தேர்ந்தெடுத்தாள்.

''மெனு கார்டையா தின்னப் போகிறாள்?'' என்று புகழ் பயப்படும் அளவிற்கு, அதை அலசி... ஆராய்ந்து.. கரைத்துக் குடித்து விட்டாள். (கழுதையின் தங்கை என... என் வாயால சொல்ல மாட்டேன்பா!)

''எதையாவது ஆர்டர் பண்ணு... இலா! பசிக்குதுடா!'' என்று புகழ், மூன்றாவது முறையாக கெஞ்சவும் தான், ஒருவாறாய் தலை நிமிர்த்தினாள்.

உணவு வரும் வரை, இருவரும் தங்கள் பண்ணையில் வளரும் இறாலில் தொடங்கி, அவன் கிளம்புவதற்கு முந்தைய தினம் வந்த இலாவின் நாத்தனார் வரை பேசினர்.

''ஹய்யே! நானே... அவங்க வீட்டுக்குப் போக மாட்டேன்... உன்னைப் போகச் சொன்னாங்களாக்கும்!'' என்றவள், தலையில் அடித்துக் கொள்ளவும்.

''போ... ஆனா... போகாத! - அப்படிச் சொன்னாங்கடா!'' என்று விளக்கம் கூறிச் சிரித்தான் புகழ்.



''இதுக்கு எதுக்கு புக்கி... போகச் சொல்லணும்? நானும் நல்லவ... நானும் நல்லவன்னு காட்டிக்கிறதுக்கா? சும்மா சீன் போட்டுட்டு! ஐ ஹேட் திஸ்!''

''ஹே! நீ எதுக்கு டென்ஷன் ஆகுற? லீவ் இட்!'' என்றவன், இலக்கியாவே விஷயத்தை ஆரம்பிக்கட்டும் என்றெண்ணி வேறு விஷயங்களுக்குத் தாவினான்.

அவனது அனுமானப் படி, ஐந்தாவது நிமிடத்தில் இலக்கியா, தன் நெஞ்சை அரிக்கும் பிரச்னையை அண்ணனிடம் கொட்டினாள்.

''எனக்கு ரொம்ப கோபம்... கோபமா வருது, புக்கி!'' என்று தொடங்கி,

''என்னை சின்னப் பாப்பா மாதிரி ட்ரீட் பண்றாங்க...''

''எங்க போனாலும்... இப்படிப் போகணும்... அப்படி போகணும்... யாரோடையும் அதிகம் பேசக்கூடாது... ஒரு டாலர்க்கு இவ்வளவு ரூபா... பாத்து செலவு பண்ணுன்னு ஒரு தடவை இல்லை... பத்து தடவை சொல்லிடுறாங்க!''

''ஒரு ரெஸ்டாரண்ட்டுக்குக் கூட என்னோட விருப்பத்தை அவங்க கேட்கிறதே இல்லை... உனக்கு இந்தியன் ஃபூட் தான் பிடிக்கும்... அங்க போலாம்ன்னு அவங்களே முடிவு பண்ணிடுறாங்க...''

''எந்தக் கடைக்குப் போனாலும்... எனக்காக அவங்களே டிரஸ் செலக்ட் பண்றாங்க... ஃபூட் ஆர்டர் பண்றாங்க... செப்பல்ஸ்ல இருந்து சாப்பிடற வரைக்கும் அவங்க விருப்பப்படிதான் நான் நடக்கணும்ன்னு நினைக்கிறாங்க...''

''அது கூட பரவாயில்லை... ஒரு நாள் நைட் ரெண்டு மணிக்குத் தன் வீட்டுக்கே வந்தாங்க... ஏன்னு கேட்டா

வேலைக்குப் போறவனுக்குத்தான் அதோட கஷ்டம் தெரியும்... நீ சும்மா வீட்டில் தானே இருக்கே, நான் ஊர் சுத்தற மாதிரி தான் உனக்குத் தெரியும்ன்னு சொல் றாங்க!''

''ரொம்ப எரிச்சலா வந்தது, புக்கி! ஏன் லேட்ன்னு கூட கேட்கக் கூடாதா?''

''நா படிச்ச ஃபேஷன் டிசைனிங் கோர்ஸ்க்கு இந்தியால எவ்வளவு மதிப்பு தெரியுமா? இங்க அமெரிக்காவுக்கு... H4 விசால வந்ததால, என்னால எங்கேயும் வேலை பார்க்க முடியலை. அவ்வளவுதான்! அதுக்காக... என்னை என்னமோ பட்டிக்காடு மாதிரி ட்ரீட் பண்ணா, எப்படி?''

''ஏதாவது படிக்கிறேன்... ஸ்டுடென்ட் விசா அப்ளை பண்ணுவோம்ன்னு சொன்னா... உன்னோட கோர்ஸ்க்கு வேற ஸ்டேட் யூனிவர்சிட்டில தான் இடம் கிடைக்கும்... என்னால உன்னை விட்டு இருக்க முடியாதுன்னு சீன் வேற!''

''எந்த நேரம்... உச்சத்துக்குப் போய்... டமார்ன்னு வெடிக்கப் போறேனோன்னு இருக்கு!'' என்றபோது, குரல் கரகரத்து, அழுது விடுவேன் என்று எச்சரிக்கை காட்டியது.

தங்கையின் கையைத் தனது இரு கரங்களுக்கு நடுவே வைத்துக் கொண்டவன், ''நான் சொல்றதை... அமைதியா கேட்கிறியாடா? ஜஸ்ட் டென் மினிட்ஸ்!'' என்றான் வற் புறுத்தும் குரலில்.

அவளது முகத்தில் லேசான மறுப்பு தெரியவும் ''என்னடா இவன்... அட்வைஸ் பண்றானேன்னு நினைச்சா...



''மொக்கைச்சாமி! ஸ்டாப் தி நான்-சென்ஸ்!'' அப்படின்னு நீ எப்ப வேணும்னாலும் கத்தலாம்! ஓகேவா?'' என அவன் லேசாய் சிரிக்கவும்,

அதே சிரிப்புடன், இலக்கியாவும் அண்ணனின் கண்களை நேராகப் பார்த்தாள்!

''நா முகிலுக்கு சப்போர்ட் பண்றேன்னு நினைக்காத... ஆனா...'' என அவன் ஆரம்பிக்கவும்,

''சும்மா! அந்த மேன்-க்கு சப்போர்ட் டோன்ட் டூ. ப்பா'' என்ற கூச்சல் வரவும், சரியாக இருந்தது. ஆனால், அது இலக்கியாவினது இல்லை! (தம்தன... தம்தன... தாளம் வரும்! ஹீரோயின் என்ட்ரி பா! ஒரு... இது வேண்டாமா?!)

## 3

திடீரென கேட்ட குரலில்... அதுவும் தமிழ் குரலில் அண்ணனும் தங்கையும் ஒருங்கே திரும்பிப் பார்த்தனர்.

ஓர் இளம் பெண்ணும், நாற்பத்தைந்து வயதைக் கடந்த ஓர் ஆணும் அமர்ந்திருந்தனர். ''ப்பா...'' என விளித்தாளே, தந்தையாக இருக்கக் கூடும்! அம்மா கூட தான் அப்பாவை ''அப்பா...'' என்று அழைப்பார்கள்... அதற்காக!

புகழின் எண்ணங்கள் விபரீத எல்லையைத் தொடும் போது, ''டேய்! அண்ணா! அவரு... அந்தப் பொண்ணுக்கு அப்பாவா... அண்ணனா... பிரெண்டா... பாய்

Optimized by www.ImageOptimizer.net

பிரெண்டாங்கிற ஆராய்ச்சி தானே பண்றே? கெட்டப் பையன்டா நீ!'' என்றாள் இலக்கியா, அவன் கையினுள் இருந்த தன் கையால் அவனை நறுக்கென்று கிள்ளி. (கள்ளியடி நீ!).

சட்டென சிரித்தவன், ''ச்சே! ச்சே! என்னை என்னன்னு நினைச்சே? வெறுமனே, நீ முதல்ல சொன்னதையும்... கடைசியா சொன்னதையும் தான் நினைச்சேன்!'' என்றான் கண்களைக் குறும்பாய் சிமிட்டி.

சில வினாடி யோசித்துவிட்டு, ''ரொம்ப ரொம்ப கெட்ட பையன்! லூசு! லூசு!'' என்றவள், இருக்கையிலிருந்து எழுந்து அவனது தோளில் பலமாய் இரு அடிகள் வைத்தாள், இளையவள்.

''அந்தப் பொண்ணுக்கும்... அவருக்குமான ஆறு வித்தியாசத்தையே ''மிகவும் கடினம்''ங்கிற தலைப்புக் கீழ போட்டுத் தான் கண்டு பிடிக்கணும் போல... இதில இவன் வேற!'' என்று தங்கை சிரிப்பினூடே அலுத்துக் கொண்டதும்,

புகழ் இரு மேசைகள் தள்ளி இருந்த இருவரையும் மீண்டும் ஒரு முறை ஆராய்ந்தான்.

ஹ்ம்ம். ஆமாம்! இலக்கியா எப்படி அப்பாவின் கலர் ஜெராக்ஸோ... அதே போல் இப்பெண்ணும் அவள் அப்பாவின் பேச்சு! (நல்லா பாருங்க... ஒரு வேளை அந்தப் பொண்ணே கண்ணாடிக்கு முன்னாடி உட்கார்ந்திருக்கப் போகுது!)

''இந்தத் தாடை தான் கொஞ்சம் ஓவர் சைஸ்!'' என்று மாதங்கி, இலக்கியாவை கொஞ்சுவது போல்,

இவளுக்கு ''மூக்கு தான்... சராசரி பெண்களை விடவும் கொஞ்சம் ஓவர் சைஸ்!'' என்று சொல்லத் தோன்றியது, புகழுக்கு.



கூடவே, ஒரு படத்தில் கதாநாயகன்... கதாநாயகியை ''மூக்கு தான் கொஞ்சம் ஓவர் சைஸ்!'' என்று கிண்டல் செய்து, கதாநாயகியின் மூக்கை சிவப்பு குடமிளகாய் போல் சிவக்க வைப்பான். அக்கதாநாயகியும், மேல் மூச்சு... கீழ் மூச்சு வாங்க அவளைத் திட்டுவாள்! ஹய்யையோ... இந்தப் பெண்ணும் அவனைத் திட்டினால்? (ஒரு பேச்சுக்குத் தான்... நான் உன்னை கதாநாயகன்னு சொன்னேன்! அதுக்காக இப்படியா?)

''புகழ்ழ்ழ்ழ்ழ்!'' என்று அவன் தனக்குத் தானே கத்தி அடக்குவதற்காக, தலையை உலுக்கிக் கொள்வதற்கும்,

''டேய் புக்கி... பக்கி!'' என்று இலக்கியா பொறுமையிழந்து கத்துவதற்கும் சரியாக இருந்தது.

''சாரி... சாரி! என்ன சொல்லிட்டு இருந்தேன்?'' என்று புகழ் நிகழ் காலத்திற்கு வர,

''அதுவா... ஆயிரத்தி தொள்ளாயிரத்தி நாற்பத்தி ஏழுல இந்தியாக்கு சுதந்திரம் கிடைச்சதுன்னு சொல்லிட்டு இருந்தே!'' என்று இலக்கியா, இழுவை ராகம் இழுத்தாள். (ரொம்ப நல்ல விஷயமாச்சே! பேச வேண்டியதுதான்!)

''ஓகே! ஓகே! நாம மேட்டர்க்கு வருவோம்!''

''என்னோட வாழ்க்கை உனக்கு மேட்டர்ரா தெரியுதா? ராஸ்கல்! எருமை! போடா...''

''உன் புத்தி ஏன் மேட்டர்ன்னா வேற எங்கேயோ போகுது? நீ தான் கெட்டப் பொண்ணு!''

''ஹய்யோ! போதும் உன் மொக்கை! இப்போ உன்னோட அட்வைஸ் படலத்தை ஆரம்பி... கொஞ்சம்

Optimized by www.ImageOptimizer.net

அட்ஜஸ்ட் பண்ணிப் போ... கல்யாண வாழ்க்கைன்னா இப்படி அப்படித்தான் இருக்கும்... முகில் தான் உன் மேல காதலா இருக்காரே... நீயும் அவரைப் புரிஞ்சுக்கோ... லவ் பண்ணு... அப்படி இப்படின்னு பினாத்து! நீயும் ஒரு ஆம்பிளை தானே? பொண்ணுங்க எப்பவுமே புருஷன் இருக்கிற இடத்தில தான் இருக்கணும்... அவளுக்குன்னு ஒரு பிடித்தம்... வேலை இருக்கக் கூடாதுன்னு நினைக்கிற சராசரி ஆண் வர்க்கம்!'' - லேசாய் கிண்டலில் ஆரம்பித்த பேச்சு மிதமான கோபத்தில் வந்து நின்றது.

''ஹே! என்ன இலா இது? நாம என்ன பெண்ணிய வாதக் கூட்டத்துக்கா வந்திருக்கோம்... ஜஸ்ட் ரிலாக்ஸ்!'' என்று அவளது கைகளை அழுத்திக் கொடுத்தவன்,

''நான் உனக்கு எந்த அட்வைஸும் செய்யப் போறதில்லை. நீ...நீயாவே இருன்னு சொல்லப் போறேன். அவ்வளவு தான்!''

''ஃபிளைட்ல வந்ததில... உனக்கு காது... கீது அடைச்சுப் போச்சா? நா என்ன சொன்னேன்... நீ என்ன சொல்றே?''

''எல்லாம் தெளிவா தான் கேட்டது! நடுல, நீ மூக்கு உருஞ்சினது உட்பட!'' என்று திருப்பிக் கொடுத்தவன்,

''நா என்ன சொல்றேன்னா... இன்னைக்கு நான் இந்தியன் ரெஸ்டாரண்ட்டுக்குப் போகலாம்ன்னு சொன்னப்போ... நீ என்ன சொன்னே? இல்ல... வேற ஹோட்டலுக்குப் போலாம்ன்னு சொன்னியா இல்லையா? அந்த மாதிரி, முகில் கிட்டயும் சொல்லு! நீ... மசாலா ஐட்டம்ஸ் விரும்பிச் சாப்பிடறதால, எங்க உனக்கு வேற சாப்பாடு பிடிக்காதோன்னு அவங்க நினைச்சிருக்கலாம்... ஜஸ்ட் டெல் ஹிம்!'' என்றான் தெளிவாக.



தங்கை மௌனம் சாதிக்கவும்,

''இலா பேபி! முகில் சொல்றதை... அந்த சமயத்தில் நீ எதிர்த்துப் பேசாததற்கு என்ன காரணம்ன்னு நான் சொல்லட்டுமா?'' என்று மென்மையாய் கேட்டவன்,

தானே, ''காதல்!'' என்று பதிலையும் கூறிவிட்டு, அவள் நிமிர்ந்து பார்த்தவுடன்,

''ஹ்ம்ம் ஆமா! எங்க நம்மளோட விருப்பத்தை சொன்னா... அவங்க சங்கடப்படுவாங்களோன்னு உன்னோட உள்மனசு நினைக்குது. அதனால, அந்த நேரத்தில நீ எதையும் சொல்றதில்லை!'' என்றவன்,

இலக்கியாவின் கண்களில் ''ஹ்ம்ம் நிஜம் தான்!'' என்ற உண்மை தெரியவும், மீண்டும் பேசினான்.

''ஆனா... தனியா உட்கார்ந்து யோசிக்கும்போது... அவங்களோட விருப்பத்தை உன் மேல திணிக்கிறாங்கன்னு கோபப்படுறே! சும்மா இருக்கும் மனம் சாத்தானின் உலைக்களம்!'' என்றான், அவளது மனதைப் படித்தவனாய்.

அவள் கடைபிடித்த அமைதியிலே, இலாவின் மனம் தன் தவறை யோசிக்கத் தொடங்கி விட்டதை உணர்ந்தவன்,

''உங்க ரெண்டு பேருக்கு நடுவுலேயும் காதல்... இருக்கு... ஆனா புரிதல் இல்லை!'' என்றான்.

''புரியலையே?'' என்று இலா புருவம் உயர்த்தவும்,

''எத்தனை பேர் காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டு... ரெண்டே மாசத்தில டிவோர்ஸ்க்கு வந்து நிக்கிறாங்க? எதனால? இந்த புரிதல் படுத்தும் பாடு!



Optimized by www.ImageOptimizer.net

ஒருத்தரோட குணத்தை ஒருத்தர் புரிஞ்சுக்கிறதே இல்லை! அதான்!'' என விளக்கம் கொடுத்தான். (போன ஜென்மத்தில்... உயர் நீதிமன்ற நீதிபதியா இருந்தியோ!?)

சிறு அமைதிக்குப் பின்னர், ''நான் மட்டும் புரிஞ்சுக்கிட்டு என்ன பண்றது? முகில் புரிஞ்சுக்க வேண்டாமா?' என்றாள் இலா, சிறு குறையுடன்.

''இதான் கூடாதுங்கிறது! எப்பவுமே, அவனை நிறுத்தச் சொல்லு... நான் நிறுத்துறேன்னு சினிமா டயலாக் பேசிட்டுத் திரியக்கூடாது. நீ முதல் படி எடுத்து வை... முகில் பெரிய மாளிகை கட்டிடுவாங்க!''

''ஹ்ம்ம்'' என்று அரை முனங்கலாய் அவள் ஒத்துக் கொள்ளவும்,

''என்ன முக்கி முனங்கிற? மைசூர் அரண்மனை அளவுக்கு கட்டலைன்னாலும்... தாஜ் மகால் அளவுக்கு சின்னதா ஒண்ணு கட்டிடுவாங்க! டோன்ட் வொர்ரி! பீ ஹாப்பி!'' என்றான் மலர்ந்த சிரிப்புடன்.

''ச்சீபோ! எங்க வீட்டுக்காரர் எனக்கு... புர்ஜ் க்ஹாளிஃபா (உலகின் மிக உயரமான கட்டிடம், துபாயில் உள்ளது) அளவுக்குப் பெருசா கட்டுவார்... போடா போ!'' என்று இலக்கியா சிலிர்த்துக் கொண்டு சிரிப்புடன் நிற்க,

''அடேங்கப்பா! வீட்டுக்காரராமே... தோடா!'' என்றான் புகழ், கன்னத்தில் கை வைத்து,

நல்லவேளை, அந்த நேரம் பார்த்து உணவு வந்து விட, இருவரும் அதற்கு மேல் வம்பு வளர்க்காமல் உணவில் கவனம் செலுத்தினர்.

சாப்பாட்டின் நடுவே, ''காலேஜ்ல போய்... படிச்சா தான் படிப்புன்னு இல்லை, இலா! பக்கத்தில இருக்க



லைப்ரரி போ... கம்யூனிட்டி சென்டர் எதிலையாவது ஏதாவது கோர்ஸ் ஜாயின் பண்ணு... ஹ்ம்ம்.. ஸ்விம்மிங்.. ஷட்டில்... டான்ஸ் இது மாதிரி... இல்லன்னா டிரைவிங் கத்துக்கிட்டு இன்டர் நேஷனல் லைசென்ஸ் வாங்கு... உன்னோட வெட்டுற ஒட்டுற வேலை... அதான்... ஆர்ட் அண்ட் கிராஃப்ட்... அதை செஞ்சு வீட்டைக் குப்பையாக்கு... குப்பையான வீட்டைக் கூட்டிப் பெருக்கு'' என்று அவளது நேரத்தை, செலவு செய்ய ஓர் நண்பனாய் யோசனை கூறியவன்,

''முக்கியமா... மனசில இருக்கிறதை உள்ளேயே பூட்டி வச்சுக்காத! ஊர்ல இருக்க நாங்க கவலைப் படுவோம்ன்னு சங்கடப்பட்டுக்கிட்டு... நீயே கஷ்டப்படாத... எங்ககிட்ட சொல்லு! இதை முன்னாடியே சொல்லியிருந்தா... எப்பவோ தீர்வு கண்டு பிடிச்சிருக்கலாம்!'' என்றான், ஓர் பொறுப்புள்ள அண்ணனாய்.

''இல்ல அண்ணா! அம்மா... வருத்தப்படுவாங்களேன்னு தான்! ஏற்கனவே, என்னை நினைச்ச நேரத்தில் பார்க்க முடியலையேன்னு அவங்களுக்கு வருத்தம்... இதில இது வேற எதுக்குன்னுதான்!'' என்றவள்,

''நானே சமாளிச்சிடலாம்ன்னு நினைச்சேன். ஒரு மூணாவது மனுஷனோட பார்வையில பிரச்சினை மாறுபடும்ங்கறது... இப்போ தான் தெரியுது!'' என்றாள், உண்மை உணர்ந்தவளாய்.

''ச்சே! ச்சே! இந்த விஷயத்தை நீ அம்மாகிட்ட சொல்லியிருந்தன்னு வை... என்னைவிட சூப்பர் அட்வைஸ் கொடுத்திருப்பாங்க! அவங்களுக்கு வாழ்க்கையோட நெளிவு... சுளிவு தெரியும்!'' என புகழ், தாயின் புகழ் பாடவும்,

Optimized by www.ImageOptimizer.net

''உனக்கும் தான் தெரியுது! கரெக்ட்டா பாயின்ட் டைப் பிடிச்சிட்டியே! கல்யாணம் பண்றதுக்கான எல்லாத் தகுதியும் உனக்கு வந்திடுச்சு. புக்கி! சீக்கிரம் லவ் பண்ணு!'' என்றாள் தங்கை, சுவாரஸ்யமாக. (நூலைப் போல சேலை. தாயைப் போல பிள்ளை!)

''அம்மாவும் பொண்ணும் எதில ஒரே மாதிரி இருக் கீங்களோ இல்லையோ... இந்த லவ் பண்ணுன்னு எனக்கு அட்வைஸ் பண்றதில ஒரே மாதிரி இருக்கீங்க!'' என்று புகழ் அலுத்துக் கொள்ள,

''லவ் பண்ணு புக்கி... லைஃப் நல்லா இருக்கும்!'' என்றாள் இலக்கியா, அவளது தாயின் குரலை மிமிக் செய்து.

''அடிங்க!'' என்று கை ஓங்கிய புகழின் நினைவில், ''அந்த கதாநாயகிப் பெண்'' ஓர் நிமிடம் வந்து போனாள்! (அதானே பார்த்தேன்! வரணுமே!)

''ம்ஹூம்! கெட்டப் பையா! கெட்டப் பையா!'' என்ற குரல் மூளைக்குள் மின்சாரம் பாய்ச்ச, நினைவுக்கு மீண்டவன், தங்கையுடன் தங்கும் விடுதிக்கு நடந்தான்.

படுக்கையில் விழுந்தவனுக்கு இலக்கியாவின் வாழ்க் கையே மனதில் ஓடிக் கொண்டிருந்தது. (ச்சே, நான் 'அந்த கதாநாயகிப் பெண்ணை' எதிர்பார்த்தேன்! வட போச்சே!)

வீட்டிற்கு ஒரு பெண் என்றாலும், அளவுக்கு அதிக மாய் செல்லம் கொடுத்து வளர்க்கப்படவில்லை அவள். தேவை என்று பட்டால், உடனே வாங்கிக் கொடுக் கும் பெற்றோர், அவசியமற்றது என்றால் முரட்டியாய்



மறுக்க மாட்டார்கள். அன்பாய் எடுத்துரைக்க முயல் வார்கள்.

பத்தாவது படிக்கும்போது, ''கிளாஸ்ல எல்லாரும் செல்போன் வச்சிருக்காங்க அம்மா! எனக்கும் வேணும்!'' என்று பிடிவாதம் பிடித்த மகளிடம்,

''அதெல்லாம் வாங்கித் தர முடியாது! படிக்கிற வேலையைப் பாரு!'' என்று அதட்டவில்லை, மாதங்கி.

மாறாய், ''ஒரு ரெண்டு நாள் டைம் கொடு... நா யோசிச்சு சொல்றேன்'' என்று அப்போதைக்கு விஷயத்தை ஒத்திப் போட்டவர்,

அடுத்து வந்த வார இறுதியில், சில பேப்பர் துணுக்கு களுடன் மகனையும் மகளையும் ஒருங்கே அழைத்தார்.

முதலாவது, ஓர் கிராம மேல்நிலைப் பள்ளியில், சில மாணவர்கள் தங்களுடன் படிக்கும் மாணவிகளை, மறைந்திருந்து படம் பிடித்ததில் மாட்டிக் கொண்ட விவகாரம். அவர்கள் அனைவரும், சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

அடுத்தது, ஓர் ஆசிரியரின் வாக்குமூலம் - ''இந்த எஸ்.எம்.எஸ். வந்தாலும் வந்தது... அதோட தாக்கத்தில், இந்தப் புள்ளைங்க, எக்ஸாம் பேப்பர்ல கூட கோட் வோர்ட்ல தான் எழுதுறாங்க. ''you''ன்னு எழுதுறதுக்கு ''u'', ''there''ன்னு எழுதுறதுக்கு ''der'', ''thank you''ன்னு எழுதாம ''tq''... இப்படி பல மாதிரியா எழுதுறாங்க. இதுனால, பேப்பர் திருத்திறவங்க ரொம்பவே சிரமப்படு றாங்க... தப்பான ஸ்பெல்லிங்குக்கு மார்க்கும் குறைச்சுப் போடுறாங்க. ஒட்டு மொத்தமா பார்க்கும்போது, பசங்க ளோட எதிர்காலம் தான் கேள்விக் குறியாகுது.''

Optimized by www.ImageOptimizer.net

கடைசியாய், தன் கைப்பேசிக்கு வந்த ''ராங்'' கால்களால் தற்கொலை செய்து கொண்ட ஓர் மாணவியின் பெற்றோர், வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்வது போன்ற படத்துடன், ஓர் பெட்டிச் செய்தி.

''கைப்பேசி வேண்டாம். அதனால் இப்படிப்பட்ட சிக்கல்களில் நீங்கள் சிக்கிக் கொள்ளலாம்'' என்பதுபோல் அவர்களை எச்சரிக்காமல்,

அவர்கள் அச்செய்திகளைப் படித்து முடிக்கும் வரை, எதுவும் பேசவில்லை.

அதன் பின்னரும், ''இதுக்கு அப்புறமும் போன் வேணும்ன்னு நீங்க பிரியப்பட்டா... அம்மா கண்டிப்பா வாங்கித் தரேன்'' என்று தான் சொன்னார்.

ஆனால், பிள்ளைகளோ ''இல்லம்மா. இப்ப வேண்டாம். ஸ்கூல் முடிஞ்சதும்... வாங்கிக்கலாம். நாங்களும் அப்போ கொஞ்சம் வளர்ந்திடுவோமே'' என்று விட்டனர்.

சொன்னது போலவே, கல்லூரியின் முதலாமாண்டு முடியும் முன்னர் கைப்பேசி வாங்கிக் கொடுத்தார்.

''நீயே முடிவெடு!'' என்று அவளிடம் விட்டுவிட வேண்டும்! அதே போல், அவளது முடிவில் ஏதேனும் பிரச்சனை இருந்தால், முரட்டடியாய் மறுக்காமல்... காரண காரியம் கூறி விளக்கினால், புரிந்து கொள்ளாமல் சுத்தும் ரகமும் அல்ல!

இதை எப்படி முகிலிடம் சொல்வது என்ற யோசனையிலேயே அவனது பாதி இரவு கழிந்து போனது!





# 4

அடுத்த இரண்டு நாட்கள், புகழேந்திக்கு வேலை நெட்டி முறித்தது.

அமெரிக்காவில் உணவு பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டுமென்றால், அமெரிக்க அரசு வழங்கும் FDA சான்றிதழைப் பெற வேண்டும்.

சில மாகாணங்களில், இவர்களது இறக்குமதி நடந்து கொண்டிருப்பதால், FDA சான்றிதழை மீண்டும் வாங்கும் வேலை இருக்கவில்லை. ஆனாலும், அதை புதுப்பிக்கும் வேலை இருந்தது.

அது ஒரு புறம் என்றால், சார்லெட் நகரத்தில் இருக்கும் மொத்த மற்றும் சில்லரை வணிகர்கள் சிலரை நேரில் சந்தித்து, இவர்களது வாணிபத்திற்கான எதிர்காலத்தையும், இரு பக்க லாபத்தையும் பேச வேண்டியிருந்தது.

அது மட்டுமல்லாமல் நோர்த் கரோலினாவின் மற்ற நகரங்களையும் புகழேந்தி குறி வைத்திருந்ததால், ஒரு நாளைக்கு இருபது மணி உழைக்க வேண்டி இருந்தது.

காலை முழுதும், அரசாங்க வேலை... இடைத் தரகர்களிடம் பேரம்... வியாபாரிகளிடம் பேச்சு வார்த்தை என்று கழிய, இரவில் இந்தியாவிலிருக்கும் தனது நிறுவனத்தின் விற்பனைக் குழுவுடன் இணைந்து, வளர்ச்சிக்கான வியூகத்தை அமைக்க வேண்டியிருந்தது. (வியா

Optimized by www.ImageOptimizer.net

பாரக் காந்தம்! தமிழில் புரியும்படி சொல்ல வேண்டு மெனில், பிசினஸ் மேக்னெட்)

அவனது வேலைகள் என்னமோ ஜரூராகத் தான் நடந்தேறின! அவனுடன் நேரத்தைக் கழிக்கலாம் என்று வந்த இலக்கியா தான் சோர்ந்து போனாள்!

முதல் நாள், அங்கிருக்கும் சுற்றுலா பேருந்தில் ஏறி, ஊரைச் சுற்றிப் பார்த்தாள்.

அடுத்த நாள், ''எந்த ஊர்-க்கு டிக்கெட் வாங்கப்படும், இலா?'' என்று புகழ் கேட்டதற்கு, ''ம்ஹூம்! நா போல... தூங்குறேன்!'' என்று இழுத்துப் போர்த்தி, உறங்கி விட்டாள். (இது தான்... குடும்பப் பெண்ணிற்கு அழகு!)

''நேரத்துக்கு சாப்பிட்டுடு, இலா!'' என்றதோடு, புகழும் கிளம்பிச் சென்று விட்டான்.

வாழ்க்கையில் மிக மோசமான தினம் என்றால்... இன்று தான் என எண்ணத் தோன்றும் அளவிற்கு, அவன் போன இடத்தில் எல்லாம் எதிர்மறையான விளை வுகள்.

இறாலைப் பதப்படுத்துவதற்காக அவர்கள் உபயோகிக் கும் கிருமி நாசினி தடை செய்யப்பட்டது என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்கள்! FDA உரிமம் ரத் தாகும் அபாயம் வரை சென்று திரும்ப, அவன் இந்தியா மற்றும் சில நாடுகளில் வாங்கிய தரச் சான்றிதழ், அவர் கள் உபயோகிக்கும் கிருமி நாசினிகளுக்கான கோப் புகள்... வேதியல் குறிப்புகள் என்று ஆயிரம் விளக்கங்கள் கொடுக்க வேண்டியிருந்தது.

அதிலேயே, பாதி நாளுக்கும் மேலாய் ஓடிவிட, அதற்குப் பிறகு... மொத்த வியாபாரிகள் சிலரிடம் நடந்த



கலைந்தாய்வு கூட்டம் வேறு, அவ்வளவு லாபகரமான தாய் படவில்லை அவனுக்கு.

மன நிறைவில்லாமலே அறைக்குத் திரும்பியவன், அங்கே தங்கையைக் காணாமல் ஒரு நிமிடம் திகைத்துப் போனான்!

''சாப்பிடச் சென்றிருப்பாள்'' என்று அமைதியடைந்த மனம்,

அடுத்த நொடியே ''இரவு உணவை நானும் அவளு மாய் தானே உண்போம்... ஒரு வேளை, ஷாப்பிங்... ஊர் சுத்திப் பார்த்தல் என்று வேறெங்கும் சென்றிருப்பாளோ'' என்று பரபரத்தது.

நெற்றியை அழுந்தத் தடவி விட்டவன், ''எந்த யுகத்தில் இருக்கிறாய், புகழ்? அவளது மொபைல் போனுக்கு அழை!'' என்ற மூளையின் கட்டளையில், வேகமாய் கைப்பேசியை எடுத்தான்.

அதில் பன்னிரெண்டு எடுக்கப்படாத அழைப்புகள்! எல்லாமே, இலாவிடம் இருந்து! சொந்த விஷயத்திற்காக ஒன்று, வேலை விஷயத்திற்காக ஒன்று என இரண்டு கைப்பேசிகள் வைத்திருந்த புகழ், முதலாமானதை சைலன்ட் மோடில் போட்டிருந்தான். ஆதலால், அதற்கு வந்த அனைத்து அழைப்புகளும், வேலை பரபரப்பில் எடுக்கப் படாமல் போக, ''ஹய்யோ... இத்தனை தடவை கூப்பிட்டு இருக்காளே? என்ன பிரச்சனையா?'' என்று பாசம் கொண்ட மனம், பதறிப் போனது.

இலக்கியாவின் எண்ணிற்கு அழைத்தால், முழு மணியும் அடித்து, எடுக்கப்படாமலே நின்று போனது

Optimized by www.ImageOptimizer.net

ஒரு முறையல்ல, பத்து முறையும் அப்படியே நிகழ, புகழ் அரண்டு போனான்!

கைகள் கைப்பேசியில் இருக்க, கண்கள் தங்கியிருந்த அறையை வேகமாய் வலம் வந்தது. ஏதேனும் குறிப்பு கிடைக்குமா என்ற அவனது எதிர்பார்ப்பு பொய்த்துப் போக, ''இலா பேபி!'' என்று மூச்சடைத்துப் போனான் அவன்.

அடுத்த முயற்சியாய், விடுதியின் வரவேற்புக்குச் சென்றவன், உதட்டைக் காது வரை இழுத்து வரவேற்ற பெண்மணியிடம், ''என் தங்கை... அதாவது திருமதி. இலக்கியா, அறை எண்: 219இல் தங்கியிருந்தோமே? அவள் எங்கேனும் வெளியே செல்வதை உங்களிடம் தெரிவித்தாளா?'' என வினவினான், படபடப்புடன்.

''மன்னிக்க வேண்டும், சார்! நான் இப்போது தான் வந்தேன்... காலையில் உள்ளவர், ஏதேனும் குறிப்பு எழுதி வைத்துவிட்டுச் சென்றுள்ளாரா எனப் பார்க்கிறேன். இரண்டு நிமிடங்கள்!'' என்று இன்முகத்துடன் நவின்றவள்,

வேகமாய், குறிப்பேடுகளைப் புரட்டி, ''மீண்டும் மன்னிக்க வேண்டும், சார். உங்கள் அறை எண்ணிற்குக் கீழ் எந்தக் குறிப்பும் இல்லை'' என்றாள்.

''இல்லை என்று சொல்வதற்கு... உனக்கு எதற்கு சிரிப்பு வருகிறது?!'' என்று பல்லைக் கடிக்க வேண்டும் போல் தோன்றியது புகழுக்கு.

''இலா செய்த தப்பிற்கு... ம்ஹூம் இல்லை... அழைப்பை எடுக்காமல் இருந்த உனது தப்பிற்கு அவளை ஏன்டா திட்டுறே?'' என்று மனம் இடித்துரைக்க,



''அடுத்து என்ன?'' என்ற பதட்டத்துடன், விடுதியின் முன் புறத்திற்கு வந்து சேர்ந்தான்.

மீண்டும் கைப்பேசியை எடுத்து, தங்கையின் எண்ணை அழுத்தினான். இருபது நிமிடங்கள் வீணானது தான் மிச்சம்! இலா எடுக்கவே இல்லை!

வந்த எரிச்சலில்... ஆத்திரத்தில்... காலை ஓங்கி தரையில் உதைத்தவன், வலியில் சுருண்டு போனான்.

''சை... எங்கே போய் தொலைந்தாளோ?'' என்று ஆயாசமாய் வந்தது.

தலைக்கு மேல் வேலை நிரம்பி இருக்க, இவளைத் தேடும் வேலை வேறா?

''அவள் என்ன சின்னப் பிள்ளையா? எப்படியும் அறைக்கு வந்து விடுவாள்!'' என்ற நம்பிக்கையுடன் இருக்க அவனால் முடியவில்லை.

என்ன தான் வளர்ந்தவள் என்றாலும்... சின்னத் தங்கை அல்லவா? அதுவும், அவனைப் பார்ப்பதற்காக வெகு தொலைவிலிருந்து வந்தவள்... பொறுப்பில்லாமல் எப்படிப் போய் வேலையைப் பார்ப்பது? அமெரிக்க வாசிதான் என்றாலும், இந்த ஊர் அவளுக்குப் புதிது அல்லவா? எங்கேனும் வழி தவறிப் போயிருந்தால்? அவள் கணவனுக்கு என்ன பதில் சொல்வது? அப்பாவிடம் யார் திட்டு வாங்குவது? இலாலாலா - இயலாமையும், கையாலாகாத்தனமுமாய் நடு சாலையில், நிர்கதியாய் நின்றான் புகழ்.

இரண்டு நாட்களாக, அருகிருக்கும் ஓர் பண் கடை கட்டிடத்தினுள் இருக்கும் உணவகங்களில் தான் இரவு உணவை உண்டனர்.

Optimized by www.ImageOptimizer.net

ஆதலால், அங்கு விரைந்தது புகழின் வாடகை வண்டி.

கீழ் தளத்திலிருந்த கடைகளை வேகமாய் வலம் வந்தவன், தங்கையைக் காணாமல், முதல் தளத்திற்கு விரைந்தான்.

அவர்கள் சென்ற உணவகங்களுக்குள் சென்று, விசாரித்தும் பார்த்தான்.

அவனை வேற்று கிரக வாசி போல் பார்த்தார்களே ஒழிய, பதிலேதும் கிட்டவில்லை.

''சை!'' என்று கையை உதறிக் கொண்டு வெளியே வந்தவன், இடமும் வலமுமாய் தலையைத் திருப்பிப் பார்த்துவிட்டு, தலையை அழுந்தக் கோதி, ''கடுப்பா வருது! எங்கடி போனே!?'' என்றான் சத்தமாகவே.

நடந்து சென்ற சிலரின் விநோதப் பார்வைகளை அலட்சியப்படுத்தி, இன்னல்களைப் போக்கும் கடவுளான ஆஞ்சநேயரை மனதில் தியானித்து,

''அசாத்திய சாதக சுவாமின அசாத்தியம் தவ கிம் வத.

ராம தூத கிருபா சிந்தோ மத்காரியம் சதாய பிரபோ!''

என்ற ஸ்லோகத்தை மூன்று முறை கூறினான்.

''சாத்தியப்படாத செயல்களைக் கூட செய்து முடிக்கும் சக்தி கொண்ட ஹனுமனே, என் தங்கைக்கு ஏதும் கெடுதல் நடந்திருக்கக் கூடாது. அவளை என் கண்ணில் காட்டிவிடு!'' என்று அவன் செய்த பிரார்த்தனைக்கு எதிரொலி போல்,

''ஹலோ மிஸ்டர், ஒரு நிமிஷம்'' என்ற குரல், பின்னாலிருந்து ஒலித்தது.



வளமையான ஆங்கிலத்தில் ஒலித்த குரலுக்குப் பணிந்து, அவன் திரும்ப, அங்கே நின்றவள் - ''அந்தக் கதாநாயகிப் பெண்!'' (ஹீரோயின் என்ட்ரிக்கு ஒரு வாட்டி தான் பாட்டு போடணுமா என்ன? ''வாடி... வாடி... வாடி... கியூட் பொண்டாட்டி!'' எப்படியும் இன்னும் பத்து பக்கத்தில புருஷன் பொண்டாட்டி ஆகப் போறாங்க... அதான், ஒரு முன்னெச்சரிக்கையா... அதாகப்பட்டது முன் அறிவிப்பு மாதிரி இங்கேயே சொல்லியாச்சு!)

ஆச்சரியமும், குழப்பமாய் புகழ் ஏறிட, ''யாரையும் தேடுகிறீர்களா?'' என்று கேட்டாள் அவள். ('ஆம், உன்னிடம் தொலைந்து போன என்னை...' - 80 கதாநாயகன் மாதிரி வசனம் பேசியிருக்கலாம் இல்ல! எல்லாம் ஒருத்தங்க சொல்லிக் கொடுக்கணும்! ப்ச்)

''எதற்குக் கேட்கிறாள்?'' என்று புரிபடாத போதும், மகுடிக்கு இசையும் பாம்பாய் ''ம்ம்'' என்றான் அவன். கூடவே, ''என் தங்கையை'' என்று சொல்லி இருக்கலாம்... லாம்... லாம்... ம்... ம்...! ப்ச், விட்டு விட்டான்!

''நேற்றைக்கு முந்தைய தினம், இந்த உணவகத்தில் உங்களுடன் உணவருந்திய பெண்ணையா தேடுகிறீர்கள்?'' என அவள் அடுத்த அம்பை எடுத்துவிட,

''அட, ஆமாம்!'' என்ற புகழ்,

''அவளைப் பார்த்தீர்களா?'' என்றான் அவசரமாய்.

''ஹ்ம்ம். ஆமாம். சிறிது நேரத்திற்கு முன்னே, மூன்றாம் மாடியில் இருக்கும் திரையரங்கிற்குள்... ஹ்ம்ம்... சென்றார்கள்'' என்றாள் அவள்.

Optimized by www.ImageOptimizer.net

"நடுவில் எதையோ முழுங்கினாளே... என்ன அது?" என்ற எண்ணம் தோன்றியபோதும், இலாவைப் பார்ப்பதே முதன் கடமையாய் முன் நின்றது.

ஆதலால், "மிகவும் நன்றி!" என்று அவளிடம் நவின்றுவிட்டு, அங்கிருந்து நகர்ந்தான்.

போகும்போது, சும்மா போயிருக்கலாம்... எங்கே? வாய் தானே வில்லனே!

இரண்டடி சென்றவன், மீண்டும் திரும்பி "ஆஞ்சநேயரை நினைச்சு சுலோகம் சொன்னேன். அவரே நேர்ல வந்த மாதிரி... நீங்க விவரம் சொல்லிட்டீங்க. நன்றி!" என்றான். (குசும்பு அதிகம்டா, உனக்கு! அவளைப் பார்த்தா... ரெங்கா மாதிரியா இருக்கு?)

அதோடவாவது விட்டிருக்கலாம். "சாரி, உங்களுக்கு ஆஞ்சநேயரை யாருன்னு தெரியும் தானே? ஒருவேளை தெரியலைன்னா, அவரு ஒரு கடவுள்! மிகவும் சக்தி வாய்ந்தவர்!" என்று விளக்கம் வேறு கொடுத்தான்.

இதெல்லாம் சரி, அவள் அடுத்து பேசுவதைக் கேட்டு விட்டாவது அந்த இடத்தைக் காலி செய்திருக்க வேண்டும்! என்னமோ வேகத்திற்குப் பிறந்தவன் போல், அங்கிருந்து பறந்து விட்டான்.

பின்னே நின்றவள், "நா... ஹனுமான்ஜியா! ஸ்டுப்பிட்! இடியட்!" என்று மூச்சிரைக்க கத்திவிட்டு,

"போ... போ... போ நல்லா பாரு... உன்னோட கேர்ள் பிரண்ட் அவளோட பாய் பிரண்டோட படம் முடிஞ்சு வருவா!" என்று சாபம் வேறு விட்டாள். (அய்யோ, பாவம்! அவன் ஒரு குழந்த புள்ளமா! தப்பா நினைச்சுட்டியே, தங்கச்சி!)





# 5

திரையரங்கு வளாகத்திற்குச் சென்றால், அங்கே ஏழு படங்கள் திரையிடப்பட்டிருந்தன. எந்தப் படத்திற்குச் சென்றாளோ?

ஓரோர் அரங்கமாய் சென்று தேடுவது என்பது முடியாது என்பதால், திரையரங்கு வளாகத்தின் முற்றத்திலேயே காத்திருந்தான் புகழ்.

தங்கை இருக்கிறாள் என்ற நிம்மதி குடியேறிய பின்னரே, பசி என்ற உணர்வு உறைத்தது.

வேலை நெருக்கடியில், மதிய உணவை மறந்திருந்தவன், அங்கிருந்த காபிக் கடையில் ஓர் பணத்தை வாங்கி, அதை உறிஞ்சியவாறே வாயிலை நோட்டம் விட்டான்.

அந்த நேரம், அந்தக் கதாநாயகிப் பெண், அவனைக் கடந்து, திரையரங்கு வளாகத்தினுள் சென்றாள். (வேவு பார்க்க வந்துட்டாய்யா! வந்துட்டா!)

மின்னலென ஓர் பார்வையை அவளும் வீச, கம்பி மத்தாப்பாய் பூத்த புன்னகையை இவனும் பூச, தென்றல் இதமாய் சீண்டிச் சென்றது!

சர் சர்ரென இறங்கிக் கொண்டிருந்த பானத்தை வாயிலிருந்து எடுக்க மனமற்றவனாய், அதை உறிஞ்சிய படியே, மறு கையால் அவளுக்கு சைகை செய்தான். (சுனாமியே வந்தாலும் நமக்கு சோறு தானே முக்கியம்!)

Optimized by www.ImageOptimizer.net

"பார்த்து... மெல்ல உறிஞ்சுங்க... ஸ்ட்ரா உள்ள போயிடப் போகுது" என்று சொல்லத் துடித்த நாவை, உள்ளுக்குள் மடக்கி, தன் மனதிற்கு மட்டுமாய் சொல்லிக் கொண்டவள், தானும் சிறு கையசைவுடன் அங்கிருந்து நகர்ந்து விட்டாள்.

"தனியாக வந்திருக்கிறாளே? இவளது தந்தை எங்கே?" என்று கண்கள் அவளையே பின் தொடர, மனம் ஆயிரம் கேள்விகளுடன் காத்திருந்தது.

"அன்னைக்கு... முகம் மட்டும் தான் தெரிஞ்சதுன்னு உனக்கு லேசா வருத்தமில்ல... இப்போ நல்லா பார்த்துக்கோ!" என்று மனம், 'நண்பேன்டா' ரீதியில் பேசியது போலும், புகழின் கண்கள் அப்பெண்ணை நன்றாக ஆராய்ந்தன.

"கொஞ்சம் குண்டு தான்!" - கண்கள் ஒளிபரப்ப,

"இது கொஞ்சம் குண்டா? பூசணிக்காய்க்கு தங்கச்சி மாதிரி இருக்கா..." - மனம் இடித்துரைக்க,

"ச்சே! ச்சே! பொண்ணுங்க எப்பவுமே குண்டா இருந்தா தான் அழகு! ஷப்பி சீக்ஸ்! டிம்பிள் சின்! ரோசி லிப்ஸ்!" - நர்சரி ரைம்ஸ் படித்தன கண்கள்.

"போதுமடா! நிஜமாவே ஷப்பி சீக்ஸ் தான்! இரண்டு இட்லியை ஒட்டி வச்ச மாதிரி!" என்று மனம் நக்கல் செய்ய,

"நோ பேபி! கன்னம் இப்படி இருந்தா தான்... கிள்ள நல்லா இருக்கும்!" - கண்கள் விளக்கம் கூறின.

"கிள்ள நல்லா இருக்குமா? இல்ல, கிஸ் பண்ண நல்லா இருக்குமா?" - மனம் தோளில் ஓர் இடி வைத்து, பரிகசிக்க,



"தப்பு! தப்பு! தப்பு! நா நல்ல பையன்... சும்மா பார்த்தேன்... அம்புட்டு தான்!" என்று சத்தியம் செய்தன விழியோரங்கள்.

"நம்பிட்டேன் ராசா! நம்பிட்டேன்!" என்று கை கொட்டி, சிரித்த மனத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு, மீண்டும் தன் வேலையைத் தொடர்ந்தன கண்கள்.

சில நிமிடங்கள் கழித்து, "டேய்... என்ன அங்கேயே பார்த்திட்டு இருக்கே? என்னமோ... சும்மா... சுமந்துகிட்டுன்னு கதை சொன்னே?" என்று மனம் ஓர் அதட்டுப் போட்டது.

"ஹான்..." என்று கண்கள் தடுமாறும்போது,

"என்னடா ஆள் எப்படி இருக்கா?" என்று மனம் கேள்வி கேட்டு, உசுப்பி விட்டது.

"என்னத்த? நம்ம ஊர் சேலையோ... தாவணியோன்னா பார்வைக்கு குளிர்ச்சியா இருக்கும். இதென்னடான்னா... முகம் தவிர எல்லாத்தையும் ஒரு பெரிய போர்வையால மூடின மாதிரி... தலையில இருந்து கால் வரைக்கும் ஜெர்கின்... ஜீன்ஸ்... ஷூன்னு மூடி வச்சுக்கிட்டு!" என்று இழுத்து,

"எனக்கு பொண்ணைப் பார்க்கிற மாதிரியே இல்லை.... ஏதோ கை கால் முளைச்ச அரிசி மூட்டையைப் பார்க்கிற எபெக்ட் தான் வருது" என்று சலித்துக் கொண்டது கண்கள் மட்டுமல்ல, மனமும்! கூடவே மூளையும்! (உங்க அலும்புக்கு அளவே இல்லையாடா? உன்னைப் போய் குழந்தை புள்ளன்னு வக்காலத்து வேற வாங்கினேனே! ச்சே! என் புத்தியை...)



Optimized by www.ImageOptimizer.net

அவ்வளவு நேரத்தில், நடந்த ஓர் முக்கியமான காரியம், அவன் குடித்துக் கொண்டிருந்த பானம் காலியானது மட்டுமே! (அப்புறம், அதென்ன அமுதசுரபியா வந்துட்டே இருக்கிறதுக்கு? இல்ல நீ தான் தேவேந்திரனா?)

''ச்சே! காலியா போச்சா?'' என்று உணர்வு மேலிட, காலி கோப்பையைக் குப்பையக் கூடையில் போட்டு விட்டு, காபிக் கடைக்குச் சென்றான், மீண்டும்.

பசியால் சென்றானா? இல்லை... அங்கே அந்தக் கதாநாயகிப் பெண் நின்றதால் போனானா? என்பது மிக முக்கியமான கேள்வி.

அங்கே காட்சி வகைப் பட்டியலில் வைக்கப்பட்டிருந்த பிஸ்கட்டுகளில் ஒன்றைக் காட்டி, அவள் வாங்கிச் செல்ல, நமது கதாநாயகனும் அதையே வாங்கினான் என்று கூறவும் வேண்டுமா? (அவளுக்குப் பிடிச்சதை இவரும் சாப்பிடுறாராம்! நடத்து மகனே! நடத்து!)

மீண்டும் நின்றிருந்த இடத்திற்கே திரும்பியவன், பையிலிருந்த அந்த பிஸ்கட்டை வாயில் வைத்தது தான் தாமதம்!

அவனது இஷ்டத் தெய்வமான ஆஞ்சநேயர், பக்தனின் முகத்தினுள் அஷ்டகோணலாய் புகுந்து கொண்டார்!

பாவம், இஞ்சி தின்ற குரங்கு என்பார்களே, இவன் நிஜமாகவே இஞ்சி பிஸ்கட்டை வாயில் வைத்துக் கொண்டு, குரங்கு முழி முழித்துக் கொண்டிருந்தான்!

புகழுக்கு, பிடிக்காத சமையல் சாமான் என்றால் இஞ்சி தான்!



அதற்காகவே பொங்கலை வெகு காலமாய் ஒதுக்கி வந்தவன் அவன். அதன் பின்னரும், அவன் மாறவில்லை... மாதங்கி தான், அவனது தட்டில் வைக்கும் பொங்கலில் மட்டும் இஞ்சியைப் பொறுக்கிவிட்டுக் கொடுப்பார். அப்போதும், ஒன்றிரண்டு வாயில் தட்டுப் பட்டு விடக்கூடாது, டிபனே வேண்டாம் என்று எழுந்து விடுவான்! இன்று வரையிலும்!

அசைவம் செய்யும் போது, அஜீரணத்தைத் தடுக்கவென சமையலில் இஞ்சியைச் சேர்த்தாலும், அது அவன் வாயில் தட்டுப்படாமல் இருக்க, மிகவும் நைசாக அரைத்து விடுவார்கள் வீட்டில், அப்போதும் கூட, மசாலா சரியாக வதங்காமல், இஞ்சியின் சுவை தீண்டிவிட்டால், அன்று சாப்பாட்டிற்கு... பெரிய ''நோ!''

அப்படியிருப்பவனை... இஞ்சி பிஸ்கட்டையே உண்ணச் செய்தால்? பாவம், முழி பிதுங்கிப் போனான்!

''அவ வாங்கினா... நீயும் வாங்கணுமா? அதுவும், பிஸ்கட் பேரு என்னன்னு கூட பார்க்காம? லூசு! பெரிய... காதல் புறாக்கள்! அவ விஷத்தை எடுத்துக் குடிச்சா... நீயும் கண்ணை மூடிகிட்டு குடிச்சிடுவியோ? அவ பேரு என்னன்னு கூடத் தெரியாது... இதில என்ன ரொமான்ஸ் வேண்டிக் கிடக்கு?! கிராக்கு!'' என்று மனம், சகட்டு மேனிக்கு வசைபாட, வேகமாய் அந்த பிஸ்கட்டைக் கொண்டு போய் குப்பைத் தொட்டியில் போட்டான், புகழ்.

''உவ்வாக்'' என்று அவன் முகம் சுளிப்பதற்கும், ''கிளுக்'' என்று ஓர் சிரிப்பொலி கேட்பதற்கும் சரியாக இருந்தது.

Optimized by www.ImageOptimizer.net

ஒலி வந்த திசையில் பார்த்தால்... வேறு யார்? அவளே தான்! கதாநாயகி! (அசிங்கப்பட்டான், இறால்காரன்!)

''என்ன நினைச்சாளோ?'' என்ற நினைப்பில், லேசாய் அவளைப் பார்த்து அசடு வழிந்துவிட்டு, மீண்டும் காபி கடைக்குச் சென்று, மிக கவனமாய் பிஸ்கட்டுகளை ஆராய்ந்தான்.

ஒரு வழியாக, அவன் தனது பழைய இடத்திற்கு வந்தபோது, அப்பெண் இன்னமும் காபிக் கடை வளாகத்திலேயே இருப்பது ஓரக் கண்ணின் சுற்றளவில் தெரிந்தது.

கடைசி துண்டு பிஸ்கட் உள்ளே சென்ற பின்னரும், இலாவைக் காணவில்லை.

''யாரோ முகம் அறியாதவள் சொன்னதை நம்பிக் கொண்டு... இவ்வளவு நேரம் வீணடித்து விட்டோமோ?' என்று அவனது எண்ணங்கள், கவலையின் எல்லைக்குள் செல்லும்போதே,

''புக்கி!'' என்று கத்திக் கொண்டு வந்துவிட்டது, அவர்கள் வீட்டுச் சின்னக் கிளி.

''எருமை! எங்கடி போய்த் தொலைஞ்ச? எங்க எல்லாம் உன்னைத் தேடுறது? எனக்கு வேற வேலையே இல்லன்னு நினைச்சியா? போன் பண்ண சரி... நான் எடுக்கலை இல்ல... ஒரு மெசேஜ் அனுப்பலாம் இல்லையா? இல்லன்னா ஹோட்டல் ரிசப்ஷன்ல சொல்லிட்டுப் போக வேண்டியது தானே?'' என்று அவன் சகட்டு மேனிக்குப் பொரிந்து தள்ளியவன், தங்கையின் பின்னே நின்றிருந்த முகிலைக் கண்டதும் ஒரு நிமிடம் திகைத்து நின்றான்.



அவன் திட்டியதில் அதிர்ந்து நின்ற இலா, அந்த ஒரு நிமிடத்தில் சுதாரித்து, ''சாரி புக்கி! முகில் கிளம்பி வரேன்னு சொன்னதும்... எனக்கு ஒண்ணுமே புரியலை... அப்படியே கிளம்பி ஏர்போர்ட் போயிட்டேன்! அதான்! ரொம்ப சாரி!'' என்றாள் அண்ணனின் கைகளைப் பிடித்துக் கொண்டு.

''வாங்க முகில்! எப்படி இருக்கீங்க?'' என்று சம்பிரதாயமாய் விசாரித்தவன்,

''உன்னோட போன் என்னாச்சு? ஏன் எடுக்கலை?'' என்றான் தங்கையிடம்.

''தியேட்டர்ல இருந்ததால கேட்கலை... சாரி!'' என அவள் கெஞ்ச,

''பிகரைப் பார்த்ததும் பிரண்டைக் கழட்டி விடுறதுங்கிறது இது தான் போல! இங்க ஒருத்தன் கவலைப்படுவானேங்கிற எண்ணமெல்லாம் சுத்தமா கிடையாது... புருஷன் வந்த உடன என்னைக் கழட்டி விட்டுட்டே!'' என்றபோது, கேலி லேசாய் தென்பட்டாலும், அவனது குரலில் மிதமான கோபமே இருந்தது.

''அவளைத் திட்டாதீங்க புகழ்! நா திடுதிப்புன்னு வந்ததாலதான்...'' என்று மனைவியின் செயல்களுக்கு விளக்கம் கொடுத்த முகில், கைப்பேசியில் அழைப்பு வரவே ''ஒரு நிமிஷம்'' எனக் கூறி, நகர்ந்து விட்டான்.

''என்னோட மொபைல்ல இருந்து வேணும்னா புகழுக்கு கூப்பிட்டுச் சொல்லிடுன்னு முகில்கூட சொன்னாங்க, புக்கி! நான் தான் வேலை நடுல இருப்பான்... வேண்டாம்ன்னு சொல்லிட்டேன். அப்புறம், சினிமாக்கு போனதும் மறந்தே போச்சு!'' என்றாள் இலக்கியாவும்.

Optimized by www.ImageOptimizer.net

கடைசியாய் வந்த ''மறந்தே போச்சு!'' பயங்கரமான எரிச்சலைக் கிளப்பி விட்டது.

'கோடிக்கணக்கில் பணம் புரளும் வேலையை விட்டு விட்டு, நாயாய் பேயாய் அலைந்து தேடினால்... மறந்து போச்சாம்! எனக்கு இதுவும் வேணும்... இன்னமும் வேணும்!' என்று மனதினுள் எண்ணியவன்,

''ஆமாமா... எங்களையெல்லாம் உனக்கு எப்படி ஞாபகம் இருக்கும்? ரெண்டு நாள் முன்னாடி... அந்தத் திட்டு திட்டின ஹஸ்பண்டைத் தான் ஞாபகம் இருக்கும்! மூணு மணி நேரம்... உன்னோட முக்கலையும் முனங்கலையும் கேட்ட என்னை எப்படி ஞாபகம் இருக்கும்?'' என்றான் பட்டென.

அந்த நேரம், முகில் வர, அண்ணனும் தங்கையும் மௌனம் காத்தனர்.

''சாரி. இந்த கால் ஒரு பதினஞ்சு நிமிஷம் போகும். நீங்க கிளம்புறதுன்னா கிளம்புங்க, புகழ். நானும் இலாவும் ரூம்க்கு வந்துடுறோம்'' என்று விட்டு, முகில் நகர,

புகழுக்கு சுறுசுறுவென கோபம் ஏறிவிட்டது.

''நீங்க ரெண்டு பேரும் சாப்பிட்டீங்களா? இல்ல இனிமேல் தானா? சாப்பாடாவது என்னோட சாப்பிடுவீங்களா? இல்ல அதுவும் ஜோடியா தான் போவீங்களா? முன்னாடியே சொல்லிட்டீங்கன்னா... நான் சாப்பிட்டே ரூம்க்குப் போய்டுவேன். எனக்கு ஒண்ணும் பிரச்சனையில்லை!'' என்று திரும்பி நடந்தவனை,

''என்னண்ணா இப்படி பேசுறே? நான் தான் சாரி சொல்றேனே?'' என்று தடுத்தாள் இலக்கியா.



''இட்ஸ் ஓகே, இலா!'' என்ற புகழ், தன் கோபத்தைக் கட்டுக்குள் கொண்டு வர ஆழ் மூச்செடுத்து விட்டான்.

''சரி! முகில்கிட்ட சொல்லிட்டு வா... நாம அந்த ரெஸ்டாரண்ட்ல ஆர்டர் பண்ணிட்டு இருக்கலாம்'' - இயல்பாகிவிட்ட குரலில் நவின்றவன், தங்கை வருவாள் என்ற எண்ணத்தில் முன்னே நடந்தான்.

ஐந்தடி வைத்ததும், வேகமாய் கேட்ட காலடி ஓசையின் பின்னே ''நான் முகில் கூட வரேன்! நீ முன்னாடி போ' என்றது இலாவின் குரல்.

திரும்பி அவன் பார்த்த பார்வையில் ''இல்ல... புக்கி... நா... முகில்... ஃபீல் பண்ணுவாங்க...'' என்று இலா திக்க,

''இதுக்குப் பேரு தான் மஞ்சள் கயிறு மாஜிக் போல! பசியோட.. கடை கடையா ஏறி இறங்கின என்னோட தவிப்பை விட... அவங்களோட ஃபீல் முக்கியமா போச்சு! ஹ்ம்ம்!'' என்றவன், இலாவின் ''அப்படியில்லை புக்கி...'' எனத் தொடங்கிய சமாதானத்தைக் கேட்க அங்கிருக்கவில்லை.



# 6

உள்ளிருந்த கோபம் வேகத்தைக் கொடுக்க, பதினைந்தாவது நிமிடம் விடுதியில் இருந்தவன், தனக்கென ஓர் அறையை எடுத்துக் கொண்டு, தனது பொருட்களுடன் அங்கே சென்று விட்டான்.

Optimized by www.ImageOptimizer.net

பசியின் வேகம் அதிகரித்தபோதும், அதை பொருட்படுத்தாமல், மடிகணினியுடன் அமர்ந்தவன், ஐந்தே நிமிடத்தில் வேலையிலும் மூழ்கிப் போய்விட்டான்.

கைகள் தன் போக்கில், இந்தியாவிலிருக்கும் ஊழியர்களுக்கு மின்னஞ்சல் அனுப்ப, மனமோ கொண்டிருந்த கோபத்திலிருந்து மெல்ல மெல்ல இறங்கி வர ஆரம்பித்தது.

''உனக்கு எதற்கு கோபம்? இலா சொல்லாமல் போனதற்கா? இல்லை... அவள் உன்னைத் தவிர்த்து கணவனுக்கு அளித்த முக்கியத்துவத்திற்கா?''

''முன்னது என்றால்... முடிந்து விட்டது! மீண்டும் மீண்டும் கோபப்பட்டு... தொலைந்து போன நேரத்தையோ... அனுபவித்து மறைந்த பதட்டத்தையோ மீட்டு வர முடியுமா? முடியாது! அதனால், விட்டுவிடு!''

''பின்னது என்றால்... திருமணமான பின்னர் ஓர் பெண்ணிற்கோ / ஆணிற்கோ அவர்களது உற்ற துணை தானே முதன்மை? அதைப் புரிந்து கொள்ளும் முதிர்ச்சி கூட இல்லாமலா போய்விட்டது உனக்கு?'' என்று இடித்துரைக்க ஆரம்பித்த மனம், சமாதானம் என்ற நிலைக்கு வந்து விட்ட போதும், ஒரு விஷயத்தில் குமுறிப் போய் தான் இருந்தது.

அது - முகிலனது பேச்சு! ''எங்கள் இருவருக்கும் நடுவே நீ யார்? இடத்தைக் காலி பண்ணுடா!'' என்று சொல்லாமல் சொல்லிய அவனது வார்த்தைகளை, ஏனோ புகழால் ஜீரணிக்க முடியவில்லை.

ஆனாலும், வீட்டு மாப்பிள்ளை ஆகிற்றே! அவரிடம் முறுக்கிக் கொண்டு விடக்கூடாது என்ற வாக்கியத்தை



மீண்டும் மீண்டும் மூளைக்கு செலுத்தி, அதை மறக்க முயற்சி செய்தான்.

அந்த முயற்சியில் ஓரளவு வெற்றியும் கிட்ட, முகத்திலிருந்த கோபச் சுருக்கங்கள் மறைந்து, நெரித்திருந்த புருவங்கள் நேர்கோட்டிற்கு வந்து சேர்ந்தன.

ஏனோ, தாயிடம் பேச வேண்டும் போலிருந்தது.

''மணி என்ன? ஹ்ம்ம். அங்கே பத்தரை ஆகியிருக்கும். அம்மா மட்டும் தான் வீட்டில் இருப்பார்கள்... நல்லவேளை! அப்பா இருந்தால்... என் பெண்ணை என்னடா சொன்னாய் என்று போனிலேயே கத்தியைக் கொண்டு தொண்டைக்குள் சொருகி விடுவார்! பாசக்கார அப்பாரு!'' - எண்ணங்கள் அதன் போக்கில் வலம் வர, கைகள் வீட்டு எண்ணை அழைத்திருந்தன.

''அம்மா...'' என அவனது குரல் கேட்டதுமே,

''புஜ்ஜு கண்ணா, எப்படிடா இருக்கே? நேரத்துக்கு சாப்பிட்டியா? எண்ணெய் தேய்ச்சு குளிச்சியா? வெளிய போகும்போது... ஜெர்கின் போட்டுப் போடா! வேலை வேலைன்னு ரொம்ப நேரம் கண் முழிக்காத... உடம்பு கெட்டுடும்!'' என்று மாதங்கி, பாசத் தாயாக குசலம் விசாரிப்பார் என்று புகழ் எதிர்பார்க்கவில்லை தான் (அடச்சை, இது வெறும் கற்பனையா!?)

ஆனால், ''டேய் புஜ்ஜு!'' என்ற உற்சாகக் குரலை எதிர்பார்த்து அவன் காத்திருக்க,

அழைப்பை எடுத்த மறு நொடி, ''டேய் புஜ்ஜு, நீ தானே பேசுறே? கொஞ்ச நேரம் கழிச்சுக் கூப்பிடு... இலாவோட தீபாவளி டிரஸ்க்கு குந்தன் வொர்க் பண்றேன்'' என்றதோடு, அழைப்பை வைத்தே விட்டார்.

Optimized by www.ImageOptimizer.net

''அம்மா... அம்மா...'' என இவன் அலறியதற்கு, ''மீன்... மீன்'' என்ற ஒலியே பதிலாய் போனது. (அவனைப் பார்த்தா எனக்கே பாவமா இருக்கு! சரிடா கண்ணா! நீ அழாத! நான் ஹீரோயின் பொண்ணைக் கூட்டிட்டு வரேன்).

கடுப்பாய் வந்தது, புகழுக்கு!

அதற்கு மேல், வேலையில் கவனம் செலுத்த முடியாமல், பால்கனிக்கு வந்தவன், சூழ்ந்து வந்த ஊதல் காற்றில் நனைந்தபடி, வேடிக்கை பார்க்கத் துவங்கினான்.

எதிரே தெரிந்த வீதியில் தான் எத்தனை விதமான மனிதர்கள்!

காதில் ஹெட்போனை மாட்டிக் கொண்டு, தலையை இப்படியும் அப்படியுமாய் ஆட்டும் ஓர் இளைஞன்.

தன் சுட்டிக் குழந்தைகளை சமாளிக்க முடியாமல் திணறும் தாய்!

ஓர் அழகிய பெண் குழந்தையை, தள்ளு வண்டியில் வைத்துத் தள்ளிச் செல்லும் தந்தை!

நடுங்கும் விரல்களால்... பூக்கடையில் ரோஜாக்களை ஆராயும் ஓர் வயதான பெண்மணி!

உடல் தளர்ந்த பின்னரும், உள்ளிருக்கும் காதலுக்கு உரமிட்டு, கை கோர்த்து நடக்கும் ஓர் முதிர்ந்த ஜோடி!

இடம் பொருள் ஏவல் என்று எதையும் உணராமல், கன்னத்தில் இச் வைக்கும் காதல் சிட்டுக்கள்!

கையிலிருக்கும் ஐஸ்கிரீமை... ருசித்து ரசித்து... ரசித்து ரசித்து என்று துளித் துளியாய் உண்ணும் பெண்! ஹே இவள்! கதாநாயகி! (திம்சுகட்டை என்ட்ரி ஆகிறது!)



''நம்ம டென்ஷன்ல இருக்கும்போதெல்லாம் ரிலாக்ஸ் பண்றதுக்குன்னே... இவளை நம்ம அஞ்சு அனுப்புறார் போல!'' என்று குதூகளித்தவன் (யார் யாருக்கெல்லாம் செல்லப் பேர் வைக்கிறதுன்னு ஒரு வரைமுறை கிடையாதாடா?)

அவளையே பின் தொடர்ந்தான், கண்களால்!

பொழியும் பனியையும் மதியாமல், ஐஸ் கிரீம் உண்ணும் பணியைச் செய்யவே பிறந்தவள் போல், ஒரோர் கரண்டி ஐஸ் கிரீம்முக்கும், ஒரு ''ம்ம்ம்ம்...'', ''ச்ச்... சூப்பர்...'', ''வாவ்'' சொல்லி உண்பாள் போலும்! அப்படியொரு பரம்மானந்தம்! (ஐஸ் கிரீம்மே ஐஸ் கிரீம் சாப்பிடுகிறதே! ஆச்சரியக்குறி!)

போவோர் வருவோர், அவள் உண்ணும் அழகைப் பார்த்து, ஓர் புன்னகையுடன் அகல, புகழேந்தியும் ஓர் மென்னகையுடன் அவளது கையையும் வாயையும்... கூடவே கண்கள் காட்டும் அதீத நர்த்தனங்களையுமே மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

உள்ளுணர்வு உறுத்தியதோ என்னவோ, அவள் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்!

அண்ணலும் நோக்கினான்... அவளும் நோக்கினாள் என்று காதலை நான்கே வார்த்தைகளில் **சொல்லிவிட** ஆசைதான்! ஆனால், அப்படியேதும் நடக்கவில்லையே! வில்லையே! ல்லையே! லையே! யே!

பார்த்த மாத்திரமாய், புகழ் வேகமாய் கையசைக்க, அவளோ கைக்குப் பதிலாக ஐஸ் கிரீம் கரண்டியை ஆட்டிக் காண்பித்தாள்.

Optimized by www.ImageOptimizer.net

''அம்மா... அம்மா...'' என இவன் அலறியதற்கு, ''பீன்... பீன்'' என்ற ஒலியே பதிலாய் போனது. (அவனைப் பார்த்தா எனக்கே பாவமா இருக்கு! சரிடா கண்ணா! நீ அழாத! நான் ஹீரோயின் பொண்ணைக் கூட்டிட்டு வரேன்).

கடுப்பாய் வந்தது, புகழுக்கு!

அதற்கு மேல், வேலையில் கவனம் செலுத்த முடியாமல், பால்கனிக்கு வந்தவன், சூழ்ந்து வந்த ஊதல் காற்றில் நனைந்தபடி, வேடிக்கை பார்க்கத் துவங்கினான்.

எதிரே தெரிந்த வீதியில் தான் எத்தனை விதமான மனிதர்கள்!

காதில் ஹெட்போனை மாட்டிக் கொண்டு, தலையை இப்படியும் அப்படியுமாய் ஆட்டும் ஓர் இளைஞன்.

தன் சுட்டிக் குழந்தைகளை சமாளிக்க முடியாமல் திணறும் தாய்!

ஓர் அழகிய பெண் குழந்தையை, தள்ளு வண்டியில் வைத்துத் தள்ளிச் செல்லும் தந்தை!

நடுங்கும் விரல்களால்... பூக்கடையில் ரோஜாக்களை ஆராயும் ஓர் வயதான பெண்மணி!

உடல் தளர்ந்த பின்னரும், உள்ளிருக்கும் காதலுக்கு உரமிட்டு, கை கோர்த்து நடக்கும் ஓர் முதிர்ந்த ஜோடி!

இடம் பொருள் ஏவல் என்று எதையும் உணராமல், கன்னத்தில் இச் வைக்கும் காதல் சிட்டுக்கள்!

கையிலிருக்கும் ஐஸ்கிரீமை... ருசித்து ரசித்து... ரசித்து ரசித்து என்று துளித் துளியாய் உண்ணும் பெண்! ஹே இவள்! கதாநாயகி! (திம்சுகட்டை என்ட்ரி ஆகிறது!)



''நம்ம டென்ஷன்ல இருக்கும்போதெல்லாம் ரிலாக்ஸ் பண்றதுக்குன்னே... இவளை நம்ம அஞ்சு அனுப்புறார் போல!'' என்று குதூகளித்தவன் (யார் யாருக்கெல்லாம் செல்லப் பேர் வைக்கிறதுன்னு ஒரு வரைமுறை கிடையாதாடா?)

அவளையே பின் தொடர்ந்தான், கண்களால்!

பொழியும் பனியையும் மதியாமல், ஐஸ் கிரீம் உண்ணும் பணியைச் செய்யவே பிறந்தவள் போல், ஒரோர் கரண்டி ஐஸ் கிரீம்முக்கும், ஒரு ''ம்ம்ம்...'', ''ச்ச்... சூப்பர்...'', ''வாவ்'' சொல்லி உண்பாள் போலும்! அப்படியொரு பரம்மானந்தம்! (ஐஸ் கிரீம்மே ஐஸ் கிரீம் சாப்பிடுகிறதே! ஆச்சரியக்குறி!)

போவோர் வருவோர், அவள் உண்ணும் அழகைப் பார்த்து, ஓர் புன்னகையுடன் அகல, புகழேந்தியும் ஓர் மென்னகையுடன் அவளது கையையும் வாயையும்... கூடவே கண்கள் காட்டும் அதீத நர்த்தனங்களையுமே மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

உள்ளுணர்வு உறுத்தியதோ என்னவோ, அவள் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்!

அண்ணலும் நோக்கினான்... அவளும் நோக்கினாள் என்று காதலை நான்கே வார்த்தைகளில் **சொல்லிவிட** ஆசைதான்! ஆனால், அப்படியேதும் நடக்கவில்லையே வில்லையே! ல்லையே! லையே! யே!

பார்த்த மாத்திரமாய், புகழ் வேகமாய் கையசை அவளோ கைக்குப் பதிலாக ஐஸ் கிரீம் கரண்டியை ஆ காண்பித்தாள்.

Optimized by www.ImageOptimizer.net

உதடு இரண்டும், வாயிலிருந்து நீண்டு காது வரை சென்றன, புகழுக்கு!

அவளது புன்னகையைப் பதிலாய் பெற்றதும், கையை வானிலிருந்து கீழ் நோக்கிக் காட்டி, மீண்டும் இரு கைகளையும் மார்போடு இறுக்கி, நடுங்குவது போல் பாவனை செய்து, மீண்டும் உள்ளங்கை இரண்டையும் நன்றாய் தேய்த்து, கன்னத்தோடு ஒட்டி, "குளிரலையா?" என்ற ஒரு வார்த்தையை, சைகையில் கேட்டு முடித்தான், புகழ். (முன்னாடி, காது கேளாதோர் செய்திகள் வாசிச்சிட்டு இருந்தியா?)

அதற்கு, அவள் இடமும் வலமுமாய் தலையாட்டி, சுலபமாய் விடை கொடுக்க,

பத்து மார்க் கேள்விக்கு அரை மார்க் அளவிற்கான பதிலை, விடைத் தாளில் பார்க்கும் ஆசிரியரின் நிலைமை என்னவென்று புகழுக்குப் புரிந்தது!

ஆனாலும், மனம் தளராமல், மூக்கை உறிஞ்சுவது போல் சைகை காட்டி, கூடவே இரண்டு பொய் தும்மல்கள் போட்டு, லொக்கு லொக்கு என்று வராத இருமலை வறட்டு வறட்டென்று இருமி, "சளி பிடித்து விடும்!" என்று அவன் கரிசனம் காட்ட,

தோளகளை அலட்சியமாய் குலுக்கி, "ப்ச்..." என்பது போல் உதட்டைச் சுளித்தாள் அப்பெண்.

அடுத்து என்ன கேட்கலாம் என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கும்போது, அவனைக் கை காட்டி, அடுத்ததாய் உண்பது போல் ஜாடை செய்து, மீண்டும் தன்னருகே கை காட்டி, ஆட்காட்டி விரலைத் தாடையில் வைத்து, பின்னர் தம்ப்ஸ் அப் போல் கையில் ஜாடை



செய்து "உன்னுடன் வந்த பெண் எங்கே?" எனக் கேட்டாள் அவள்.

புகழ், இலா, முகில் - மூவரும் திரையரங்கு வாசலில் சந்தித்ததைப் பார்த்தவள், புகழ் இலாவுடன் கோபித்துக் கொண்டு வந்ததை "ஊடல்" என்ற அர்த்தத்தில் எடுத்துக் கொண்டு, உள்ளுக்குள் "நல்லா வேணும்! நல்லா வேணும்! என்னையா குரங்குன்னு சொன்னே? நீ தான் குரங்கு! குரங்குக்கு... எத்த மாதிரி மரம் விட்டு மரம் தாவுற இன்னொண்ணு தான் கிடைச்சிருக்கு" என்று கறுவியது அவள் மட்டுமே அறிந்த விஷயம்!

அதனாலேயே அவளைச் சீண்டும் விதமாய், அப்பெண்ணை நினைவு படுத்தினாள்!

ஆனால் அவனோ, கைகள் இரண்டையும் கழுத்தைச் சுற்றிக் கொண்டு சென்று, தாலி கட்டுவது போல் காட்டி, "அவள் புருஷனுடன் போய் விட்டாள்!" என்றான்.

"வாட் புருஷனா?" என்று மனம் உள்ளே அதிர,

"இவனெல்லாம்... என்ன மனுஷன்!? ச்சே! மட்டமான பையன்!" என்று அருவெறுப்புடன் அவள் விலகுவதற்கும்,

"டேய் புக்கி!" என்ற குரல், அவள் அருகிருந்து கேட்பதற்கும் சரியாக இருந்தது.

"புக்கியா? என்ன பேர் இது? புல்டோசருக்கு தம்பி மாதிரி? என்ன பேரை சுருக்கி... இப்படி பக்கி மக்கின்னு கூப்பிடுறா? அவனைத் தானே கூப்பிடுறா? இல்லை வேற யாரையுமா?" என்று அப்பெண்... அதான் கதாநாயகி தடுமாறிக் கொண்டிருக்க,

Optimized by www.ImageOptimizer.net

அவளது மூளையோ ''பின்னே, அதோ கிடார் வாசிச்சிட்டு இருக்காரே ஒரு தாத்தா, அவரையா டேய் போட்டு அச்சா தமிழ்ல கூப்பிடுவா? அப்படியே கூப் பிட்டாலும்... அந்தத் தாத்தா... புக்கிங்கிறது ஏதோ புது வகை விஸ்கின்னு ஓடி வந்திடப் போறார்?!'' என்று அடித்து அடக்கியது.

அதற்குள், இங்கே இலக்கியா ஏக அமர்க்களம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

''டேய் புக்கி! சீக்கிரம் கீழ இறங்கி வாடா! நான் இன் னைக்கு ரொமப ரொம்ப சந்தோஷமா இருக் கேன்! சீக்கிரம் வா! அப்படியே உன்னை இறுக்கி அணைச்சு... ஒரு உம்மா கொடுக்கிறேன்!''

உற்சாகத்தில் கத்தியவள், காற்றில் இரண்டிரண்டாய் பத்து முத்தங்களை வாரி இறைக்க வேறு செய்தாள்.

பக்கத்தில் நின்றிருந்த முகில், இளகிய சிரிப்புடன் மனைவியையே பார்த்திருக்க, ''என்ன குடும்பம்டா, இது?'' என்றெண்ணியது வேறு யாராக இருக்க முடியும்! ஹீரோயின் பேபியே தான்!

ஆனால், புகழ் இருந்த இடத்திலிருந்து அசையாம லிருக்க,

''ஹே! ரொம்ப முறைக்காத! ப்ளீஸ் வா!'' என்று கை குவித்துக் கெஞ்சியவள், யாரும் எதிர்பார்க்காத நேரத் தில், நடைபாதையில் மண்டியிட்டு, கைகளை இரண் டையும் விரித்து வைத்து, ''என்னோட செல்ல அண்ணா, இல்ல! ப்ளீஸ்ண்ணா வா! உன்னோட இலந்த வட கூப்பிடறேன் தானே... வாயேன்!'' என்றாள், யாசகம் போல்.



அதற்கு மேல் பொறுக்க மாட்டாமல், ''ஏய் லூசி! ரோட் டில நின்னுட்டு மானத்தை வாங்காம... எழுந்து நில்லு! இதோ வரேன்!'' என்று அறைக்குள் நுழைந்தான் புகழ்.

புகழ், இலா, முகில் என்று மூவரும் ஒரோர் விதத்தில் சந்தோசித்து இருக்க, ஹீரோயின் பேபி மட்டும் அதிர்ந்து போய் நின்றது!

''அண்ணாவா? அண்ணாவா? அண்ணாவா?'' என்று கோர்ட் டபாலி கணக்காய் மனம் கூச்சலிட,

''அடக்கடவுளே! ஒரு நல்ல பையனை... ஆன்ட்டி - வைரஸ் போட்டு வைரஸ்களே அண்டமாலிருக்கும் புத்தம்புது கம்ப்யூட்டர் போன்றவனை... அணில் கடிக் காத மாம்பழம் போன்றவனை... ச்சே ச்சே! என்ன வார்த்தை சொல்லிவிட்டாய்! நீ அவனைத் தவறாக நினைத்தது தெரிந்தால்... எவ்வளவு வருத்தப்படுவான்! பாவம், குழந்த புள்ள முகம்... அப்படியே வாடிவிடும்!'' என்று தன்னையே நொந்து கொண்டாள் அவள். (அய் யயோ! அவனை நம்பிட்டியா?! ஹோ... மை... கடவுளே!)



# 7

அடுத்த இரண்டாவது நிமிடத்தில், புகழேந்தி தங்கும் விடுதியை விட்டிறங்கி, ஹீரோயின் நின்றிருந்த எதிர் சாரியில் நடக்கத் துவங்கினான்.

பாதசாரிகள் சாலையைக் கடப்பதற்கான போக்குவரத்து குறியீடுக்காக காத்திருந்தவனை, தலை முதல் கால் வரை ஆராய்ந்தாள், அவள்.

Optimized by www.ImageOptimizer.net

அருகே ஒரு கண் தெரியாதவர் இருக்க, அவரிடம் குனிந்து ஏதோ பேசியவன், அவரது இடது கையை பதமாய்... இதமாய் தனது வலது கைக்குள் வைத்துக் கொண்டான்.

''என்ன மென்மையாக கையாள்கிறான்!'' என்று அவள் வியந்து முடிக்கும் முன்னர்,

ஓர் வயதான பெண்மணி, தனது ஊன்று கோலுடன் சாலையைக் கடப்பதற்கு நின்று கொண்டிருக்க, அவர் புறம் திரும்பி ஏதோ பேசியவன், சட்டென அவர் வைத் திருந்த பையைத் தோளில் எடுத்து மாட்டிக் கொண்டு, அவரது ஊன்றுகோலை வாங்கித் தனது இடது கையில் வைத்துக் கொண்டு, அக்கையாலேயே அவரது தோள் களை அரவணைப்பாய் அணைத்தான்.

''ஐயோ! ஐயோ! இவ்வளவு நல்லவனா இருக்கி யேடா!'' என்று இவள் நெக்குருகிக் கொண்டிருக்கும்போது,

கண் தெரியாதவர் ஒரு புறம், வயதானவர் மறுபுறம் என்று சாலையைக் கடந்தான்.

அதோடு தன் கடமை முடிந்தது என்று நினையாமல், வயதானவரிடம் அவரது உடமைகளை ஒப்படைத்து விட்டு, அவர் கூறிய நன்றிக்குப் பதிலாய் ''என்னோட பாட்டின்னா செய்ய மாட்டேனா? இது ஒரு பேரனோட கடமை!'' என்று ஆங்கிலத்தில் நவின்றான் புன்னகை யுடன்.

அவர் அனுப்பி வைத்ததும், கண் தெரியாதவரை, அவர் செல்ல வேண்டிய கடைக்குள் கூட்டிச் சென்று விட்டு வந்தான்.

அதன் பின்னரே, தங்கையும் அவளது புருஷனும்... கூடவே அவளும் அவன் கண்ணுக்குத் தெரிந்தனர்.



இதோ வருகிறான்! வருகிறான்! வந்துவிட்டான்! கையை ஆட்டுகிறான்! கண்ணடிக்கிறான்! முத்தமொன்றை பறக்க விடுகிறான்! ஹய்யோ... என் உதட்டைப் பார்த்து கை நீட்டுகிறான்... அவன் உதட்டைக் குவிக்கிறான்...

''டமால்!''

''சொடக்கு'' என்று ஓர் ஒலி அவள் காதருகே கேட்டது!

உடல் சிலிர்த்து, யாரென்று திரும்பிப் பார்த்தால், அவன்!

ச்சே! எல்லாம் கனவு! கற்பனை! இரண்டு நாட்களாக, பொழுது போகவில்லை என்று யூ-டியூபில் தமிழ் படங்களை எடுத்துப் பார்த்ததன் விளைவு! கடவுளே! கடவுளே! (அவன் கதாநாயகன் தான், ஆனாலும் ரொம்ப கதாநாயகன் இல்லை. அதீத எதிர்பார்ப்பு கதைக்கு ஆகாது!)

கருணை மகா பிரபுவாய் அவளது கற்பனையில் வலம் வந்தவன், கட்டிளம் காளையாய் சாலையை காதல் சோலையாக்கிக் கடந்து வந்திருந்தான்!

''ஹலோ!'' என அவன் மீண்டும் சொடக்கு போட, ஏற்பட்டிருந்த அதிர்ச்சியின் விளைவாய், தோளில் தொங்கிக் கொண்டிருந்த கைப்பை, சடக்கென விழுந்து, அதனுடனே கையிலிருந்த ஐஸ் கிரீம்மையும் கூட்டிச் சென்றது.

அருகே நின்றிருந்த புகழ் என்ன செய்திருக்க வேண் டும்?

ஒன்று, நம்மூர் சாக்குத் துணியில்... கலர் அடித்து, இரண்டு ரிப்பன் கட்டி, இரண்டு பேரை உள்ளே அமுக்கி

Optimized by www.ImageOptimizer.net

வைக்கலாம் போலிருந்த கைப்பையைப் பிடித்திருக்க வேண்டும்.

இல்லையேல், அவளது உதடு தொட்ட ஐஸ்கிரீமை அமிர்தம் என்றெண்ணி அதையாவது பிடித்திருக்க வேண்டும்.

இரண்டுமில்லாமல், ஹீரோயினைப் பிடித்துவிட்டான்! அதுவும் எப்படி, இரண்டு கைகளையும் இறுகப் பிடித்துக் கொண்டு, ''பார்த்து... பார்த்து'' என்ற பதட்டத்துடன்.

''நா கேர்ஃபுல்லா இருக்குதேன். யூ... ஐஸ்கிரீம் மேலே ஸ்லிப் ஆகிடாத!'' என அவள் ஆங்கிலம் பாதி, தமிழ் மீதியாக சொல்ல.

புகழ் என்ன செய்திருப்பான்? அசடு வழிந்திருப்பான்! அருகே நின்ற, கெக்கே பிக்கே என்று சிரித்துக் கொண்டிருந்த தங்கையைப் பார்த்து முறைத்திருப்பான்! நமட்டுச் சிரிப்புடன் ஒதுங்கி நின்ற மச்சானின் முகம் பார்க்க முடியாமல் தவித்திருப்பான்! (இந்த அசிங்கம் நமக்குத் தேவையா?)

சட்டென சுதாரித்து, ''ஹே இலா! இவங்க இல்லைன்னா நான் உன்னைக் கண்டு பிடிச்சிருக்கவே முடியாது! இவங்க தான்... நீ சினிமா தியேட்டர்க்குள்ள போனதே என்கிட்டே சொன்னாங்க!'' என்ற போது, ஏதோ பெரிய கடத்தல் காரர்களிடம் மாட்டிக் கொண்ட தங்கையை, இவளது துப்பு இல்லையென்றால் கண்டு பிடித்தே இருக்க முடியாது என்பது போன்ற தோரணை இருந்தது! (இவர் பெரிய ஜேம்ஸ் பாண்ட்! அவங்க பெரிய சி.ஐ.டி. சகுந்தலா!)



தங்கையும் சளைத்தவளா என்ன? ''ஹோ! அப்படியா! ரொம்பத் தேங்க்ஸ்! நீங்க... எனக்கு எவ்வளவு பெரிய உதவி செஞ்சிருக்கீங்க தெரியுமா? நீங்க மட்டும் சரியான நேரத்தில இந்த உதவியைச் செய்யலைன்னா... எங்க அண்ணனை... என் ஆருயிர் தமையனை... என் அன்பு சகோதரனை... என்னோட பாசமலரை... ஈடு இணையில்லா மாணிக்கத்தை... பார்த்திருக்கவே முடியாது!'' என்று சொல்லி முடித்த போது, அனைவருமே கண்ணில் நீர் வர, மனம் விட்டுச் சிரித்தனர்.

''நா சிம்ப்ளி சா (saw) யூ சொல்லியாச்சு. நா சொல்லி... ஹான்...'' - தமிழில் எப்படி சொல்வது என்று புரியாமல், சைகையில் ''இல்லை'' என்பது போல் காட்டியவள், ''இவன் ஃபைண்ட் பண்ணி இருப்பான்'' என்றாள்.

அவளது தமிழ் பேசும் அழகில் புகழ் மயங்கி நிற்க, ''கஷ்டப்பட வேண்டாம். எங்களுக்கு இங்கிலீஷ் புரியும். நீங்க அதிலேயே பேசுங்க'' என்றாள் இலக்கியா, புன்னகையுடன்.

''நோ, நோ!''

''மீ தாமில் லேர்ன் பண்றேன். ஒன்லி டமில் பீபில் தா பேச முடியும். சோ!'' என்று விளக்கம் கொடுத்தாள், அவள். (தமிழுக்கு வந்த கஷ்டகாலத்தைப் பார்த்தீங்களா?)

''ஹோ! வெரி நைஸ்!'' என்ற இலக்கியா,

''இவ்வளவு நேரமாய், அறிமுகமே செய்து கொள்ளவில்லையே!'' என்றாள் நெற்றியில் தட்டியவாறே, ஆங்கிலத்தில்.

Optimized by www.ImageOptimizer.net

வைக்கலாம் போலிருந்த கைப்பையைப் பிடித்திருக்க வேண்டும்.

இல்லையேல், அவளது உதடு தொட்ட ஐஸ்கிரீமை அமிர்தம் என்றெண்ணி அதையாவது பிடித்திருக்க வேண்டும்.

இரண்டுமில்லாமல், ஹீரோயினைப் பிடித்துவிட்டான்! அதுவும் எப்படி, இரண்டு கைகளையும் இறுகப் பிடித்துக் கொண்டு, ''பார்த்து... பார்த்து'' என்ற பதட்டத்துடன்.

''நா கேர்ஃபுல்லா இருக்குதேன். யூ... ஐஸ்கிரீம் மேல ஸ்லிப் ஆகிடாத!'' என அவள் ஆங்கிலம் பாதி, தமிழ் மீதியாக சொல்ல,

புகழ் என்ன செய்திருப்பான்? அசடு வழிந்திருப்பான்! அருகே நின்ற, கெக்கே பிக்கே என்று சிரித்துக் கொண்டிருந்த தங்கையைப் பார்த்து முறைத்திருப்பான்! நமட்டுச் சிரிப்புடன் ஒதுங்கி நின்ற மச்சானின் முகம் பார்க்க முடியாமல் தவித்திருப்பான்! (இந்த அசிங்கம் நமக்குத் தேவையா?)

சட்டென சுதாரித்து, ''ஹே இலா! இவங்க இல்லைன்னா நான் உன்னைக் கண்டு பிடிச்சிருக்கவே முடியாது! இவங்க தான்... நீ சினிமா தியேட்டர்க்குள்ள போனதே என்கிட்டே சொன்னாங்க!'' என்ற போது, ஏதோ பெரிய கடத்தல் காரர்களிடம் மாட்டிக் கொண்ட தங்கையை, இவளது துப்பு இல்லையென்றால் கண்டு பிடித்தே இருக்க முடியாது என்பது போன்ற தோரணை இருந்தது! (இவர் பெரிய ஜேம்ஸ் பாண்ட்! அவங்க பெரிய சி.ஐ.டி. சகுந்தலா!)



தங்கையும் சளைத்தவளா என்ன? ''ஹோ! அப்படியா! ரொம்பத் தேங்க்ஸ்! நீங்க... எனக்கு எவ்வளவு பெரிய உதவி செஞ்சிருக்கீங்க தெரியுமா? நீங்க மட்டும் சரியான நேரத்தில இந்த உதவியைச் செய்யலைன்னா... எங்க அண்ணனை... என் ஆருயிர் தமையனை... என் அன்பு சகோதரனை... என்னோட பாசமலரை... ஈடு இணையில்லா மாணிக்கத்தை... பார்த்திருக்கவே முடியாது!'' என்று சொல்லி முடித்த போது, அனைவருமே கண்ணில் நீர் வர, மனம் விட்டுச் சிரித்தனர்.

''நா சிம்ப்ளி சா (saw) யூ சொல்லியாச்சு. நா சொல்லி... ஹான்...'' - தமிழில் எப்படி சொல்வது என்று புரியாமல், சைகையில் ''இல்லை'' என்பது போல் காட்டியவள், ''இவன் ஃபைண்ட் பண்ணி இருப்பான்'' என்றாள்.

அவளது தமிழ் பேசும் அழகில் புகழ் மயங்கி நிற்க, ''கஷ்டப்பட வேண்டாம். எங்களுக்கு இங்கிலீஷ் புரியும். நீங்க அதிலேயே பேசுங்க'' என்றாள் இலக்கியா, புன்னகையுடன்.

''நோ, நோ!''

''மீ தாமில் லேர்ன் பண்றேன். ஒன்லி டமில் பீபில் தா பேச முடியும். சோ!'' என்று விளக்கம் கொடுத்தாள், அவள். (தமிழுக்கு வந்த கஷ்டகாலத்தைப் பார்த்தீங்களா?)

''ஹோ! வெரி நைஸ்!'' என்ற இலக்கியா.

''இவ்வளவு நேரமாய், அறிமுகமே செய்து கொள்ளவில்லையே!'' என்றாள் நெற்றியில் தட்டியவாறே, ஆங்கிலத்தில்.

Optimized by www.ImageOptimizer.net

''சில சமயம்... கல்லுக்குள் ஈரம் சுரக்கிற மாதிரி உன்னோட மண்ணுக்குள்ளும் மின்மினி வெட்டுது! குட் ஜாப், இலந்த வட!'' என்று மனதார மெச்சிக் கொண்ட புகழேந்தி, அவளது பெயரைக் கேட்பதற்காக, இரண்டு வினாடிகள் தவமிருந்தான். (ரெண்டு வருஷம் தவமிருந்த மாதிரி, நீ கொடுக்கிற பில்ட்-அப் இருக்கே! அய்யயோ! தாங்கலைடா சாமி!)

முதலில் இலக்கியா தன்னை அறிமுகம் செய்து கொள்ள ''வித்தியாசமான பெயர்! இலாக்யா!'' என்றாள் அவள், மேலைநாட்டு உச்சரிப்பில்.

''உன்னை... போலீஸ் இலாக்காவுக்கு துணைத் தலைவர் ஆக்கிடுவாங்க போல!'' என்று புகழ் கிண்டல் செய்ய,

''வாட் சொல்றா இவன்?'' என்று கேட்டாள் ஹீரோயின்.

''ஒண்ணுமில்லை. என் பேரை நீங்க ஸ்பெல் பண்ண விதத்தை கிண்டல் செய்றான்'' என்ற இலக்கியா,

''நாங்க பேசுற தமிழ் உங்களுக்குப் புரியுமா? இல் லைன்னா... சங்கோஜப்படாம சொல்லிடுங்க'' என்றாள் நட்புடன்.

''ஹோ! எனக்கு லிட்டில் லிட்டில் மீனிங் புரியும்... பிக் வோர்ட்ஸ் தா கஷ்டம்... அப்றம் ஸ்பீக்கிங் தா ரொம்பபப ப்ரோப்லம்'' என்றாள் அவளும், அதே நட்புடன்.

'பேரைக் கேளுன்னா, ஊர்க் கதையெல்லாம் பேசிட்டு இருக்கு எருமை' என்று மனதினுள் தங்கையை வைத கையுடன், ஹீரோயின் பெண்ணிடம் கை நீட்டியவன், ''ஹலோ, நான் புகழேந்தி! இந்தியாவில் இறால் ஏற்றுமதி பிசினஸ் செய்கிறோம்!'' என்று தன்னை



அறிமுகம் செய்து கொண்டு, அருகே இருந்த மச்சானைக் கை காட்டி ''இவர் முகில், இலக்கியாவின் கணவர்! சியாட்டலில் உள்ள கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி ஒன்றில் பெரிய பதவியில் இருக்கிறார்!'' என அவரையும் முறையே அறிமுகம் செய்து வைத்தான்.

''உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி!'' என்றவள், இப்போது பாதுகாப்பாக ஆங்கிலத்திற்கு தாவி விட்டிருந் தாள். தமிழில் பேசுகிறேன் பேர்வழி என்று அர்த்தத் தையே மாற்றிவிட்டால்? அறிமுகமே அந்தர்தனம் ஆகிவிடாது?! அந்த பயம் தான்!

''முஹில்... இது ஸ்பெல் பண்ண ஈஸி!''

''பட்... திஸ் மேன் பேர்... இஸ் இட் புக்கள் ஹிந்தி?'' என்றாலே பார்க்கலாம். இலக்கியாவிற்கு புரையேறி, இருமல் வந்ததில், கண்கள் கோவைப் பழமாய் சிவந்து விட்டன. (என்ன அழகான தமிழ் பெயர்? அதைப் போய்?! ஹய்யகோ! என் செய்வேன் நான்... என் செய் வேன்?)

எப்போதும் புன்னகைக்குப் பஞ்சப்பாட்டு பாடும் முகில் கூட, ரெண்டு சென்டிமீட்டர் அதிகமாய் சிரித் தான்.

இலக்கியாவோ விழுந்து புரண்டு சிரிக்காதது தான் ஒரே குறை! கெக்கே பிக்கே என்று ஏகத்திற்கும் சிரிப்பு!

''ஷ்... லயா!'' என்று முகில் அதட்டிய போது கூட, அவளால் சிரிப்பை நிறுத்தவே முடியவில்லை.

மனைவியின் ஆனந்தச் சிரிப்பில் தன்னைத் தொலைத் தப் போதும், முகத்தில் பெயருக்கு சிரிப்பை வைத்துக்

Optimized by www.ImageOptimizer.net

கொண்டு, உதட்டை முழ நீளத்திற்கு நீட்டி வைத்திருந்த மைத்துனனைக் கண்டதும், மனைவியின் கை பிடித்து இழுத்தான்.

அதற்குள், ''ஏன் லாஃப் பண்றே?'' என்று ஹீரோயின் பெண் கேட்டுவிட,

இலக்கியா, கண்ணில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டு பேச ஆரம்பிப்பதற்குள், ''என்னோட பேர் புக்கள் ஹிந்தி இல்ல... புகழேந்தி! பு..க..ழ்...ஏன்...தி...'' என்று பிரித்துப் பிரித்துச் சொல்லிக் கொடுத்தான் புகழ். (கதாநாயகியிடம் எது எதுக்கோ பாடம் எடுக்கலாம்! இப்படி பேருக்குப் போய் டியூஷன் எடுக்கிற மாதிரி ஆகிப் போச்சே!? ப்ச்.. ப்ச்!)

''ஹோ... வெயிட்.. நா ஸ்பெல் பண்றா...'' என்றவள், ஏதோ யுத்தத்திற்குத் தயாராகுபவள் போல், கண்களில் தீவிரத்தைக் கொண்டு வந்து, மணிக்கட்டு வரை நீண்டிருந்த ஸ்வெட்டரை முழங்கை வரை இழுத்து விட்டு,

''ஹான்... புஹால் ஹிந்தி!'' என்றாள் அதீத அழுத்தத்துடன்.

''இந்த ஹிந்தியை விட மாட்டா போலவே! தமிழே ஒழுங்க வரலை... இதில ஹிந்தி வேற! இவ பேசுறதைக் கேட்டு இந்தியா அழியாம இருக்கே!'' என்றான் நெஞ்சுக்குள்.

''புகழேந்தி வேணாம்... புகழ்ன்னே கூப்பிடுங்க!'' என அவன் கூற, இலக்கியா பரிதாபம் என்ற பெயரில் அண்ணனைப் பார்த்து சிரித்து வைத்தாள்.



''வேணாம் இலந்த வட... என்னை டென்ஷன் பண்ணாத!'' என்று கண்ணாலேயே எச்சரிக்கை செய்துவிட்டு,

''புகழ்!'' என்றான் கதாநாயகியிடம், மீண்டும்.

''ஹ்ம்ம். ஓகே! புஹால்!''

''ஊஃப்... புகழ்... இட்ஸ் நாட் ''ஹா''... இட்ஸ் ''க'' என்றான் அவன். தமிழின் அழகாம் ''ழ'' கரத்தை அவள் கொலை செய்வது பிடிக்காவிட்டாலும், எடுத்ததுமே கஷ்டமான பாடத்திற்கு செல்லாமல், சுலபமான ''க''விலிருந்து ஆரம்பித்தான் அவன்.

''ஹ்ம்ம்... யா.. புஹால்...''

''நோ.. புகழ்...''

''யா... நா கரெக்ட் தானே சொல்றான்... புஹால்.. ஸீ குட் ஸ்பெல்லிங்!''

''நோ... நோ... புஹால் இல்ல... புகழ்...''

''நாவும் அதே தான் சொல்றான்... புஹால்!''

புகழேந்தி மீண்டும் வாய் திறக்கும் முன்னர், ''புக்கி விடுடா! இந்த ரேஞ்சுல போனா... புஹால்... ஹலால் ஆகிடும்!'' என்று இடைமறித்தாள் இலக்கியா.

''எருமை... எருமை! நீ வேற அவளுக்குச் சொல்லிக் கொடு! இப்பவே என்னவோ பாலஸ்தீன் நாட்டில இருக்க ஃபீல் வருது எனக்கு.. நீ ஹலால்ன்னு சொல்லப் போக... அவ என்னைச் சிக்கன் ஆக்கி.. சின்னா பின்னம் ஆக்கப் போறா!'' என்று வாய் விட்டே புகழ், தங்கையை வசைபாட,

''ஹே சிக்கன்! ஐ லவ் பட்டர் சிக்கன்! யம்மி! யம்மி!'' என்று ரசித்துச் சொன்னாள் ஹீரோயின்! (சோத்து டப்பா)

Optimized by www.ImageOptimizer.net

கண்களைச் சுருக்கி, உதட்டைச் சப்புக் கொட்டி, அவள் சொன்ன விதத்தில், ''சிக்கன்.. அதுவும் பட்டர் சிக்கன்.. உன் அழகின் ரகசியம்... ம்ஹூம்... உன் கொழுப்பின் ரகசியம் புரியுது மகளே! புரியுது!'' என்று கேலி செய்தது புகழின் மனம்! (உனக்கு கொலஸ்ட்ரால் ஜாஸ்தி மவனே!)

''எனக்கு சிக்கன் ரொம்பப் பிடிக்கும்! முகில் சூப்பரா சிக்கன் செய்வாங்க... பெப்பர் சிக்கன்... சிக்கன் கபாப்... சிக்கன் 65... சிக்கன் லாலிபாப்...'' என்று இலக்கியா அடுக்கிக் கொண்டே போக,

''ஹே! ரெஸ்டாரண்ட்ல இருக்க மெனு கார்டை மனப்பாடம் பண்ணிட்டு வந்து ஒப்பிக்கிறியா? இந்த டகால்டி வேலையெல்லாம் இங்க வேண்டாம்!'' என்றான் புகழ் சிரிப்புடன்.

எழுந்து அடங்கிய சிரிப்பலைக்குப் பின்னர், ''இந்த அவமானம் நமக்குத் தேவையா லயா?'' என்று முகில் கேட்க,

''அவமானம் நிகழ்ந்தது உங்களுக்கு... எனக்கில்ல..!'' என்று தோளை அலட்சியமாய் குலுக்கிக் கொண்டவளின், தலையில் கணவன் ஓர் செல்லத் தட்டுத் தட்ட, அங்கே மீண்டும் சிரிப்பின் நாதம் கீதம் பாடியது.

எல்லோரும் மனம் திறந்து சிரித்துக் கொண்டிருந்த சமயம், இலா ''அடடா!'' என்று ஹை பிட்சில் கத்தியதோடு நில்லாமல், பலமாய் நெற்றியில் வேறு தட்டிக் கொண்டாள்.

மற்ற மூவரும் சிரிப்பை நிறுத்திவிட்டு, ''என்ன... என்ன?'' என்று கேட்கவும்,



''முக்கியமான விஷயத்தை மறந்துட்டேனே!'' என்று ஏகத்திற்கு வருத்தம் கொண்டவள்,

''என்ன லயா? எதையும் மிஸ் பண்ணிட்டியா? என்னது ஹான்ட்பேகா? இல்ல போனா? எங்க?'' என்று வேகம் காட்டிய கணவனின் கையைப் பற்றி அழுத்திவிட்டு,

''ம்ஹூம்! இவங்க பேரைத் தான் மிஸ் பண்ணிட்டேன்!'' என்றாள் ஹீரோயின் பெண்ணின் பக்கம் கை காட்டி.

''ஹோ!'' என்று முகில் இழுக்க,

''ஞானசூனியம்!'' என்று புகழ் உள்ளே வசை பாட,

''என் பேர் மிஸ் ஆகாத்து... நா தா மிஸ்... மிஸ்.ஸ்ரீலஷ்மி!'' என்றாள் கதாநாயகி.

(ஹப்பாடா! பேரைச் சொல்லிட்டா! இனிமேல், நோ ''கதாநாயகி''... ஒன்லி ''ஸ்ரீ''!)



# 8

''நல்ல பேர்!'' என்றாள் இலக்கியா வெளிப்படையான பாராட்டாய்.

''உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி'' என்று வெளியே சம்பிரமாய் சொன்ன போதும்,

''ஸ்ரீலஷ்மியை எப்படி சுருக்கலாம்? ஸ்ரீ... ஹ்ம்ம் இது எல்லாரும் கூப்பிடறது! லஷ்மி... நீ என்ன அவளோட பாட்டியையா கூப்பிடுற? ஹ்ம்ம் அப்போ லெட்சு?

Optimized by www.ImageOptimizer.net

சொச்சு... பஜ்ஜுன்னுட்டு... கருமம்.. கருமம்... லெட்சு... சொச்சு... பஜ்ஜு ன்னுட்டு... சொஜ்ஜி பஜ்ஜி சாப்பிடற எபெக்ட் வரலை?! ஹ்ம்ம் வேற என்ன?! ஹான்! யுரேகா! லட்டு! செம பேருடா மச்சான்!'' என உள்ளுக்குள் பயங்கர ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தான் புகழ். (இதற்குப் பெயர் தான் - காரணப் பெயரோ?!)

''லட்டு! லட்டு!'' என்று வாய்க்குள்ளேயே இரண்டு முறை சொல்லிப் பார்த்தவன்,

''கரெக்ட்டா தான்யா பேர் வச்சிருக்கானுங்க! கன்னம் ஒண்ணு ஒண்ணும்... பத்து லட்டை சேர்த்து வச்ச மாதிரி தான் இருக்கு! பத்து லட்டுன்னா ரொம்பபபபபபப பெருசா இருக்கோ? திருப்பதி லட்டு அளவுன்னு வச்சுக் கிட்டாலும்... கட்டாயம் மூணாவது வரும்...'' என்று லட்டு கணக்கு போட ஆரம்பித்த வேளையில்,

''ஓகே, நா போறேன்... டாடி கம் பண்ற டைம் வந்துச்சு'' என்று அங்கிருந்து நகர்ந்தாள் கதாநாயகி. ஹோ... சாரி.. சாரி... ஸ்ரீலக்ஷ்மி.

''லட்டு! ப்ளீஸ் போகாதே!'' என்று வாய் வரை வந்து விட்டது புகழுக்கு.

''மவனே! வேண்டாம்... வெளிநாட்டில் வந்து தர்ம அடி வாங்கப் போற... சொல்லிட்டேன்! லட்டாம் லட்டு! உன்னை லட்டு மாதிரி பிட்டு.... பூந்தி ஆக்கிடப் போறா!'' என்று மனசாட்சி, அபாய மணி எழுப்ப, கப்சிப் என்று வாய் மூடிக் கொண்டான், நம் கதாநாயகன். (அது! அந்த அடக்க ஒடுக்கம் இருக்கணும்!)

ஏனோ, இன்னும் சற்று நேரம் அவளிடம் பேசிக் கொண்டிருக்க வேண்டும் போல் மனம் படபடத்தது!



தமையனின் உள்ளத்தைப் படித்தவள் போல், ''இன்னைக்கு எங்களோட டின்னர் சாப்பிடலாமே, ஸ்ரீ! ப்ளீஸ் கம்!'' என அழைப்பு விடுத்தாள் இலக்கியா.

''தேங்க்யூ! பட்... டாடி வெயிட் பண்ணுவா...''

''நாங்களும் உங்க அப்பாக்காக வெயிட் பண்றோம். அவர் வந்ததும், எல்லாருமா சேர்ந்து போகலாம். ஜஸ்ட் ஒரு சின்ன ஃபாமிலி மீட் மாதிரி இருக்கட்டுமே!'' என்று இலக்கியா சொன்னதும், அதற்கு மேல் பிகு பண்ணாமல், ''ஓகே'' என்றாள் ஸ்ரீ.

''உங்க அப்பா எப்போ வருவாங்க?'' என்று இலக்கியா வினவ,

''இன்னும் அரை மணி நேரத்தில்'' என்று ஆங்கிலத்தில் வந்து விழுந்தது பதில்.

''அது வரைக்கும் ரோட்டிலேயே நிக்க வேண்டாமே! ஹோட்டல் லாபில வெயிட் பண்ணலாம்'' என்று புகழ் கூறவும்,

''ஹ்ம்ம். நாம ரெஸ்ட்டாரண்ட் போலாம். டாடி ஜாயின் பண்ணுவா... நா போன்ல சொல்லுறான்...'' என்ற ஸ்ரீ, கைப்பேசியை எடுத்து தன் தந்தையிடம் விவரம் கூறினாள்.

அனைவருமாக, அருகிருந்த பன்கடை வளாகத்தினுள் நுழைந்தனர்.

மெக்சிகன், இட்டாலியன், சைனீஸ், த்தாய் என்று விதவிதமான உணவகங்களின் பட்டியலை இலக்கியா பிரித்து மேய்ந்து கொண்டிருக்க,

''இந்தியன் ரெஸ்ட்டாரண்ட்டே போகலாம், இலா'' என்றான் புகழ், முடிவாக.

Optimized by www.ImageOptimizer.net

"வட்டு.. பட்டர் சிக்கன் உண்ணும் அழகைப் பார்த்தே ஆக வேண்டும்!" என்று மனம் கங்கணம் கட்டிக் கொண்டு நின்றது. (சோழியன் குடுமி சும்மாவா ஆடும்!?)

முகிலின் முகமும் சம்மதத்தைக் காட்ட, ஸ்ரீயும் "யா... தட்ஸ் குட்!" என்று ஆமோதிக்க, நால்வரும் அங்கிருந்த இந்திய உணவகத்திற்குள் சென்றனர்.

அமர்ந்ததும், "உங்கள் தந்தையிடம் இந்த இடமென்று சொல்லிவிடுங்கள்" என்று முகில் நினைவுபடுத்த, மீண்டும் தந்தைக்கு அழைத்து இருப்பிடம் கூறினாள் ஸ்ரீ.

"டாடி டென் மினிட்ஸ்ல கம் பண்ணுவாவாம். ஆர்டர் பிளேஸ் பண்ணச் சொன்னா" என ஸ்ரீ கூறவும், "முதல்ல ஸ்வீட் ஆர்டர் பண்ணலாமா?" என வினவி னான் புகழ்.

"ஹே ஸ்வீட்ன்னு சொன்னதும் தான் ஞாபகம் வருது.. எங்கிட்டே ஒரு பெரிய... ரொம்ப ரொம்ப ரொம்ப ரொம்ப ஸ்வீட்டான நியூஸ் இருக்கே!" என்று சிறு பிள்ளையாய் மிளற்றினாள் இலக்கியா.

"வாவ்! ஆர் யு ப்ரெக்னன்ட்!" என்று ஸ்ரீ கூவ,

"ஹே... நோ... நோ! அதுக்கு இன்னும் நாள் இருக்கு!" என்றாள் இலக்கியா வெட்கத்துடன்.

சிவப்பேறிய அவளது கன்னங்களை ஆசையாய் வருடி, "சோ ஸ்வீட்!" என்று ஸ்ரீ, செல்லம் கொஞ்ச,

"வேண்டாம் ல... ஹ்ம்ம்... ஸ்ரீ! முகில் பார்க்கத் தான் பரம சாது.. அவருக்குச் சொந்தமானதை சீண்டினா புலியா மாறிடுவார்!" என்றான் புகழ், சீண்டலாய்.



அதற்குப் பதிலாய், "ஏன் புகழ்? நான் பாட்டுக்கு பேசாம தானே இருக்கேன்.. எதுக்கு என்னை வம்புக்கு இழுக் கிறீங்க? இந்த புலி... எலியா மாறி ரொம்ப நாளாச்சு..." என்றான் முகில் வருத்தம் போல.

"ஹஹஹா! புலி... எலியானது எப்போது?" என்று புகழ் கேள்வியெழுப்ப,

"தாலி கட்டியபோது!" என்று முகில் பதில் கொடுக்க,

அங்கே எழும்பிய சிரிப்பில், உணவகமே கலகலத்தது! (உண்மை கசக்கும்!)

"ஓகே ஓகே! என்ன நியூஸ்! சொல்லு!" என்று ஒரு வாறு விஷயத்திற்கு வந்தாள், ஸ்ரீ.

"சொல்லவா விடுறீங்க! ஊய்... ஊய்ன்னு கத்திக் கிட்டு..." என்று சலித்துக் கொண்ட இலக்கியா,

"முகில்... இந்தியால... ஹ்ம்ம் சென்னைல ஒரு கன்ஸ்ட் ரக்ஷன் கம்பெனி ஆரம்பிக்கப் போறாங்க. அதுக்கான அப்ரூவல் இன்னைக்குத்தான்.. ஜஸ்ட் இரண்டு மணி நேரம் முன்னாடி தான் வந்தது! நா ரொம்ப ரொம்ப சந் தோஷமா இருக்கேன்... நாங்க இந்தியா வரப்போறோம்!" என்று ஆவலாய் கூவினாள், இலக்கியா.

"மனமார்ந்த வாழ்த்துக்கள் முகில்!" என்று முகிலின் கை பற்றி குலுக்கிய புகழுக்கும் மனம் சந்தோஷத்தில் நிரம்பி இருந்தது.

"எங்கோ கண்காணாத தூரத்தில் பெண்ணைக் கட்டிக் கொடுத்துவிட்டோமே" என்று பெற்றோர் மருகு வது குறையுமே! தூத்துக்குடியில் விமானம் ஏறினால்... இரண்டே மணி நேரத்தில் மகளைப் பார்த்துவிடலாம்.

Optimized by www.ImageOptimizer.net

முதலில், அப்பாவிடம் சொல்ல வேண்டும் என்று மனம் குறிப்பெடுத்தது.

கூடவே, இலக்கியாவின் தனிமை கோபமும் குறையும் அல்லவா?! எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல், அவ ளால் தனியாய் சமாளிக்க முடியும்! வேலைக்குக் கூட சென்று வர முடியும்!

நேற்று இரவு, எப்படி தங்கையின் வாழ்வில் இருக்கும் சிக்கலைத் தீர்ப்பது என்று நடத்திய யோசனைக்கு அவசியமே இல்லாமல் போனதில் அவனுக்குத் துளியும் வருத்தமில்லை! மிதமிஞ்சிய சந்தோஷமே!

அண்ணன் என்றாலும், கணவன்-மனைவியின் சொந்த வாழ்வில் தலை நீட்டுவது சங்கோஜமாய் பட்டது அவனுக்கு! இப்போது, தானாகவே ஒரு முடிவு வந்துவிட்டதே! அதுவும் நல்ல முடிவாய்!

எண்ண ஓட்டங்களுக்கு மத்தியில் புகழ் நீந்திக் கொண்டிருக்கையில், ஸ்ரீலஷ்மி தனது வாழ்த்தை முகில்-இலக்கியா தம்பதியரிடம் பகிர்ந்து முடித்திருந் தாள்.

அதன் பின்னர், முகிலிடம் அவனது தொழில் விவகாரங் களைக் கேட்டறிந்தவன், தன்னால் இயன்ற உதவியைச் செய்வதாய் உறுதியளித்தான்.

தொழில் விஷயம் தாண்டி, பேச்சு பொது விஷயங் களுக்குப் பயணிக்கவே, பெண்கள் இருவரும் அதில் கலந்து கொண்டனர்.

"ரொம்ப நாளா இந்தியா போற பிளான்ல இருந்தீங் களா?" என்று வினவிய ஸ்ரீ, "எவ்ளோ லாங் செண்டன்ஸ்



எனக்கு தமிழ்ல டெலிவர் ஆகாது. அதான்..." என்றாள் தனது ஆங்கிலக் கேள்விக்கு விளக்கமாய்.

"இட்ஸ் ஓகே!" என்று சிரித்துவிட்டு,

"ம்ஹூம்! இப்போ தான்.. கல்யாணம் முடிஞ்சதும் தான்! அது வரைக்கும், அமெரிக்கால செட்டில் ஆக லாம்ன்னு தான் இருந்தேன்... கிரீன் கார்டு அப்ளை பண்ற வேலை கூட நடந்துச்சு!" என்ற முகில் சிறு இடைவேளை விட்டான்.

அதன் பின்னர், அவன் பேச ஆரம்பித்த போது, கண்கள் அவன் மனைவியின் மீதே இருந்தன.

"லயாவுக்காக தான்... இந்த இந்தியா பிளான்! நிறைய பேருக்கு நடுல இருக்கணும்ன்னு விரும்புறவளை... இங்க வீட்டுக்குள்ளேயே முடக்கி வைக்கிறது என்னமோ ஆணாதிக்கம் மாதிரி இருந்தது! கூடவே, அவ படிச்ச படிப்பை நம்மளோட சௌகரியத்துக்காக வீண் பண்றோ மோன்னு இருந்துச்சு.. சோ.... எனக்குப் பிடிச்ச வேலையை இங்க செஞ்சா என்ன? இந்தியால செஞ்சா என்ன? அதுவும், முழு பொறுப்பு என் கையில வரும் போது, இன்னும் சுவாரஸ்யமா இருக்கும் இல்லையா? அதான், இந்தியா போறதுன்னு முடிவு பண்ணியாச்சு!"

இலக்கியா பெருமிதமாய் கணவனுடன் கண்ணோடு கண் கலக்க, பாசமுள்ள அண்ணனாய் புகழுக்கு நிறை வாக இருந்தது! பின்னே, மனைவியை நன்றாக புரிந்து கொண்டவனால் மட்டுமே, இம்முடிவை எடுக்க முடியும் அல்லவா!

ஆனால், ஸ்ரீ விடுவதாய் இல்லை.

Optimized by www.ImageOptimizer.net

''என் இலா இங்கேயே வேலை செய்ய முடியாதா?''

''ஹ்ம்ம். மேலே ஒரு டிகிரி வாங்கினால், இங்கே வேலை செய்யலாம்.''

''வாங்க வேண்டியது தானே?''

''அவளுடைய படிப்பு நாங்க இருக்கிற இடத்தில இல்லை. வேற மாகாணம் போகணும்.''

''அதனால் என்ன? அனுப்பிப் படிக்க வைங்க! இதுக்காக யாராவது வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்த அமெரிக்க பூமியை விட்டு போவார்களா? அதுவும் இந்தியாவிற்கு?''

மேலை நாட்டு ஆங்கிலத்தில், அவள் பேசிய விதத்தில், ஏகப்பட்ட அலட்சியம் அள்ளித் தெளிக்கப்பட்டிருந்தது!

''ஹலோ! ஹலோ! இந்தியான்னா கேவலமா?! நீங்களும் அங்க பிறந்தவங்க தானே?'' - எகிறிவிட்டான் புகழ்.

''ஹே! நான் இந்தியாவைக் குறை சொல்லலை. ஆனா, ஒரு வளமான வாழ்க்கையை அமெரிக்கால வாழலாம்ங்கிற போது, எதுக்கு இந்தியா போகணும்?''

''எது வளமான வாழ்க்கை? இங்கேயே பிறந்து வளர்ந்த உங்களுக்கு இது வளமான வாழ்க்கையா தெரியலாம்... பட்.. இந்தியால இருந்து வந்த எங்களுக்குத் தெரியலை... வீடு பெருக்கிறதில இருந்து பாத்ரூம் கழுவுறது வரைக்கும் நாமளே செய்யணும்! என்... ஒரு டேபிள் வாங்கினா கூட, அதை நாமளே வீட்டுக்கு எடுத்திட்டு வரணும்... அதை நாமளே பிக்ஸ் பண்ணணும்... அதுக்கெல்லாம் ஆள் வச்சா, நம்ம சம்பளத்தில பாதியை



அவனுக்கு அழணும்! இங்க எல்லாமே இயந்திரத் தனமா இருக்கு.. வீக் எண்டுல பிரண்ட்ஸ் ஃபாமிலின்னு சேரும் போது கூட எனக்கு ஒரு நெருக்கம் வரலை... ஏதோ அந்நியமா... ஒட்டாத மாதிரி... சந்தோஷமா இருக்க முடியல...'' என்றாள் இலக்கியா, ஆவேசமாக.

''ஆனா.. இந்தியால இருக்கிற பொலிடிக்ஸ்...''

''எங்க தான் பொலிடிக்ஸ் இல்ல? எல்லா ஊர்லேயும் இருக்கு...''

''ஹ்ம்ம்... ஆனா... அங்க இருக்க அதிகமான ஜனத் தொகை... குறுகலான சந்துகள்... டிராபிக்... புகை...''

''அப்படிப் பார்த்தா, இங்கே டிராபிக்கே இல்லையா? அப்புறம் ஏன், மெட்ரோ யூஸ் பண்ணுங்க... பைக்ல ஆபீஸ் போங்க... கார் வேண்டாம்ன்னு விளம்பரப்படுத்துறாங்க. ஒரொரு ஆபீஸ்ல, கார்ல வராம பப்ளிக் ட்ரான்ஸ்போர்ட்ல வந்தா ஸ்பெஷல் அல்லோவன்ஸ் எல்லாம் தராங்க தெரியுமா?''

அனல் பறக்கப் போய்க் கொண்டிருந்தது விவாதம்.

குழாயடி சண்டை போல் ஆகிவிடுமோ என்று பயந்தே போனான், புகழ்.

சடாரென மேஜையின் குறுக்கே விழுந்து, ''நோ ப்ளீஸ்! நாம இங்க.. பட்டிமன்றம் நடத்த வரல! தயவு செஞ்சு விட்டிருங்க தாயிகளா!'' என்றான் கைகள் இரண்டையும் கும்பிட்டவாறு வைத்து.

சட்டென சிரித்தனர் இரு பெண்களும்!

''இது பெண்களுக்கு அழகு!'' என்று சான்றிதழ் கொடுத்துவிட்டு, அவன் நிமிர,



Optimized by www.ImageOptimizer.net

அதற்காகவே காத்திருந்தவள் போல் ''வாட்... பாட்டி மாந்தாம்?'' என்றாள் ஸ்ரீ. அறிந்து கொள்... ஆர்வத்துடன்.

''அடககடவுளே! எந்தப் பாட்டியும் மந்திரம் செ... லலை! வடையும் சுடலை! அது பட்டிமன்றம்! ... பட்டிமன்றம்னா டிபேட்!'' என்றான் புகழ், விளக்கம்... (தமிழ் கிளாஸ் எடுத்தே நீ கிழவன் ஆகிடுவே... போலே!)

''ஹே! சிம்ப்ளா டிபேட்ன்னு ஸ்பெல் பண்ண... யேன்... பிக் பிக் வேர்ட்ஸ் எல்லா சொல்றே!'' என்... அவள் கண்டிப்பு காட்ட,

''சரிங்க ஆபீசர்!'' என்று கை கட்டி வாய் பொத்... னான், நம்ம ஹீரோ! இல்லையில்லை அவளது ஹீரோ...

''நீங்க கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்றேன்...'' என்று முகில் தொடங்க,

''என்ன கேள்வி?'' என்றாள் கேள்வி கேட்டவளே!

புகழ் தலையில் கை வைத்துக் கொள்ள, இலக்... யாவோ ''திரும்பவும் முதல்ல இருந்தா...'' என்றாள் ப... பரிதாபமாய்.

லேசாய் சிரித்த போதும், முகில் விடுவதாய் இல்லை...

''ஏன் லயாவை வெளியில அனுப்பிப் படிக்க... வைக்கலைன்னு கேட்டீங்களே... அது!'' என்று நினைவு... படுத்திவிட்டு,

''என்னால லயாவை பிரிஞ்சு இருக்க முடியாது! அ... மணி நேரத்திற்கு ஒரு வாட்டி சண்டை போட்டாலும், அடுத்த அஞ்சாவது நிமிஷமே ''ஓவர்ரா பண்ணாத...



சொல்லிட்டேன்''ன்னு சிணுங்கிட்டே வர செல்ல பொண்டாட்டியை விட்டு என்னால ஒரு நாள் கூட இருக்க முடியாது! அதான், நேத்து அவளை இங்க அனுப்பிட்டு... இன்னைக்கு நான் இங்க ஓடி வந்துட்டேன்!'' என்றான் முகில், காதல் கனியும் முகத்துடன்.

பேச்சு பேச்சாக இருக்க, கணவன்-மனைவி இருவரும் ஓர் கனவு சீன்க்குள் போய், அங்கே ஓர் ஆலமரத்தை டூயட் பாட தேர்வும் செய்திருந்தனர்.

டூயட் சாங் ஒலிக்கும் என அவர்கள் காதல் கடலில் நீந்திக் கொண்டிருக்க, புகழின் ''அட.. அட.. அட...அட.. என்ன காதல்டா சாமியோ!'' என்ற அபஸ்வரம் தான் கேட்டது.

''லவ்! லவ்! லவ்! ஒன்லி லவ்!'' என்று ஸ்ரீ கேலி செய்ய, இலக்கியா இல்லறத்தை வென்றுவிட்ட பெரு மிதத்துடன் சிரித்தாள்.

ஆனாலும், ஸ்ரீக்கு இது போதவில்லை. அமெரிக் காவை விட்டு இந்தியா செல்வதற்கு ''காதல்'' மட்டுமே காரணமென்றால் ஒத்துக் கொள்ள முடியவில்லை.

உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசும் பழக்கம் இல்லாதவள் என்பதால், தன் உறுத்தலை வெளிப்படை யாகவே கூறினாள் அவள்.

இலக்கியாவின் முகம் சட்டென கூம்பி விட்டது! தனது சந்தோஷத்திற்காக, கணவனின் வளமான முன் னேற்றத்தைத் தடுக்கிறோமோ என்ற எண்ணம் மனதில் தோன்ற, முகம் ஒளியிழந்து... களையிழந்து.. நிலம் நோக்கித் தாழ்ந்துவிட்டது.

Optimized by www.ImageOptimizer.net

மனைவியின் வாட்டத்தைப் பொறுக்க முடியாமல், முகில் ஏதோ சொல்ல முற்பட, புகழ் முந்திக் கொண்டான்.

''ஒரோருத்தருக்கும் ஒரோர் விஷயம் முக்கியம்! இலாவுக்கு அழகுன்னு படறது... உங்களுக்கு அழுக்குன்னு படலாம்! அது பார்க்கிறவங்க கோணத்தைப் பொறுத்தது! உதாரணத்திற்கு, இந்த போனையே எடுத்துக்கோங்க.. இலா வச்சிருக்க போன் எவ்வளவு ரூபா தெரியுமா? கிட்டத்தட்ட முப்பதாயிரம்... ஆனா முகில்! மூவாயிரம் கூட இருக்காது! முகில்கிட்ட போய், ஏன் ஐ போன் வச்சுக்கலைன்னு கேட்டா... கால் வந்தா பேசுறதுக்கும்... தேவைன்னா நாம கூப்பிடறதுக்கும் தானே போன்? அதுக்கு எதுக்கு இவ்வளவு காசுன்னு கேட்பார்? ஆனா, இலா! எனக்கு... இன்டர்நெட் வேணும்... ஃபேஸ்புக் வேணும்... ட்விட்டர் வேணும்.. புக் படிக்கணும்.. லொட்டு வேணும்... லொசுக்கு வேணும்.. இதிலேயே நான் சமையல் செஞ்சு சாப்பிடணும்ங்கிற ரேஞ்சுக்கு பேசுவா! ரெண்டு பேருக்கும் ரெண்டு விதமான விருப்பங்கள்! அது மாதிரி தான் அமெரிக்காவும் இந்தியாவும்! பிடித்தங்கள் மாறுபடலாம்!'' என்று புகழ், நீளமாய் பேசி முடித்த போது, பலத்த கைதட்டல் ஒலித்தது - ஒருவரிடமிருந்து மட்டுமே! அவர், ஸ்ரீலஷ்மியின் தந்தை சம்பத்!



# 9

''ஹாய் டாடி!'' என்று ஸ்ரீ கட்டியணைத்துக்...



''ஹலோ அங்கிள்!'' என்று மற்ற மூவரும், அறிமுகம் செய்து கொண்டனர்.

''வணக்கம்! நான் சம்பத் தர்மவேல்! கொலம்பஸ் மாநகரத்தில் இயங்கும் பல்கலை கழகத்தில் பேராசிரியராக பணிபுரிகிறேன்!'' என்றார் அவர், தூய தமிழில்.

''உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி'' என்று முகில் கூற,

''உங்க பொண்ணு அளவுக்கு இல்லைன்னாலும் ஓரளவுக்கு பரவாயில்லாம தாமில் பேசறீங்க, அங்கிள்!'' என்றான் புகழ் சிரிப்புடன். அதுவும், ''தாமில்''லில் ஏக அழுத்தம் கொடுத்து. (குசும்புடா உனக்கு!)

ஒரு நிமிடம் விழித்தவர், வெடித்துச் சிரித்தார்.

''நன்றாக பேசுகிறீர்கள்!'' எனப் பாராட்டியவர்,

''இந்த தூய தமிழ் எல்லாம்.. சிறிது காலம் முன்னர் உதித்த ஞானோதயத்தால்!'' என்றார். அதில், சிறு வெறுப்பு தொனிப்பது போல் தோன்றியது, புகழுக்கு.

''என்னாச்சு அங்கிள்?'' என்ற அவனது சிறு தூண்டுதல் போதுமானதாய் இருந்தது அவருக்கு.

அவர் அரை மணி நேரம் முன்னரே அங்கே வந்திருந்தார். உணவக வாயில் வரை வந்தவருக்கு, ஓர் கைப்பேசி அழைப்பு வர, வாயிலில் நின்றவாறே அவர்களது உரையாடலின் சாராம்சம் அவர் காதில் விழுந்திருந்தது.

அதனாலேயே, தனது உள்ளக் குமுறலை கொட்டி விட வேண்டும் என்ற எண்ணத்தில், இரண்டு நிமிடங்கள் முன்னரே சந்தித்தவர்கள் என்ற தயக்கம் சிறிதுமில்லாமல் கொட்டித் தீர்த்துவிட்டார்.

Optimized by www.ImageOptimizer.net

அவரது தடையற்ற பேச்சுக்கு வேறு ஒரு காரணமும் இருந்தது! அது - அவரது மகளின் திருமணம்!

"இங்கே வந்து குடிபுகும் ஓர் சராசரி இந்தியனாக தான் நானும் இருந்தேன்! மனைவியை அழைத்து வந்தேன்... முதல் குழந்தை... அதான் ஸ்ரீயின் பிரவசத்திற்கு மாமியாரை வரவழைத்தேன்... அதன் பின்னர் தாயை வரவழைத்தேன். அடுத்து, இரண்டாவது குழந்தை பிறக்கும் போது தான் தாயும் மாமியாருமே எனக்கு நினைவுக்கு வந்தனர். மீண்டும், மாமியாரும் தாயாரும் இரண்டு மாதம் வந்து போயினர். பிள்ளைகளை இங்குள்ள பள்ளியில் சேர்த்தேன்... அவர்கள் ஆங்கிலம் நன்றாக பேச வேண்டும் என்பதற்காக, வீட்டில் சுத்தமாய் தமிழை தவிர்த்தேன். மீறி, என் மனைவி பேசினால்... அவளைத் திட்டித் தீர்த்தேன்! இந்த ஆங்கில மோகத்தில், தமிழ் மட்டுமே தெரிந்த தாத்தா-பாட்டி வந்தால் கூட, பிள்ளைகள் ஆங்கிலம் பேச மாட்டார்கள் என்பதற்காக, பல காலம் அவர்களை வரவிடாமல் செய்தேன்" - அவர் வருத்தம் தொனிக்கப் பேசிக் கொண்டே போக,

ஏதோ அந்நிய பாஷையில் சொற்பொழிவு நடப்பது போல், வந்திருந்த மீன் வறுவலை ருசித்துக் கொண்டிருந்தாள் ஸ்ரீ.

இலாவிடம் ஒரு வித்தியாசம், மீனை விட்டு சிக்கனில் இருந்தது அவளது கவனம்! ஆனால், கண் மட்டும் சம்பத்தின் முகத்தில் தேமே என்று நிலைத்திருந்தது.

முகில் தான் அவரது பேச்சில் ஆர்வம் காட்டி, அடுத்த கேள்வியைத் தொடுத்தான்.

"எல்லாம் சரி அங்கிள். திடீர்ன்னு என்ன தமிழ் மோகம்.. நோ... ஆர்வம்!" என அவனது கேள்விக்கு,



"தமிழ்நாட்டில ஏதாவது வேலை கிடைச்சிருக்கா அங்கிள்? அங்க ஷிபிட் ஆகுறதா இருக்கீங்களா?" என்றான் புகழ், தானாகவே ஊகித்து.

அவர் மறுப்பாய் தலையசைக்கவும், "ஒருவேளை... தமிழ்நாட்டுப் புதையல் ஏதாவது கிடைச்சிருக்கா? தூய தமிழ் பேசினா தான் திறக்குமா?" என்று அடுத்த ஊகத்தை அவன் அள்ளிவிட,

அதற்கும் மறுப்பாய் அசைந்தது தலை.

"வேற என்ன அங்கிள்? ஏதாவது தமிழ் கேம் ஷோல கலந்துக்கப் போறீங்களா? எனக்கு மண்டை காயுது!" என்றான் புகழ், நிஜமாகவே மண்டை காய்ந்தவனாக.

"என்னோட மாற்றத்திற்கு காரணம்.. ஒரு குறும்படம்!"

"!!!!" - புருவத்தை நெற்றி வரை உயர்த்தி புகழ் காத்திருக்க, அவர் தொடர்ந்தார்.

"தமிழ் பேசும் பெற்றோரின் தமிழ் பேசா குழந்தைகள் பற்றிய படம்! இந்த தலைமுறையில், தமிழின் வாடையே இல்லாமல் வளரும் குழந்தைகளால்... இந்தத் தலைமுறை மட்டுமல்லாமல், அடுத்தடுத்த தலைமுறையும் எப்படி பாதிக்கப்படுகிறது என்பதை மிக இயல்பாக சொல்லியிருந்தார்கள். அதில், வந்த இன்றைய தலைமுறை... அப்படியே எனது வீட்டுடன் ஒத்துப் போனது! இப்படியே போனால், ஆங்கிலத்தில் தமிழின் எழுத்துக் கோர்வையை எழுதுவது கூட, என் பேரப் பிள்ளைகளுக்கு சிரமமாய் இருக்கும் போல! நெஞ்சம் நைந்து விட்டது!" என்றார் அவர் வருத்தம் மேலோங்க.

"எழுத்துக் கோர்வையா? அப்படின்னா என்ன?" என்று இலா தனது இத்துப்போன பல்பை எரிய வைக்க,

Optimized by www.ImageOptimizer.net

''ஸ்பெல்லிங்'' என்று பதில் கொடுத்தது. சம்பத் அல்ல! அவரது மகள்!

''ஆஹா! இதென்ன ஆச்சரியமா இருக்கு? இவ்வளவு வுவுவுவுவுவு பெரிய வார்த்தைக்கு இந்த மேடம் அர்த்தம் சொல்றாங்க?'' என்று புகழ் வியக்க,

''ஹே! எங்ககிட்ட சும்மா நடிச்சியா? யூ... சீட்!'' என்று நிமிட நேரத்தில் நண்பி ஆகிவிட்டிருந்த ஸ்ரீயை மிரட்டினாள், இலக்கியா.

''நோ.. நோ! டாடி தா.. இதை ஹண்ட்ரட் டைம்ஸ் சொல்லியாச்சு. நாக்கு... மைன்ட்ல ரெகார்ட் பண்ணியாச்சு...'' என்றாள் ஸ்ரீ. அதீத விளக்கமாய்.

''பார்த்தீங்களா தம்பி? தமிழ் பேசச் சொன்னால்... ஒன்று ஆங்கிலம் பேசுகிறாள்... இல்லையெனில் தெலுங்கு, மலையாளம் என கரை தாண்டி ஓடி விடுகிறாள்!'' என்று அலுத்துக் கொண்டார், சம்பத்.

தந்தையின் பேச்சில், ஸ்ரீயின் முகம் வாடி விட புகழுக்கு உருகிவிட்டது.

''என்ன அங்கிள் நீங்க? ஸ்ரீ... என்ன ஒரு ரெண்டு மாசமா தமிழ் கத்துக்கிட்டு இருப்பாங்களா? அப்படியிருக்கும்போது, இப்ப அவங்க பேசுறதே பெருசு! தப்பு எல்லாத்தையும் உங்க மேல வச்சுக்கிட்டு.. அவங்களை குறை சொல்லி என்ன புண்ணியம்?'' என்று சம்பத்தைச் சாடினான். (பொண்டாட்டியைக் குறை சொன்னா புருஷனுக்குப் கோபம் வரத் தானே செய்யும்!?)

அவன் சொல்வதில் இருக்கும் உண்மை சுட, அவர் வாளா இருக்க, புகழுக்கு மேலும் ஏதாவது சொல்லி



ஸ்ரீயின் முகத்தில் புன்னகையை வரவழைத்து விட வேண்டும் என்று நிரம்பத் தோன்றியது.

''நாங்க கூட... தமிழ்ல பேசி சிரமப்பட வேண்டாம். இங்கிலீஷ்லேயே பேசுங்கன்னு சொன்னதுக்கு கூட மறுத்துட்டாங்க தெரியுமா? அவங்களோட ஆர்வத்தைப் பாராட்டிப் பாருங்க, அங்கிள்! நல்லா வருவாங்க!'' என்றான் புகழ், ஊக்குவிக்கும் விதமாக.

சிநேகமான புன்னகை ஒன்றை ஸ்ரீ அவனை நோக்கிச் சிந்த, கிறுகிறுவென தலை சுத்திப் போனான் அவன்!

''நீங்க சொல்றதும் சரி தான், புகழ்! தப்பு பண்ணினவன் நான்... அவங்களைத் திட்டி என்ன ஆகப் போகுது!'' என்று தன்னைத் தானே நொந்து கொண்டவர்,

''சரி, அதை விடுங்க! முகில்.. நீங்க இந்தியா போய் கட்டுமானத் தொழில் துவங்கப் போறதா சொன்னீங்க இல்லையா? ரொம்ப நல்ல விஷயம்! இந்தியால இருக்க இளைஞர்கள் எல்லாம், அமெரிக்க மோகத்தில் இங்க வரதுக்கு திக்குமுக்காடிக் கொண்டிருக்கும்போது, இங்கிருக்கும் செழிப்பான வாழ்வை விட்டு... அங்கே செல்கிறீர்கள் எனும் போது மனதே குளிர்ந்து போகிறது! என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்! கண்டிப்பா நல்ல நிலைக்கு வருவீங்க!'' என்றார் உளமார.

முகில் நன்றி கூறி முடித்ததும், ''ஆமா அங்கிள்! எனக்கு கூட சில சமயம் தோணும்... ''கற்க கசடற கற்பவை கற்ற பின் நிற்க அதற்கு தக''ன்னு வள்ளுவர் சொன்னதை, ''கற்க கசடற கற்பவை கற்றபின் ஓடுக வெளிநாடு நோக்கி!''ன்னு மாத்தி மனப்பாடம் பண்ணிட்டானுங்க போலன்னு'' என்று புகழ் சிரியாமல் சொல்ல,

Optimized by www.ImageOptimizer.net

வாய் விட்டுச் சிரித்தனர், திருக்குறளை அறிந்தவர்கள்.

"பெரிய விஷயத்தைக் கூட... எளிமையான முறையில்... நகைச்சுவையா சொல்லிவிடுகிறீர்கள்!" என்று சம்பத் சிலாகிக்க, புகழ் சட்டைக் காலரைத் தூக்கிவிட்டுச் சிரித்தான்.

சற்று நேரம், உணவில் கவனம் செல்ல, "ஒரேடியா அப்படியும் சொல்லிட முடியாது!" என்றான் புகழ், திடீர்னு.

"என்னத்தை?" என்ற இலா, பேய் முழி முழிக்கவும் தான், தன்னுள்ளேயே முந்தைய பேச்சை அசை போட்டுக் கொண்டிருந்தது புரிந்தது புகழுக்கு.

"வெளிநாடு வர எல்லாருமே... தாய் நாட்டை மறந்துட்டு வாழ்றாங்கன்னும் சொல்லிட முடியாது! குடும்பச் சூழல், வருமானம், பொருளாதார நெருக்கடி... இப்படி நிறைய காரணங்கள் இருக்கில்லையா? அதைத் தான் சொல்றேன்!" என்றான் புகழ் விளக்கமாய்.

"ஹ்ம்ம். கரெக்ட்! எனக்குத் தெரிஞ்ச நிறைய பிரண்ட்ஸ் இங்க வந்து.. ஒரு பெரிய வலைக்குள்ள சிக்கிக்கிட்ட மாறித்தான் இருக்காங்க. இங்க இருந்து போகவும் முடியலை... இந்த வெளிநாட்டு வாழ்க்கையை ஏத்துக்கவும் முடியலை! அதுவும், பசங்க வளர... வளர... ப்ச்... ரொம்பக் கஷ்டம்!" என்றான் முகில், நிதர்சனத்தை எடுத்துரைத்து.

"எழுபது சதவீத பேரின் மோகத்தில், முப்பது சதவீதப் பேரின் வேதனை மறைஞ்சு போய்டுது!" என்றான் புகழ், அனுபவசாலி போல்.



எல்லாரும் இதை ஆமோதிக்கையில், "ஹே போதும்பா.. இந்த டாபிக்! ரொம்ப சீரியஸ் டிஷ்கசனா இருக்கு!" என்று இலா, அலுத்துக் கொண்டாள்.

"யா.. யா!" என்று ஒத்து ஊதினாள் ஸ்ரீ. தந்தை இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம், தானும் தங்கையும் தமிழ் பேசும் அழகை எடுத்து விட்டுவிடுவாரே என்ற கவலை அவளுக்கு!

இந்த "தமிழ்" புராணத்தில் இருந்து எப்படியாவது வெளி வந்து விட வேண்டும் என்ற உத்வேகத்தில், "டாடி, உனக்கு தெரியுமா.. முஹில்க்கு இலாக்க்யா மேல லவ்வோ... லவ்! அவாவுக்காக தா இந்தியா பிளான் போட்டிருக்கா..." என்று ஸ்ரீ, முகிலின் காதல் ஆழத்தை எடுத்துரைக்க,

"நிஜமாகவா?! கேட்கவே சந்தோஷமாய் இருக்கிறது!" என்றார் சம்பத்.

தந்தையின் வார்த்தையைக் கடைசி வார்த்தையாய் இருத்தி, உரையாடலை நிறைவு செய்திருக்கலாம்... லாம்..ம்...ம்...ம்! ஆனால், ஸ்ரீயின் வாய் ஆப்பம் சுடும் வாணலியாய் மாறி, அவளுக்கான ஆப்பை தயார் நிலையில் வைத்திருந்தது போலும்!

"ஸீ டாட்! லவ் மேரேஜ் தா பெஸ்ட்! ஸீ... ஹொவ் மச் லவ்! நெறைய... நெறைய லவ்!" என்றாள் ஸ்ரீ. "பெற்றோர் நிச்சயித்த திருமணமே சாலச் சிறந்தது" என்று வாதம் செய்து கொண்டிருந்த தந்தைக்கு எதிரான கருத்தாக, அவள் இதை எண்ண, நடந்ததோ வேறு!?

"லவ் மேரேஜா? எங்களோடது ரெண்டு வீட்டு அப்பா - அம்மாவும்... ஜாதகம்/ஜோசியம்... ஏழு

Optimized by www.ImageOptimizer.net

பொருத்தம் / எட்டு பொருத்தம்ன்னு பார்த்து, மாப்பிள்ளையை விசாரிச்சு, பொண்ணைப் பத்தி அலசி ஆராய்ஞ்சு... பொண்ணு பார்க்க வந்து.. எங்க ஒரு பாட்டு பாடு பார்ப்போம்ன்னு சொல்லாத குறையா நடந்த பக்கா அர்ரேஞ்ண்டு மேரேஜ்!'' என்றாள் இலக்கியா, நீட்டி முழக்கி. (உலக மகா ஆப்பா போச்சே!)

''வாட்! முஹிலை... நீ மேரேஜ்க்கு முன்னாடி ல பண்ணியா இல்லையா?''

''ஹே... இதென்ன பழங்காலமா? மாப்பிள்ளையைப் பார்க்காமலே கழுத்தை நீட்டுறதுக்கு?'' என்று ஆட் சேபித்த இலக்கியா,

''நிச்சயம் முடிஞ்சு.. கல்யாணம் நடக்கிற வரைக்கும் நாங்களும் லவ்வர்ஸ் மாதிரி தான் இருந்தோம்!'' என்ற முகிலின் கூற்றில், மேலே ஏதும் பேசாமல், அக்கால நினைவுகளில் மூழ்கிப் போனாள்.

அவர்கள் விட்டதை ப்கழ் தொடர்ந்தான்.

''ஹய்யோ! அந்த டைம்ல இலாவோட போன் பில் கட்டியே... எங்க கம்பெனி நஷ்டத்துக்குப் போய்டுச்சு தெரியுமா? பேசுவா.. பேசுவா.. பேசிட்டே இருப்பா! எனக்குக் கூட சில சமயம் தோணும்... முகிலைப் பார்த்தா ஊமைச் சாமியார் மாதிரி இருக்கே.. ஒருவேளை இவ அறுவை தாங்க முடியாம, ''ம்ம்... ம்ம்''ன்னு டேப்ல ரெகார்ட் பண்ணி வச்சு, போன்ல போட்டு விடுவார் போலன்னு எனக்கு ரொம்ப டவுட்! ஆனா... பாருங்க! இன்னைக்கு வரைக்கும் எனக்கு அந்த டவுட் இருந் துட்டே தான் இருக்கு... க்ளியர் ஆகவே இல்லை!'' என்றான் புகழ், உண்மையில் கேலியைக் கலந்து.



''இன்னைக்கு உங்க தங்கச்சியை உங்களுக்குத் தெரியாம கூட்டிட்டுப் போய் படம் பார்த்துட்டேன்ங்கிற ஒரே காரணத்திற்காக, என்னை இந்த வாரு வாரக் கூடாது!'' என்று ஏகத்திற்கும் சலித்துக் கொண்ட முகில்,

''ஹே புகழ் மறந்தே போயிட்டேன் பாரேன்! நீ வந்து சாப்பிடக் கூப்பிட்டப்போ.. லயாவை உன் கூட அனுப்பாம, அங்கேயே நிக்கச் சொன்னதுக்கு என்ன ரீசன் தெரியுமா? அப்போ தான்... சென்னையில இருந்து அப்ரூவல் கிடைச்சாச்சுன்னு போன் வந்துச்சு... அந்த சந்தோஷமான விஷயத்தை... முதல்ல லயாகிட்ட தான் சொல்லணும்ன்னு நினைச்சிருந்தேன். அதான்! சாரி யா! தப்பா எடுத்துக்காத!'' என்றான் முகில், விளக்கமும் மன்னிப்புமாய்.

''ஹே பரவாயில்லை முகில்! நா அந்த விஷயத்தை மறந்து கூடப் போயிட்டேன்!'' என்றவன், நிஜமாகவே அந்த உறுத்தலை மறந்து தான் போயிருந்தான். மறந்தது முக்கியமல்ல... மறந்ததன் பின்னணி தான் முக்கியம்! அப்பின்னணி.... ஸ்ரீ என்ற ஸ்ரீலஷ்மி என்ற லட்டு!

''இதோ பார்த்தாயா? பெற்றோர் பார்த்து வைத்த மாப்பிள்ளை என்பதால் தான்.. இலாவின் உறவுகளுடன் சகஜமாய் பழகுகிறார்'' என்று சம்பத், அதில் ஒரு பாயிண்ட்டை பிடிக்க,

''டாட்! லவ் பண்ணா தா... அண்டர்ஸ்டாண்ட் பண்ண முடியும். ஸீ... இல்லா... முஹில் லவ்வர்ஸ் மாதிரி தா இருந்தாவா!'' என்று ஸ்ரீ, தன் வாதத்தை முன் வைத் தவள்,

''புக்கல்... உனக்கு மேட்டர் தெரியுமா? டாட் இங்க ஒன் கான்பிரன்ஸ்க்கா வந்தாச்சு.. ஆனா நா.. ஒரு மேனை

Optimized by www.ImageOptimizer.net

மீட் பண்ண வந்தாச்சு.. டாட் ஸி பண்ணா மேன்... தே
மை காட்! ஹீ வாஸ் சோ ஃபரிக்கி! டோட்டல் மே
சாவனிசம்! கம்ப்யூட்டர்... கம்ப்யூட்டர்... கம்ப்யூட்டர்...
அதா அவானுக்கு வேணும்! கேர்ள் வேணா அவானுக்கு!''
என்றாள் ஸ்ரீ வெறுப்புடன்.

''நீங்களே சொல்லுங்க புகழ்! தமிழ் குடும்பங்களில் என் பெண்ணை வாழ வைக்கணும்ன்னு நினைக்கிறது தப்பா என்ன? புரிஞ்சுக்காம... காதல்.. காதல்... காதல் என்று பினாத்துகிறாள்!''

சட்டென புகழின் மூளையில் ஓர் மின்னல் வெட்டியது - ''ஹோ! அன்னைக்கு ''அந்த மேன்க்கு சப்போர்ட் டோன்ட் டு!'' இந்த மேட்டர் தானா?!'' என்றெண்ணிய வனின் முகம் ஜகஜோதியாய் மின்னத் துவங்கியது!

அதற்குள், தந்தைக்கும் - மகளுக்குமான வாக்குவாதம் முற்றிவிட்டிருந்தது!

சம்பத் விடுவதாய் இல்லை. காதல் திருமணத்திற்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்கும் அளவிற்கு பேசிக் கொண்டே சென்றார்.

இப்போது, மீண்டும் நம் ஹீரோவிற்கு ஹீரோயின் மேல் கரிசனம் பொங்கி வழிந்துவிட்டது! அவள் என்னமோ, வேர்கம்பு... கத்தி எடுக்காத குறையாக தந்தையோடு சண்டை போட்டுத் தான் கொண்டிருந்தாள்! ஆனால், நம் ஹீரோவிற்கு தாங்கவில்லை.

''லவ் மேரேஜ் ஒண்ணும் பெரிய தப்பில்லை அங்கிள். எங்க அம்மா-அப்பா கூட லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணினவங்க தான்! அவங்க இப்போ சந்தோஷமா இல்லையா? இலாவுக்கு மாப்பிள்ளை பார்க்கிறதுக்கு



முன்னாடி... அவ யாரையாவது லவ் பண்றாளான்னு கேட்டுட்டுத் தான் வெளிய பேசவே ஆரம்பிச்சோம்! அதை விடுங்க. இப்போ கூட... நா ஃப்ளைட் ஏற போறேன்... அம்மா கூப்பிட்டு.. போற இடத்தில் யாரையாவது லவ் பண்ணுடான்னு சொல்லி... ச்சே.. வாழ்த்தித் தான் அனுப்பினாங்க!'' என்று நீளமாய் பேசிய புகழ்,

''லவ் பண்ணா லைப் நல்லா இருக்கும் அங்கிள். அந்த லவ்... கல்யாணத்துக்கு முன்னாடி வந்தா என்ன? அப்புறம் வந்தா என்ன?'' - சிரிப்பு ததும்பிய கேள்வியுடன் முடித்தான்.

அதற்குரிய பதிலை சம்பத் சொல்வதற்கு முன்னரே,

''ஏன் அங்கிள்!? என்னை மாதிரி ஒரு பையனை உங்க பொண்ணு லவ் பண்ணிட்டு வந்தா... வேண்டாம்ன்னு சொல்லிடுவீங்களா என்ன?!'' என்றானே பார்க்கலாம்! (டேய், டேய்! பாதகா!)

சம்பத் விக்கித்து நிற்க, ஸ்ரீ விழித்துக் கொண்டு நிற்க, இலா வாயைப் பிளந்த வண்ணம் இருக்க, முகில் புருவத்தை உயர்த்தியபடி விழிக்க, புகழ் மேலும் பேசினான்.

''ஸ்ரீ ஒண்ணும் ஆகப் பெரிய முட்டாள் இல்லை... என்னை விட மோசமான ஆளையெல்லாம் லவ் பண்ணிட மாட்டா! கண்டிப்பா நா தான்.. அதாவது என்னை 'மாதிரி'...'' என்றவன், ''மாதிரி''யில் வேண்டா வெறுப்பாய் ஓர் அழுத்தம் கொடுத்து நிறுத்தினான்.

அப்போதும், யாரும் ஏதும் பதில் சொல்வதாய் இல்லையெனும் போது,

Optimized by www.ImageOptimizer.net

"கொஞ்ச முன்னாடி நீங்களே... என்னோட பேச்சுக்கு கை தட்டினீங்க! இந்த ரெண்டு மணி நேரத்தில... அட்லீஸ்ட் அஞ்சு வாட்டியாவது என்னைப் பாராட்டு னீங்க! சோ.. என்னை மாதிரி ஒருத்தனை அவ கை காட்டினா வேண்டாம்ன்னா சொல்லுவீங்க!" என்றான், மீண்டும் "மாதிரி"யில் ஒரு மாதிரி அழுத்தம் கொடுத்து! (இந்த "மாதிரி" உனக்கு வேணுமா? வேணாமா? ஒரு "மாதிரி" பேசுறியே?)



# 10

சுற்றி இருந்த நால்வரும், தன்னையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டதும்,

"ஏன் இவ்வளவு 'அன்பா' பார்க்கிறாய்ங்க?" என்ற எண்ணம் தோன்ற, சட்டென சுதாரித்தான் புகழ். (ரெண்டு அப்பு அப்பாம இருக்காய்ங்களேன்னு சந்தோஷப் படுடா!)

"ஹலோ, ஏன் இப்படி பார்க்கிறீங்க? நா சும்மா ஒரு உதாரணத்திற்கு தான் சொன்னேன். இவனை மாதிரி இல்லாம இவனே மாப்பிள்ளையா வந்தா நல்லா இருக் குமேன்னு உங்களுக்குத் தோணலாம்... தோணியிருக் கும்... கண்டிப்பா தோணும்! ஆனா .. அதெல்லாம் நடந்திடும்மா என்ன? யார் யார்க்கு எங்க எங்க பிராப்தம் இருக்கோ, அங்க தானே முடியும்? என்ன நா சொல்றது?!" என்றான் பெரிய மேதாவி போல்.



"பீத்தல் பீதாம்பரம்!" என்றாள் ஸ்ரீ, அடக்கமாட்டாத சிரிப்புடன்.

அவள் பொங்கிப் பெருகி சிரிப்பதை அள்ளிப் பருகியவன், "ஹே இதென்ன... தூயத் தமிழ் பேரெல்லாம் சொல்றே? அதுவும், உன்னோட ஆஸ்தான இங்கிலீஷ் கலப்பில்லாம?!" என்றான் ஆச்சரியம் மேலோங்க.

"திஸ்... மாம் சொல்லிட்டே இருப்பா... சோ.. நாக்கு தெரியும்..."

"அது நாக்கு இல்லைம்மா.. எனக்கு தெரியும்.. உன்னைக் குறிப்பிடும் போது "நான்"ன்னு சொல்லணும்... உன்னுடைய உடமையைக் குறிப்பிடும் போது "எனக்கு"ன்னு சொல்லணும்" என்று சம்பத், அதிமுக்கிய மாய் தமிழ் வகுப்பெடுக்க,

"ஹோ ப்ளீஸ் டாட்! போர் அடிக்காத.. லீவ் இட்!" என்றாள் ஸ்ரீலக்ஷ்மி.

பேசத் துவங்கிய சம்பத்தை கணக்கிலேயே கொள்ளா மல், "எங்க அம்மாவோட பிரண்டும் இப்படித் தான் சொல்வாங்க.. எங்கம்மா சொல்லியிருக்காங்க..." என் றாள் இலக்கியா, ஐன்ஸ்டீன் பாணியில்.

"நம்ம அம்மா அவங்ககிட்ட நான்-ஸ்டாப்பா பேசிட்டே இருந்தா இப்படித் தான் சொல்வாங்க..." என்றான் புகழ், சிரிப்புடன்.

"நான்-ஸ்டாப்பா பேசினா ஏன் பீத்தல் பீதாம்பரம்ன்னு சொல்றாங்க? உன்னைப் பத்தி ஏதாவது குண்டக்க மண்டக்க உளறி இருப்பாங்க... அதான் அந்த ஆன்ட்டி அப்படி சொல்லி இருப்பாங்க.." என்றாள் இலக்கியா.



Optimized by www.ImageOptimizer.net

தாயைக் கிண்டல் செய்த தமையனை உறுத் விழித்தவாறே.

''நீ பீத்தல் பீதாம்பரத்துக்கு இப்போ தான் ரியாக் பண்றியா? இவ்வளவுவுவுவு வேகத்தை நான் எதி பார்க்கலை!'' என்று புகழ், கண்ணை உருட்டவும்,

''போடா... லூசு! என்னை எப்பவும் கேலி பண் ணிட்டே இரு! பீத்தல் பீதாம்பரம்ன்னு சொன்னதும் எங்கேயோ கேள்வி பட்டிருக்கோமேன்னு யோசிச்சிட் இருந்தேன்!'' என்ற இலக்கியாவின் முகம் சுருங்கி சுண்டக்காயாக மாறி இருந்தது.

அதன் எதிரொலியாய் ஒரு சிரிப்பொலி எழுந்து அடங்க அவர்களது உணவும் காலியாகி இருந்தது.

உணவின் இறுதிக் கட்டமாய், உப உண்டிக்கா பட்டியலை ஆராய்ந்து, அவரவர்க்கான உப உண்டியை ஆர்டர் கொடுத்தனர்.

தனது பழரசத்தின் இறுதி மடக்கை அருந்தி முடித்த சம்பத், ''கொலம்பஸ் வந்தால் எங்கள் வீட்டிற்கு கண் டிப்பாக வர வேண்டும், புகழ்!'' என்றார் விருந்துபசா மாய்.

''ஸ்ரீயும், ''யா.. யா... கம்! கம்! யு ஆர் ஆல்வேஸ் வெல்கம்!'' என்றாள் முகமன் புன்னகையுடன்.

''இந்த பிசினஸ் ட்ரிப்பின் ஒரு பகுதியா... நா கொலம் பஸ் வருவேன்... வரும்போது, கண்டிப்பா வீட்டுக்கு வரேன்! தேங்க்ஸ் ஃபார் இன்வைடிங்'' - அதிக பிகு இல்லாமல், அவர்களது அழைப்பை அவன் ஏற்ற பாங்கு சம்பத்திற்கு பிடித்தது. ஆனால், பாராட்டத்தான் பயமாக



இருந்தது! பின்னே, பெண் கேட்டுவிட்டால்?! (அது, அந்த பயம் இருக்கட்டும்!)

அதனால், பாராட்டைக் கிடப்பில் போட்டுவிட்டு ''உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால்... எங்கள் வீட்டில் கூட தங்கலாம்'' என்றார் விரிந்த புன்னகையுடன்.

''எனக்கெதுவும் ஆட்சேபணை இல்லை... ஆனா... எங்கம்மாவுக்கு ஏகப்பட்ட ஆட்சேபணை!'' என்று உதடு பிதுக்கி நிறுத்தியவன், ஸ்ரீயின் கேள்வி தாங்கிய கண்களைக் கண்டதும் ''லட்டு மேல ரெண்டு கருக மணியை ஒட்ட வச்ச மாதிரி... என்னமா பிரகாசமா இருக்கு!'' என்று உள்ளுக்குள் வியந்தவாறே, வெளியே பேசினான்.

''அவங்க பிரண்ட் வீட்டில் தான் தங்கணும்ன்னு... எங்கம்மா எனக்கு ஆர்டர் போட்டு அனுப்பி இருக்காங்க! அதை மீறி.. உங்க வீட்டுக்கு வந்து தங்கினா, தாய் சொல் தட்டினான்... இந்த புகழேந்தின்னு ஊர் பேசாது? ஊர் பேசுறது இருக்கட்டும்... வரலாறு நம்மளைத் தூற்றாது? அதுக்கு அப்புறம் வரும் சந்ததி நம்மளை எப்படி மதிக் கும்?'' என்று அவன் பேசிக் கொண்டே போக, இலக் கியா தன் இருக்கையிலிருந்து எழுந்து அவனை அடிக் கவே வந்துவிட்டாள்.

''இப்போ நானே சொல்றேன்... சரியான பீத்தல் பீதாம் பரம்!'' என்றவாறே, அவன் முதுகில் ஓங்கி ஓர் அடி வைத் தவள்.

''வர வர... ரொம்பப் பெரிய ஸெல்ப் டப்பாவா ஆகிட்டான்... முகி! தாங்கலை!'' என்று கணவனிடம் அலுத்துக் கொண்டாள்.

Optimized by www.ImageOptimizer.net

இதில் கலந்து கொள்ளாமல், ஸ்ரீயும் அவளது தந்தையும் "தாய் சொல் தட்டாத தமையன்" என்ற வாக்கியத்துக்கு, தமிழ் வகுப்பு நடத்திக் கொண்டிருந்தனர்.

ஆனால், இலாவின் அடிகளை மதித்தால் அவன் நம் ஹீரோவாய் இருந்து என்ன புண்ணியம்?

தூசியைத் தட்டிவிடுவது போல், அவன் தோளைக் குலுக்கும் போதே, சம்பத்தும் ஸ்ரீயும் நடப்புக்கு மீண்டிருந்தனர்.

புகழிடம், தனது விசிட்டிங் கார்டை எடுத்து நீட்டிய வாறே, "உங்கம்மாவோட விருப்பப்படி அங்கேயே தங்கிக்கோங்க. ஒரு நாள் மாலை டின்னருக்கு வாங்க!" என்றார் சம்பத்.

அவரது கார்டை வாங்கி மேலோட்டமாய் பார்த்தவன், "ஹ்ம்ம்... இந்த அட்ரஸ்... எங்கேயோ பார்த்த மாதிரி..." என்று சத்தமாகவே யோசித்தான்.

வேகமாய், தனது கைப்பேசியை எடுத்து, மின்னஞ்சலை உயிர்ப்பித்து, தாயின் தோழி சரளாவின் இருப்பிடம் குறித்த மின்னஞ்சலைத் திறந்தவன், "ஹே!!!" எனக் கூவி, அடுத்த வாக்கியத்தை உதிர்க்கும் முன்னர்,

"உங்க மாம் பேர் மாத்தங்கியா?" என்றாள் ஸ்ரீயே, தானாகவே ஊகித்து!

"ஹே! ஆமா! உனக்கு எப்படித் தெரியும்?" என்று இலா உற்சாகத்தில் மிதக்க,

"அதை நான் சொல்றேன்" என்று நடுவே புகுந்த புகழ்,

"ஏன்னா... அவங்க அம்மா பேர் "சரளா!" என்றான், பெரிய புதிரின் விடையை உலகிற்கு அறிவிப்பவனின்



தாலுடன். (ஷப்பா, ஒரு வழியா ஒரு லிங்கை கொண்டு வந்துட்டேன்! வேர்க்குதுப்பா.. சோடா எங்க? விசிறி எங்க?)

"ரியல்லி!!!" என்று இலா கூவ,

"அப்படியா!? ஆச்சரியமாக இருக்கிறதே?!" என்று சம்பத் வியக்க,

முகிலோ தனது இரண்டரை சென்டிமீட்டர் புன்னகையுடன் பார்த்திருந்தான்.

"மாம்.. மாத்தங்கி ஆன்ட்டி பத்தி சொல்லி இருக்கா.. ஆல் டைம ப்ளாக்... இல்லை... போன்... மாம் ஆன்ட்டி கூட தா நெறைய டாக் பண்ணுவா..."

"ஹ்ம்ம் ஆமா! இலா கல்யாணமாகிப் போனதில் இருந்து... லேப்டாப்பே கதின்னு கிடப்பாங்க.. கேட்டா ப்ளாக்... பிரண்ட்ஸ்ன்னு சொல்வாங்க.. நா கூட "பேரன் பேத்தி எடுக்கிற வயசில... உங்களுக்கு எதுக்கு எஃப்.பி அக்கௌன்ட்"ன்னு ஒரு நாள் சொல்லிட்டேன்... செம சண்டை... ஜாக்கி ஜான் படம் மாதிரி பறந்து பறந்து அடிக்காதது தான் குறை!"

"ஆனா... உங்க அம்மாவும்.. அவங்க அம்மாவும் பிரண்ட்ஸ்ன்னு சொல்றீங்க!? அவங்கவங்க பசங்க பேர் கூடவா தெரியாது? அட்லீஸ்ட் ஹஸ்பண்ட் பேர்?" என்று முகில், ஐன்ஸ்டீன் மூளை கொண்ட மனைவியின் கணவன் என்று நிருபிக்க,

"அவங்க ரெண்டு பேரும் தானே பிரண்ட்ஸ்? நாங்க இல்லையே? அம்மாக்கு.. அவங்க குடும்பம் ஃபுல்லா தெரியுமா இருக்கும். சரளா ஆன்ட்டிக்கும் அதுவே! ஆனா... எங்களுக்கு தெரிய வாய்ப்பு ரொம்பக் கம்மி!

Optimized by www.ImageOptimizer.net

அம்மா... அவங்க பிரண்ட்ஸ்ன்னு ஆரம்பிச்சாலே... நான் பி.டி.உஷாவுக்கு அண்ணாகிடுவேன்! ஒரே ஓட்டம்! வீட்டில ஆரம்பிச்சா... ஆபீஸ்ல தான் போய் லாண்ட் ஆகுவேன்! அப்படியிருக்கும் போது.. வாய்ப்பே இல்லை!'' என்று உதடு பிதுக்கி, தோள் குலுக்கி, புருவம் உயர்த்தி, குரலில் நிச்சயம் காட்டி அவன் பேசி முடித்ததை, யாராலும் மறுக்க முடியவில்லை.

''ஹ்ம்ம்.. மாம் நாகிட்ட டூ டைம்ஸ்... த்ரீ டைம்ஸ் சொன்னா.. ஆனா.. நா இன்ட்ரெஸ்ட் பண்ணலை... சோ.. ஒன் டைம் போட்டோ கூட ஷோ பண்ணா.. ஆனா... நா சரியாவே ஸீ பண்ணலை...'' என்ற ஸ்ரீ, அத்துடன் நிறுத்தியிருக்கலாம்...லாம்..ஆம்...ம்...ம்ம்!

ஆனால் அவளோ! ''மாம் கூட... மாதி சன் மேரேஜ்... ஹான் ஏஜ்க்கு தாமில்ல என்ன... ஹான்.. தராஸ்சு... நோ.. நோ.. வயசு... வந்துடுச்சு.. மாதி சன் மேரேஜ் வயசு தா இருக்கான்.. நீ இந்தியா போகத்துக்கு நோ சொல்லியாச்சுட்டே... சோ.. நீக்கும் அவானுக்கும் மேரேஜ் பண்ணா.. நோ... முடியாது...'' - இன்னமும் பேசியிருப்பாள்.

''ஆத்தா! தாயே! இதுக்கு மேல உன்னோட தமிழை என்னால தாங்க முடியாது! எங்க தமிழ் அய்யா கேட்டிருந்தா... இந்த ஹோட்டல் குலாப் ஜாமூன் ரெண்டை வாங்கி, இசக்குப் பிசக்கா முழுங்கி, அப்படியே ஸ்பாட் அவுட் ஆகியிருப்பார்! கடவுளே! கடவுளே! என்ன கொடுமை தமிழ் அய்யா இது!'' என்று தலை மேல் கை வைத்து உட்கார்ந்துவிட்டான், புகழ்.

அதற்குள் இலா பரபரத்து விட்டாள், ''ஹே... என்னமோ மேரேஜ்... மாதி சன்... என்னமோ சொல்றாளே...



என்னடா புக்கி? நீ வேற... இந்த பாராங்கல் குலாப் ஜாமூன் புராணத்தை இப்பயா பாடித் தொலைப்பே? அவ என்ன சொன்னான்னே புரியலை... ஸ்ரீ நீ இன்னொரு வாட்டி சொல்லு!'' என்று அவள் ஸ்ரீலஷ்மியின் புறம் திரும்பவும்,

''வேண்டாம் தாயே! வேண்டாம்! நீ இன்னொரு வாட்டி... என்னோட தாய் தமிழ் மொழியைக் கொலை பண்ண வேண்டாம்... நானே சொல்றேன்!'' என்றுவிட்டு,

''சரளா ஆண்ட்டி... மாதியோட பையனுக்கும் கல்யாண வயசு தான்... நீ இந்தியால போய் செட்டில் ஆகமாட்டேன்னு சொல்லிட்டே... இல்லைன்னா அவனுக்கும் உனக்கும் கல்யாணம் பேசியிருக்கலாம்ன்னு ஒரு வாட்டி சொன்னாங்களாம்!'' என்ற போது, புகழின் பார்வை சம்பத்திடம் வெற்றி பெருமிதம் காட்டிக் கொண்டிருந்தது!

தான் சொன்னதன் உள்ளர்த்தம் புரியாமல், ''பெரிய இவன் திஸ் மேன்! டாட் கிட்ட மட்டும்... தாமில் பேச என்கரேஜ் பண்ணணும்... நல்லா கம் பண்ணுவேன் சொன்னா... இப்போ அவானே என்னை டிஸ்கரேஜ் செய்றான்... ஸ்டுப்பிட்!'' என்று பொரிந்து தள்ளினாள், ஸ்ரீ.

''ஹே சாரி யா! உன்னை நக்கல் பண்ணலை.. ஆனா... நீ இப்போ பேசினதில நிறைய... நிறைய தப்பிருந்தது. அதான்... ப்ளீஸ் யா! சாரி!'' என்று புகழ் உடனே தணிய, ஹீரோயின் மெதுவாக மலையிறங்கி வந்தார்கள்.

''இனி என்ன? நெருங்கிய நட்பு வட்டத்திற்குள் வந்துவிட்டோம்!'' என்று விஸ்ராந்தையாக சிரித்த

Optimized by www.ImageOptimizer.net

சம்பத். கைகளைப் பின்னே கொண்டு சோம்பல் முறித்தவாறே.

''உங்களை இங்கு ஏதேச்சையாக சந்தித்தது தெரிந்தால்... சரளா மிகவும் சந்தோஷப்படுவாள். நானும் ஸ்ரீயும் இன்னமும் மூன்று நாட்களில் கொலம்பஸ் செல்வோம். உங்களது வேலை முடிந்துவிட்டால் எங்களுடனே வரலாம்!'' என்றார்.

''தேங்க்ஸ் அங்கிள்! ஆனா... நா ஃப்ளைட் டிக்கெட் முன்னாடியே புக் பண்ணிவிட்டேனே!'' என புகழ் வருத்தம் கொள்ளவும்,

''தட்ஸ் ஓகே! கேன்சல் பண்ணு...'' என ஸ்ரீயும்,

''உங்களை விட்டுவிட்டு வந்தேன் என்று தெரிந்தால்... எனக்கு வீட்டில் சோறு கிடைக்காது! அதனால்.. சற்றே தயவு பண்ணுங்கள்!'' என்று சம்பத்தும் கூற,

''எல்லா வீட்டிலேயும்... எல்லா கணவனுக்கும் இதே கதி தான் போல...'' என்று பெருமூச்சு விட்டான், முகில்!

ஆரவாரமிக்க சிரிப்பலையின் ஊடே, ''யூ... யூ...'' என்று கத்தியவாறே, கணவனின் கழுத்தை நெறிக்கச் சென்ற இலாக்கியாவின் கோபம் காணாமல் போனது!

ம்ஹூம், காணாமல் போகவில்லை! கணவன் மேல் வந்த கோபத்தை, தமையன் மேல் திருப்பிவிட்டிருந்தாள், அப்புண்ணியவதி!

''என்ன அங்கிள் நீங்க? உங்க பொண்ணை மறைமுகமா... ம்ஹூம் கிட்டத்தட்ட நேரடியாவே பெண் கேட்டிருக்கான்.. அவனைப் போய்.. வீட்டுக்கு வா.. அங்கேயே தங்குன்னு.. சை... சை... வெத்திலை பாக்கு



வைக்காத குறையா கூப்பிட்டிட்டு இருக்கீங்க!'' என்று இலக்கியா, தன்னுள் நாரதரின் மிச்சசொச்சம் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டவும், (சூர்ப்பனகைக்குப் பேத்தியா நீ?)

புகழ் ''ஏய்!'' என்று பல்லைக் கடித்தான்! அவனால், அது மட்டும் தான் முடிந்தது! ஏனென்றால், தற்காப்பு நடவடிக்கையாக, முகில் அவனது கையை இறுகப் பிடித்திருந்தான்! பின்னே, காதல் கண்ணாட்டி மேல் கையடி பட்டுவிட்டால்?! அனிச்சம் பூ மேனியாள் வலி தாங்குவாளோ?!

புகழின் கோபம் தேவையற்றது என்பது போல் சம்பத் பேசினார்.

''எனக்கு எப்போதுமே.. சரளா மேல் ஓர் நம்பிக்கையுண்டு.. மிகவும் அந்நிய ஆண்களை வீட்டில் தங்க வைக்கும் ரகமல்ல, அவள். அவளே, தோழி மகனின் வருகைக்காக விருந்தினர் அறையை தயார் செய்து கொண்டிருக்கவும், நிரம்பவும் தோண்டித் துருவாமல் விட்டுவிட்டேன்!'' என்ற சம்பத்.

''சரளா உங்களைக் காணாமலே கொண்ட நம்பிக்கையை.. உங்களைக் கண்ட நான் வைக்க மாட்டேனா? கண்டிப்பாக வீட்டுக்கு வாருங்கள்!'' என்றார் விரிந்த சிரிப்புடன்.

புகழ் வெற்றிக் களிப்புடன் சட்டைக் காலரைத் தூக்கி விட்டதும், ''என்ன அங்கிள்? அவன் உங்க பொண்ணை...'' என்று இலா மீண்டும் துருவ,

''நீ என்கிட்ட அடி படத் தான் போறே?!'' என்று இன்னும் நாநரத்தான், அண்ணன்.

Optimized by www.ImageOptimizer.net

"அமெரிக்கக் கலாச்சாரத்துடன் ஒன்றி வளர்ந்ததில் இது ஒரு நன்மை... வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் கொள்வதில்லை நாங்கள்! அவர் சொன்னால்... நம் மேல் ஒட்டிக் கொள்ளவா போகிறது? அதுவுமில்லாமல், அவர் தனது விருப்பத்தைக் கூறினார்.... பிடிக்கவில்லை எனில் மறுக்கப் போகிறோம். பிடித்திருந்தால் ஒப்பப் போகிறோம். இதன் நடுவே என்ன கோபம்? எதற்கு ஒதுக்கம்?" என சம்பத் எடுத்துரைத்த போது, "இந்த மனப்பான்மை அனைவரிடமும் இருந்தால்... மனஸ்தாபம் என்ற வார்த்தைக்கே அகராதியில் இடமில்லாமல் போய் விடுமே!" என்ற எண்ணம் அனைவருள்ளுமே உதித்தது.

அதன் பின்னர், அனைவரும் உணவகத்திலிருந்து கிளம்பி, அவரவர் அறைக்கு விடை பெற்றனர்.

அடுத்த நாள் காலையே, காதல் கடலில் காமம் எனும் படைகள் நீந்தி, அன்பு எனும் முத்தைத் தேடிக் கொண்டிருந்த இலாவும் - முகிலும் காதல் பறவைகளாய் விடை பெற்று சென்றுவிட்டனர்.

"மூணு நாள் முன்னாடி... இது மூக்கால அழுத அழுகையென்ன? இப்ப... மொசக்குட்டி மாதிரி புருஷன் பின்னாடி போற அழகென்ன?" என்று மூக்கு நுனி வரை கேள்விகளால் ஆக்கிரமிக்கப் பட்டிருந்தபோதும், அன்பு அண்ணனாய் அவர்களை வழியனுப்பி வைத்துவிட்டு, தன் வேலையைக் கவனிக்கச் சென்றான்.

அன்று மாலை, வேலை முடிந்ததும் அவன் சென்ற இடம் - ஸ்ரீயை சந்தித்த பன்கடை வணிக வளாகம்!

நேற்றைய தினம், இலாவைப் பற்றிய தகவலை ஸ்ரீ எந்த இடத்தில் வைத்துப் பகிர்ந்தாலோ... அந்த இடத்திற்கே இன்றும் விரைய,



அவனது உள்ளுணர்வின் கணிப்பு படி, ஸ்ரீ அங்கே இருந்தாள்! அவனுக்காக காத்திருந்தாளா... இல்லை நேரத்தைக் கழிக்க அமர்ந்திருந்தாளா... இல்லை அந்த இடம் அவளுக்குப் பிடித்த இடமா... என்றெல்லாம் மூளை சிந்தித்த போதும், அங்கே அவள் இருப்பதே அவனுக்குப் போதுமானதாய் பட்டது!

அருகே சென்று, "ஹலோ!" என புகழ் புன்னகைத்தும்,

"ஹே மேன்! உன்காக தா வெயிட் பண்றே... எனக்கு இந்தியா வர இன்டெரெஸ்ட் இல்ல... நீ அமெரிக்கா கம் பண்ணிடு... நாம் மேரேஜ் பண்ணிப்போம்!" என்றாலே பார்க்கலாம். புகழுக்கு தலை கிறுகிறுவென சுத்தியே விட்டது! (ஐயோ... எனக்கு நெஞ்சு வலிக்கிற மாதிரி இருக்கே!)



## 11

திடுதிப்பென்று, "கல்யாணம்" என்ற முடிவிற்கு வருவாள் என்று அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை!

அவனது "ஹலோ"விற்குப் பதிலாய், அவன் எதிர் பார்த்தது என்னமோ ஒரு "ஹாய்!" தான்! மிஞ்சிப் போனால், ஓர் சந்தோஷக் கூச்சலுடன் கூடிய "ஹாய்!" அப்படியே இல்லையென்றாலும், ஒரு ஆச்சரியப் பார்வையேனும் அவள் பார்ப்பாள் என்பது தான் அவனது எதிர்பார்ப்பே!

Optimized by www.ImageOptimizer.net

இவள் என்னடாவென்றால்?! கல்யாணம் முடிந்து... விட்டால் பிள்ளை குட்டி வரை போய் விடுவாள் போலவே!

ஏற்பட்ட அதிர்ச்சியின் விளைவாய் ''வாட்!'' எனக் கூவியவன்,

''விளையாடாதே ஸ்ரீ!'' என்றான் அதிர்ச்சியை உள்ளடக்கிய சிரிப்புடன்.

''நோ... திஸ் இஸ் நாட் வெளையாட்! நா.. நிஜாம் தா சொல்றே...''

''அது நிஜாம் இல்ல... நிஜம்! நிஜாம்ங்கிறது பாக்கு! வெத்தலையோட போடுவோமே அது தான்... நிஜாம் பாக்கு! ஓகே? உண்மையானதுனு சொல்லணும்னா நிஜம் சொல்லணும்!'' (டேய், எந்த நேரத்தில் உன்னோட தமிழ் புலமையைக் காட்டுறதுன்னு ஒரு விவஸ்தை இல்லை!?)

''ஹோ மை காட்! லீவ் திஸ்! தாமில் அப்றம் லேர்ன் பண்ணலாம்... டெல் மீ... மேரேஜ் நோவா? எஸ்ஸா?''

''டக்குன்னு எதுவும் சொல்ல முடியாது, ஸ்ரீ! இது விளையாட்டு இல்ல... வாழ்க்கை!''

''நாக்கும் தெரியும்... நா மார்னிங்ல இருந்து திங்க் பண்ணா...''

''என்னன்னு?''

''மை மாம் உன்னை நாக்கு மேரேஜ் பண்ண லைக் பண்ணா...''

''சரி!''

''உன் மாம் லவ் மேரேஜ் பண்ணு சொன்னா...''



''சரி!''

''நீ.. நானை (அதாவது என்னை) ப்ரொபோஸ் பண்ணா...''

''அப்படியா? இது எப்போ நடந்தது?''

''ஹே... ப்ளே பண்ணாத மேன்! டாட்ட சொன்னே இல்ல...''

''அது.... சும்மா ஒரு பேச்சுக்கு...''

''நோ! நா நம்ப மாட்டா... உன் ஐய்ஸ் லவ் ஷோ பண்ணுதா...'' (ரியல்லி? இது எப்போ நடந்தது? அதுவும் எனக்குத் தெரியாம?!)

''அப்படிங்கற!?''

''யா!''

''சரி விடு! அப்படியே வெச்சுப்போம்!''

''நாக்கும்... நீ லிட்டில் லிட்டில் லைக் பண்றா...''

''ஷப்பா... உன்னோட தமிழுக்கு அர்த்தம் கண்டு பிடிச்சே எனக்கு தலை நரைச்சிடும் போல!'' என்று ஆழ மூச்செடுத்து விட்டவன்,

''லிட்டில்... லிட்டில் தானா? ஆனாலும் உனக்கே இது ஓவரா தெரியல?'' என்றான் கண்டனத்துடன்.

''இப்போ லிட்டில் தா! மேரேஜ் அப்றம்... லிட்டில்... மோர் ஆகிடும்! இலாக்யா - முஹில் மேரேஜ்ல அப்படி தா ஆச்சு.''

''விளங்கிடும்!?!?!?''

''வாட்! வேளங்கிகிடும்...??? வாட்ஸ் இட்?''

''ஒண்ணும்மில்லை... நீ மேல சொல்லு!''

Optimized by www.ImageOptimizer.net

''வாட் மேலே? தட்ஸ் ஆல்! மேரேஜ் பண்ணிப்போம்!''

''ஆனா.. நீ இந்தியா வர முடியாதுன்னு சொன்னது மாதிரி இருந்தது!''

''ஹ்ம்ம் எஸ்! நாக்கு இந்தியா கம் பண்ண இன்ட்ரெஸ்ட் இல்ல... நீ இங்க கம் பண்ணிடு...''

''இதென்ன வம்பா இருக்கு? என்னோட தொழில் முழுசும் இந்தியால தான் இருக்கு... அதை விட்டுட்டு இங்க வந்து நான் என்ன பண்ணுவேன்?''

''சோ வாட்! இங்க உனக்கு நெறைய ஜாப் இருக்கும்...''

''அது சொந்தத் தொழில், ஸ்ரீ!''

''இங்க... லைஃப் சிம்பிள் அண்ட் ஈஸியா இருக்கு... இந்தியா லைஃப் இஸ் காம்ப்ளிகேடட்!''

''ஸ்ரீ! கொஞ்சம் புரிஞ்சுக்கோ! இப்படி... டக்குன்னு எந்த முடிவும் எடுக்க முடியாது!''

''ஹ்ம்ம்! யூ டோன்ட் லைக் மீ?!'' - கண்களில் லேசான வலியுடன் ஸ்ரீலட்சுமி வினவவும்,

''ஹே!! எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு... ஆனா.. அதுக்காக.. என்னோட குடும்பத் தொழிலை விட்டுட்டு... சான்ஸே இல்ல, ஸ்ரீ!''

''நாக்காக கம் பண்ண மாட்டியா?''

''என்னது நாக்குகாகவா? நாக்கு சொல்லக் கூடாது... எனக்கு சொல்லு! உங்கப்பா எத்தனை வாட்டி திருத்தினாங்க?'' என்று அவன் கண்டிப்பு காட்டவும்,

''ஓகே.. ஓகே! எனாகாக?''



''எனாகாக இல்ல... எனக்காக! க்க்! நடுல க்க் வரணும்!''

''ஓகே!'' என்று பல்லைக் கடித்துவிட்டு, ''எனக்காக!'' என்றாள், ஸ்ரீ மிகுந்த அழுத்தத்துடன்.

''சமத்துப் பொண்ணு!'' என்று சிலாகித்துவிட்டு,

''ஸ்ரீ! இது சினிமா கிடையாது... உனக்காக உயிரையே கொடுப்பேன்.. இதயத்தைக் கொடுப்பேன்.. நாக்கை அறுத்துக் கொடுப்பேன்னு டயலாக் பேசுறதுக்கு! கொஞ்சம் ப்ராக்டிகலா யோசிச்சுப் பாரு! நல்லா வளர்ந்திட்டு இருக்க தொழிலை விட்டுட்டு... அப்பா - அம்மாவை விட்டுட்டு என்னால எப்படி ஸ்ரீ வர முடியும்?''

''நா ஆல்சோ மாம்-டாட் விட்டு கம் பண்றே.. நீ என்ன?''

''இதுக்கு என்ன பதில் சொல்றதுன்னு எனக்குத் தெரியல. ஆனா.. இங்க வரதுங்கிறது எனக்கு என்னமோ சரியா படலை.. அதுவும் இங்கேயே செட்டில் ஆகுறதுங்கிறதை என்னால யோசிச்சுக் கூடப் பார்க்க முடியல!''

''முஹில்... இலா மேலே லவ் வச்சு.. இந்தியா போறா! நீ என் மேல லவ் வைக்கலையா?''

''ஹே! இதென்ன?! அவங்களோட வாழ்க்கையை அளவுகோலா வச்சு.. நம்ம வாழ்க்கையை நகர்த்தக் கூடாது, ஸ்ரீ! அவங்க வேற.. நாம வேற?!

''என்ன வேற?! ரெண்டுமே லவ் தான்...''

''எல்லாமே லவ் தான். லவ் பண்ற மனுஷங்க வேற வேற! அவங்களோட மனசு சுத்தமா வேற வேற! அவங்களுக்கு இருக்கிற ப்ரியாரிடீஸ் கம்ப்ளீட்டா வேற வேற!''

Optimized by www.ImageOptimizer.net

"ஹோ! நோ! உனுக்கு என் மேல லவ் இல்ல... வேஸ்ட் ஆஃப் டைம்!" என்றபோது குரலில் இருந்தது, கோபமா.. இயலாமையா.. வருத்தமா.. தவிப்பா.. எது வென்று புகழுக்குப் பிடிபடவில்லை.

சட்டென அந்த இடத்தை விட்டு நகர்ந்தவள், கடைசியாய் பார்ப்பது போல் அவனை ஒரு முறை திரும்பிப் பார்த்தாள்.

அதில் வழிந்த காதலின் வழியைப் பொறுக்க மாட்டாதவனாய், அவளது கை பற்றி நிறுத்தியவன்,

"ப்ளீஸ் ஸ்ரீ! எதையுமே... எடுத்தோம் கவிழ்த்தோம்ன்னு முடிவு பண்ணாத! பேசலாம்... எங்கேயாவது உட்கார்ந்து பேசலாம்!" என்றான் கெஞ்சுதலாய். (ஆமா, டமால்.. டூமீல்ன்னு ஆக்ஷன் படம் பார்த்த மாதிரி இருக்கு! பொறுமை! பொறுமை! பொறுமை!)

அவள் ஒன்றும் பேசாமலிருக்க, "சாப்பிட்டிட்டே பேசுவோமா? நேத்து.. ரெண்டு பேரும் தனித்தனியா காபி குடிச்ச காபி ஷாப்ல... இன்னைக்கு ரெண்டு பேரும் சேர்ந்து காபி சாப்பிடலாம்!? என்ன சொல்றே?" என்றான் சமாதான முயற்சியின் முதல் கட்டமாய்.

"ஹ்ம்ம் ஓகே!" என்று அரை மனதை ஒப்புதல் கொடுத்த ஸ்ரீ, சட்டென "ஜிஞ்ஜர் குக்கி வித் காபி!" என்றாள், கண்களைச் சிமிட்டியவாறே.

அவளது கிண்டல் புரிய, "ஹே!" என மெல்லக் கூவியவன், "வா! வா! வா! இதே மூடோட போய்டலாம்!" என்று அவளை ஏறக்குறைய இழுத்துச் சென்றான்.

இஞ்சி பிஸ்கட்டும், கோல்ட் காபியுமாக ஸ்ரீ அமர, ப்ளூபெர்ரி கேக்-ஹாட் சாக்லேட் சகிதமாய் அமர்ந்தான் புகழ்.



பாதி உணவு காலியானதும், "இந்த சாப்பாட்டு விஷயத்திலேயே பாரு! நேத்து... நீ சாப்பிட்டங்கிற ஒரே காரணத்துக்காக நானும் ஜின்ஜர் பிஸ்கட் வாங்கினேன். ஆனா... என்னால சாப்பிட முடிஞ்சதா? அப்படியே தூக்கி... குப்பையில தானே போட்டேன்?! அது மாதிரி தான் ஸ்ரீ, வாழ்க்கையும்! உனக்காகன்னு.. இங்க வந்துடலாம்! ஆனா.. எனக்கு அது பிடிக்காம போய்ட்டா? முழு வாழ்க்கையும் நரகமா போய்டும்!" என்றான் புகழ், தன் நிலைப்பாட்டின் விளக்கமாய்.

"நீ உன் பாயிண்ட் தா சொல்றே... பட் நா? எனக்கு இந்தியா பிடிக்காது..."

"ஏன்?"

"உனுக்கு அமெரிக்கா மேல லைக் இல்ல... அது மாதிரி..."

"நா அமெரிக்கா பிடிக்காதுன்னு சொல்லலையே! என்னோட வேலைக்கு.. இந்த நாடு ஒத்து வராதுன்னு சொல்றேன்..."

"நாக்கும் தா... ஹ்ம்ம்... நே.. நோ! எனக்கும் தா..."

அவளது தமிழுக்காக "வெரி குட்!" என்று பாராட்டியவனிடம்,

"உனுக்கு என் மேல லவ் பண்ணலையா?" என்றாள் மீண்டும்.

"ஷ் ஸ்ரீ! சும்மா... சும்மா இதையே சொல்லிக்கிட்டு!" - சட்டென எரிச்சல் வந்துவிட்டது, புகழுக்கு. எப்போதுமே, அவனுக்கு சொன்னதையே திரும்பத் திரும்பச் சொன்னால் பிடிக்காது! இப்போது, வாழ்க்கை விஷயத்தில் என்ன விளையாட்டு என்ற எரிச்சல் வேறு சேர்ந்து



Optimized by www.ImageOptimizer.net

கொள்ள, ஸ்ரீயை வறுத்தெடுக்க தயாரானான், அவளை அறியாமலே!

''பட்... லவ் பண்ணா... இங்க கம் பண்ணுவ தானே...'' என்று ஸ்ரீலஷ்மி ஆரம்பிக்கவும்,

அவளைக் கையமர்த்தியவன் ''நா ஒண்ணு கேட் கிறேன்! என்றான், முகத்தில் தீவிரத்துடன்.

''உன் மேல காதல் இருந்தா... நா இங்க வரணும்ன்னு சொல்ற இல்ல?! என் மேல உனக்கு காதல் இல்லையா? அதான்.. நீ அங்க வர மாட்டேன்னு சொல்றியா?'' என் றான் கூர் பார்வையுடன்.

அவள் விக்கித்து விழிக்கும் போதே, ''என்னோட காதலை நிருபிக்க நா இந்தியா விட்டு வரணும்ன்னு நினைக்கிற நீ.. உன்னோட காதலை நிருபிக்க இந்தியா வர வேண்டியது தானே?'' என்றான் அழுத்தத்துடன். (பாயிண்ட்டைப் பிடிச்சான்யா!)

''எனக்கு உன் மேல ஆசை தான்.. அதே ஆசை உனக்கு என் மேல இருக்குன்னு எப்படி நம்புறது? உங்க அப்பா ஒரு தமிழ் பேசுற பையனைத் தான் மாப்பிள் ளையா எதிர்பார்க்கிறார்... உங்க அம்மாவுக்கு அவங்க பிரண்டோட பையனை மாப்பிள்ளையா ஆக்கிக்கிற எண்ணம் இருந்துச்சு... உனக்கு உன்னைக் காதலிக்கிற பையன் வேணும்... இது எல்லாத்துக்கும் நான் ஒத்து வரதால என்னை நீ அமெரிக்கா வரச் சொல்ற?! இதில.. உன்னோட லவ் எங்க இருந்து வந்தது?'' என்று அவன் ஆணித்தரமாய் பேசி முடித்த போது, ஸ்ரீயின் முகத்தில் ஈயாடவில்லை.

வெறித்தப் பார்வையும், உணர்ச்சிகளற்ற முகமுமாய் அவனையே பார்த்திருந்தவள், இருக்கையை விட்டு எழுந்தாள்.



வார்த்தைக்கு வார்த்தைத் தன்னுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தவள், வாய்மொழியாய் அல்லாமல் உடல் மொழியில் கூட பதில் சொல்லாமல் போவது, புகழுக்கு வருத்தமாய் இருந்தது.

அந்தப் பூ முகத்தில் தெரிந்த வலியைப் பொறுக்க முடியாதவனாய், அவளைத் தடுத்தவன், மெல்ல தன் புறம் திருப்பினான்.

அவளது விழிகளையே ஊடுருவி பார்த்தவன், அதில் இப்பவா அப்பவா என்று துருத்திக் கொண்டு நின்ற கண்ணீரைக் கண்டதும், ''ஹோ மை லட்டு குட்டி!'' என்றவாறே, அவளை இழுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். இறுக, இறுக!!

வினாடிகளோ... நிமிடங்களோ கடந்த பின்னர், ஸ்ரீயின் கரங்கள் புகழின் முதுகில் அழுந்தப் பதிந்தன.

அந்த அணைப்பு! இணைந்திருந்த இரு உடல்களின் உள்ளத்தை ஒன்றாக்கிய அணைப்பு!

அந்த அணைப்பு! ''இவன் எனக்கானவன்!'' என்று அவளும், ''இவள் தான் என் துணை!'' என்று அவனும் உணர்வதற்காகவே நிகழ்ந்த அணைப்பு!

அந்த அணைப்பு! காதல் மலா யுகங்கள் தேவை யில்லை கணங்கள் போதுமென நிருபித்த அணைப்பு!

அடைத்திருந்த தொண்டையை செருமி சரி செய்த புகழ், ''ஸ்ரீ.. கொஞ்ச நேரம் முன்ன வரைக்கும் எனக்கு உன்னைப் பிடிக்க மட்டும் தான் செஞ்சது! அதை காதல்ன்னு நீ சொன்னே.. நானும் அப்படித்தான்னு நினைச்சேன்! ஆனா.. இப்போ! இந்த செகண்ட்!

Optimized by www.ImageOptimizer.net

எனக்குப் புரியுது! ஐ லவ் யூ! ஐ லவ் யூ! ஐ லவ் யூ!'' என்றான் ஆத்மார்த்தமாய்.

அவளைத் தன்னிடமிருந்து பிரித்தவன், ''உனக்கும் என்னை மாதிரியே தோணுச்சுன்னா... நாம திரும்பவும் பேசலாம்! ஆனா... இப்போ இல்ல! நீ பொறுமையா யோசி... ரெண்டு நாள் கழிச்சு சந்திக்கலாம்!'' என்றவன், அவளது மனதைக் கலைக்கும் நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடவில்லை.

பொதுவாக பேசிக் கொண்டிருந்துவிட்டு பிரிந்தனர், இருவரும்!

இரவு முழுதும், தன்னருகே தோன்றிய அவளது லட்டு கன்னத்தையே ரசித்தப்படி, ''எப்போதடா அவளைப் பார்ப்போம்?'' என்ற ஏக்கத்துடனே உறங்கிப் போனான்.

அடுத்த நாள் வேலையின் போதும், அவளது சிவந்த மூக்கும், அழுகத் துடித்த விழிகளும், அழுந்தக் கடிந்த உதடுகளுமே இம்சை கொடுக்க, ''சே... என் வாய் இருக்கே வாய்?! இதில ரெண்டு கரிக்கட்டையை வச்சுத் தான் கொளுத்தணும்! மனுஷனோட மனசு புரியாம... ரெண்டு நாள் கழிச்சு பேசலாம்ன்னு சொல்லிட்டு வருது! சை!'' என்று மனதார, தன் வாயை வைது தீர்த்தான். (என்னமோ வாயை வாடகைக்கு எடுத்த மாதிரி, பேச்சைப் பாரு பேச்சை!)

ஏக்கமும், எரிச்சலுமாய் அறைக்குத் திரும்பியவனைத் திக்குமுக்காட வைக்கவென, ஸ்ரீ அவனுக்காக அவனது அறை வாயிலில் காத்திருந்தாள்.

அறையினுள் நுழைந்த வினாடி, அவனை இறுக அணைத்து ''ஐ டூ லவ் யூ!'' என்றாள், விரிந்த சிரிப்புடன்.



''ஹே ரியல்லி!''

''யா! ஐ லவ் யூ!''

''ஹ்ம்ம்! இவ்வளவு சீக்கிரமா?''

''நீ தா ஃபாஸ்ட்... நா உன்னை விட ஸ்லோ தா...''

தன் வேகத்தின் அளவை அவளுக்குக் காட்டியவன், ''நா ஒரே வாரத்தில நா குடும்பஸ்தன் ஆகிடுவேன்னு... ஃப்ளைட் ஏறும் போது கூட நினைக்கலை!'' என்றான் ஆச்சரியமாக.

உடனேயே, ''ஆனாலும்... இந்த இந்தியா-அமெரிக்கா மேட்டர் இருக்கே?'' என்றான் கவலை குரலில்.

''இல்ல.. நா டிஸைட் பண்ணிட்டே... நா இந்தியா கம் பண்றே...''

''வாட்! ரியல்லி! என்ன இது திடீர்ன்னு? என்னாச்சு உனக்கு????''

''இலாவும் மேரேஜ் பண்ணி... அமெரிக்கா தா கம் பண்ணா... அப்றம் முஹில் லவ் பண்ணி... இந்தியா போறா... நா மேரேஜ் பண்ணி இந்தியா போறே... அப்றம் நீ லவ் பண்ணி அமெரிக்கா கம் பண்ணு!'' என்றாள், நீண்ட விளக்கமாய்.

''அவங்களோட சந்தர்ப்ப சூழ்நிலை வேற.. நம்ம வாழ்க்கை வேற'' என்று சொல்ல வந்தவன், ஒன்றும் பேசாமல், தோளை மட்டும் குலுக்கிவிட்டு நிறுத்திக் கொண்டான்.

அவனுக்கு ஒரு நம்பிக்கை! தேனினும் இனிய தாய் தமிழ்நாட்டை அவளும் ரசித்துவிடுவாள் என்ற நம்பிக்கை! கி.மு. ஆறாம் நூற்றாண்டு தொட்டு, முத்து

Optimized by www.ImageOptimizer.net

குளிப்பதற்கென்றே பெயர் போன கப்பல் நகரமாம் தூத்துக்குடி எனும் திரு மந்திர நகரை அவளுக்கு நிச்சயமாய் பிடித்துவிடும் என்ற நம்பிக்கை! கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றி மூத்த தமிழ் மீது அவள் ஆசை கொள்வாள் என்ற நம்பிக்கை! (நம்பிக்கையே வாழ்க்கை!)

# 12

தன்னை அணைத்திருந்த ஸ்ரீயின் கைகளை எடுத்து, தன் கன்னத்தில் வைத்துக் கொண்ட புகழ், "மேடம் என்னமோ லவ் பண்ணித் தான் மேரேஜ் பண்ணுவேன்... லவ் பண்ணா தா லைஃப் நல்லா இருக்கும்ன்னு பட்டி மன்றம் பேச்சாளர் கணக்கா... பாயிண்ட்.. பாயிண்ட்டா அள்ளி விட்டீங்க? இப்போ... டமால்.. டுமீல்ன்னு மேரேஜ்க்கு தாவிட்டே?" என்றான் கண்களைக் குறும்பில் தோய்த்து.

"ஹான்.. யா... லவ் தா சொனனே இல்ல... நெக்ஸ்ட் டு மந்த்ஸ் லவ் செய்யறாம்.. அப்புறம் மேரேஜ்! நா அமெரிக்கன் பொண்ணு தா.. பட்... லவ் ஒன் டைம் தா வரணும்... அது மேரேஜ் தா முடியுணும் நினைப்பே(ன்). நாக்கு.. ஹ்ம்ம்... நோ.. எனக்கு உன்னை லைக் பண்ணியாச்சு.. அதா லவ் ஸ்டார்ட் பண்ணியாச்சு..." என்ற ஸ்ரீயை அப்படியே...!!!! ( உங்களுக்குப் பிடிச்ச வார்த்தையை அங்க போட்டுக்கோங்க)



"ரெண்டு மாசம் லவ் மட்டுமே பண்றதா? என்னை விளையாடுறியா?" என்று ஏகத்திற்கும் அதிர்ச்சிக்கு ஆட்பட்ட புகழ்,

அவளது கேள்வி நிறைந்த கண்களில் தன்னைத் தொலைத்துவிடாமல், மீண்டும் தொடர்ந்தான்.

"நா இங்க இன்னும் மூணு வாரம் இருப்பேன்... அதுவும் மூச்சு விடவே முடியாம வேலை தான் நிறைய இருக்கும்... அடுத்த மாசம் தொடங்கும் போது இந்தியா போய்ட்டா, உடனேயே கல்யாணம் பிளான் பண்ணிட வேண்டியது தான்! ரொம்ப நாள் தாங்காது!" என்றான் அவன், ஓர் நீண்ட பெருமூச்சுடன்.

"நோ.. நோ... லவ் பண்ணணும்... டு மந்த்ஸ் வேணாம்... ஒன் இயர் பண்லாம்.."

"லூசா நீ? ரெண்டு மாசமே தாங்காதுங்கிறேன்... நீ ஒரு வருஷம்ங்கிற?"

"ஹ்ம்ம்... இது தாமில்ல ஸ்பீக் பண்ண வராது... இங்கிலீஷ்ல ஸ்பீக் பண்ணவா?"

"நன்றிகள் பல பல! தயவு செய்து... இங்கிலீஷ்லே சொல்லிடு! நீ பேசுறதை ஒரு நிமிஷம் கூர்ந்து கவனிச்சா... அதை அடுத்த நிமிஷம் முழுசக்கும் மனசுக்குள்ள ஓட்டிப் பார்த்து, என்ன சொல்ல வந்தா... என்ன சொல்ல வந்தான்னு யோசிச்சு.. யோசிச்சு.. மண்டை காஞ்சிங்!! நீ இங்கிலீஷ்லேயே பேசிடு ராசாத்தி! என் செல்லமில்ல!" என அவன் கொஞ்சியபோது,

"பூ... பூ.. கிண்டல் பண்றே? போ.. நா போறேன்..." - கையை உதறிக் கொண்டு, ஸ்ரீ வெளிநடப்பு செய்ய, அடுத்து என்ன நடந்திருக்கும்! சரணாகதி தான்!

Optimized by www.ImageOptimizer.net

ஒரு வழியாக, அவளைத் தன் ஆளுமைக்குள் இட்டு வந்தவன், ''சரி.. சொல்லு! ஏதோ இங்கிலிஷ்ல உரை நிகழ்த்துறேன்னு சொன்னியே... அதை சொல்லி முடி'' என்றான் புகழ்.

''நீ இரண்டு மாசம் தாங்காதுன்னு சொன்னதும், நீ இந்தியா போறதால முடியாதுன்னு சொல்றேன்னு நினைச்சேன். அதான், ஒரு வருஷம் கணக்கு போட்டேன்.. அந்த ஒரு வருஷத்தில் நீ அஞ்சாறு தடவையாவது அமெரிக்கா வந்து போகலாம்.. நானும் இந்தியா வந்து போவேன்... அப்படியே நம் காதலை வளர்க்கலாம்ன்னு நினைச்சேன்... ஆனா நீ அதுக்கும் ஒத்து வர மாட்டேங்கிறே? ஏன்?'' என்ற போது,

புகழின் மனதிற்குள் ஓடியது என்ன தெரியுமா? 'ஹப்பாடா! இதை இவ தமிழ்-ல பேசல! அப்படி மட்டும் பேசல! அப்படி மட்டும் பேசியிருந்தா... கால் மணி நேரத்துக்கு என் மண்டை செயலிழந்து போயிருக்கும்!' என்பது தான். (உன் கஷ்டம், உனக்கு!)

மூளைக்குள் ஓடியதை, மூளையின் ஓரத்திலேயே குழி தோண்டிப் புதைத்தவன், அவள் முகத்தை இரு கைகளிலும் ஏந்திப் பேச ஆரம்பித்தான்.

''உன்னைப் பார்த்ததுமே பிடித்தம்... அடுத்த நாளே காதல்.. அதக்கு அடுத்த நாள் கல்யாணப் பேச்சுன்னு போயிட்டு இருக்கும்போது, ரெண்டு மாசம் காத்திருக்கிறதே ரொம்பப் பெரிய விஷயம். இதில ஒரு வருஷம்.. ரெண்டு வருஷமெல்லாம் முடியவே முடியாது! ப்ளீஸ் யா... என் செல்ல லட்டு பேபி இல்ல?!'' என அவன் கொஞ்ச,



''ஹ்ம்ம்... நோ.. லவ் பண்ணணும்...'' என்று அவள் மிஞ்ச,

''உன்னோட ஆஸ்தான ஜோடி, முகில்-இலக்கியாவே கல்யாணத்துக்கு அப்புறம் தானே லவ் பண்ண ஆரம்பிச்சாங்க. மித்த எல்லாத்திலையும் அவங்களை உதாரணமா எடுத்திட்டு, அச்சுப் பிசகாம ஃபாலோ பண்றே? இதில மட்டும் பண்ண மாட்டியா?'' என்று அவன் மடக்க,

மங்கையவள் திணறிப் போனாள்.

அவள் அதிலிருந்து தெளிவு பெறும் முன்னர், புகழ் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுத்து, அவளை யோசிக்க விடாமல் செய்தான். (தப்பு..தப்பு..தப்பு! தப்பா நினைக்கக் கூடாது! அவன் எடுத்த நடவடிக்கை - இரு வீட்டாரிடமும் பேசுவதே தவிர வேறொன்றுமில்லை! ஒன்றுமில்லை! இல்லை! ல்லை! லை!)

புகழ்-ஸ்ரீ இருவரது மனமும் ஒன்று கூடி, திருமணத்தில் முடிவதில் அனைவருக்கும் சந்தோஷமே என்பதால், அங்கே வேலைகள் படு வேகமாய் நடந்தேறின.

இதில், சிறிது சுணக்கம் கொண்ட ஒரே ஜீவன் - மாதங்கி மட்டுமே!

அம்மாவோ.. தங்கையோ... மனைவியோ யாராக இருந்தாலும் அவர்களது அன்பும் அக்கறையும் தனக்கு முதலில் கிடைக்க வேண்டும் என்று எண்ணும் புகழுக்கும், எதையும் பரந்த மனப்பான்மையுடன் பார்த்து, வாழ்க்கையை எவ்வித சிரமமும் இன்றி நடத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நிரம்பிய மேலைநாட்டுக் கலாச்சாரத்தில் ஒன்றியிருக்கும் ஸ்ரீக்கும் எப்படி ஒத்து வரும் என்று அவருக்கு ஏகப்பட்ட கேள்வி... குழப்பம்.. பயம்!!

Optimized by www.ImageOptimizer.net

ஆனால், வேறு விஷயங்களைப் போல் அல்லவே
காதல்! பட்டறிவில் புரிவதற்கு?! அனுபவப் பாடமல்
லவா?!

''காதல் செய்யடா கலிங்கத்து இளவரசா!'' என்று
மகனைத் தானே தூண்டிவிட்டு விட்டு, இப்போது
''நோ! எனக்கு இதெல்லாம் பிடிக்காது!'' என்று சிவாஜி
ஸ்டைலில் இரண்டு குதி கால்களையும் ஊன்றி, மேலே
எம்பி நின்றால் ஆகுமா?! ''போம்மா.. போ'' என்று
மகன், போயே விடுவான்! காதலுக்காக குடும்பத்தைத்
துறப்பதில், அப்பன் வாரிசாய் இருந்துவிட்டால்?! மரி
யாதையாய், திருமணத்திற்கு ஒத்துக் கொள்ள வேண்
டியது தான்!

அதிலும், ஸ்ரீயிடம் குறை கண்டு பிடிக்க அவருக்கு
எதுவும் இருக்கவில்லை! இருவரின் குணப் பொருத்தம்
தான் அவரைப் பயப்படுத்தியது!

அதற்காக, மேட்ச் தி ஃபாலோயிங் கணக்காக, திரு
மணப் பந்தத்தில் ஒன்று சேரும் இருவரின் குணங்களை
யும் பொருத்திப் பார்த்தா, திருமணம் செய்ய முடியும்?!
வாழட்டும்! வாழ்ந்து பார்க்கட்டும்! வாழ்க்கையின்
நெளிவும் சுளிவும், இருவரையும் பக்குவப்படுத்தி
விடும்! அப்படியே படுத்தவில்லை என்றால்... தாயென்று
தான் எதற்கு இருக்கிறோம்? படுத்திவிடுவோம்... அதா
கப்பட்டது, பக்குவப்படுத்திவிடுவோம்! என்ற எண்ணத்
தில் திருமணத்தை வெகு விமர்சையாகவே நடத்தி
முடித்தார், மாதங்கி! (நல்ல மாமியார்!)

சம்பத்தின் சொந்த ஊரான வேலூரில் நடந்து முடிந்த
திருமணமும் சரி, தூத்துக்குடியில் நடத்தப்பட்ட வரவேற்



பும் சரி, மிகுந்த அக்கறையுடன் வேயப்பட்ட விழாக்
களாய் நடந்தேறின.

வரவேற்பில், அணிந்திருந்த பனாரஸ் சில்க் புடவை
யிலேயே கண்ணை வைத்திருந்த ஸ்ரீயின் தோளில் கை
போட்டு,

''ஹே லட்டு! என்ன சேலையையே பார்த்துக்கிட்டு
இருக்கே? அதை விட அழகா நான் இங்க இருக்கும்
போது.. அங்க என்ன பார்வை!?'' என்றான் புகழ், குறும்புக்
கண்களுடன்.

''இல்ல... சாரீல இருந்த ஒன் பின்னை (ஊக்கைக்)
காணோம்.. அதா... நைட்ல உன்னைக் ஹர்ட் பண்ணிடு
மேன்னு செர்ச் பண்றே...''

''என்ன கரிசனம்? என்ன கரிசனம்? என் பொண்டாட்
டிக்கு என் மேல என்ன கரிசனம்?'' என்று அவளது
தோளை அழுத்தி விடுவித்தவன்,

''ஃபர்ஸ்ட நைட்க்கு.. இதே சாரீல உன்னை அனுப்ப
மாட்டாங்க. சிம்பிளா ஏதாவது தான் கட்டி விடுவாங்க!''

''ஹோ! ரியல்லி! இந்த சாரீ இல்லையா? அப்போ..
நைட் டிரஸ் போட்டு வரவா? ஹோ மை காட்.. திஸ்
இஸ் சோ காம்ப்ளிகேடட்!''

''என்ன டிரஸ்ல வேணும்னாலும் வா... எனக்கு
என்ன? நா தான்...'' என்று ஆரம்பித்தவன், அவளது
புரியாத பார்வையில் ''போதும் உன்னோட ஆராய்ச்சி
பார்வையை சுழல விடாத. என்னால விளக்கம் கொடுத்து
மாள முடியாது!'' என்றவன்,

''சரி ஸ்ரீ! உனக்கு.. இந்தக் கல்யாணத்திலேயே என்ன
பிடிச்சது?'' என்றான் எதிர்பார்ப்புடன்.

Optimized by www.ImageOptimizer.net

''உன்னைப் பிடிச்சது! உன்னை மட்டும் தா...
பிடிச்சது!'' என்ற காதல் வசனம் வந்ததா? ம்ஹூம்...
இல்லையே!

''''உன்னை மாதிரியே கொழுக்கு மொழுக்குன்னு ஒரு பிள்ளையைப் பெத்துக் கொடுத்திடுடா, ஸ்ரீ'' என்று சொல்லிய அதே மாமியார், ''நா ஜஸ்ட் ஒரு பேச்சுக்காக சொன்னேன். உங்களுக்கு எந்த கட்டாயமும் கிடையாது. உங்களுக்கா எப்போ ஒரு குழந்தையை வளர்க்க முடியும்னு தோணுதோ அப்போ பெத்துக்கோங்க, நாங்க தொந்தரவே பண்ண மாட்டோம்னு கூறியது பிடிச்சது!'' என அன்பொழுகப் பேசினாளா? இல்லை! இல்லை!

''அப்பா-அம்மாவை விட்டுப் பிரியறது கஷ்டமா இருந்தாலும், அவங்க முகத்தில தெரியற சந்தோஷத்தைப் பார்க்க சந்தோஷமா இருக்கு!'' என்று பாச வசனம் பேசியிருப்பாளோ? அதுவுமில்லை!

''இந்த இலா என்னை ரொம்பக் கிண்டல் பண்றா! அவளை அடிச்சா தான்... நான் என்ன பிடிச்சதுன்னு சொல்வேன்!'' என்று அடம் பண்ணினாளா? ப்ச்! நோ!

அவள் கூறியதோ!? ''ஃப்ரீ ஃபூட்! வாவ்! ஐ லவ் இந்தியன் ஃபூட்!'' என்றாளே பார்க்கலாம்?!

புகழ், ஸ்தம்பித்து நின்றுவிட்டான்! அடுத்த நொடி, கடகடவென அவன் வாய் விட்டுச் சிரித்ததில், அரங்கமே அவனை ஒரு முறை திரும்பிப் பார்த்தது!

''அடிப்பாவி! ஃப்ரீ ஃபூடா? இந்தச் சாப்பாட்டுக்குப் பின்னாடி... ஒண்ணு இல்லை ரெண்டு இளிச்சவாயன்... இளிச்சவாயர் இருக்காங்கடி! ஒண்ணு.. உங்க அப்பா! ரெண்டாவது.. எங்க அப்பா! உன்னை எல்லாம் என்ன



...ன் செய்றது? லட்டுன்னு சொன்னா மட்டும், இருக்க ...ஜிலேபி மூக்குக்கு மேல ஜீரா ஓடுது!? ஆனா.. லட்டு மாதி...ரியே யோசிக்கிறது!'' என்றபோது, அவனால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை.

இந்தா... அந்தாவென்று முதலிரவுக்கு வந்துவிட்டோம்! வந்தே விட்டோம்! டொட்டடோயங்!

விசேஷம்: முதலிரவு!

நேரம்: இரவு ஒன்பது மணி, நாற்பத்தியேழு நிமிடங்கள், ஆறு நொடிகள்!

இடம்: புகழேந்தியின் படுக்கையறை!

உள்ளிருந்தவர்: திருவாளர். புகழேந்தி!

வந்தவர்: சரண்யா-ஸ்ரீயின் தங்கை! (ஆஆஆஆஆஆ... ஸ்ரீ தானே கல்யாணப் பொண்ணு!? நீ ஏன்மா வந்தே? நோ... நோ... எங்க ஹீரோவே கள் உண்ட கள்வன் ரேஞ்சில இருக்கான்.. உனக்கேன் இந்தக் கொலைவெறி!?)

உலகம் தொடங்கிய நாள் முதல் வாழ்ந்து வந்த காதல் மன்னர்களையெல்லாம் கசக்கிப் பிழிந்து, ஒரே ஜூஸாக பிழிந்தது போல், காதல் ரசம் சொட்ட சொட்ட வாயில் புறம் திரும்பியவன், பேஸ்து அடித்தவன் போல், நின்றே விட்டான்.

''ஹே! நீ என்ன பண்றே இங்க? ஸ்ரீ எங்க? அவளுக்கு என்னாச்சு?'' என்று வாய் கேட்ட போதும்,

''இலையில சாப்பாட்டைப் போட்ட கையோட, ஆளைக் கிளப்பிக்கிட்டு போய்டாதீங்கடா புண்ணியவான்களா!'' என்று மனம் பகீரென்றது.

''நோ டென்ஷன் அத்தான்!'' என்ற சரண்யா,

Optimized by www.ImageOptimizer.net

"ஸ்ரீ இப்போ போட்டிருக்க நகை செட், சேலைக்குப் பொருந்தவில்லையாம். அதனால, உங்க பீரோவில இருக்க முத்து செட்டை எடுத்திட்டு வரச் சொன்னாங்க! இதுக்குப் போய், எதுக்கு இவ்வளவு பதட்டம்? எங்க உங்க லட்டை நாங்க பிடுங்கி சாப்பிட்டுடுவோமோங்கிற பயமா?" என்றாள் நக்கலாக, ஆங்கிலத்தில்.

"பயமா? எனக்கா?" என்று வீர வசனம் பேசாமல்,

"லட்டை நீங்க யாரும் சாப்பிட மாட்டீங்க! அது.. எதையாவது சாப்பிடப் போயிடுச்சுன்னா? உங்க அக்கா இருக்காளே...! ஒரு குலாப் ஜாமூனைக் கொடுத்து, அவளை ஒரு மணி நேரம் லாக் பண்ணி வச்சிடலாம்.. ஸ்வீட்ன்னா என்னை என்ன... உலகத்தையே மறந்து, அதில லயிச்சிடுவா!" என்று பதிலுக்குக் கொடுத்தவன், அவள் கேட்ட நகையை எடுத்துக் கையில் திணித்தான். கூடவே, "நா ரொம்பச் சின்னப்புள்ள... இப்படித் திடீர்ன்னு பேய் மாதிரி வந்து நின்னு.. என்னைப் பயப் படுத்தக் கூடாது சொல்லிட்டேன்!" என்றான் அவளிடம்.

ஆனமட்டும் அவனை முறைத்துவிட்டு, அறையை விட்டு வெளியே சென்றவள், தன் காண்டை வேற விதத்தில் வெளிப்படுத்தினாள்! அதாவது, ஸ்ரீயை சோபன அறைக்குள் செல்ல விடாமல், "ஸ்ரீ.. ஐ வில் மிஸ் யு.. லவ் யு.. மை ஸ்வீட் சிஸ்டர்!" என்று அவள் பேசிய பாச வசனங்களில், நேரம் பத்து மணியைத் தாண்டி முப்பது நிமிடங்களைக் கடந்து கொண்டிருந்தது.

கடைசியில், புகழ் தான் "தாயே! ஈஸ்வரி! விட்டுடு! ஏதோ தெரியாம சொல்லிட்டேன்! நீ பேய் மாதிரி இல்லை.. பச்சப் புள்ள மாதிரி இருக்கே! விட்டுடு!"



என்று காலில் விழாத குறையாக, கெஞ்ச வேண்டி யிருந்தது.

ஒரு வழியாக, ஸ்ரீயும் புகழும் அறைக்குள் நுழைய, பின்னணியில் "கண்ணா.. லட்டு தின்ன ஆசையா?" என்ற கோரஸ், சிரிப்பும் கேலியுமாய் ஒலித்தது!

ஆரம்பமே தாமதம்! இதில் எங்கே காதல் வசனம் பேசுவது?! நேராக, ஆக்ஷன் தான்!

புதுமகளின் ஆவாரம் பூ மேனியில், மன்னவனின் உதடுகள் ஈர ஓவியம் தீட்டித் தேய்ந்தன!

உதடும் உதடும் சேர்கையில், பன்னிரெண்டு மூளை நரம்புகளில் - ஐந்து தாக்கத்துக்கு உள்ளாகி, இருவரது உணர்வுகளையும் சங்கமிக்க வைக்கின்றனவாம்! இந்த சங்கமம்... நூறு முறை நிகழ்ந்ததா? இல்ல.. ஆயிரம் முறையா? இரண்டாயிரம் முறையா? புகழும் ஸ்ரீயும் மட்டுமே அறிவர்!

இரு உடல்களின் கூடலில், இரு மனம் ஒன்றாகியது! புது மணம் கமழ்ந்தது!

ஊடல்கள் கொண்ட வாழ்க்கைக்கான அஸ்திவாரமாய், கூடல்கள் நிரம்பிய அந்த இரவு அமைந்தது!



# 13

நேரம்: காலை ஆறு மணி, இருபத்தியைந்து நிமிடங்கள், முப்பத்தியாறு நொடிகள்.

Optimized by www.ImageOptimizer.net

இடம்: புகழேந்தியின் படுக்கையறை.

உள்ளிருப்பவர்கள்: திரு மற்றும் திருமதி. புகழேந்தி. (அப்புறம் அங்கே வேற யாரு இருப்பாங்க? தலையெழுத்து!)

குளித்து முடித்து ஈரத் தலையில் துவாலையைச் சுற்றியவாறே, கட்டிலின் விளிம்பில் அமர்ந்த ஸ்ரீ, குப்பறப்படுத்து, தலையணைக்குள் தலையைப் புதைத்திருந்த புகழின் அடர்ந்த சிகைக்குள் கை விட்டு, மெல்ல இழுத்தாள்.

''ம்ம்...'' என்ற முனங்களுடன், தலையணையைப் பிடித்திருந்த கைகளை விலக்கி, மனையாளின் பஞ்சு மெத்தை மேனியில் முகம் புதைத்தான் அப்புதுக் கணவன்!

''ஹ்ம்ம்... விடு புகல்... ப்ளீஸ்.. நோ'' என்று அவனை விலக்குவது போல், மேலும் ஒட்டிக் கொண்டாள், புத்தம்புது மலராய் விரிந்திருந்த மனையாளும்!

''ப்ளீஸ் லட்டு..'' என்று அவன் நெருங்க,

''நோ..'' என இவள் நடிக்க,

''ஒரே ஒரு வாட்டி... ப்ளீஸ்டா குட்டி...'' என அவன் இழைய,

''ம்ம்.. வேணாம்.. நா இப்போ தா ஷவர் பண்ணே...'' என இவள் சிணுங்க,

''அதனால என்ன... என்னோட ஒரு வாட்டி பண்ணிட்டா போச்சு... இதுக்குப் போய் யாராவது கவலைப்படுவாங்களா...'' என அவன் குழைய,

''ரொம்ப லேட் ஆச்சு... போனும்.. விடு..'' என இவள் வாசல் பார்க்க,



''இன்னைக்கு லேட்டா போனா தான் எல்லாரும் சந்தோஷப்படுவாங்க... சீக்கிரம் போனா கவலை தான் படுவாங்க..'' என அவன் தத்துவம் பேச,

''டைம் என்னா தெரியுமா? செவென் ஆகப் போவுது...'' என இவள் முறைக்க,

''அதனால் என்ன?'' என அவன் அலட்சியம் காட்ட,

''ஹ்ம்ம்.. அத்தை மைட் தின்க் சம்திங்க்...'' என அவள் தயங்க,

''நோ வே! அம்மா எதுவுமே நினைக்க மாட்டாங்க... நீ வா...'' என அவன் அழைக்க,

''ம்ம்.. ம்ம்.. வேணாம்... ம்ம்...'' என்று இவள் மயங்க,

''வேணும்..'' என அவன் இழுக்க,

''ஷ்.. அப்பா...'' என அவனது வேகத்தில் இவளும் இசைந்தாள்.

வினாடிகள் நிமிடங்களாய் மாறி, நிமிடங்கள் மணிக் கணக்கில் நீள, ஒரு வழியாய் படுக்கையை விட்டு எழுந்த ஸ்ரீ, ''ச்சீ... நீங்க ரொம்ப மோசம்..'' என்றாள் வெட்கத்துடன்.

அதை அள்ளிப் பருகிய புகழும் ''இதுக்கேவா...'' என்றான் மோகத்துடன்.

*** டிஷ்கான் ***

இப்படியெல்லாம் நடக்க இது என்ன சினிமாவா? இல்ல கதையா?

(எத்தனை கதையில, முதலிரவு முடிஞ்சதும் பொண்டாட்டி ஈரத் தலையோட வரதையும், புருஷன் - பொண்டாட்டி இழையுறதையே பார்ப்பீங்க? பொறுத்தது போதும்! பொங்கி எழுங்க! வேற படிக்கலாம்!)



Optimized by www.ImageOptimizer.net

புகழும் ஸ்ரீயும் மெத்தையோடு மெத்தையாக ஒன்றிப் போய், உறங்கிக் கொண்டிருந்தனர்.

''பெண்ணல்ல.. பெண்ணல்ல... ஊதாப்பூ...'' என்று எஸ்.பி.பியின் குரல், புகழின் கைப்பேசி வழியாக காற்றோடு கலக்க,

''ம்ம்...'' என்ற முனங்கலோடு, வலது கையை கைப்பேசிக்காக நீட்டி, அருகிருந்த மேஜையில் துழாவினான் புகழேந்தி.

''புஜ்ஜு கண்ணா... குட் மார்னிங்..''

''ஷ்... என்னம்மா காலையிலேயே போன் பண்றீங்க?'' என்று அலுத்துக் கொண்டவன், சட்டென சுதாரித்து ''ஏன்மா போன் பண்றீங்க? ரூம்க்கு வர வேண்டியது தானே?'' என்றான் கேள்வியாக.

''மக்கு பையா! நீ தனி ஆள் இல்ல...''

''ஷ் அம்மா! எனக்கு பின்னாடி என்ன ஊரா இருக்குது? தூக்கத்தில் எழுப்பிட்டு வசனம் பேசாதீங்க...''

''ஊரா? ஊர் வேணுமா ஊரு? ஸ்ரீ செருப்பாலே அடிப்பா... ராஸ்கல்!''

''ஹோ!!!'' என்றவன், சட்டென பார்வையைத் திருப்பி மனைவியைப் பார்த்தான்.

அந்த நேரம் பார்த்து, தலையணையை இன்னமும் இறுக்கிக் கொண்டு, நல்ல வசதியாக, சுகமாக அதில் முகம் புதைத்துக் கொண்டாள் ஸ்ரீலஷ்மி.

''லட்டு பேபி!'' என்று மனம் சீராட்டிய வேளையில்,

''டேய்! டேய்! அம்மா லைன்ல இருக்கிறதை மறந்துடாதேடா ராஜா!'' என்று வேக வேகமாய் இடைமறித்து, அவனை நினைவுக்கு இட்டு வந்தார் மாதங்கி.



தலையை உலுக்கி சுதாரித்த புகழ் ''இன்னுமா நீங்க போனை வைக்கலை? என்ன அம்மா ம்மா நீங்க?'' என்றான் கேலியாக.

''ஏன்டா பேச மாட்டே?'' என்று அலுத்துக் கொண்டாரே.

''சரி... சரி.. நீ போனை எந்த நிமிஷம் வேணும்னாலும் கட் பண்ற நிலைமையில தான் இருப்பேன்னு எனக்குப் புரியுது.. அதனால விஷயத்தைச் சொல்லிடுறேன்...'' என ஆரம்பித்தார்.

''இன்னும் நீங்க விஷயத்தையே சொல்லலையா?'' என புகழ் பெரிதாய் ஆச்சரியப்படவும்,

''வேணாம் அழுதுருவேன்..'' என்று சோகம் ராகம் பாடியவர்,

''எட்டு மணிக்கு கோவிலுக்குப் போகணும், புஜ்ஜு கண்ணா! அதனால, சீக்கிரம் கிளம்பி வாங்க. அதான் விஷயம்!'' என, தான் அழைத்ததற்கான காரணத்தைக் கூறிவிட்டு, கைப்பேசியை வைத்தார்.

மேலும் வம்பு வளர்க்காமல்... வளர்க்க முடியாமல்... வளர்க்க விரும்பாமல், கைப்பேசியை அணைத்தவன், சடாரென தாவி மனைவியை அணைத்தான்.

ம்ஹூம்! அவளிடம் ஓர் அசைவு இருக்க வேண்டுமே!? ஒரு சின்ன முனங்கல் கூட இல்லாமல், ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

முகம் முழுதும் மறைத்திருந்த முடியைக் கோதி விட்டு, நெற்றியில் முத்தம் வைத்தான், புகழ்.

Optimized by www.ImageOptimizer.net

லேசாய் அவன் கையைத் தட்டிவிட்டதைத் தவிர, வேறொன்றும் செய்யவில்லை அவள்! குப்புறப்படுத்து உறங்கிவிட்டாள்!

மெல்ல அவளை நிமிர்த்தி, முத்துச் சிப்பியாய் மிளிர்ந்த இமைகளின் மேலே அவன் அதர தூரிகையை அழுத்த, அவளோ ''ப்ளீஸ்.. தூக்கம் வருது!'' என்று விட்டு, ஒரே தள்ளாக தள்ளி அவனைக் கட்டிலின் விளிம்பிற்கே கொண்டு சென்றுவிட்டாள்.

சற்றே தடுமாறி சுதாரித்தவன் ''ஹே! லூசி!'' என்ற வாறே, அவளை நெருங்கி,

''லட்டு! எழுந்திருடா... மணி ஏழாகப் போகுது! கோவிலுக்குப் போகணுமாம்...'' என்றான் காதோரமாய்.

''ம்ம்ம்ம்...'' - அவள் தலையைக் கூட நிமிர்த்த வில்லை.

''ப்ளீஸ் குட்டி... எழுந்துக்கோ... குளிச்சு... டிரஸ் மாத்தி... அதுவும் நீ புடவை கட்டணும்... அப்புறமா சாப்பிட்டு கோவிலுக்குப் போகணும். சீக்கிரம் வாம்மா...''

''ஹோ... நோ! எனக்குத் தூக்கம் வருது! ப்ளீஸ் தூங்க விடு!''

''தூங்கலாம்.. தூங்கலாம்! கோவிலுக்குப் போயிட்டு வந்ததும் தூங்கலாம்!''

''ம்ஹூம்... இப்பவே!''

''என் செல்ல லட்டு இல்லா? ப்ளீஸ் டா! நமக்காக எல்லாரும் வெயிட் பண்ணிட்டு இருப்பாங்க...''

''ம்ம்.. எழுந்துக்கிறேன்...''

''ம்ம்... எழுந்திரு! எழுந்திருமா...''



''டென் மினிட்ஸ் ப்ளீஸ்! புகல் ப்ளீஸ்!''

''நோடா... லேட் ஆச்சு!''

''ப்ளீஸ் ப்ளீஸ்!''

''சரி... நா ரெஸ்ட் ரூம் போயிட்டு வரேன்.. அதுக்குள்ளே எழுந்திடணும்? ஓகே?''

''ஓகே... ஓகே..''

பத்து நிமிடங்கள் கழித்து, புகழ் முகத்தைத் துடைத்த வாறே வர, அப்போதும் ஸ்ரீ உறங்கிக் கொண்டிருந்தாள்! அவன் விட்டுச் சென்ற அதே நிலையிலேயே! சிறிதாய் எரிச்சல் எட்டிப் பார்த்தப் போதும், புது மனைவியின் பால் வண்ண மேனியும், முகத்தில் உறைந்திருந்த புன்னகையும், அவனை இலகுவாக்கின.

''லட்டு! எழுந்திரு!''

''ம்ம்... எய்ட்-டோ கிளாக் தானே போணும்? நா செவன் தர்ட்டிக்கு எழுந்துக்கிறேன்...''

''மணி என்ன தெரியுமா? ஏழே கால்!? நீ புடவை கட்டி ரெடி ஆகணும்... அதுக்கான நேரம் ஞாபகம் இருக்கட்டும்!''

''ம்ம். அப்போ செவன் பிப்டீன்!''

''அதான் ஆகிடுச்சே?''

''இன்னும் ட்ரீ மினிட்ஸ்... பிப்டீன் செகண்ட்ஸ் இருக்கு... அப்போ எழுப்பு...''

சிறிது நேரம் கழித்து, ''ஸ்ரீ!'' என அவன் மீண்டும் சத்தம் கொடுக்க,

''இன்னும் ஒன் மினிட் இருக்கும்... வெயிட் பண்ணு...''

Optimized by www.ImageOptimizer.net

"இப்படிப் பேசிட்டே படுத்து இருக்கிறதுக்கு... எழு
துக்கலாம் இல்ல?"

"எனக்கு பேசிட்டே தூங்க ரொம்பப் பிடிக்கும்..." என்றாள் ஸ்ரீ லஷ்மி, ஆங்கிலத்தில்.

"அதுக்கு இப்போ நேரமில்லை, ஸ்ரீ! எழுந்திரு!"

"இன்னும் டென் செகண்ட்ஸ் இருக்கு..."

"ஸ்ரீ, என்ன இது? செகண்ட் பை செகண்ட் கணக்கு பண்ணிட்டு.. ரொம்ப டூ மச்! உன்னை எழுப்புறதுக்கு ஒரு மனுஷன் இந்தக் கெஞ்சு கெஞ்சணுமா?!" என்று இறைந்துவிட்டான், புகழேந்தி!



# 14

அது தான் பிரச்சனையின் ஆரம்பம்!

அன்றைய தினம், புகழின் கோபத்தின் அளவு கம்மியாய் இருந்து, காதலின் அளவு தூக்கலாய் இருந்ததால், பிரச்சனை பெரிதாகவில்லை! ஆனால், இருவருக்குமான கருத்து மோதலுக்கான விதை அன்று விதைக்கப்பட்டது!

"லட்டு... லட்டு" என அவன் உருக, அவளோ அவளது காதலை "பிட்டு... பிட்டு" புது வகையாய் விருந்து படைத்தாள்.

நடுவே, "சட்டு... சட்டு" என்று கோபம் வந்தபோது, அது சிட்டுக் குருவியாய் பறந்து போனது!

ஒரு மாதம் கழிந்து!



காலை: ஏழு மணி, இருபது நிமிடங்கள்

இடம்: புகழேந்தியின் அறை.

"பெண்ணல்ல... பெண்ணல்ல... ஊதாப் பூ! கண்ணல்ல... கண்ணல்ல... அல்லிப்பூ!" என மெட்டிசைக்க, இப்போது அழைத்தது மாதங்கி அல்ல, ஸ்ரீலஷ்மி! (நோ! நீங்க நினைக்கிறது புரியுது! "அடி கில்லியே, ஒரே மாசத்தில அவளை பாக் பண்ணி, அமெரிக்காவுக்கே அனுப்பிட்டியா? உனக்கேன் இந்த மாமியார்த்தனம்!" - அப்படித் தானே நினைக்கறீங்க? நோ.. நோ.. நான் அப்படியில்லை! ரொம்ப நல்லவ! அதனால தொடர்ந்து படிங்க!)

"நோ லட்டு பேபி!" என புகழ். தூக்கத்திலும் காதல் ரசம் சொட்டவும்,

"டைம் ஆச்சு. கெட் அப் மேன்!" என்றாள் ஸ்ரீ. அதிகாரமாய்.

"டைம் ஆச்சு... சரி! இதென்ன புது பழக்கம்... ஒரே வீட்டுக்குள்ளே இருந்துகிட்டு போன் பண்ணி எழுப்புறது? நேர்ல வா!"

"நோ... நா கம் பண்ண மாட்டே..."

"உனக்கு எத்தனை வாட்டி சொல்லியிருக்கேன்... இங்கிலீஷ் வார்த்தையைப் பேசிட்டு, பக்கத்தில "பண்ண"ங்கிற வார்த்தையைப் போட்டுட்டா அது தமிழ் ஆகாதுன்னு?" என்றவன், அவளைப் பதில் பேசவே விடவில்லை.

"அதென்ன?" கம் பண்ண மாட்டேன்..? இவ்வளவு நீளமா பேசறதுக்கு... வர மாட்டேன்னு சுருக்கமா பேசலாம் இல்ல?"

Optimized by www.ImageOptimizer.net

"திற-ன்னு சின்னதா சொல்றதுக்கு... ஓபன் பண்ணு-ன்னு நீட்டி முழக்கிறது! சாப்பிடு-ன்னு சொல்ல வலிச்சுக்கிட்டு, ஈட் பண்ணு-ன்னு என்னமோ ஈட்டிக் காரன் கணக்கா நிக்க வேண்டியது! மனுஷனுக்கு... சாப்பிடுற மூடே போய்டும்! அதே மாதிரி தான்... ஒரு சாதாரண வார்த்தை... பேசு-ன்னு சொல்றதுக்கு டாக் பண்ணு-ன்னு சொல்றே? உனக்கு நிஜமாவே புரிய லையா? இல்ல வேணும்னே எங்க இங்கிலீஷ் நம்மளை விட்டுக் காணாமப் போயிடுமோங்கிற பயத்தில கொஞ்சிப் பேசுறியா?" என்றான் நீளமாக. (நீளமா பேசுற அவனுக்குத் தானே வாய் வலிக்கணும்? உனக்கென்ன வந்துச்சு?)

அந்தப் பக்கமிருந்து ஒரு சத்தமும் இல்லை!

"உடனே கோபம் வந்திடுமே?! தப்புன்னு சொன்னா திருத்திக்கலாம் இல்லையா? அதை விட்டுட்டு, என்கிட்ட மூஞ்சியை நீட்டிட்டு இருக்க வேண்டியது!" என்றவனுக்கு, குரல் சலித்து விட்டது.

பின்னே, கடந்த ஒரு மாதக் காலமாக, அவனும் தான் அவளது தமிழ் வார்த்தைகளைத் திருத்த படாத பாடு படுகிறான்! ஆனால், அப்போதைக்கு மாறினாலும், அடுத்த பத்து நிமிடங்கள், பழைய ஓட்டைத் தமிழுக்கு விமானம் ஏறாத குறையாக பறந்து விடுகிறாளே?!

தொடர்பு தொலைந்த கைப்பேசியையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தவன், "ப்ச்" என்ற சலிப்புடன் குளியலறைக்குள் புகுந்தான்.

வெளியே வரும் போதும், ஸ்ரீ அறையில் இருக்க வில்லை.



திருமணம் முடிந்த நாள் தொட்டு, அவன் வேலைக்குக் கிளம்பிச் செல்லும் வரை, அவனுடனே சுற்றி சுற்றி வரும் செல்லக் கட்டியைக் காணாமல் நெஞ்சம் வெறுமைப் பட்டது. (இதுக்குப் பேரு தான் - சொந்த சூனியம்!)

அலமாரியிலிருந்து ஓர் சட்டையை எடுத்து அணிந்தவனின் மனம், அவனைப் பின்னோடு அணைக்கும் ஸ்ரீயின் ஸ்பரிசத்திற்காக வெகுவாக ஏங்க, கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றான்.

கண்களைச் சுழல விட்டால், கண் எட்டிய தூரம் வரை, ஸ்ரீயைக் காணவில்லை.

"ஸ்ரீ..." என அவன் அழைக்க,

"ம்ம்ம்..." என்ற சிறு முனங்கல் எங்கிருந்தோ சன்னமாய் ஒலித்தது.

"இங்க வாயேன்!" என அவன் மீண்டும் அழைப்பு விட, இப்போது அந்த முனங்கல் சத்தம் கூட கேட்க வில்லை.

மாறாக "ஸ்ரீம்மா, புஜ்ஜு கூப்பிடுறான் பாரு! உருளைக் கிழங்கை... நான் உரிச்சுக்கிறேன்... நீ போ!" என்ற மாதங்கியின் வற்புறுத்தும் குரல் கேட்டது.

இரண்டு நிமிடம் கழித்தும், சமையலறையிலிருந்து ஸ்ரீ வெளி வராமலிருக்க, "ஸ்ரீ!" என்றான் புகழ், அழுத்த மாய்.

"இப்போ வரப் போறியா? இல்லையா?" என்ற வகையில் குரல் இருக்க, ஸ்ரீ மெல்ல வெளியே வந்தாள்.

அறை வாயிலில் நின்ற அவனைக் கடந்து, அறைக் குள் சென்றவள், மறந்தும் அவனை நிமிர்ந்து பார்க்க வில்லை.

Optimized by www.ImageOptimizer.net

வாடிய முகத்துடன் கட்டிலில் அவள் அமர, கதவை அடைத்துவிட்டு அவளருகே வந்தவன் ''இந்த ஜிலேபி மூக்கு மேல... மிளகா பேஸ்ட் தடவின மாதிரி... பயங்கர சூடா இருக்கே?'' என்றான் அவளது மூக்கில் ஓர் முத்தம் வைத்தது.

பட்டென அவனது கன்னத்தில் ஓர் அடி வைத்து, அவனைத் தள்ளி விட்டவள்,

''ஐ ஹேட் யூ!'' என்றாள் அழுகையை இப்பவா அப்பாவா என்று குரலில் காட்டி.

''என்ன பேபி இது? உன்னோட நல்லதுக்காக தானே சொல்றேன்? அது தப்பா?''

''இல்ல... நீ உன்னை மாதிரி என்னை கன்வர்ட் பண்ண ட்ரை பண்றே... என்னை என்னை மாதிரி விடு.. உன்னை மாதிரி நா சேன்ஜ் ஆகா மாட்டே(ன்)...''

''என்னை மாதிரி நீ மாற வேண்டாம், லட்டு! நீ நீயாவே இரு... ஆனா... அதை சரியா இருன்னு தா சொல்றேன்... ஜஸ்ட் லாங்குவேஜ் என்னை மாதிரி பேசுறதால நீ என்னை மாதிரி ஆகிடுவியா என்ன?''

அவளுக்கும் புரிந்தது! பேசுவதைத் திருந்தப் பேசு என்று சொல்வதில் என்ன தப்பு? அதனால், அவனது எந்த குணத்தைத் தன் மீது திணித்து விட்டான் அவன்? புரியாமல் தான் பேத்துக்கிறோமோ? என்று நெஞ்சம் கேள்வி கேட்டது.

ஆனால், அவனது கடுமையான வார்த்தைகள் நினைவிலாட,

''சும்மா... சும்மா... நீ என்ன திட்டுறே! உனக்கு என்னை லைக் பண்ணலை... ஹ்ம்ம்... லைக்ன்னா தாமில்ல



என்னா?'' - சிறு பிள்ளையாய் அவள் அண்ணாந்து முகம் பார்க்கவும், கணவனுக்கு நெஞ்சம் கொள்ளை போய்விட்டது.

''எனக்கு உன்னை ரொம்பவே பிடிக்கும்... பிடிக்காம எல்லாம் இல்லை!''

''ஹ்ம்ம்... சொல்லு! லைக்ன்னா தாமில்ல என்ன? ரொம்பப் பிடிக்கும் மா?''

''லைக்ன்னா பிடிக்கும்... டோன்ட் லைக்ன்னா பிடிக் கலை.''

''ஹ்ம்ம்... அப்போ உனக்கு என்னைப் பிடிக்கலையா? கரெக்ட்டா சொன்னேவா?''

''ஹ்ம்ம் கரெக்ட்டா தான் ஸ்பெல் பண்ண! ஆனா, சொன்ன ஸ்டேட்மென்ட் தப்பு. எனக்கு உன்னை ரொம்ப ரொம்பப் பிடிக்கும். அதனால தான்... நீ என்ன செஞ்சாலும், அதை ஒழுங்கா செய்யணும்... உன்னை யாரும் கேலி பண்ணக் கூடாதுன்னு நினைக்கிறேன்'' என்றான் புகழ். அவளது இரு கன்னங்களையும் பிடித்து ஆட்டியவாறே.

''யாரு கேலி பண்ணா? ஸ்ரீ பாவம்!'' என அவள் வருத்தம் கொள்ள,

''நம்ம முகத்துக்கு நேர யாரும் கேலி பண்ண மாட்டாங்க... ஆனா வெளிய போய் நக்கலா பேசுவாங்க இல்ல?''

''டாக் பண்ணா... ஹ்ம்ம்.. பேசு-னா பேசுறா... நா ஏன் சேன்ஜ் ஆகணும்?''

''சரி, மத்தவங்க பேசுறதை விடு! எந்த ஒரு காரி யத்தை எடுத்தாலும், அதை சரியா செய்ய

Optimized by www.ImageOptimizer.net

வேண்டாமா? நா தமிழ் பேசுறேன்... தமிழ் பேசுறேன்னு சும்மா சொன்னா மட்டும் ஆச்சா? அதைத் திருத்தமா... அழகா பேச வேண்டாமா? மத்தவங்களுக்காக இல்லைனாலும், நமக்காக நாம வாழ வேண்டாமா சொல்லு? நமக்கே, நம்ம முயற்சி மேல ஒரு பிடித்தம் வரணுமில்லையா?'' என அவன் சொற்பொழிவு ஆற்றவும்,

''ம்ம். சரி'' என்று அரை மனதாய் ஒப்புக் கொண்டாள், ஸ்ரீலட்சுமி.

''ஓகே டா! உன்னோட அழகான ஆப்பிள் முகத்தை இப்படி உர்ருன்னு வச்சுக்கக் கூடாது! சண்டை போட்டா... உடனே சமாதானம் ஆகிடணும்! அதானே நம்மளோட டீல்? சண்டையை இழுத்துக்கிட்டே போகக் கூடாது... உடனே ஒரு கிஸ் கொடுத்து, பிரண்ட்ஸ் ஆகிடணும்ன்னு நீ தானே சொன்னே? இப்போ நீயே இப்படி இருந்தா எப்படி?''

''நானா சண்டை போட்டே(ன்)? நீ தா திட்டுறே!''

''சரி... நானே என் தங்கத்தை கிஸ் பண்ணிடுறேன்!'' என்றவன், தன் கன்னத்தில் முத்தம் வைப்பான் என்று அவள் எதிர்பார்த்திருக்க,

அவனோ, அவளது உதடுகளைக் கைது செய்தான்!

எதிர்பாராமல் விழுந்த முத்தத்தில், தடுமாறியவளை சுதாரிக்க விடாமல், தன் கணவன் வேலையைச் செவ்வனே ஆரம்பித்தான் புகழேந்தி.

அவனது பார்வைக் கூண்டில் அவள் காதல் கைதியாகி விட, அவனோ அவளது தேக்கு மர தேகத்தில் உளியாகிப் போனான்! (கவிதை! கவிதை!)



புகழின் ஆண்மையில் கட்டுண்டு இருந்த ஸ்ரீக்கு, அவனை விட்டு அகலவே மனம் வரவில்லை.

அவனது வெற்றி மார்பில் தலை வைத்து, எல்லையற்ற சந்தோஷத்துடன் படுத்திருந்தவள், ''புகல்...ஐ லவ் யூ!'' என்றாள் நெஞ்சார.

''ஹ்ம்ம்... நிஜமாவா?!'' என அவன் சிரிக்க,

''என் லாஃப் பண்... சிரி.. சிரிச்சே...'' என்றபோது அவளது குரலில் இடம் பெறவா வேண்டாமா என யோசித்துக் கொண்டிருந்தது.

''ஹ்ம்ம் அதில்லை! நம்மளோட கல்யாணம் ரொம்ப அவசரமா.. அவசரமா நடந்த மாதிரி இருந்தது... நீ சொன்ன மாதிரி ஒரு வருஷம் என்னால காத்திருக்கவும் முடியலை... காத்திருந்தா ரெண்டு பேருமே ஒருத்தரை ஒருத்தர் இன்னும் நல்லா புரிஞ்சிக்கிட்டு இருக்கலாமோன்னு நினைக்காமலும் இருக்க முடியலை...''

சட்டென அவன் மீதிருந்து எழுந்தவள் ''உனக்கு என்னைப் பிடிக்கலை!'' என்றாள் அழுத்தமாக.

முகம் திகைப்பில் சுருங்க, ''லூசி! உன்னைப் பிடிக்கலைன்னு நான் எப்படி சொன்னேன்?'' என்றவன், ''முதல்ல இங்க வா...'' என்று அவளை இழுத்து, தன் மீது போட்டுக் கொண்டான்.

''நம்ம மேரேஜ் குயிக் நடந்தது சொன்ன இல்ல... அப்போ நீ என்னை மேரேஜ் பண்ணதுக்கு வொர்ரி பண் தர்மபத்தினி.

''இல்லைடா... நாம இந்த ஒரு மாசத்தில நிறைய சண்டை தான் போட்டிருக்கோம்... போட்ட சண்டைக்கு

Optimized by www.ImageOptimizer.net

சமாதானமா தான் இப்படி கொஞ்சிக்கிறோமோன்னு தோணுச்சு!'' என்றான் அவன் உண்மையாக.

''நீ தான் ஃபைட் பண்றே... நா இல்ல...''

''சரி விடு... நான் தான் சண்டை போடுறதாவே இருக்கட்டும்... அதனால தான் சொல்றேன்... நாம ரெண்டு பேரும் இன்னும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கலை...''

''டோன்ட் ஜாயின் மீ வித் யூ! நா சண்டை போடலை... நா உன்ன லவ் பண்ணுதேன்... சொன்னே(ன்) தானே...''

''சும்மா... அது ஒரு வேகத்தில சொல்றது... நீ என்னைக்கு என்னோட பேரை புக்கள்... புகல்ன்னு கொலை பண்ணாம... அழகா திருத்தமா புகழ்ன்னு கூப்பிடுறியோ அப்போ தான் நிஜமாவே என்னை லவ் பண்றேன்னு அர்த்தம்!'' - ஓர் ஆர்வத்தில்... ஓர் அவசரத்தில்... ஓர் வேகத்தில்... ஓர் ஆசையில் சொல்லி விட்டாளே ஒழிய, அதைக் கூறி முடித்ததும் தான், அதன் பாதிப்பே அவனுக்கு உறைத்தது.

அவனது மார்பிலிருந்து தலை நிமிர்த்தி, அவனது கண்களையே ஊடுருவிப் பார்த்தவள், அடுத்த நிமிடம் அவனிடமிருந்து விலகினாள்.

''லட்டு...'' என அழைத்தவாறே, இழுக்க,

மெல்ல கையை உருவிக் கொண்டவள், ''லாங்குவேஜ்க்கும் லவ்க்கும் என்ன கனெக்ஷன்? நீயே உன் ஸ்டேட்மென்ட் காண்ட்டிராக்ட் பண்ணுறே!'' என்றதோடு, அங்கிருந்து நகன்று குளியலறைக்குள் புகுந்து விட்டாள்.

''முட்டாள்! முட்டான்!'' என்று ஆயிரம் முறை மண்டையில் குட்டிக் கொண்டாலும், வார்த்தைகளைத் திரும்ப அள்ளவா முடியும்?



''அவன் ஒழுங்காக தமிழ் பேசுவதற்கும், தன் குலத்திற்கு ஏற்ற மாதிரி அவளை மாற்றுவதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை'' என்று அவளிடம் வாதாடி ஒரு மணி நேரம் கூட ஆகவில்லை. அதற்குள் தமிழை அவளது காதலோடு இணைத்து. அச்சோ... உன் ஆர்வக் கோளாறுக்கு ஒரு அளவில்லையா?! ஹய்யகோ! குனியம் வைத்துக் கொண்டாயே சுக்ரதேவா!

குளியலறை கதவு திறக்கும் சத்தம் கேட்டதும் ''சரி வச்சது வச்சுட்டே, எடுக்குற வழியைப் பாருடா'' என்று உள்மனம், உரக்கக் குரல் கொடுத்தது.

அதன் எதிரொலியாய் ''லட்டு... சாரிடா... நா நினைக்காம...'' - அவன் காற்றோடு தான் பேசிக் கொண்டிருந்தான். ஸ்ரீலஷ்மி, அறையைவிட்டு வெளியேறி இருந்தாள்!

''வேணும்டா உனக்கு! இன்னும் ஒரு வாரத்துக்கு காயப் போட்டுடுவாளே!'' என்று மனம் நொந்தவனுக்கு, அந்த ''ஒரு வாரம்'' மாதக் கணக்கில் நீளப் போவது தெரிய வாய்ப்பில்லை! (வேணும்டா உனக்கு!)



## 15

அறையை விட்டு வெளியேறிய ஸ்ரீயை மீண்டும் கைக்குள் கொண்டு வர மனம் துடிக்கத் தான் செய்தது. ஆனால், மீண்டும் ஒரு முறை வெளியே சென்று, அவளை அழைத்தால், அம்மாவின் பார்வை கூர்மை

Optimized by www.ImageOptimizer.net

பெற்று விடும். இப்போதே, ஏதோ சண்டை என்பதை ஊகித்திருப்பார்கள்! அதை உறுதி செய்வது போல, தானும் என் ஏழரையை இழுத்து விடுவானோ என்ற எண்ணத்தில் புகழ் பேசாது, அலுவலகத்திற்குக் கிளம்பினான்! ஏழரைக்குப் பயந்து அவன் ஓட, பதினைந்து நான்கு கால் பாய்ச்சலில் பின்னால் ஓடி வந்து கொண்டிருந்தது! (ஏழரை *2= பதினைந்து! எப்படி நம்ம கணக்கு!)

காலை உணவிற்கென அவன் மேசைக்கு வந்தபோது, மாதங்கியும் ஸ்ரீயும் மட்டுமே அங்கே அமர்ந்திருந்தனர்.

அவனைக் கண்டதும், ஸ்ரீ முகத்தை வெளிப்படையாகவே திருப்பிக் கொள்ள, புகழ் அவளைச் சீண்டும் வண்ணம் தாயிடம் பேச்சை ஆரம்பித்தான்.

“என்னம்மா இது? செஞ்சு வச்ச சாப்பாடை நீங்க ரெண்டு பேருமே காலி பண்ணிடுவீங்க போலவே?” என அவன் ஆரம்பிக்க,

“கவலைப்படாதேடா கடோத்கஜா! உனக்கு ரெண்டு வாளி பொங்கல், இருபது பூரி, முப்பது இட்லி, ரெண்டு குண்டா சாம்பார், ஒரு சட்டி சட்னி எல்லாம் எடுத்து வச்சிட்டு, ஆளுக்கு ரெண்டு பூரியைத் தான் நாங்க எடுத்துக்கிட்டோம்!” என மாதங்கி பதில் கூறவும், ஸ்ரீயின் இதழோரத்தில் தாமரை மொட்டாய், ஓர் புன்னகை!

மையல் கொண்டவனின் மனம் அதை ரசிக்க, மூளையோ மாதங்கியின் கிண்டலை விடவும், ஸ்ரீயின் சிரிப்பில் சீறி எழுந்து, அடுத்த வாக்கியத்தில் சிக்கி சின்னா பின்னமாகியது.



“ரெண்டு பூரியா? ரெண்டே ரெண்டு பூரியா? இவளுக்கா?!” என்று ஏக ஆச்சரியம் காட்டியவன், ஸ்ரீயின் முகத்தில் கோபத்தின் கோலம் எழில் பெறவும்,

“எம்மாம் பெரிய பூரி? இந்தத் தட்டளவு இருக்குமா?” என்றான் சாப்பிடும் தட்டிக் காட்டி.

மாதங்கி அதற்கு ஏதோ கிண்டலாய் தொடங்கி, ஸ்ரீயோ கையை உதறிக் கொண்டு எழுந்து விட்டாள். (வச்ச சூனியத்துக்குப், பூ வச்சு, சூடம் காட்டுற மாதிரி இருக்கே!)

“ஹே ஸ்ரீ! என்னடா... பாதி சாப்பாட்டிலேயே எழுந்துட்டே? அவன் சும்மா விளையாட்டுக்குச் சொல்றான்...” என்று மாதங்கி, அவளது கை பற்ற,

“இட்ஸ் ஓகே, ஆன்ட்டி! ஐ அம் ஃபுல்! நீங்க சாப்பிடுங்கோ...” என்றுவிட்டு, அங்கிருந்து நகர்ந்து விட்டாள்.

“அறிவே இல்லை, புகழ் உனக்கு! எப்போ பார்த்தாலும்... அவளை சாப்பாட்டு விஷயத்திலேயே கிண்டல் பண்ணிக்கிட்டு! எதுக்குமே ஒரு அளவிருக்கு... பார்த்து நடந்துக்கோ!” என்று மாதங்கி எச்சரிக்கும் போதே, கோவர்த்தன் உணவுண்ண வந்துவிட்டார்.

முதல் வாயைப் பிட்டு வாயில் வைத்ததுமே “ஸ்ரீ எங்க? சாப்பிட்டாளா?” என அவர் வினவ, தாயும் மகனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

கோவர்த்தன் மாதங்கியைக் கண்களால் குடையவும், “நா போய்... அவளைக் கூட்டிட்டு வரேன். நீங்க சாப்பிடுங்க!” என தந்தையின் கண்ணைப் பாராது கூறிய புகழ், உணவறையை விட்டு அவசரமாய் வெளியேறினான்.

Optimized by www.ImageOptimizer.net

வெளி வராண்டாவில் இருந்த கூடை நாற்காலியில் அமர்ந்து, கையிலிருந்த புத்தகத்தை கடனே என்று புரட்டிக் கொண்டிருந்த ஸ்ரீயின் முன்னே சென்றவன், அப்படியே மண்டியிட்டு அமர்ந்தான்.

அவளது கையிலிருந்த பத்திரிகையை வாங்கிக் கீழே வைத்துவிட்டு, "ரொம்ப கோபமா?" என அவன் கேட்டதும்,

"நா ஜிம்க்குப் போறே..." என்றாள் அவள், எங்கோ பார்த்துக் கொண்டு!

கடகடவெனச் சிரித்தவன், "ஹே! நா சும்மா ஒரு விளையாட்டுக்கு..."

"எல்லாமே உனக்கு வெளாட்டு தானா?" என்றவள், பட்டென அவன் கையைத் தட்டிவிட்டு,

"உன் வீட்ல நான் சாப்பிட மாட்டே(ன்)..." என்றாள் முட்டியிருந்த கால்களை சடாரென தரையில் ஊன்றி.

அவள் கால்களை நாற்காலியிலிருந்து எடுத்த வேகத்தில், எதிரே இருந்த புகழ் தடுமாறி விழப் போக, ஒரு நிமிடம் திகைத்தவள், மறு நிமிடமே தலையைச் சிலுப்பிக் கொண்டு "டாட் கிட்ட சொல்லி... மணி அனுப்பச் சொல்றே(ன்)... அதில சாப்பிடுதே(ன்)... ம்ஹூம்... இல்ல... நானே வொர்க் போறே(ன்)... மாம்மாகிட்ட கேட்குறே(ன்)" என்றவாறே, உள்பக்கம் திரும்பி நடக்க ஆரம்பித்தாள்.

தடுமாறிய அதிர்ச்சியை விடவும், ஸ்ரீயின் முகத்தில் தாண்டவமாடிய தன்மானம் புகழைப் பெரிதாய் பாதித்தது! அதை விடவும், விஷயம் உணவு மேசை



வரைக்கும் சென்று, வேலைக்காரர் வழியாக காது - மூக்கு வைத்து வெளியே பரவி விடும் என்ற பயத்தில், வேகமாய் அவள் பின்னே ஓடியவன், அவளைப் பிடித்து நிறுத்தி, வலுக்கட்டாயமாய் அவளது கண்ணோடு கண் நோக்கி, "லூசு! லூசு! என்ன செய்றே? இப்போ எதுக்கு அப்பாக்கிட்ட போறே? இதென்ன ஸ்கூல்லா... இந்தப் பையன் என்னைக் கிள்ளிட்டான் மிஸ்ன்னு கம்ப்ளைன்ட் லெட்டர் வாசிக்க? கொஞ்சம் கூட அறிவில்லாம... பெரிய அமெரிக்கால வளர்ந்தவன்னு பேரு தான்... கொஞ்சம் கூட மெச்சூரிட்டியே கிடையாது! ஒரு கிண்டலை... கிண்டலா எடுத்துக்க முடியாதா? அதை விட்டுட்டு... இவங்க அப்பாகிட்ட பணம் கேட்கிறாளாம்... எங்க அப்பாகிட்ட வேலை கேட்கிறாளாம்... என்னை என்ன பொண்டாட்டியை வச்சு பிழைக்கத் தெரியாத வக்கில்லாதவன்னு நினைச்சியா?" என்று கீழ் குரலில் உறுமியபோது, அவனுள்ளிருந்த ஆண்மை சிலிர்த்துக் கொண்டு நின்றது.

எப்போதும் போல்... சரியாகச் சொல்லப் போனால்... எல்லா கதைகளிலும் வருவது போல், சீரிய ஆண்மைக்கு சிறைபடும் பெண்மையாய் அல்லாமல், இங்கே பெண்மையும் சீறி நின்றது.

"இந்த ரப்பிஷ்... மேல் சாவனிசம் டயலாக்ஸ் எல்லாம் வேணாம்! ரொம்ப சினிமாடிக்கா இருக்கு! உன்னை ஒரு ஜோவியல் பெர்சன்னு நினைச்சே(ன்)... பட்... வைப் கிண்டல் பண்றதா ஜோவியல்நஸ் நினைச்சிருக்கே... அவா எப்படி ஃபீல் பண்ணுவா நீ திங்க் பண்ணவே இல்ல... மேல் சாவனிஸ்ட்!" என்று அவனுக்கு மேல் வேகமாய் பதிலடி கொடுத்துவிட்டு, அவனை உதறிக்

Optimized by www.ImageOptimizer.net

கொண்டு நகர்ந்தவள், அடுத்து சென்றது உணவு மேசைக்கு. (சபாஷ், சரியான போட்டி!)

பேசிவிட்டுச் செல்லும் மனைவியையே முறைத்துக் கொண்டிருந்தவன், தந்தையிடம் அவன் பேசுவதைக் கண்டதும் ''ஆஹா! போட்டுக் கொடுத்துடாதடி, பரட்டைக்கு தங்கச்சி! என்னைய போட்டுப் பார்த்திடு வாங்க!'' என்ற மைண்ட் வாய்ஸ் பின்னணியில் ஒலிக்க, அங்கே விரைந்தான். (அவ பரட்டைன்னா... நீ என்ன சப்பாணியா?)

''அவன் சொல்றதையெல்லாம் மனசில வச்சுக்கக் கூடாது, ஸ்ரீ! லீவ் இட்!'' என்று கோவர்த்தனும்,

''அவன் எப்பவுமே இப்படித்தான்... ஏதாவது உளறிட்டே இருப்பான்!'' என்று மாதங்கியும் பேசவும்,

''ஆஹா! அச்சு பிசகாம எல்லாத்தையும் ஒப்பிச்சிட்டா போலவே இன்னைக்கு உட்கார வச்சு, காதுல ஓட்டை விழுகுற அளவுக்கு அட்வைஸ் பண்ணப் போறாங்க! ஐயோ, கடவுளே!'' என்று பீதியில் உறைந்தே போனான், புகழ்.

முழித்துக் கொண்டு நின்ற புகழை ஒரு முறை பார்த்தவள் ''இல்ல அத்தை! எனக்கு நிஜமாவே வேணாம்... பசிக்குது இல்ல...'' என்றுவிட்டு,

''அத்தை... நா வெளிய போவணும்... கார் எடுத்துக்கவா?'' என்றாள் மாதங்கியிடம்.

''ஹே, இதென்னடா என்கிட்டே பெர்மிஷன் கேட்டுட்டு? எப்போ வேணுமோ... எடுத்துக்கோ! நீயே டிரைவ் பண்றியா? இல்ல... பாண்டியனை வரச் சொல்லவா?''



''இல்ல... அது உங்க கார் தானே? உங்ககிட்ட கேட்கணும் தானே?'' என்றவள்,

''நானே டிரைவ் பண்ணுவே(ன்)! பை!'' எனக் கூறி, பெரியவர் இருவருக்கும் கை ஆட்டிவிட்டு, நகர்ந்தாள்.

கடந்த ஒரு சில மணி நேரங்களில், அவளுடன் ஏகப்பட்ட சண்டைகள் போட்டிருந்தபோதும், அவள் தனியாக வண்டி ஓட்டிச் செல்வதை புகழால் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை.

அவள் தங்கள் அறைக்குள் நுழைவதைப் பார்த்தவன், உடை மாற்றுவதற்காக இருக்கும் என்ற ஊகத்தில், தானும் உள்ளே விரைந்தான். ''புகழ்... சாப்பிடும்போது...'' என்று ஆரம்பித்த தந்தையை சட்டையே செய்யாமல் என்பது, இங்கே ஒரு கொசுறு தகவல்!

''பேபி... டவுன்குள்ளேயா கார் ஓட்டிட்டுப் போகப் போறே...'' என்று வினவியவாறே வந்த கணவனுக்குப் பதிலே சொல்லாமல், தன் துணிகள் இருந்த அலமாரியினுள் தலையை விட்டிருந்தாள் ஸ்ரீலஷ்மி.

''எங்க கடைக்கா? ஷாப்பிங்கா? காலை நேரத்தில வேணாமே லட்டு! நா சாயங்காலம் சீக்கிரம் வந்து கூட்டிட்டுப் போகட்டுமா? ப்ளீஸ்டா...'' என அவன் பரபரத்துக் கொண்டே இருக்க, ஸ்ரீ அதி மும்முரமாய் தன் கருப்பு ஜீன்ஸ் பேண்ட்டுக்கும் நீல நிற டாப்ஸ்க்கும் பொருத்தம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''பேபி! நான் கேட்டுட்டே இருக்கேனே?'' என புகழ் பொறுமையா இழுக்க, அவனைத் தலை நிமிர்த்திப் பார்த்தவள், ''எனக்கு இப்போ போணும்...'' என்றாள் பதில் போல்.

Optimized by www.ImageOptimizer.net

"சரி... அப்போ பாண்டியனைக் கூட்டிட்டுப் போ! நீ தனியா டிரைவ் பண்ண வேண்டாம்! பயங்கர டிராபிக்கா இருக்கும்... லட்டு! அதான் சொல்றேன்... என்னடா? பாண்டியனோட போறியா?"

"ம்ஹூம். நா தான் டிரைவ் பண்ணுவே(ன்). ஐ ஹேவ் இன்டர்நேஷனல் லைசென்ஸ்!" என்றவளின் குரலில், ஏகப்பட்ட பெருமிதம்.

நெற்றியை அழுந்தத் தேய்த்துவிட்டுக் கொண்ட புகழ், ஓர் அவசரப் பெருமூச்சுடன் விளக்க ஆரம்பித்தான்.

"ஆத்தா! பரதேவதை! உன்னைக் குறையே சொல்லலைடி! அமெரிக்கா மாதிரி, இங்க யாருமே ஒழுங்கா வண்டி ஓட்ட மாட்டாங்க. அதுவும், ஆபீஸ் டைம் வேற... எங்கடா ஒரு சந்து இடம் கிடைக்கும்... புகுந்து போகலாம்ன்னு தான் பார்ப்பாங்க. நீ சரியா இருந்தாலும்... ரோட்ல ஓட்டுற மத்தவன் சரியா இருக்க மாட்டான்... அதான் சொல்றேன்!" என அவன் கூறி முடிக்கையில்,

"ஹோ! அதா நானு(ம்) சொல்றே(ன்), பேசிக் டிராபிக் ரூல்ஸ் கூட ஃபாலோ பண்ணாத இந்தியால ஏன் இருக்கணும்? கம் டு அமெரிக்கா!" என்றாள் அவன் மனையாள்.

அவளது பேச்சின் பாதிப்பாய், தன் முகத்திற்கு நேரே தன் ஆட்காட்டி விரலை இட்டுச் சென்ற புகழ், "உனக்குத் தேவையாடா இது? இல்ல, உனக்குத் தேவையான்னு கேட்கிறேன்?! ஆசையா கட்டிட்டு வந்த பொண்டாட்டி ஆச்சே... கார் ஓட்டிட்டுப் போறேன் பேர்வழின்னு எங்கேயாவது விழுந்து வாரப் போறான்னு சொல்ல வந்தே இல்ல... உனக்கு இதுவும் வேணும்! இன்னமும் வேணும்?!



மரியாதையா வாயை மூடிட்டு, ஆபீஸ் கிளம்புற வழியைப் பாரு! அவங்க அவங்களுக்கு... அவங்க அவங்க உடம்பு மேல அக்கறை இருக்கும்! உனக்கு ஏன் பூத்து வடியுது!" என்று தனக்குத்தானே கேள்வி கேட்டதோடு நில்லாமல், தன் அலமாரியைத் திறந்து, அலுவலகக் கோப்புகளை எடுத்து வைக்கத் தொடங்கினான்.

அவனது பேச்சில் சிரிப்பு வந்தபோதும், அவனது அக்கறையில் விரிந்த அதரங்களை விரித்து "புகல்... நா சேஃபா இருப்பே(ன்)... நோ வொர்ரீஸ்!" என்றாள் ஸ்ரீ, மென்னகையுடன்.

அதற்குப் பதிலாய் "நா ஒண்ணுமே சொல்லலைப்பா! நீ போயிட்டு வா!" என்ற புகழ், இரு கைகளாலும் வாயை இறுக மூடிக் கொண்டான்.

அடக்க மாட்டாத சிரிப்புடன், உடை மாற்றிக் கிளம்பியவள், மேஜையில் அமர்ந்து லேப்டாப்பில் எதையோ ஆராய்ந்து கொண்டிருந்த புகழின் பின்னே சென்று, அவனைக் கழுத்தோடு அணைத்து "பை, மை மேன்!" என்றாள் தாடையில் லேசாய் இதழ் பதித்து.

லண்டனிலிருந்து வந்த ஒரு வியாபார ஈமெயிலுக்குப் பதில் அனுப்பிக் கொண்டிருந்தவன், அதைப் பாதியிலேயே விட முடியாத காரணத்தினால், தன்னை வளைத்திருந்த அவளது கரங்களைப் பற்றி உதட்டில் ஒற்றி, "பை லட்டு! பார்த்துப் போயிட்டு வா! அங்க ரீச் ஆனதும் எனக்கு ஒரு போன் மட்டும் பண்ணிச் சொல்லிடு! ப்ளீஸ்!" என்றான்.

"கண்டிப்பா!" என்று ஆங்கிலத்தில் மொழிந்தவள்,

"நா எங்க போறே(ன்) கேட்கவே இல்ல?" என்றாள் கேள்வியாக.

Optimized by www.ImageOptimizer.net

''எங்க போவ? ஒண்ணு கடைக்குப் போவ... இங்க இருக்க கடை எதுவும் உனக்குப் பிடிச்ச மாதிரி இல்லை... அதனால, இன்னைக்குக் காலையில ஜிம் போறேன்னு உளறிட்டு... ம்ம்ம்... சொல்லிட்டு இருந்தியே... அதை விசாரிக்கப் போவே! போ... போயிட்டு, பத்திரமா வா!'' என்றான் அவன், கணினியிலிருந்து கண்ணை எடுக்காமலே!

கூடவே, ''உன் மேல எனக்கு அக்கறை இருக்கு! ஆனா, சந்தேகம் இல்லை!'' என்றான் ஆங்கிலத்தில், தெளிவாக! (நல்ல பையன்!)

''பெர்ஃபெக்ட்!'' என்று அவனைச் சிலாகித்தவள், அழுத்தமாய் அவனுக்கு ஓர் முத்தம் பதித்துவிட்டு, ''ஐ லவ் யூ!'' என்றாள் கன்னத்திலிருந்து உதட்டைப் பிரிக்காமலே!

''ம்ம். வேணாம்! மூடைக் கிளப்பாதே! இந்த கஸ்டமர் வேற... இது நொல்லை... அது நொட்டைன்னு படுத்திட்டு இருக்கான்... உன் நினைப்பில அவனுக்குக் கண்டமேனிக்கு ஏதாவது மெயில் அனுப்பிடப் போறேன்! முதல்ல... நீ கிளம்பு!'' என அவளை விலக்கி நிறுத்தியவனின் முகத்தில், சன்னமாய் ஏக்கம்.

அதைப் பார்த்து, ஆனந்தமாய் சிரித்துவிட்டு, அவள் நகர, அதைத் தாங்க முடியாதவனாய், வேகமாய் அவள் கை பற்றி இழுத்து, தன் மடி மீது போட்டுக் கொண்டு, முத்தங்களின் சத்தத்தில் அந்த அறையை நிரப்பினான் அவன்.

''ஷ்... லேட் ஆச்சு மேன்! விடு!'' என்று ஒருவாறாக அவனிடமிருந்து விடுபட்டு எழுந்த ஸ்ரீலஷ்மி, தன்



தக்காளிப்பழ இடுப்பை விட்டு சற்றே மேலேறி, தாழம்பூ மேனியை வெளிக்காட்டிக் கொண்டிருந்த டி-ஷர்ட்டை இழுத்து விட்டாள்.

அப்போதுதான், புகழ் அவளது உடையைக் கவனித்தான். உடம்போடு உறவாடிய அந்த டி-ஷர்ட்டின் கழுத்து, அவளது அபாய வளைவுகளை மறைத்திருந்தது... ந்தது... தது... து! ஆனால்... சற்றே குனிந்தாலும், சிக்கல்தான்! அதே போல், இடுப்பும்! பப்பாளிப் பழமாய் வெளியே பிரகாசித்துக் கொண்டிருந்தது.

ஆபாசம் என்று கூற முடியாது! அதி நாகரீகம்!

அமெரிக்க நாகரீகம் என்றும் வரையறுக்க முடியாது! இந்தியாவின் தலைநகரிலும்... வர்த்தக மாநகரிலும்... ஏன் சென்னையில் கூட, இந்த உடை சர்வ சாதாரணமாய் போய் விட்டது. ஆனால், தூத்துக்குடியில்! பாண்ட் - ஷர்ட் போடும் பெண்கள் இருக்கிறார்கள் தான்... இலக்கியா உட்பட! ஆனால் அது மேல்மட்ட விழாக்களில் மட்டுமே நடந்தேறும்!

நெஞ்சம் குறுகுறுத்தது புகழிற்கு! சொல்ல வாய் தான் எழவில்லை!

ஏற்கனவே காலையிலிருந்து சண்டை மேல் சண்டை! நடுவே ஒரு சொதப்பல்! அதற்கு வேறு, ஒரு ஆப்பு காத்திருக்கிறது! இந்த லட்சணத்தில், உடையைக் குறை சொன்னால், பெட்டியைக் கட்டிக் கொண்டு அம்மா வீடு சென்று விடுவாள்! ''நீ முன்னாலே போனா... நா பின்னாலே வாரேன் என்று பாட, அவள் அம்மா வீடு என்ன பக்கத்திலா இருக்கிறது? அமெரிக்காவில்! வேண்டாம் சாமி! வேண்டாம்! இப்போது என்ன? அவன் செல்லு

Optimized by www.ImageOptimizer.net

ஜிம்மில் போய் விசாரிக்கப் போகிறாள்... உடனே விடு திரும்பப் போகிறாள்... அவ்வளவு தானே?! போய் வரட்டும்! என்று உள்ளம் உரக்கக் குரல் கொடுக்க, வாயைக் கப்சிப்பென்று மூடிக் கொண்டான்.

ஆனால், ஸ்ரீ விடவில்லை.

''என்னா மேன்? ஃபேஸ் ஒரு மாதிரி இருக்கு... என்னா மேட்டர்!'' என்று அவள் குடைய,

''ஒண்ணுமில்லையே! என்னோட லட்டு பேபியை விட்டு எப்படி ஆபீஸ்ல இருக்கப் போறோம்ன்னு நினைச்சேன்... அவ்வளவு தான்! வேற ஒண்ணும்ம்ம்ம்மே இல்லை!'' என்றான் வேகமாய். அவன் ''ஒண்ணும்மே இல்லை''யில் கொடுத்த அழுத்தத்தில், ஸ்ரீ சந்தேகப் பார்வையின் தாக்கத்தை அதிகரிக்க,

''நிஜம் பேபி! இந்த ஆப்பிள் கன்னத்தைக் கிள்ளாம... இந்த ஸ்ட்ராபெர்ரி உதட்டை...''

''ஹே... ஸ்டாப்! ஸ்டாப்! சும்மா ஆக்ட் பண்ணாதே! நீ தானே... நம்ம ரெண்டு பேர் மிடில்ல லவ் இல்ல... ஜஸ்ட் இன்ஃபாக்சுவேசன் சொன்னே... இப்போ என்ன? லவ் வர... வந்த உடனே இது மாதிரி பேசு!''

''ஆஹா! ஆப்பு இப்பவே ரெடி ஆகுது போலவே! அசராதடா! சமாளி!'' என்று மைண்ட் வாய்ஸ் ஓங்கி ஒலிக்க,

''ஹே சும்மா சொல்லாதே! இப்போ மட்டும் என் மல விழுந்து...''

''ஹான்... ஹான்... அது... அது... தட்... தட்...''

''யா... யா... தட் தான்... தட்டே தான்...''



''நா மறந்துட்ட(ன்)... அப்பறம்... அலெர்ட்டா இருப்பே(ன்)...''

''அடக்கடவுளே! மறந்து போயிட்டாளா? நாம தான் சொந்த செலவில சூனியம் வச்சுட்டோமா? திருந்தவே மாட்டியாடா நீயி!'' என்று மைண்ட் வாய்ஸ் வைய,

''சரி அதை விடு! அவளை தாஜா பண்ணு!'' என்று மண்டையில் ஓங்கி அடித்தது.

''என்ன பேபி? நா ஏதோ தெரியாம சொல்லிட்டேன்... நான் உன்னோட செல்லப் புருஷன் தானே! அதுவும் ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு ஒரே ஒரு புருஷன்! உனக்குப் பிடிச்ச புக்கள் ஹிந்தி வேற! ப்ளீஸ் ப்ளீஸ்!''

''போடா! நா போறே(ன்)... பை... பை!'' - அவனுக்குப் பழிப்புக் காட்டியவாறே, ஓடிவிட்டாள் ஸ்ரீலஷ்மி!



# 16

ஸ்ரீ கிளம்பி பத்து நிமிடங்களில் புகழும் கிளம்பி விட்டான்.

காரின் ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்தவன், கோவர்த் தன் காரில் ஏறிய பிறகும் வண்டியை எடுக்காமலே இருக்க,

''என்ன புகழ்? என்ன யோசனை?'' என்றார் தந்தை, அவனது தோள் தொட்டு.

Optimized by www.ImageOptimizer.net

''ஒன்னு...'' என அவன் ஆரம்பிக்கையிலேயே,

''வேறென்ன யோசனை? இன்னைக்கு நைட்... எந்த வாக்கில ஸ்ரீ காலில விழலாம்ன்னு யோசிச்சிட்டு இருப்பான்!'' எனக் கூறி நடுவே புகுந்த மாதங்கி, ''எப்பவுமே, கிழக்க பார்த்து விழறது தான் நல்லதுடா ராஜா!'' என்றார் கை தேர்ந்த சாஸ்திரிகள் போல. (நல்ல பழக்கமா சொல்லிக் கொடுக்குறீங்க! நல்ல்ல்ல்ல்ல அம்மா!)

காரின் வெளிப்புறம், புகழின் அருகே நின்றிருந்த தாயை மகன் முறைக்கவும், ''கல்யாணம் பண்ணினாலே இது ஒரு தொல்லை! ச்சச்ச பாவம் புள்ள!'' என்றார் அவர் மகனின் நெற்றி முடி கோதி. (மாதங்கி மேடம், நீங்க நல்லவரா? கெட்டவரா?)

''உங்களுக்கு என்ன வேணும் இப்போ? நானும் ஸ்ரீயும் சமாதானம் ஆகிட்டோமான்னு தெரியணும். அவ்வளவுதானே? அதுக்கு எதுக்கு என் இமேஜை டேமேஜ் பண்றீங்க?'' என புகழ் புருவம் உயர்த்த,

''ஹோ! உனக்கு இமேஜ்ன்னு ஒண்ணு இருக்கோ?! மறந்துட்டேன் பாரேன்! மில்க் சார் நீங்களாவது ஞாபகப்படுத்தக்கூடாது?'' என்று வேண்டுமென்றே வியப்பின் உச்சிக்கு சென்று வந்தவர்,

கோவர்த்தனின் ''அவன்கிட்ட அடி தான் வாங்கப் போற... நீ!'' என்ற எச்சரிக்கையையும்,

புகழின் ''அம்மா...'' என்ற பல் கடிப்பையும் உதாசீனப்படுத்தி,

''ஆனாலும், என் புள்ளைக்கு எம்புட்டு அறிவு பார்த்தீங்களா? நா மனசில நினைச்சதை அப்படியே சொல்லிட்டான்! ஆனா என்ன... இந்த அறிவு அவனோட



...டை பிடிக்கிறதுக்கு முன்னாடியே வேலை செஞ்சிருக்கலாம்... ப்ச்... பாவம்! எப்பவுமே லேட் பிக்-அப் தான்! அவனும் தான் என்ன செய்வான்... மில்க் சாருக்கு எப்பவா பிறந்ததில இது ஒரு இலவச இணைப்பு!'' என்றார் மகனையும், கணவனையும் ஒருங்கே கிண்டல் செய்து.

''லேட் பிக்-அப் அட்லீஸ்ட் பரவாயில்லைம்மா. உங்களை மாதிரி மூளை ஒரேடியா படுத்துக்காம இருக்கேன்னு சந்தோஷப்படுங்க!'' என்று அவருக்கு பதில் கொடுத்தவன்,

''நாங்க கிளம்புறோம்! இங்க நின்னா... என்னோட தாத்தாவோட பேரையும் டேமேஜ் பண்ணிடுவீங்க!'' என்று ஒரே அழுத்தத்தில், காரை வீட்டை விட்டு வெளியே எடுத்தான்.

ஆனால், அப்படியே பறந்து விடாமல், வீட்டின் வெளியே காரை நிறுத்தி, ஹாரனை ஓங்கி அடித்தான். கூடவே, ''அம்மா... அம்ம்மா...'' என்ற காட்டுக் கூச்சல் வேறு.

ஆனானப்பட்ட மாதங்கியே, ''என்ன என்ன?'' என்று அலறி அடித்துக் கொண்டு வரும் அளவிற்கு, கிரீச்சிட்டு நின்றது வண்டி.

மாதங்கி வெளி வாசலுக்கு விரைவதைக், கண்ணாடியில் பார்த்தவன் ''என் பொண்டாட்டி... காலையிலேயும் ஒழுங்கா சாப்பிடலை. இப்பவும் தூத்துக்குடியில அடிக்கிற வெயில் எல்லாத்தையும் தலையில வாங்கிட்டு வந்து நிப்பா... அதனால... அவ வந்ததும் நல்லதா ஒரு ஜூஸ் கொடுங்க!'' என்றான் போலி அதிகார பாணியில். (என்ன கரிசனம்! என்ன கரிசனம்!)

Optimized by www.ImageOptimizer.net

மாதங்கி, இடுப்பில் கை வைத்து முறைப்பது தெரிந்ததும், வேண்டுமென்றே தொண்டையைக் கனைத்துக் கொண்டு ''எப்பவும், தர்பூசணி ஜூஸ்ங்கிற பேர்ல ஒரு சிகப்பு கலர் தண்ணி கொடுப்பீங்களே... அது வேண்டாம்! பாவம்... அது ஒரு வாய் செத்த புள்ள! ஒண்ணும் சொல்லாது! உருப்படியா ஒரு ஜூஸ் கொடுத்திட்டு... நல்ல சாப்பாடா போடுங்க!'' என்றான் மேலும்.

அதோடவாவது நிறுத்தி இருக்கலாம்! ஆனால், குசும்பு யாரை விட்டது! அதுவும், சற்று முன்னே தாயிடம் மூக்குடைப்பட்டது நெஞ்சில் பச்சை மரமாய் நிழலாடிக் கொண்டிருக்க, வாய் துடுக்கெடுத்துப் பேசினான் மைந்தன்.

''சிக்கன்னா என் செல்லத்துக்கு ரொம்பப் பிடிக்கும்... அதை செய்ற வழியைப் பாருங்க... இங்க நின்னு வெட்டியா முறைச்சிட்டு இருக்காம!'' என்றவன், மாதங்கி பொறுக்க மாட்டாமல் கையை ஓங்கிக் கொண்டு வரவும், காலையில் ஸ்ரீ அவனிடம் காட்டிய பழிப்பை, தாயிடம் காட்டிவிட்டு, சிட்டென சிறகடித்தான் மகிழுந்தில்.

அலுவலகம் சென்றதும், லண்டனில் இருந்து வந்த மின்னஞ்சலைப் பற்றிய ஒரு கலந்தாய்விற்காக சென்று விட்டான், புகழ்.

கலந்தாய்வு ஆரம்பித்து சில நிமிடங்களிலேயே, ஸ்ரீயின் அழைப்பு அவனது கைப்பேசியை நிறைத்தது.

''ஒரு நிமிடம்'' என குழுமி இருந்தவர்களிடம் கூறிவிட்டு, அழைப்பை எடுத்தவன்,



''வந்துட்டியா ஸ்ரீ?'' என்றான் வேகமாக.

''ஹ்ம்ம். யா!'' என்ற அவளது பதில் வந்த வினாடி,

''நா ஒரு மீட்டிங்ல இருக்கேன். அப்புறம் கூப்பிடு றேன். பை!'' என்று அழைப்பைத் துண்டித்தும் விட் டான்.

''நீ எப்படி போனை வைக்கலாம்?'' என்று சண்டை பிடிக்கும் அளவிற்கு சிறு பிள்ளைத் தனம் இல்லாதவள் என்பதால், சன்னமாய் தோளைக் குலுக்கிக் கொண்டு, உடற் பயிற்சி நிலையத்திற்குள் நுழைந்தாள், ஸ்ரீலஷ்மி.

தனக்குத் தேவையான தகவல்களை சேகரித்துக் கொண்டவள், வெளியே வந்தபோது வீட்டை விட்டுக் கிளம்பி அரை மணி நேரம் தான் ஆகியிருந்தது

உடனே வீட்டிற்குப் போகப் பிடிக்காமல், மாதங்கி அறிமுகப் படுத்தியிருந்த அழகு நிலையத்திற்குச் செல்லலாம் என்ற எண்ணம் தோன்றியது ஸ்ரீக்கு.

தோன்றிய எண்ணத்தை நிறைவேற்றுவதில் என்ன தடை? முதல் வேலையாய், மாதங்கிக்கு அழைத்தவள், அழகு நிலையத்திற்கு எப்படிச் செல்ல வேண்டும் என்று கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

''ஜிம்ல இருந்து... லெப்ட் எடுத்து, செகண்ட் ரைட் எடுத்தா வி.ஓ.சி. ரோடு வந்திடும்டா. அதிலேயே நேரா வா... மெயின் ரோடு கண்ணா... பார்த்து வரணும் சரியா? அப்புறம், ஒரு ரெண்டு கிலோ மீட்டர் தாண்டி னதும் ஒரு சிலை வரும்... அதில லெப்ட் எடுக்கணும். அப்படியே நேரா வந்து, மூணாவது... ம்ஹூம் நாலாவது ரைட் எடுத்து, உடனே ஒரு லெப்ட் எடு...'' (ரூட்

Optimized by www.ImageOptimizer.net

சொல்றீங்களா? இல்ல, நெளிக்கோலம் எதுவும் போடறீங்களா?)

''அத்தை... ஸ்டாப் ஸ்டாப் ஸ்டாப்! திஸ் ஒன்... நம்ம வீட்டுக்கு லீட் பண்ற ரூட் தான?''

''ஆமா... ஸ்ரீ!''

''ஹோ காட்! நா பயந்துட்டே(ன்)! பார்லர் நம்ம ஹவுஸ்க்கு நியர்பையா?''

''ஆமாடா! நம்ம வீட்டில இருந்து ரெண்டு தெரு தள்ளி!''

''வாட் இஸ் தெரு?''

''ஹஹஹா! தெருன்னா ஸ்ட்ரீட்! ஸ்மால் ரோடு!''

''ஹோ! ஓகே ஓகே! சொல்ங்க அத்தை... எப்படி பார்லர் போணும்?''

''நம்ம வீட்டுக்கு வந்திடு. நா பாண்டியனைக் கூட்டிப் போகச் சொல்றேன். நீயா அலைய வேணாம்!''

''இட்ஸ் ஓகே அத்தை! நானே போவே(ன்)!''

''சொன்னா கேட்கணும்! நான் உன்னோட ஒரே மாமியார் தானே? ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு ஒத்தை மாமியார் தானே? கேட்கக் கூடாதா?''

''ஹஹஹா! ஸோ ஃபன்னி புகள் ஆல்சோ உங்களை மாதிரி பேசினான்...''

''நூலைப் போல சேலை! தாயைப் போல பிள்ளை!''

''அப்படின்னா என்ன?''

''நீ வீட்டுக்கு வா! ஜூஸ் குடிச்சிட்டே விளக்கம் சொல்றேன்! உன் புருஷன் வேற... என் பொண்டாட்



டிக்கு நல்லல்லல்ல ஜூஸா கொடுங்கன்னு ஆர்டர் போட்டுட்டுப் போயிருக்கான். அதை நிறைவேற்ற லைன்னா மாறு கால், மாறு கை வாங்கிடப் போறான். வந்திடும்மா!'' என அவர் கெஞ்சவும், அடக்க மாட்டாமல் சிரித்த ஸ்ரீ, காரியக்காரியாக ''வாட் இஸ் மாறு கால்... மாறு கை? இஸ் இட் லெப்ட் லெக் அண்ட் ரைட் ஹான்ட்?'' என்றாள். (தமிழ் புலவி!)

''அப்பா... என்ன ஒரு தமிழ் ஞானம்! தேறிட்டேடா ஸ்ரீமா!'' என்று சிலாகித்த மாதங்கி, ''நீ முதல்ல வீட்டுக்கு வா! தமிழ் டியூஷன் எடுக்கிறேன்!'' என்றார்.

''ஓகே அத்தை!'' என்று ஸ்ரீ, அழைப்பை வைக்கும் முன்னர்.

''அப்புறம், ஒரு முக்கியமான விஷயம்!'' என மாதங்கி கொக்கிப் போட்டு நிறுத்தவும்,

''என்ன அத்தை?'' என்றாள் ஸ்ரீ, கவனமாய்.

''டியூஷன் ஃபீஸ் ஒழுங்கா கட்டிடணும் சொல்லிட்டேன்! ஏழைப்பட்ட டீச்சர்... உங்க ஓட்டைத் தமிழை நம்பித்தான் பொழப்பே ஓடுது!'' என்றார் மிகவும் நயந்த குரலில்.

''ஹோ மை காட்!'' என்று கண்ணில் நீர் வரச் சிரித்தவள்,

''என் ஹஸ்பண்ட், என் மாமாகிட்ட மணி... ஹ்ம்ம் நாட் டைம்... ப... பண..ம் கேட்பா(ன்)... என் மாமா என் அத்தைகிட்ட தா ஆல் பணம் இருக்கு சொல்லி... அத்தை கிட்ட கேட்பாங்க... அவா கொடுத்ததும் உங்களுக்குக் கொடுக்கிறே(ன்)'' என்றாள் விஷமமாய்.

Optimized by www.ImageOptimizer.net

அதற்குப் பதிலாய் ''என்ன ஒரு வில்லத்தனம்?'' என்று கண்ணை உருட்டிய மாதங்கி, ''சரி... சீக்கிரம் வா!'' என்று அழைப்பை வைத்தார். சரி...

உதட்டில் உறைந்த புன்னகையுடன் காரை எடுத்த ஸ்ரீலஷ்மி, அந்த இடத்தை விட்டு வி.ஓ.சி. சாலை எனப்படும் பிரதான சாலை வரையிலும் எந்த பிரச்சனையுமில்லாமல் வந்து சேர்ந்தாள்.

வாகனங்கள் நிரம்பி வழிந்தபோதும், லாவகமாகவே வண்டியைச் செலுத்திக்கொண்டு வந்தவளுக்கு, இடைவெளியே இல்லாமல் நெருக்கி அடித்து நின்று கொண்டிருந்த வாகனங்களைக் காண்கையில் மிகவும் வியப்பாக இருந்தது! அதைவிட வியப்பு, அங்கிருந்த சிக்னலில் நின்றிருந்த காவல்காரர் அதைக் கண்டு கொள்ளாமல் இருந்தது! கடந்த ஒரு மாதமாக பார்த்துப் பழகியதுதான் என்றாலும், ஒரோர் முறை வெளியே வரும்போதும், ஒரு விதமான அருவை நெஞ்சில் படர்வதை அவளால் தவிர்க்க முடிவதில்லை! கூடவே, புகழை எப்போதடா அமெரிக்கா கூட்டிச் செல்வோம் என்ற எண்ணம் இன்னமும் அழுத்தமான பதிவையும் தவிர்க்க முடிவதில்லை!

தாங்கள் அமெரிக்கா பறக்கும் நாளை கற்பனை செய்து கொண்டே, சிக்னலில் நின்றிருந்தவள், பச்சை விளக்கு எரிந்ததும் அனிச்சையாய் வண்டியைக் கிளப்பினாள். அவள் கிளப்பவில்லை என்றாலும், பின்னால் இருப்பவர்கள் ''ஹார்ன்'' அடித்தே அவளைக் கிளப்பி இருப்பார்கள்! அவசரத்திற்குப் பிறந்தவர்கள்!

சரியாக, சிக்னலில் இருந்து ஒரு மீட்டர் தூரம் வந்திருப்பாள்.



இடது பக்க தெருவிலிருந்து ஒரு இரு சக்கர வாகனம், எந்தவிதக் குறியீடுமில்லாமல் பிரதான சாலைக்குள் ஏற, அதே நேரம் ஸ்ரீயின் வலதுபுறம் சென்று கொண்டிருந்த ஆட்டோ, கையசைப்பிலோ திருப்பு காட்டியிலோ தான் இடது புறம் நகரப் போகிறேன் என்பதை அறிவிக்காமல், சட்டென இடது புறம் நகர, ஸ்ரீ தடுமாறிப் போனாள். (ரைட்ல இண்டிகேட்டர் போட்டு, லெப்ட்ல கை காட்டி, நேரா போறதுங்கிறது இது தானோ?)

ஆனால், கார் ஓட்டுவதில் அவளுக்கிருந்த அனுபவமோ அல்லது அனிச்சை செயலோ, வினாடி தாமதிக்காமல் வண்டியை அவள் நிறுத்தியபோதும், ஆட்டோவின் பின்னால் மோதி நின்றது வண்டி!

தொடர் நிகழ்வுகளாய், ஆட்டோ தன் முன்னே சென்று கொண்டிருந்த இரு சக்கர வாகனத்தில் இடித்து நிற்க,

ஸ்ரீயின் வண்டிக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த ஒரு வாடகை கார், அவர்களது வண்டியின் பின்புறத்தை பலமாய் இடித்து நின்றது.

இருக்கை வார் (சீட் பெல்ட்) அணிந்திருந்ததால், ஸ்ரீக்கு அடி எதுவும் படவில்லை.

ஆனால், பின்னிருந்த வண்டியின் டிரைவர் ஸ்டீரிங் மீது கவிழ்ந்திருந்தார்.

சிக்னல் அருகே என்பதால், போக்குவரத்துக் காவலர் உடனே விரைந்து விட்டார்.

அதற்குள், ஆட்டோக்காரரும், இரு சக்கர மகாப்பிரபுவும் ஸ்ரீயின் கார் அருகே வந்துவிட்டனர்.

Optimized by www.ImageOptimizer.net

தன் மீது எந்தத் தப்புமில்லை என்ற தைரியத்தில் இருந்த ஸ்ரீலஷ்மி, கீழே இறங்கியது தான் தாமதம், அவர்களது பேச்சு நாராசமாய் தொடர்ந்தது!

''என்னம்மா கண்ணை எங்க வச்சிட்டு வர?''

''கார்ல வந்தா... பெரிய மகாராணின்னு நினைப்போ? அறிவில்லை?''

''இதென்ன உங்க அப்பன் கட்டிவிட்ட ரோடா? ஹயா வர? ரோட்டுல மத்தவனும் வருவான்கிற எண்ணமே இல்லையா?''

''பெரிய வீட்டுப் பொண்ணு போல?! இப்ப தான் கார் ஓட்டிப் பழகி இருக்கும்... உடனே காரை கொடுத்து விட்டுட்டானுங்க! என்ன நடந்தாலும் பணத்தை வச்சு வாயை அடிச்சிடலாம்ன்னு! பணத்திமிரு!''

''போட்டிருக்க டிரெஸ்ஸை பாரு... அமெரிக்கால பொறந்து வளந்தது கணக்கா ரொம்பத் தான் அல்டாப்பு!''

''பார்வை கூட அப்படித் தானே அண்ணே இருக்குது! வாயைத் தொறக்குதா பாரேன்!''

அவர்கள் பேசிக் கொண்டே போக, ''இவர்கள் எங்கே என்னைப் பேச விட்டார்கள்!'' என்ற எண்ணம் தோன்ற, முகத்தை சுளித்தவள், ''ஷட் அப்!'' என்றாள் ஓங்கிய குரலில்.

''ஏய்! என்னம்மா? வாய் நீளுது? ஷட் அப்... ஆமே ஷட்-அப்! மரியாதையா பேசு!''

''வாட் மரியாதை? நீ மரியாதையா பேசு... நாலும் பேசுறேன்! யு ஆர் டாக்கிங் ரப்பிஷ்!'' என்று ஸ்ரீ கை நீட்டிப் பேசவும்,



''பாருடா தமிழையே கடிச்சுக் கடிச்சுத் துப்புது! அமெரிக்க ஜனாதிபதி தோத்தான் போ!''

''தமிழை இப்படி கொலை பண்ணிப் பண்ணிப் பேசினா தான், பெரிய இடத்துப் பொண்ணு மாதிரி இருக்கும்னு சொல்லிக் கொடுத்திருப்பானுங்க! அண்ணே! அதான், அப்படிப் பேசுது போல!''

''ஸ்டாப் இட்! உன் மேல தப்பு... நா கரெக்ட்டா தான் வந்தே...''

''யாரு மேல தப்பு? என் மேலையா? என் மேலயா?'' என்று எகிறிக் கொண்டு வந்த ஆட்டோக்காரனின் பார்வை, ஸ்ரீயின் கழுத்தில் நிலைப்பதைக் கண்டதும், சட்டென பின்னடைந்த ஸ்ரீ, ஒரு கையால் டி-ஷர்ட்டை இழுத்துப் பின்னாடி விட்டவாறே, மறு கையால் வேகமாய் தன் கைப்பேசியை எடுத்தாள்.

அதற்குள், பின்னால் நின்றிருந்த வாடகை கார் ஓட்டுனரை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு வந்தார் போக்குவரத்துக் காவலர்.

அவர் அருகே வந்ததும் கைப்பேசியை வைக்கப் போனவள், அவர் ஆட்டோக்காரனிடம் செல்வதைக் கண்டதும், வேகமாய் புகழின் எண்ணை அழுத்தினாள்.

''மீட்டிங் முடிந்திருக்க வேண்டுமே!'' என்ற வேண்டுதலுடன் அவள் அழைக்க,

''என்ன லட்டு!'' என்ற குரல் அப்புறமிருந்து கேட்டது.

அந்த அழைப்பிலேயே, அவன் தனியாக இருக்கிறான் என்பது புரிந்துவிட, ''புக்கள்... இங்க ஒரு ஆக்சிடென்ட்... ஐ அம் இன் ட்ரபிள்! வருவியா?'' என்றாள் வேகமாய்.

Optimized by www.ImageOptimizer.net

''உனக்கு ஒண்ணுமில்லையே? நீ நல்லா இருக்கே தானே, ஸ்ரீமா?'' என முதல் கேள்வியாய் அவன் கேட்க,

அதில் நெகிழ்ந்து ''நோ, நோ! நா நல்லா இருக் கே(ன்)! பட்...'' என இழுத்தவள், ''நீ வா...'' என்றாள் கெஞ்சுதலாய்.

''வந்துட்டே இருக்கேன்! எங்கன்னு சொல்லு!''

''தட் மெயின் ரோட்! வி.ஓ.சி. ரோட்... ஜிம்ல இருந்து நம்ம வீடு போற ரூட்!''

''ஓகே! ஓகே! நான் பத்து நிமிஷத்தில அங்க இருப் பேன்!'' என்றவன், அடுத்த வினாடி தந்தையிடம் தகவல் கூறிவிட்டு, அலுவலகத்தை விட்டு வெளியேறினான்.

ஸ்ரீலக்ஷ்மி கைப்பேசியை வைத்துவிட்டு நிமிரும் போது, ''நானும் பார்த்துட்டே இருக்கேன்! ரொம்ப ஓவரா பேசிட்டே போறே?'' என்ற காவல்காரர், பட்டென ஆட்டோக்காரனின் முகத்தில் ஓர் அறை விடவும், ஸ்ரீ அதிர்ந்து போனாள்.

''ஏன்டா நாயே! நீ தானே இன்டிகேட்டர் போடாம வந்தே? நானும் அங்க நின்னு பார்த்திட்டு தான் இருந் தேன்... இன்டிகேட்டர் இல்லைன்னா கை காட்டு! எதுவுமே இல்லாம... தேமேன்னு திரும்புற... ராஸ்கல்! அந்தம்மா... ஒழுங்கா பிரேக் அடிச்சதால, உயிர் பிழைச்சீங்க... தெரிஞ் சுக்கோ! இல்லைன்னா பரலோகம் தான்! இதில, அந்தம் மாட்டா வேற என்னடா உதாரு?! லைசென்ஸ் கான்செல் பண்ணிடுவேன்... ஜாக்கிரதை!'' என அவர் எகிறிய வினாடி, ஆட்டோக்காரன் ஒரேடியாக அடங்கியே போனான்.

''இல்ல சார்... அது... அந்தம்மாவும் பார்த்துத் தானே வரணும்...'' என்று இரு சக்கர ஆள் துவங்க,



''ரோட்ல போறவன் டக்குன்னு இந்த லைன்க்கு வருவான்னு அவங்களுக்கு எப்படித் தெரியும்? இவன் மூளைக்குள்ள பூந்தா பார்ப்பாங்க!'' என்றார் காவல்காரர், கண்ணில் கனலுடன்.

''ஆமா... நீ என்ன அவனுக்கு வக்காலத்து! மெயின் ரோட்டுக்கு ஏறும்போது, ரெண்டு பக்கமும் பார்த்து வர ணும்ன்னு உனக்கு அறிவில்லை? உன் அப்பன் போட்ட ரோடோ? அப்படியே ஏறி வர? ஒரேடியா நரகத்துக்கு ஏறி இருப்பே!'' என அவனையும் அவர் விட்டு வைக்க வில்லை.

இருவரும் பம்மிப் பதுங்க, ஸ்ரீக்கு மிகவும் ஆச்சரிய மாக இருந்தது!

சற்று முன்னர், இவர்கள் பேசிய பேச்சென்ன? இப் போது அடங்கி நிற்கும் அழகென்ன? பெண்ணிடம் வீரம் காட்டும் கோழைகள்! காக்கி உடையைக் கண்டதும், கூடவே கன்னம் இரண்டும் பழுத்ததும், நனைந்த கோழிக் குஞ்சுகளாய் நிற்பதைப் பாரேன்!

ஆனால், அவர்கள் ஒரேடியாய் அடங்கியும் போய்விட வில்லை.

''என்னா சார்! ஆட்டோக்குப் பெரிய சேதாரம் சார்... கொஞ்சமா பைசா ஏற்பாடு பண்ணிக் கொடுப்பீங்கன்னு பார்த்தா... தயவு பண்ணுங்க சார்! நானும் அன்னாடம் காச்சி... பணத்துக்கு என்ன சார் பண்ணுவேன்! ப்ளீஸ் சார்! பெரிய இடத்துப் பொண்ணு மாதிரி இருக்குது...'' என அவன் காவல்காரரின் காதைக் கடித்தது, ஸ்ரீக்கும் கேட்டது.

ஆனால், ''இவனுக்கு எதற்கு பணம் கொடுக்க வேண் டும்? செய்வதையும் செய்துவிட்டு, பணம் வேண்டு

Optimized by www.ImageOptimizer.net

மாம்? பணம்?! ராஸ்கல்! என் காருக்கு ஏற்பட்ட செலவுக்கு இவன் தான் எனக்கு பணம் கொடுக்க வேண்டும்! இடியட்!'' என்று மனதிற்குள் கருவியதை, வெளியே வாய்விட்டுச் சொல்லிவிட்டாள்.

''தப்பு செய்யாத நான் ஏன் தழைய வேண்டும்'' என்ற திமிர்வுடன், அவள் அலட்சியப் பார்வை பார்க்க,

''மேடம்! இங்க, ரூல்ஸ் பேசிட்டு இருந்தா வேலைக்கு ஆகாது! கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணித்தான் போகணும்!''

''ஏன் அட்ஜஸ்ட் பண்ணனும்? நா கரெக்ட்டா தா வந்தே(ன்)...''

''நீங்க சரியா தான் வந்தீங்க... இல்லைன்னு சொல்லலை! ஆனா... கொஞ்சம் அவன் நிலைமையையும் யோசிச்சுப் பாருங்களேன்... ஏழைப்பட்டவன்... உங்க கிட்ட இருக்கறதை கிள்ளித்தான் கொடுக்கச் சொல்றேன்... அள்ளிக் கொடுக்கச் சொல்லலை!''

''என்கிட்டே இருந்தா இவனுக்கு டொனேட் பண்ணணும் ரூல் இல்லையே?''

அவளருகே வந்தவர், ''மேடம், அவன் ஐயாயிரம் ஆகும்... ஆறாயிரம் ஆகும்ன்னு சொல்றான். அவ்வளவு எல்லாம் வேண்டாம். அவனுக்கு ஒரு ஆயிரம்... எனக்கு ஒரு ரெண்டாயிரம்ன்னு முடிச்சு விடுங்க மேடம்! கோர்ட்... கேஸ்னனு போனா பணமும் சரி... நேரமும் சரி வீணாப் போகும்! உங்களுக்கெல்லாம், பணத்தை விடவும் டைம் எவ்வளவு முக்கியம்? அதை எதுக்கு இந்த மாதிரி சல்லிப் பசங்ககிட்ட பேசி வீணாக்குறீங்க?



கேட்டதைக் கொடுத்திட்டுப் போங்க!'' என்றார் இறங்கிய குரலில்.

ஸ்ரீ அயர்ந்து போனாள்!

ஆக, இவர் அவனுக்கு ஆதரவாய் பேசியதெல்லாம் பணத்திற்காகத் தானா?!

''நோ! கொடுக்க மாட்டே(ன்)'' என அவள் மறுக்கும்போதே, புகழேந்தி, அங்கே வந்துவிட்டான்.

''புக்கள்...'' என்று தொடங்கியவளை, இடைமறித்து ''நீ... அந்த கார்ல போய் உட்காரு!'' நான் வரேன்!'' என்று அங்கிருந்து நகர்த்த முற்பட்டான்.

''நா கரெக்ட்டா தா டிரைவ் பண்ணே... அவான் தா கிராஸ்ல வந்தான்...''

''ஒகே! ஒகே! நீ முதல்ல அங்க போ...''

''நீ அவனுக்கு மணி கொடுக்காத...''

''நான் பார்த்துக்கிறேன்... நீ போ...''

''நோ... இந்த போலீஸ் மேனுக்கும் மணி கொடுக்காத...''

''சரிரிரிரிரிரிரிரி... நீ போ!''

அவன் பல்லைக் கடித்ததை விடவும், கிட்டத்தட்ட அரை மணி நேரமாய் வெயிலில் நின்று கொண்டிருந்தது வேர்வையில் அவளைத் தோய்த்திருக்க, புகழ் வந்த வண்டியை நோக்கி நடந்தாள் ஸ்ரீ.

அவள் வந்ததும், அதிலிருந்த டிரைவர் இறங்கி, ஸ்ரீ ஓட்டி வந்த காருக்குச் செல்வதைக் கண்டவள், அனைத்தையும் மனதில் வைத்துச் செயல்படும் கணவனை உள்ளுக்குள் மெச்சிக் கொண்டாள்.

Optimized by www.ImageOptimizer.net

காரின் முன்னிருக்கையில் அமர்ந்தவள், கண்ணா டியை இறக்கிவிட்டுக் கொண்டு, புகழையே கண்களால் தொடர்ந்தாள்.

புகழ், காவல்காரர், ஆட்டோ ஓட்டுனர், இரு சக்கர வாகன உரிமையாளர், கூடவே இன்னொரு ஆள் - நால்வரும் ஒரு ஓரமாய் செல்வதும், ஆளாளுக்கு மாற்றி மாற்றி பேசுவதும், போக்குவரத்துக் காவலர் லேசாய் குரலை உயர்த்துவதும், தொடர்ந்து ஆட்டோக்காரனை நோக்கிக் கையை லேசாய் உயர்த்துவதும், பின்னர் புகழும் அவருமாய் சிறிது நேரம் பேசுவதும், புகழ் மணிப் பர்ஸைத் திறந்து பணத்தை காவல்காரரிடம் கொடுத்து விட்டு, அவரிடம் சில வார்த்தைகளோடும் ஓர் கை குலுக்கலோடும் விடைபெறுவதும், ஸ்ரீ ஓட்டி வந்த கார் அருகே வந்து, டிரைவரிடம் சில வார்த்தைகள் பேசுவதும் ஒரு குறும்படம் போல் ஓடியது. (அரசியல்ல இதெல் லாம் சகஜம் அப்பா!)

ஸ்ரீ அமர்ந்திருந்த காருக்கு வந்தவன், அதை லாவக மாய் எடுத்து, போக்குவரத்து நெரிசலில் இருந்து விடு பட்டு, வீடிருக்கும் வழியில் செலுத்தும் வரை, எதுவும் பேசவில்லை.

ஸ்ரீயும் எதுவும் பேச முற்படவில்லை! கோபத்தில் கனன்று கொண்டிருந்தாள், அவள்!

தான் எவ்வளவு சொல்லியும், பணத்தைக் கொடுத்து விட்டு வந்திருக்கிறான் என்றால்... ''என் மேல்... என் வார்த்தை மேல் நம்பிக்கையில்லையா? என்னை முட்டாள் என்று நினைத்தானோ? சை! என் மேல் காதல் இல்லை... மதிப்பில்லை... நம்பிக்கையில்லை... ஒரு



மண்ணும்மில்லை!'' என்று நெஞ்சம், கடகடவென ஆயிரம் தப்பு கற்பனைகள் கட்டத் தொடங்கியது!



# 17

முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க அமர்ந் திருந்த ஸ்ரீயை ஓரக் கண்ணால் பார்த்த புகழ், ''ஒரே நாளையில எத்தனை இடியைத் தான்டா தாங்குவே? பாவம் மச்சான், நீ!'' என்று உள்ளுக்குள்ளே சொல்லிக் கொண்டான். ஆனாலும், பேசவில்லை! விழுந்து பிராண்டி விடுபவள் போல் அமர்ந்திருப்பவளிடம் வாய் கொடுக்க, பயமாக இருந்தது!

அவளை எப்படிச் சமாதானப்படுத்தலாம் என்ற எண்ணத்தில் புகழ் வண்டி ஓட்ட,

அவனிடம் என்ன மாதிரி சண்டை பிடிக்கலாம் என்ற ஆவேசத்தில் ஸ்ரீ யோசித்திருக்க, அவர்களது எண்ணங் கள் முடிவுக்கு வருவதற்குக் காத்திராமல், வீடு வந்து சேர்ந்திருந்தது.

காரை நிறுத்திய பிறகும், ஸ்ரீ இறங்காமல் இருக்க, அவள் புறம் வந்து கதவைத் திறந்து விட்டவன், ''இறங் குங்கள் மகாராணி!'' என்றான் இடைவரைக் குனிந்து.

ம்ஹூம்! ஸ்ரீயின் கண்மணி கூட அவன் புறம் அசைய வில்லை!

''நமது அந்தப்புரம் சென்று, வாய்ச்சண்டையோ... வாள் சண்டையோ எது வேண்டுமானாலும் வைத்துக்

Optimized by www.ImageOptimizer.net

கொள்ளலாம்! இறங்குங்கள்!'' என அவன் மீண்டும் பணிவு காட்ட,

அப்போதும் ஸ்ரீ திரும்பவில்லை.

புகழுக்கு ஏனோ சிரிப்பாக வந்தது.

''நா பேசினதில என்ன புரிஞ்சதுன்னு முறைச்சிட்டு உட்கார்ந்திருக்க?'' என அவன் சிரிக்கவும்,

''எவ்ரிதிங் புரிஞ்சது!'' என்றாள் மனையாள், முதன் முறையாக வாயைத் திறந்து. ஆனால், இப்போதும் நாட்டியமாடத் தெரியா வண்டுகள் போல் கருவிழிகள் நேரே நிலைகுத்தி இருந்தன.

''என்ன புரிஞ்சது? அந்தப்புரம்ன்னா என்ன? சொல்லு பாப்போம்?''

''இட்ஸ்! பெட்ரூம்!'' (அட, என் கண்ணே!)

''ஹே! இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?''

''பிலிம்ல வரும். நா பார்த்திருக்கே(ன்)...''

''ஆகா! தமிழ் படம் நம்மளோட வாழ்க்கையை நல்ல முன்னேற்றப் பாதையில் எடுத்திட்டுப் போகும் போலவே!'' என்று ஆச்சரியப்பட்டவன்,

''இன்னைக்கு சாயங்காலம் ஒரு படத்துக்குப் போவோமா, லட்டு?'' என்றான் பெண்டாட்டியின் பட்டுக் கன்னம் வருடி.

''நோ! ஐஸ் வைக்காத! நா வரமாட்டே(ன்)...'' என்றவள், நேரே நோக்கியிருந்த முகத்தை, அவனுக்கு நேர் எதிரே திருப்பிக் கொள்ளவும்,

''இது சரிப்பட்டு வராது!'' என்றவன்,



''படத்துக்குப் போறதுக்கு... முதல்ல நீ காரை விட்டு வெளிய வரணும்!'' எனக் கூறி அவளது கை பற்றி இழுத்தான்.

''சினிமா கதாநாயகன் மாதிரி உன்னை என்னால தூக்கிட்டும் போக முடியாது! அப்படியே தூக்கினாலும்... உன்னோட எம்பது கிலோ வெயிட்டை என்னோட அறுபது கிலோ உடம்பு தாங்காது! டமால்ன்னு இடுப்பு எலும்பு முன்னூத்தி எட்டு பீஸா உடைஞ்சிடும்! எனக்கு இருக்கிறதே ஒரே ஒரு இடுப்பு... அது மேல மடிப்பு கூட ரெண்டு மூணு இல்லை... அதை உடைக்கணுமா? ப்ளீஸ் கருணை வை, கருணாகரியே!'' என்று நீட்டி முழக்கியவன், சூலாயுதம் ஏந்திய காளியாய் அவள் முறைக்கவும், சட்டென வேறு முயற்சிக்குத் தாவினான்.

''வா பேபி! வா!''

''வா பேபி! வா!

''வா பேபி! வா!''

''வா பேபி! வா!''

ஒரே ராகத்தில், அவன் அறைகூவியதை சகிக்க முடியாமல், ''ஹய்யோ, ஸ்டாப் இட்! ப்ளீஸ் பாடாத!'' என்ற ஸ்ரீலஷ்மி, சட்டென வண்டியை விட்டு இறங்கினாள். (கழுதை ரெண்டு... வீட்டு வாசல்ல நிக்குதாமே! விரட்டி விட்டுட்டுப் போங்க!)

வீறு கொண்ட நடையவளாய், அவள் எட்டெடுத்து வைக்கவும், பட்டென கை பற்றி, வேகமாய் தங்கள் அறைக்குள் அழைத்துச் சென்று கதவை அடைத்தான், கணவன்.

Optimized by www.ImageOptimizer.net

கேள்வியாய் பார்த்துக் கொண்டிருந்த மாதங்கியிடம் கண்ணசைவில் ''ஒன்றுமில்லை'' என்றவனை வந்ததைப் பார்த்தவள் என்பதால், ''என்னா ஒண்ணு மில்லை... நீ எப்படி பணம்...'' என்று கத்தத் தொடங்க,

''பேபி! பேபி! வெயிட்!'' என்று கை அமர்த்தியவன்,

''நான் சொல்லி முடிச்சிடுறேன். அதுக்கு அப்புறமும் உனக்கு அதில உடன்பாடில்லைன்னா, தாராளமா சண்டை போடலாம்!'' என்றான் வேண்டும் குரலில்.

ஒப்பவுமில்லாமல், மறுக்கவுமில்லாமல் ஸ்ரீ, கட்டி லில் அமர, அவளருகே அமர்ந்தவன் ''பேபி! நான் அவங்களுக்குப் பணம் கொடுத்ததை எந்த விதத்திலும் நியாயப்படுத்த விரும்பலை! இங்க அப்படித் தான் பேபி! பணம் தான் பல இடங்களில் பேசும்... நமக்கு எந்த வித பாதிப்புமில்லாம காரியத்தை முடிக்கணும்னா கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணித் தான் போகணும்! வேற வழியில்லை!''

''நமக்கு என்ன பாதிப்பு வரப் போகுதுன்னு நீ கேட் கலாம்... கண்டிப்பா கேட்ப! ஏன்னா, நீ ஒரு அறிவாளிக் குட்டி!'' (நெளிவு சுளிவு தெரிஞ்சவன்டா, நீ!)

ஸ்ரீயின் உஷ்ணப் பார்வையில் சட்டென அடங்கி யவன்.

''நாம ரூல்ஸ் படி போயிருந்தா... இந்நேரம் வண்டி போலீஸ் ஸ்டேஷன்ல இருக்கும். கேஸ் ஃபைல் பண்ண ணும்... அப்புறம் கோர்ட்... ஏகப்பட்ட சாட்சி... ஃபைன்... அது... இதுன்னு... அதோட முடியாது பேபி. அங்க பாதி பேருக்கு லஞ்சம் கொடுக்கணும்! அதையெல்லாம் ணக்கு பண்ணா... இப்ப கொடுத்த பணத்தைவிட



ரொம்ப ஜாஸ்தியா வரும்! பணத்தைவிட, பத்து நிமிஷத் துல முடிய வேண்டிய வேலைக்கு, எதுக்கு மாசக் கணக்கில மண்டையைப் பிச்சிக்கணும்... சொல்லு?''

ஸ்ரீ ''அமெரிக்கால...'' என ஆரம்பிக்க,

''ஷ்... பேபி! அமெரிக்கா வளர்ந்த நாடு பேபி... இந்தியா இப்போ தான் வளரு... அதை வளர விடாம நிறையப் பேர் சுரண்டிட்டு இருக்காங்க... ப்ளீஸ்... அந்த வித்தியாசத்தைப் பத்தி நாம பேச வேண்டாமே?''

''ப்ச்!'' என்று ஸ்ரீ சோர்வுறவும், அவளது கையை எடுத்துத் தன் கைக்குள் வைத்துக் கொண்டு புகழ் பேச ஆரம்பித்தான்.

''லட்டு!'' எனத் தொடங்கி,

''அமெரிக்கால லெஃப்ட் ஹான்ட் டிரைவிங்... ஆனா இங்க ரைட் ஹான்ட்... வந்த ஒரே மாசத்தில, அந்த வித்தியாசத்தை நீ எப்படி கத்துக்கிட்டே?! இப்போ, என்னைவிட சூப்பர்ரா வண்டி ஓட்டுறே? அது மாதிரி, இதுவும் ஒரு வித்தியாசம்டா! அப்படியே ஏத்துக்கப் பழகிக்கணும்!'' என்றான் விளக்கமாக.

கூடவே ''புரியுதாடா!'' என அவன் வினவவும்,

''நா ரைட் ஹான்ட் டிரைவ் பண்ண லேர்ன் பண்ணது... என்னோட சேஞ்ஜ்! பேட்... இப்போ நடந்தது சொசைட்டி சேஞ்ஜ்! நாம ஏன்... இந்த சொசைட்டில இருக்கணும்? நல்ல... குட்... மெச்சூர்ட் சொசைட்டிக்குப் போலாம்! லெட்ஸ் கோ!'' என்றாள் ஸ்ரீ, தன் முடிவாய்.

''சரி பேபி! நீயும் அமெரிக்கா புராணத்தை விடப் போற தில்லை... நானும் அங்க வர மாட்டேன்ங்கிற முடிவை மாத்திக்கப் போறதில்லை. சோ... இப்போதைக்கு இந்த

Optimized by www.ImageOptimizer.net

சண்டையை அப்படியே பாஸ் பண்ணி வச்சிட்டு, சாப்பாட்டைப் பார்ப்போமா? எனக்கு ரொம்பப் பசிக்குதுடா, ப்ளீஸ்!'' என்றான், வயிற்றில் கையை அழுத்திக் கொண்டு.

இந்த ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு புகழை இங்கிருந்து அசைத்து விட முடியாது என்று அவளுக்கும் புரிந்தது! ''பார்ப்போம், இன்னமும் நாட்கள் இருக்கிறதே!'' என்ற எண்ணத்தில், மறுத்துப் பேசாமல், ''ம்ம் போலாம்'' என சம்மதித்து, அவனுடன் உணவுண்ணச் சென்றாள்.

காலையில் வேலையைப் பாதியிலேயே விட்டு விட்டு வந்ததால், இரவு வெகுநேரம் சென்று வந்த புகழை, ஆழ்ந்த நித்திரையில் இருந்த ஸ்ரீ தான் வரவேற்றாள்.

உடை மாற்றி வந்தவன், தலையணையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, சிறு பிள்ளையாய் உறங்கிக் கொண்டிருந்த மனைவியின் அழகில் கவரப்பட்டவனாய் அவளது உச்சியில் இதழ் பதித்தான்.

கட்டிலில் அமர்ந்து, அவளது தலையை எடுத்து மடியில் வைத்துக் கொண்ட வினாடி, அவனது மனையாள் அவனுடன் இறுக ஒன்றி, இடுப்பைச் சுற்றிக் கை போட்டு ''ம்ம்... ம்ம்ம்'' என்ற முனகலுடன், அழுத்தமாய் முகம் பதித்துக் கொண்டாள்.

''செல்லக்குட்டி!'' எனச் சீராட்டியவன், முகத்தை மறைத்த முடி கற்றைகளை மெல்ல ஒதுக்கி,

''சும்மாவே பொமேரியன் நாய்க்குட்டி மாதிரி இருக்கும்... இப்போ முடியை வேற அங்க இங்க வெட்டி விட்டு, முயல் குட்டி மாதிரி மனுஷனைக் கொல்லுது!'' என்றான், அவளது அலங்கோல முடி அலங்காரத்தைப் பாராட்டி.



கைகள் அவளது முகத்தை வருடிக் கொடுக்கையிலேயே, ''இவளோட அமெரிக்கா புராணத்தை எப்படி நிறுத்துறது?'' என்ற எண்ணம் மனதில் ஓடியது.

அரைமணி நேர யோசனையின் பின்னே, கொலம்பஸ் போனாம் மாறி ''யுரேகா!'' என்று கத்தாதது தான் குறை! முகம், மின்சார வாரியத்திற்குள் நுழைந்தது போல் ஏகப் பிரகாசமாய் இருந்தது! (இப்பெல்லாம், மின்சார வாரியத்திலேயே மின்சாரம் இல்லையாம்!)

வாயெல்லாம் பல்லாக, கீழிறங்கிப் படுத்தவன், தன்னை அணைத்திருந்த மனைவியை ஆரத் தழுவிக் கொண்டு, ''லட்டு... உன் மாமனுக்கும் மூளை இருக்குடி! உன்னை இங்கேயே இருக்கலாம்ன்னு சொல்ல வைக்கிறேன் பாரு!'' என்றான் மித மிஞ்சிய சந்தோஷத்தில். (அரும் பெரும் கண்டுபிடிப்பு!)

ஆனால், அவனே ''நீ... அமெரிக்கா போய்டு, லட்டு!'' என்று சொல்லப் போகிறான் என்பது விதிவசமோ?!

அடுத்து வந்த ஒரு வாரமும், கீழ் வரும் நிகழ்வுகளுடன் கழிந்து போனது.

ஸ்ரீ மும்முரமாய் தமிழ் கற்றுக் கொண்டாள்!

எந்த அளவிற்கு என்றால், ''லட்டும்மா... உன்னோட லவ்வுக்கும் தமிழுக்கும் லிங்க் போட்டது தப்பு தான்! அதுக்காக, இப்படியா? நைட் ஒரு மணிக்கு எழுப்பி விட்டு ''சல்லிப் பசங்கன்னா என்னா மேன்? தாமில் தானா?''ன்னு கேள்வி கேட்கிறதெல்லாம் டூமச் சொல்லிட்டேன்!'' தூக்கம் வருதுடி!'' என்று புகழ் பினாத்தும் அளவிற்கு!

Optimized by www.ImageOptimizer.net

அதற்கு ஸ்ரீயோ ''நீ லூசி மாதிரி லவ் - தாமில் லிக்க பண்ணதுக்கா நா தமிழில் படிக்கலை. தட் ஓ மென்... என்னை தாமில் கொலை பண்றே சொல்லிச்சு... அதான்!'' என பதில் கொடுத்ததில்,

''அட கஷ்ட காலமே! இனி மேல் பார்க்கவே முடியாத யாரோ ரெண்டு பேருக்காக தமிழ் கத்துக்குவாளாம்! கூடவே இருக்க புருஷனை மதிக்க மாட்டாளாம்! என்ன கொடுமை! என்ன கொடுமை!'' என்று புகழ், தூக்கம் துறந்தது வேறு விஷயம்!

அடுத்தது, புகழின் பாஷையில் ஸ்ரீ அவனைக் ''காயப் போட்டாள்!''

''ஏன் லட்டு! கொல்லாதடி! ப்ளீஸ்!'' என அவன் கெஞ்சியதற்கு,

''ஃபுல் லவ் வந்தா தா கிஸ்ஸிங்... டச்சிங்... அது வரைக்கும் நோ!'' என்று கறாராய் மறுத்தவள்,

''ஃபுல் லவ் எப்போ வரும் தெரியுமா... குட் தாமில் வரும்போது!'' என்றாள் பாடத்தை விளக்கும் ஆசிரியை யின் பாணியில்.

கை முஷ்டியை இறுக்கி, தன் நெற்றியில் தானே குத்திக் கொண்டவன், ''முடியலை!'' என்றான் நிஜ மாகவே முடியாதவனாய். (எனக்கு சிரிப்பை அடக்க முடி யலை!)

அந்த எரிச்சல் - மழைச்சாரலாய் சிரித்த ஸ்ரீ, அவனது மூடிய இமைகளின் மேல் ஓர் முத்தம் வைத்து நிமிரவும், ஏக்கமாய் மாறி, ''சீக்கிரமா தமிழ் கத்துக்கோ, லட்டு! என்னால வருஷக் கணக்கில காத்திருக்க முடியாது!'' என்றான் பாவம் போல.



''ரொம்ப கொலஸ்ட்ரால் மேன், உனுக்கு! போடா!'' என்று சிலிர்த்துக் கொண்ட ஸ்ரீக்கும், அவனைப் பார்க்க பாவமாய் தான் இருந்தது.

ஆனால், உள்ளுக்குள் ''ஸ்ரீ... ஸ்டடி! உருகிடாத! அவன் பேசினதுக்கு... தண்டனை கொடுத்தே ஆகணும்!'' என்று சொல்லிக் கொண்டவள், இழுத்துப் போர்த்திப் படுத்துக் கொண்டாள்.

ஒரு வாரம் கழிந்த நிலையில், ஒரு நாள் காலை.

''ஸ்ரீ பேபி! இன்னைக்கு... என்னோட ஆபீஸ் வரி யாடா?'' என்று மெல்லத் தூண்டில் போட்டான், புக ழேந்தி.

''ஆபீஸா? வொய்... ஹ்ம்ம் ஏன்?''

''சும்மா தான்! இங்க வீட்டில என்ன பண்றே? அம்மா வோட உட்கார்ந்து வெட்டிக் கதை பேசுறதுக்கு, ஆபீஸ் வரலாம் இல்ல.''

''ம்ஹூம்! நா அத்தை கூடவே இருக்கேன்... ஐ லைக் ஹெர்!''

''ம்... தமிழ்... தமிழ்!''

''எனக்கு... அத்தையைப் பிடி... பிடிச்ச... பிடிச் சிருக்கு...''

''குட்! லூசா நீ? அப்போ உனக்கு என்னைப் பிடிக் காதா என்ன? அதான் ஆபீஸ் வர மாட்டேன்னு சொல் றியா?''

''ஹோ! நோ! அப்படியில்லை... நா என்ன பண்ணு வே(ன்) ஆபீஸ்ல?''

Optimized by www.ImageOptimizer.net

"கார்பரேட் அக்கௌண்ட்டன்சி தானே படிச்சிருக்கே... வந்து, அக்கௌண்ட்ஸ் பாரு!"

"ஹான்... போயா..." - சிறு பிள்ளையாய் அவள் முகம் சுளிக்க,

"என்ன போயா? வீட்டில இருக்க லேடீஸ்க்கும் பிசினஸ்ல என்ன நடக்குதுன்னு தெரியணும். வா!"

"அத்தையும் லேடி தானே?"

"அறிவாளிக்குட்டி! உங்க அத்தை உங்களை மாதிரி சின்னதா இருந்தப்போ ஆபீஸ் வந்தாங்க தெரியுமா? அவங்க தான்... நிறைய புது ஐடியாஸ் கொடுத்தாங்கன்னு அப்பா சொல்வாங்க!"

"ம்ம்... ம்ம்ம்..."

"சரி... அழுது வடியாத! முழு நாள் வேணாம்... ஜஸ்ட் அரை நாள்! நாலு மணி நேரம் வா, போதும்!"

"ஹான்! தட்ஸ் குட்! வரேன்!" என்று ஒத்துக் கொண்டவள், உடை மாற்றிக் கிளம்பி வந்ததும்,

"என்னடா இது? சுடிதார்? மேடம்... ஜீன்ஸ் பாண்ட்க்கு பிராண்ட் அம்பாசிடர் மாதிரி... ஜீன்ஸ் விட்டு வர மாட்டீங்க! என்ன இது?" என்றான், நெற்றி வரை ஏறிய புருவங்களுடன்.

"ஜீன்ஸ் போட்டா... மொற... மு... முறைச்... முறைச்சு பார்க்குறா.... அன் - கம்ஃபர்ட்டபிலா இருக்கு!"

"யாரு பார்த்தது?" என அவனது பார்வை கூர்மை பெற,

ஸ்ரீ, ஒன்றும் சொல்லாமல் இருக்கவும், அவளது முழங்கைக்கு மேல் அழுத்திப் பிடித்து, தன் புறம்



திரும்பியவன் "நம்ம வீட்டிலேயா?" என்றான் கடித்தப் பற்களின் ஊடே.

"நோ! நோ! நோ!" என்று உடனே மறுத்தவள்,

"அங்க... ஆக்சிடென்ட் பிளேன்ல்..." என்றாள் பதிலாய்.

கூடவே, "இப்போ ஃபாக்டரியில நெறைய பேர் இருப்பாங்க... அதான்! சுடிதார் போட்டா ப்ராப்ளம் இல்ல..."

"ஜீன்ஸ் போட்டாலும் ப்ராப்ளம் இல்ல... கண்ணை உறுத்தாம போட்டேன்னா போதும்!"

"அப்படின்னா?" என அவள் புரியாமல் கேட்கவும்,

"அப்படின்னா?" என விஷமமாய்ச் சிரித்தவன்,

"இங்க தெரியக் கூடாது!"

"அங்க தெரியக் கூடாது!"

"இது கவர் ஆகியிருக்கணும்!"

என்று ஒவ்வோர் வாக்கியத்துக்கும், அவளது மேனியில் கைகளால் ஓவியம் வரைய, அங்கே ஓர் காதல் நாடகம் இனிதே அரங்கேறி முடித்தது!



# 18

அலுவலகத்திற்கு வரவழைத்ததைத் தவிர, புகழ் வேறு எந்த தூண்டுதல் வேலையிலும் ஈடுபடவில்லை.

Optimized by www.ImageOptimizer.net

ஓர் அலுவலகப் பணியாளை வரவழைத்து "மேடம்க்கு கம்பெனியை சுத்திக்காட்டு!" என்றவன்,

ஸ்ரீயிடம் "எல்லா யூனிட்டையும் ஒரு ரவுண்டு பார்த்திட்டு வாடா... ஜஸ்ட் லைக் தட்! அப்புறம், உனக்குப் பிடிச்ச வேலையைப் பண்ணலாம்!" என்று தோளில் தட்டி, அனுப்பி வைத்தான்.

"ஹேரா! யா!" என்று சந்தோஷமாய் ஸ்ரீ சென்றதும் உள்நோக்கம் என்ன தெரியுமா? முடிவில் "எனக்கு எதுவுமே பிடிக்கவில்லை! வீட்டில் ஹாயாக அத்தையுடன் கதை பேசும் வேலை தான் பிடித்திருக்கிறது!" என்று சொல்லி விடலாம் என்ற குதூகலத்துடன் களத்தில் இறங்கினாள்! (என்ன ஒரு வில்லத்தனம்!)

ஆனால்!

அவளே எதிர்பாராத வண்ணம், புகழ் நடத்திக் கொண்டிருக்கும் இறால் ஏற்றுமதியின் மீது, அபார ஆர்வம் அவளைத் தொற்றிக் கொண்டது!

முதலில், இறால் வளர்ப்பு மையம்!

கண்ணாடி கதவின் பின்னே இருந்த பிரம்மாண்ட பண்ணையைக் கண்கள் விரியப் பார்த்துக் கொண்டிருந்தவளிடம்,

"மேடம், கையை இங்க வாஷ் பண்ணிட்டு, இந்த கிளவ்ஸ் போட்டுக்கோங்க!" எனக் கூறிய பணியாள், ஓர் கையுறையை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"நான் வீட்டிலேயே குளிச்சிட்டேன்!" என்று ஆங்கிலத்தில் கூறியவள், சட்டென "உங்களுக்கு இங்கிலீஷ் அண்டர்ஸ்டாண்ட் ஆகுமா?" என்றாள் சந்தேகமாக.



"ஹான்! புரியும் மேடம்!" எனக் கூறிய, அப்பட்டதாரி.

"குளிச்சிருந்தாலும், உள்ள போறதுக்கு முன்னாடி கையை ஸ்டேரிலைஸ் பண்ணிக்கணும். பிரான்ஸ்ல சீக்கிரமே பாக்டீரியா பரவிடும். அதனால தான் இந்த ஏற்பாடு!" என்றான், விளக்மாக.

கை உறை மட்டுமல்ல, அவளது கால் செருப்பைக் கழட்டச் சொல்லிவிட்டு, அதற்கும் ஓர் பிளாஸ்டிக் உறை கொடுத்தான். கூடவே, மேல் கோட் ஒன்றும்!

அனைத்தையும் அணிந்து கொண்டு, உள்ளே சென்றவள் அசந்து தான் போனாள்!

ஆயிரம் பேர் தாராளமாய் நிற்கலாம் போன்ற அரங்கில், அளவான அடி தூரத்தில், மூன்று ஆள் உயரத்தில் பெரிய பெரிய கன்டைனர்கள்! கண்ணாடி கன்டைனர்கள் என்பதால், உள்ளே இறால்கள் துள்ளி விளையாடுவதைக் காண முடிந்தது!

ஓரோர் பெண் இறாலும், கோடிக் கணக்கில் முட்டை இடுமாம்! அந்த முட்டைகளை வளர்த்து, அதில் ஒரு பகுதியை அடுத்த இனப் பெருக்கத்திற்கும், மீதியை பதப்படுத்தும் யூனிட்டிற்கும் இட்டுச் செல்வராம்!

அவள் வாயை அகல விரித்துப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, மூன்று பேர் கொண்ட குழு ஒன்று, இறால்களுக்கு உணவு கொடுக்கச் சென்றது!

"என்ன அது?" என்று அவள் வினவக் காத்திருக்காமல், பணியாளே பேசத் துவங்கினான்.

"அது... இறாலுக்கான பிரத்யேக உணவு மேடம்! இரண்டு மணி நேர இடைவெளியில், உணவு

Optimized by www.ImageOptimizer.net

கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்! எட்டு மணி இடைவெளியில், அதன் அழுக்குகளை சுத்தம் செய்ய வேண்டும்! முப்பது மணி நேர இடைவெளியில், தண்ணீர் மாற்ற வேண்டும்!'' என்று அவன் சொல்லிக் கொண்டே போக, ஸ்ரீயின் மலைப்பு பன்மடங்காய் பெருகியது.

அடுத்து அவன் இட்டுச் சென்றது, இறால்களைப் பதப்படுத்தும் இடத்திற்கு!

ஏதோ ஆராய்ச்சிக் கூடத்திற்கு நுழைந்தாற் போல், ஓர் பிரம்மை ஸ்ரீக்கு!

அங்கிருந்த அனைவரும், தலை முதல் கால் வரை தங்களை மூடி இருந்தனர். கையும் கண்ணும், ப்ரோக்ராம் செய்து வைத்தது போல் ஒரே சீராய் வேலை செய்ய, நிமிட நேரங்களில் இறாலின் மேல்புறத் தோல் நீக்கப்பட்டு, சுத்தப்படுத்தப்பட்டு, பதப்படுத்தும் நிவாரிணிகள் போடப்பட்டு, அவை சுத்தமான பைகளில் அடைக்கப்பட்டன.

பலவற்றுக்கு, இயந்திரங்கள் இருந்தபோதிலும், அங்கே இருநூறுக்கும் மேற்பட்டோர் வேலை செய்வதைக் கண்டவள், அசந்தே போனாள்!

கடைசியாய், அவன் அழைத்துச் சென்ற இடம் - நிஜமான ஆராய்ச்சிக் கூடம்!

''இந்த ரிசர்ச் முழுக்க, முழுக்க புகழ் சாரோட முயற்சி மேடம்! இறால் வளர்ச்சியில... என்னெல்லாம் புதுசா செய்யலாம்ன்னு ஒரு பக்கம் ஆராய்ச்சியில இறங்கியிருந்தா... இன்னொரு பக்கம், இறாலோட உணவு... அது வளருற இடத்தோட சீதாஷ்ண நிலை... அழுக்கின்



அளவு... ஏதாவது தொற்று கிருமி பரவியிருக்கா... இது எல்லாவற்றையும் இங்க இருந்தபடியே கண்காணிக்கிறதுக்காக நிறைய டிவைஸ் கண்டுபிடிக்கிறாங்க! அதில, வெற்றியும் அடைஞ்சுட்டாங்க! அந்த டிவைஸ் சொல்ற தகவல், எம்பது சதவீதம் நம்பகமானதா இருக்கு! அதை நூறு சதவீதம் கொண்டு வரதுக்காக, புகழ் சாரும் இங்க இருக்க ஃபிஷரி இஞ்சினியர்ஸும் முயற்சி பண்ணிட்டு இருக்காங்க!'' என்று அவன் கூறி முடித்ததும், ஸ்ரீயின் முகம் பெருமையில் வெண் தாமரையென மலர்ந்து, விரிந்தது!

''சரி... நீங்க போங்கோ... நா ஆபீஸ் ரூம் போறே(ன்)!'' என்று அவரை அனுப்பிவிட்டு, புகழின் அறைக்குள் நுழைந்தாள் ஸ்ரீலஷ்மி.

தொலைபேசியில் ஏதோ தீவிரமாய் பேசிக் கொண்டிருந்த புகழ், அப்போது தான் நிமிர, அவளைக் கழுத்தோடு சேர்த்தணைத்து, அழுத்தமாய் கன்னத்தில் ஓர் முத்தம் வைத்து, ''உன்னைப் பார்த்தா ரொம்ப பெருமையா இருக்கு!'' என்றாள் பறந்து வந்த ஆங்கிலத்தில்.

''ஏய்... ஏய்... விடுடா! ஆபீஸ் யாராவது வந்திடப் போறாங்க!'' என்றவன், ஓர் சன்னமான முத்தத்துடன் அவளைப் பிரித்து நிறுத்தினான்.

''என்னாச்சு? மேடம்... ரிசர்ச் யூனிட் போனீங்களா?'' என சிரிப்புடன் வினவ,

''ஹ்ம்ம், யா! ரியல்லி சூப்பர், புக்கள்! ஐ வாஸ் இம்ப்ரெஸ்ட்!'' எனவும்,

''தமிழ்... தமிழ்...''

Optimized by www.ImageOptimizer.net

''ஹான்... நல்லா இருந்துச்சு... எனக்கு... ரொம்ப... ரொம்ப... என்ன சொல்றது?''

''ஹ்ம்ம்... பிடிச்சதுன்னு சொல்லு.''

''லைக் மட்டும் இல்ல... சம்திங் மோர்?'' - ஸ்ரீ எதிர் பார்ப்புடன் நிறுத்தியவுடன்

''ஹ்ம்ம்! என்ன சொல்றது? இம்ப்ரெஸ்ட்ன்னா பிடிச்சது... கவர்ந்தது... இப்படித் தான் சொல்லணும்!''

''ஓகே! எனக்கு... ரொம்ப... ரொம்ப... ரொம்பப் பிடிச் சது!'' என்றாள் ஸ்ரீ, உண்மையான சந்தோஷத்துடன்.

''நன்றிகள் பல பல!'' என சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவன்.

''லட்டு! எனக்குக் கொஞ்சம் ஹார்பர்ல வேலை இருக்கு! நீ... அப்பாவோட காபினுக்குப் போ! அக்கௌண்ட்ஸ் பார்க்கிறதுன்னா பாரு... இல்லைன்னா வீட்டுக்குப் போ!'' என்றான், இருக்கையிலிருந்து எழுந்தபடியே.

''இல்ல... நா இங்கேயே இருக்கே(ன்)...'' என ஸ்ரீ கூறியதும், புகழின் கண்களில் ஓர் மின்னல் வெட்டிச் சென்றது. (சாதித்து விட்டாய் போலவே! ஐமாய்!)

''சரி... லஞ்ச்சுக்கு வீட்டுக்குப் போற தானே?''

''உனுக்கு... மாமாக்கு லஞ்ச் இங்க தானே வரும்! நானும் இங்கே சாப்பிடுறே(ன்)... அத்தைகிட்ட போன்ல சொல்லு...''

''ஏன்டா?''

''ஐ லைக் இட், புக்கள்! ப்ளீஸ் யா!''



''ஓகே! உன்னோட விருப்பம்! அம்மாகிட்ட நீயே சொல்லிடு! உன்னை ஆபீஸ் கூட்டிட்டு வந்ததுக்கே, அவங்க கையில இருந்த லாலிபாப்பை பறிச்ச மாதிரி என்னை முறைச்சாங்க! இப்போ... நீ மதியம் வீட்டுக்கும் போகலைன்னா எனக்கு சங்கு தான்! நீயே பேசிடு தாயே!'' என்றவன்,

கைப்பேசியில் வந்த அழைப்பைக் காதில் வைத்த வாறே, மனைவியின் கன்னம் வருடிச் சென்றான்.

அந்த மென்மைக்கும், அவன் அடுத்துப் பேசிய வார்த்தைக்கும் சம்பந்தமே இல்லாதது போல், ''என்னடா நினைச்சிட்டு இருக்க நீ? நீ இல்லைன்னா... என்னால பிசினஸ் பண்ண முடியாதுன்னு நினைச்சியா?''

''.....''

''என்னமோ கன்டைனர் லாரி சங்கத்துக்கே சொந்தக் காரன் மாதிரி பேசுற?''

''.....''

''நீ இல்லைன்னா எத்தனையோ பேர் எனக்குக் கிடைப்பான்டா... எனக்கு நீ தேவையில்லை! நீ வரவே வேண்டாம்! அங்கேயே இருந்துக்கோ! நாளைக்கு... உன்னோட வீடு தேடி சம்பளப் பாக்கி வந்து சேரும்!'' என்று இரைந்தவன், கைப்பேசியை அணைத்துவிட்டு வெளியே விரைந்தான்.

அவனது அதீதமான கோபத்தில் குழம்பிய ஸ்ரீயும், அவன் பின்னால் வேக எட்டு எடுத்து வைத்தாள்!

லோட் ஏற்றிக் கொண்டிருந்த இடத்திற்குச் சென்ற வன், ''நாதன், இன்னைக்கு ரெண்டு வண்டி லோடும் ஹார்பர் போயே ஆகணுமா?'' என்றான் ஒருவரிடம்.

Optimized by www.ImageOptimizer.net

மேலாளராய் இருக்கும் என்று நினைத்தாள் ஸ்ரீலஷ்மி.

''ஆமா சார்! ஒண்ணு... நியூஜெர்சி போகணும். இன்னொண்ணு நார்வே லோட் சார்! அந்தக் கப்பல் இன்னைக்குக் கிளம்பிடும்!'' என அவர் கூற,

''ஹ்ம்ம். பழனி ஒரு வண்டியை விட்டு விட்டு வந்து அடுத்ததை எடுத்திட்டுப் போக நேரம் இருக்குமா?'' எனக் கேள்வி கேட்டவன்,

''இருக்காது! எனக்குத் தெரிஞ்ச வரைக்கும்... ரெண்டுமே ஒரு மணி நேர வித்தியாசத்தில் கிளம்பும்! ஒரு லோடை ஏத்தி, அதை அங்க செக்யூரிட்டி பாஸ் பண்ணி, அதை இறக்கி... இன்னொண்ணை ஏத்த நேரம் போதாது!'' என்று தானே பதிலும் சொல்லிக் கொண்டான்.

''சரி! இங்க வேற யாருக்கு... கன்டைனர் ஓட்டத் தெரியும்?'' என்றான் பதப்படுத்தப்பட்ட இறால்களை ஏற்றிக் கொண்டிருந்த பணியாளர்களிடம்.

அனைவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க,

''தெரியுமா? தெரியாதா? இதுக்கு... தனி அலொவன்ஸ் தரேன்!'' என்று துரிதப்படுத்தினான் முதலாளி.

ஆசை கண்களில் மின்னிய போதும், யாரும் சரியென ஒப்பவில்லை.

''தெரியாது!'' என்ற பதில் எல்லோரது முகத்திலும் பிரதிபலிக்க,

''இந்த கன்டைனர்ல லோட் ஏத்தியாச்சா?'' என்றான் புகழேந்தி, அங்கு நின்றிருந்த சுமையூர்தியின் பக்கம் கைகாட்டி.



''இன்னும் ரெண்டு பாக்ஸ் வைக்கணும் சார்...'' என ஒருவன் பதில் கூறவும்,

''ஹ்ம்ம் சீக்கிரம்!'' என்று வேகப்படுத்தியவன், சட்டென அதன் ஓட்டுனர் இருக்கையில் தாவி ஏறினான்.

''ஹோ காட்!'' - தன்னை மறந்து கூவிவிட்டாள், ஸ்ரீலஷ்மி.

மேலிருந்து, அவளைப் பார்த்து புன்னகை செய்தவன் ''பயப்படாத ஸ்ரீமா! என்கிட்டே ஹெவி வேஹிகில் டிரைவிங் லைசன்ஸ் இருக்கு! அவசியம் ஏற்பட்டா என்ன வேலைன்னாலும் செய்யத் தெரியணும்ன்னு அப்பா ஏற்பாடு பண்ணது! சோ... நான் நல்லாவே ஓட்டிட்டுப் போய்டுவேன்! பயப்படாதே!'' என்றான் தெம்பாக.

ஆனால், ஸ்ரீக்கு மனசே இல்லை!

''பத்திரமா போயிட்டு வா!'' என்று திரும்பத் திரும்பக் கூறியவளிடம் தைரியப் பார்வை பார்த்தவாறே, துணைக்கு ஒரு பணியாளை ஏற்றிக் கொண்டு, புகழ் நிறுவன வாயிலைக் கடந்தான்.

அவன் சென்று வர எடுத்துக் கொண்ட இரண்டு மணி நேரமும், ஸ்ரீக்கு அங்கே இருப்பே கொள்ளவில்லை!

கோவர்த்தன் அவளது தவிப்பை மாதங்கியடம் உரைக்க, ஸ்ரீயின் கைப்பேசிக்கு அழைத்தார் அவர்.

''என்னமா கண்ணு? புருஷனைக் கண் தேடுதோ?'' என அவர் ஆரம்பிக்கவும்,

''பிக் லாரி அத்தை... சோ சோ பிக்...''

Optimized by www.ImageOptimizer.net

''நிறுத்து. நிறுத்து! தமிழ்ல பேசு... அதென்ன ஆத்திரம் அவசரம்னா இங்கிலீஷ்க்கு டமால்னு தாவிடுறே! தப்பு கண்ணா, தப்பு!''

''ஹய்யோ! இங்கிலீஷ் ஆர் டாமில்... என்னா இப்போ? ரொம்ப ரொம்பப் பெரிய லாரி அத்தை... புக்கள் தனியா டிரைவ் பண்றான்...''

''எவ்வளவு பெரிய லாரியா இருந்தாலும், ஒரு நேரத்தில ஒருத்தர் தான் ஓட்ட முடியும்! ரெண்டு பேர் ஓட்டினா... ரெண்டு பேருக்குமே ராகு காலம்தான்!'' (மொக்கை!)

''ஐயோ! ப்ளீஸ் நா ரொம்ப வொர்ரிடா இருக்கே(ன்)...''

''எதுக்கு? இல்ல எதுக்குன்னு கேட்கிறேன்?'' என்றவர்,

''உன் புருஷனுக்கு அவனோட உயிர் வெல்லக்கட்டி! ஒரு சின்னக் காய்ச்சல் வந்தாலே... இதால பிரைன்க்கு ஏதாவது பாதிப்பு இருக்குமான்னு யோசிக்கிற அளவுக்கு அவனோட உயிர் அவனுக்கு முக்கியம்!''

''ஹ்ம்ம். எனக்கு டென்ஷன் இருக்கு... அத்தை!''

''நோ டென்ஷன், பேபி! போய்... முதல்ல சாப்பிடு! டென்ஷன் எல்லாம் பறந்தே போய்டும்!''

''ம்ஹூம்! புக்கள் வரணும்... அப்றம் தா சாப்பாடு!''

''அவன்... இப்போதைக்கு வரமாட்டான், ஸ்ரீ! லோடை இறக்கி வச்சிட்டு, கப்பலைத் தண்ணில இறங்கித் தள்ளிவிட்டு, கொஞ்ச தூரம் கடல்ல நடந்து போய், அது ஒழுங்கா போச்சான்னு பார்த்திட்டுத் தான் வருவான்!



அவன் ஒரு வேலை பிசாசு! அவனுக்காக வெயிட் பண்றதெல்லாம், சுத்த வேஸ்ட்! போய் சாப்பிடு! அத்தை சொல்றேன் இல்ல!'' என மாதங்கி வற்புறுத்தியபோதும், (கடல்ல இறங்கித் தள்ளி விடுறதை. விட மாட்டீங்க போலவே!)

''ம்ஹூம்! புக்கள் வரணும்!'' என்ற பாட்டையே பாடி, பிடிவாதமாக தன் முடிவில் நின்றுவிட்டாள் ஸ்ரீலஷ்மி.

''ஆனாலும்! உன்னோட பதி பக்தி... அளவு கடந்து போகுது!'' என்று சலித்துக் கொண்ட மாதங்கிக்கும், உள்ளூர பெருமை பொங்குவதைத் தவிர்க்க முடியவில்லை. சிறு சிரிப்புடனே அவர் அழைக்க வைக்க, ஸ்ரீயோ பெரும் தவிப்புடன் அவனுக்காக காத்திருந்தாள்!



# 19

அவன் வருவதற்காக காத்திருந்த இரண்டு மணி நேரத்தில், இருநூறு முறைக்கும் மேலாக கைப்பேசியை எடுத்து, பார்த்தவள், அவனுக்கு அழைக்காமலே வைத்து விட்டாள்!

அவன் வண்டி... ம்ஹூம் வண்டிடிடிடிடிடிடி ஓட்டிக் கொண்டிருந்தது. தான் அந்த நேரத்தில் போன் செய்யப் போக, அவன் ஒரு கணம் தடுமாறி விட்டாலும் ஆபத்தல்லவா? (நல்லவேளை, அவன் விமானம் ஓட்டலை!)

அந்த நேரம் பார்த்து. தினசரிகளில் படித்த விபத்துகள் அனைத்தும் கண் முன்னே பறந்து விரிந்தன.

Optimized by www.ImageOptimizer.net

தொலைக்காட்சியில் பார்த்த செய்திகள் யாவும், விஸ்வரூபம் எடுத்து அவளை ஆட்டிப் படைத்தன.

சிறு வயதில், நெடுஞ்சாலை ஒன்றில் கண்ட லாரி விபத்து, ஏனோ எக்குத்தப்பாய் நினைவு வந்து தொலைத்தது! கூடவே, இரண்டு நாட்களுக்கு, அந்த விபத்திலிருந்து வெளிவர முடியாமல், இரவுகளில் அழுது தவித்ததும்!

ஒருவிதமான மன இறுக்கத்துடன் ஸ்ரீ வாசல் பார்த்திருக்க, புகழ் வந்து சேர்ந்தான். புகழ், தனது பிரத்யேக அறைக்குள் காலடி எடுத்து வைத்த விநாடி, ஸ்ரீ அவனை அணைத்திருந்தாள்.

''ஏய், என்னடா? லட்டு குட்டி ரொம்பப் பயந்துட்டாளா?''

''ஹ்ம்ம், யா! பெரியயயயயயய லாரி! நீ சின்ன பெர்சன்! ரொம்பப் பயமா இருந்துச்சு!'' என்றவள், அவனது கன்னங்களில் மாறி மாறி இட்ட முத்தங்களில் இருந்த தித்திப்பு, முந்தைய முத்தங்களில் இருந்த காதலை விடவும் ஏதோ ஒன்றை தூக்கலாய் தாங்கி இருந்தது!

அது... அக்கறையா? பாசமா? நேசமா? மஞ்சள் கயிறு மேஜிக்கா? உரிமை உணர்வா? இல்லை பெண்களுக்கே உரிய தாய்மை உணர்ச்சியா?! ஏதோ ஒன்று, ஸ்ரீக்குள் அழுத்தமாய் விதைக்கப்பட்டு, அதன் தாக்கம் புகழையும் கட்டிப் போட்டது!

அன்றைய இரவு, ஸ்ரீ அவனது கணவன் தேடல்களை மறுக்கவில்லை!



அவனுடன், ஆழமாய் அழுத்தமாய் ஒன்றிப் போனாள்!

இருவருமே, தங்களுக்கு இடையே ஓர் முழுமை உணர்வை உணர்ந்தனர்!

அவனது 'லட்டு'வில் ஓர் அன்னியோன்யம் ஆனந்தமாய் தொனிக்க,

அவளது ''புக்கள்... மை மேன்'' இல் ''இவன் என்னவன்'' என்ற கர்வம் பொங்கி வழிந்தது!

தாம்பத்திய வாழ்வின் தேடலாய் மட்டும் அமைந்த இரவுகள் மடிந்து போய், ஒருவருள் ஒருவர் லயித்துப் போகும் அழகிய தேன் நிலவுகள் மலர்ந்து விடிந்தன!

காம தேவனின் ஆட்சி நடந்தேறிய கட்டிலில், காதல் இளவரசன் தனது கொடியை ஆழமாய் ஊன்ற, காமத் தேனுடன் காதல் பழம் கலந்ததில், தேவாமிர்தமாய் தித்தித்தது, அக்கூடல்!

வைர மங்கையும், தங்க மகனும் கூடிக் குலாவிய ஓர் இரவின் முடிவில், ''லட்டு... ஐ லவ் யூ! ஐ லவ் யூ! ஐ லவ் யூ!'' என்று தூக்கத்திலேயே புகழ், மனையாளை இறுக்க,

''ம்ம்... நிஜமா?'' என அவனது தாடை தடவினாள், ஸ்ரீ.

''நூறு சதவீதம்! ஐ லவ் யூ... பேபி!''

''என்னை ஃபுல்லா அண்டர்ஸ்டாண்ட் பண்ணிட்டியா?''

''தெரியல!''

''அப்றம் எப்படி? நீ தானே சொன்னே... ஃபுல்லா அண்டர்ஸ்டாண்ட் பண்ணா தா லவ் பாசிபிள்ன்னு...''

''அப்படியா சொன்னேன்? சும்மா தூக்கத்தில் உளறி இருப்பேன்! அதைவிடு! இப்போ... சொல்றேன்! ஐ லவ் யூ!''

''ஹ்ம்ம்! நோ! நீ சொன்னே... சும்மா வேகத்தில சொல்றே சொன்னே...''

''எதை?''

''ஐ லவ் யூ-வை...''

''அப்படியா சொன்னேன்? சரி விடு! அது போன மாசம்! இது இந்த மாசம்!''

(ஜாலக்காரன்டா, நீயி!)

''ம்ம். வெளாடாத!''

''நிஜம் பேபி! நான் விளையாட்டுக்கு சொல்லலை! இந்த நிமிஷம்... உன் மேல எனக்கிருக்க காதல் உண்மை!''

''ம்ம். ஆனா அன்னைக்கு...''

''ஹய்யோ! அன்னைக்கு நான் தான் ஏதோ வேகத்தில தப்பு தப்பா உளறிட்டேன். மன்னிச்சுக்கோ! இப்போ சொல்றது தான் உண்மை! உண்மையைத் தவிர வேற ஒண்ணுமில்லை! என் ஒரே ஒரு பொண்டாட்டி ஸ்ரீ மேல சத்தியம்!''

''ஒரே ஒரு பொண்டாட்டி இருந்தா... உனக்கு கவலையா... யூ... யூ... யூ...'' என அவள், அவன் மீதேறி மாறி மாறி அடிக்கவும்.



''ஐயோ! உன்னோட அடியைக் கூடத் தாங்கிக்கலாம் போல... தமிழைத் தாங்க முடியல... அது பொண்டாட்டி இல்லடி... பொண்டாட்டி... நாங்களே பெஞ்சாதியை... பெண்டாட்டி ஆக்கி... அதை பொண்டாட்டி ஆக்கி இருக்கோம்... நீ அதை இன்னும் சுருக்கி பொண்டாட்டி ஆக்கிடுவே போலவே!'' என அவன் கத்தியதெல்லாம், ஸ்ரீயின் காதில் விழவே இல்லை!

''யூ... யூ... யூ வான்ட் ஒன் மோர் வைஃப்... உன்னைக் கொன்னுடுவேன்... கொலை பண்ணிடுவேன்...'' என்றதோடு, அந்த இரவை விடியச் செய்தாள், ஸ்ரீ.

இரவுகள் இன்பம் நிரம்பிய பொழுதுகளாய் கழிய, பகல்களோ அலுவலகத்தில் கழிந்து போயின!

ஸ்ரீயை, இறால் பண்ணையிலிருந்த இண்டு இணுக் குக்கூட, ஏகத்திற்கு கவர, காலையில் மாமனார் மற்றும் கணவனுடன் கிளம்பிச் செல்பவள்,

மாலையில் ''நா... இந்த அக்கௌண்ட்ஸ் அனலைஸ் பண்ணனும். அப்புறம் வரேன்'' என்று கூடுதல் நேரம் வேலை செய்யும் அளவிற்குச் சென்றாள்.

''அய்யயோ! முதலுக்கே மோசமாகிடும் போலவே!'' என பயந்தே போனான், புகழேந்தி.

கணக்கு விவரம் அனைத்தும் மடி கணினியில் இருக்கிறது என்று ஒருவாறு அவளைத் தேற்றி, தங்களுடன் வீட்டிற்கு அழைத்து வந்த பிறகு தான் மூச்சே சீரானது, அவனுக்கு!

ஒரு வாரம் முழுதும், கணக்கு வழக்குகளுடன் குடும்பம் நடத்தாத குறையாக ஒன்றிப் போன ஸ்ரீ, ஓர்

Optimized by www.ImageOptimizer.net

நாள் இரவு, முழு தூக்கத்தில் முத்தெடுத்துக் கொண்டிருந்த கணவனை எழுப்பினாள்! ஓர் அரும்பெரும் சந்தேகத்திற்காக!

“என்ன லட்டு? இன்னுமா நீ படுக்கலை?” என அவன் தூக்கம் விலகாமலே வினவ,

“நீ என்ன படிச்சிருக்கே?” எனக் கேட்டாள் மனையாள்.

“என்னது?...!” - குழப்பப் பார்வை பார்த்தவனிடம்,

“என்ன ஸ்டடி பண்ண? என்ன டிகிரி?”

“அது எதுக்கு இப்போ?”

“ப்ச்... சொல்லு!”

“எம்.பி.ஏ.”

“எம்.பி.ஏ.-ல என்ன?”

“டபுள் டிகிரி.”

“ஐயோ! என்ன டிகிரி! முதல்ல நீ எழுந்திரு... கண்ணைத் திற... ப்ராபர் பதில் சொல்லு...”

“ஏன்டி கொல்றே?” என்றவன், நிதி மேலாண்மை மற்றும் மனித வள மேலாண்மை ஆகிய துறைகளைக் கூறியதும்,

“ஹோ, ஓகே! படுத்துக்கோ!” எனக் கூறிவிட்டு, கட்டிலை விட்டு நகர்ந்து விட்டாள்.

“அடிப்பாவி! இதுக்காடி... என்னை எழுப்பினே? கொஞ்சம்கூட மனசிலே ஈரமே இல்லைடி உனக்கு!” என்று வாயார வைதவனிடம், தனது ஆஸ்தான முகப் பழிப்பைக் காட்டியவள், மடிகணினியில் மூழ்கியே போனாள்.



எல்லாம் நன்றாகத் தான் சென்று கொண்டிருந்தது! கோடை காலம் வரும் வரை!



# 20

தூத்துக்குடியில் மதிக்கத் தக்க பணக்காரர்களுள் ஒருவராய் இருந்தாலும், வீட்டின் அனைத்து அறைகளிலும் ஏ.சி. மாட்டியிருந்த புகழின் குடும்பம், வரவேற்பறையிலோ உணவுண்ணும் இடத்திலோ அது தேவையென்று உணரவில்லை!

ஆனால், பெரும்பாலும் குளிரிலேயே காலத்தைக் கடத்திய ஸ்ரீக்கு, தூத்துக்குடியில் தகித்த வெப்பத்தைத் தாங்க முடியவில்லை!

வெயிலையே மிகவும் மிதமாய், இந்தியாவின் பல பகுதிகளில் “குளிர்” என்று சொல்லப்படும் அளவிற்கு அனுபவித்துவிட்டு வந்தவளுக்கு, முத்து நகரமாம் தூத்துக்குடியின் ஏறத்தன்மை நிரம்பிய வெப்பம், உடலை வேர்வையில் முக்குளிக்க வைத்தது!

நேரம் காலம் இல்லாமல் துண்டிக்கப்பட்ட மின்சாரம் வேறு, அவளை ஒரு வழி பண்ணியது!

இன்வர்ட்டர் இருந்தபோதும், காத்தாடியை மட்டும் தானே அதில் ஓட்ட முடியும்!

ஸ்ரீயின் வேர்வைக்கு, காத்தாடி எல்லாம் சிறு தூசாக மாறிப் போயின! காத்தாடிக்குக் கீழே அமர்ந்திருந்த

Optimized by www.ImageOptimizer.net

போதும், அவளது முதுகு புறம் முழுதும் ஈரமாய் வேர்வைக் கோலம் பூண்டது!

வரவேற்பறையில் வெப்பத்தில் நின்று விட்டு, சட்டென படுக்கையறையின் ஏ.சி. காற்றுக்குள் போவது வேறு, ஜலதோஷத்தை உண்டு பண்ண, ஒரு வழியாகிப் போனாள் அவள்!

கணவன் வீட்டினர் அனைவரும், ஒரோர் வகையில் பதறிப் போயினர்!

''நீ ரூமை விட்டு வெளியவே வர வேண்டாம்... ஸ்ரீமா! நா சாப்பாடு... தண்ணி... எல்லாமே ரூம்க்கு அனுப்புறேன்!'' என்றார் மாதங்கி.

''ஜெனரேட்டர் கொண்டு வரச் சொல்லியிருக்கேன், ஸ்ரீ. இனிமேல்... எல்லா நேரமும் ஏ.சி. ஓடும்மா! கவலைப்படாதே!'' என்றார் கோவர்த்தன்.

''லட்டு! நீ ஆபீஸ்க்கு வர வேண்டாம்! வீட்டிலேயே ரெஸ்ட் எடு! படுத்தே இருக்கோமேன்னு வருத்தப்படத் தேவையே இல்லை... உன்னோட நிலைமை எல லாருக்கும் தெரியும்! புரிஞ்சுப்பாங்க!'' என்றான் புகழேந்தி.

கூடவே, சூட்டைக் குறைக்கக் கூடிய பதார்த்தங் களாய் பார்த்துப் பார்த்து உண்ணச் செய்தான்.

கோடை காலம் கழியக் கழிய, ஸ்ரீ தேறி வந்தாள் என்று சொல்வதை விடவும், வீட்டினர் காட்டிய அக் கறையில் அவள் மீண்டு வந்தாள் என்று தான் சொல்ல வேண்டும்!

அன்றொரு நாள், வீட்டிற்கு யாரோ விருந்தினர் வந்திருந்தனர்.



ஸ்ரீ அறையை விட்டு வெளியேற முற்படவும், ''ஜனாதி பதியே வந்தாலும், நீ இங்க இருந்து வாத் தேவை யில்லை!'' என்று விட்டான், கணவன்காரன்.

மாமியாரோ, ஒரு படி மேலே போய், வந்தவர்கள் மருமகளைப் பற்றி விசாரித்தபோது ''நம்ம ஊரு வெயில் அவளுக்கு ஒத்துக்கலை... ஒரு பத்து நிமிஷம் வெளிய வந்தாலும், குற்றால அருவி மாதிரி வேர்வை கொட் டுது! அதான், உள்ளேயே இருடா ஸ்ரீன்னு சொல்லிட் டேன்!'' என்றார், தன் பங்கிற்கு.

அதிலிருந்த ஒருவர் ''அதுக்கு தான் உள்ளூர் பொண்ணா பார்த்துக் கல்யாணம் பண்ணணும்ங்கிறது! வெயிலைக் கை காட்டி, உறவுக்காரங்களை அலட்சியப் படுத்த மாட்டா!'' என்று மேதாவித் தனமாய் பேச,

அந்த நேரத்திற்கு மாதங்கி எதுவும் பதில் பேச வில்லை.

அறைக்குள் இருந்து கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீக்கு, கண்ணீர் நெஞ்சை அடைத்தது!

ஆனால், அவளது கண்ணீருக்கு அவசியமே இல்லை எனது போல், ஐந்தே நிமிடத்தில் வேறோர் விஷயத்தில், அவரை மடக்கி, நிமிரவே விடாமல் அடக்கி வைத்தார் மாதங்கி.

''புகழ் அப்பாவோட பெரியப்பா மக வீட்டில தானே, உங்க பொண்ண கல்யாணம் பண்ணிக் கொடுத்தீங்க?'' என்று ஆரம்பித்தவர்,

''ஆமா... பெரிய இடம்... நல்ல மாப்பிள்ளை... சொந்தத் தொழில்... பணத்துக்கு பஞ்சமே இல்லை! அவளோட மாமியாரும், நம்ம பக்கத்துப் பொண்ணா, ரொம்ப

Optimized by www.ImageOptimizer.net

சாந்தமா பொண்ணு வேணும்ன்னு எங்க ஸ்வேதாவை பொண்ணு கேட்டாங்க!'' என்று வந்தவர் நீட்டி முழுக்கவும்,

''ஹ்ம்ம். அப்படியா?'' என்று யோசித்த மாதங்கி,

''அந்த சாந்தமான பொண்ணா... ரவியை (ஸ்வேதாவின் கணவன்) தனிக் குடித்தனம் கூட்டிப் போகப் பார்க்குது? ப்ச், அம்மாகிட்ட இருந்து பிள்ளையைப் பிரிக்கிற... தமிழ் கலாச்சாரத்தில் எப்பையில இருந்து சேர்ந்ததுன்னு தெரியல! இல்லையா அண்ணி?!'' என்றார் மிக மிக நயமான குரலில். (சூப்பர், மாதங்கி மேடம்).

ஸ்ரீக்கு, சிரிப்பை அடக்கவே முடியவில்லை!

உடனே, ஓடிச் சென்று மாதங்கியைக் கட்டிக் கொள்ள வேண்டும் போலிருந்தது!

ஆனால், மாதங்கிக்கு அது மட்டும் போதவில்லை!

''ஆனா... எங்க ஸ்ரீயைப் பாருங்க... வெளிநாட்டில வளர்ந்திருந்தாலும், எங்களை விட்டுத் தனியா போகணும்ங்கிற எண்ணம் சுத்தமா இல்ல! உறவுகளோட வாழறதை ரொம்பவே ரசிச்சு வாழ்றா!'' என்றார் உண்மையாக.

கூடவே, ''அவளோட நேரத்தை என்னமா மேனேஜ் பண்ணிப்பா தெரியுமா? வீடு... வீட்டு வேலை... ஆபீஸ்... கார் ஓட்டுறது... படம் வரையிறதுன்னு எல்லாத்திலையும் தூள் கிளப்புவா!''

''ஹான்! முக்கியமா தமிழ் கத்துக்கிறது! அவளோட விடா முயற்சிக்கு... நானும் என் வீட்டுக்காரரும் பரம விசிறிகள்! செய்றதைத் திருந்தச் செய்யணும்ங்கிற



எண்ணம் அவகிட்ட நிறைய இருக்கும்!'' (விடா முயற்சி, விஸ்வரூப வெற்றி!)

''அவகிட்ட எனக்குப் பிடிச்ச இன்னொண்ணு... எதையும், நேரடியா சொல்லிடுவா! மனசுக்குள்ள போட்ட அழுத்தி வச்சுக்கிட்டு, ஒரு நாள் வெடிக்கிறதை விட, அப்பப்போ அவளுக்குப் பிடிச்சது... பிடிக்காததை சொல்லிடுவா! வெளிப்படையா இருக்கிறதால எந்தவிதமான ஈகோ பிரச்னையும் எங்களுக்கு வரதே இல்லை!''

''மொத்தத்தில, அவ என்னோட மருமக இல்லை!'' என்றவர்,

சிறு இடைவேளை விட்டு ''மக கூட இல்லை!'' என்றார்.

அனைவரும் (அறைக்குள்ளிருந்த ஸ்ரீ உட்பட) திகைத்துக் கொண்டிருக்க, ''அவ என்னோட பேத்தி... அவ்வளவு செல்லம்!'' என்றார் முத்தாய்ப்பாய்!

அதற்கு மேல், ஸ்ரீயால் அறைக்குள் இருக்க முடியவில்லை.

வேகமாய் வெளியே வந்து, அவரை இறுக அணைத்து, ''ஐ லவ் யூ... அத்தை! லவ் யூ சோ... சோ மச்!'' என்றாள், கன்னத்தில் ஈர முத்தங்களைப் பரிசாய் நிரப்பி!

இந்த அன்பில், ஸ்ரீ ஒருவாறாய் தேறி வர, கோடை காலமும் கொஞ்சம் கொஞ்சமாய் மாறி இலையுதிர்காலமாய் கனிந்தது!

ஆனால், அக்கால நிலை மாற்றங்கள் ஸ்ரீயிடம் நல்ல விளைவுகளை இட்டு வரவில்லை! முற்றிலும் மாறாய், அவளைப் படுத்தி எடுத்தன!

Optimized by www.ImageOptimizer.net

ஒரு நாள் இரவு, ஆழ்ந்த நித்திரையில் இருந்த புகழை, ஸ்ரீயின் கரங்கள் எழுப்ப,

''என்ன பேபி? தமிழ்ல ஏதாவது சந்தேகமா? நாளைக் குக் காலையில... உங்க ஆருயிர் அத்தைக்கிட்டே கேட்டுக்கோ! ப்ளீஸ்!'' என்றான் புகழ், அரை கண் விழித்து.

''இல்ல... எனக்கு... எனக்கு...''

''தூங்கு பேபி!''

''உடாம்பு முலுசும்... இட்ச் ஆகுது (அரிக்குது)...''

''என்னது?''

''அதான்... சொறியுது... ரொம்ப..'' - அக்குரலில் வேதனையின் வடிகால் தெரியவும், உடனே எழுந்து அமர்ந்தான் புகழேந்தி.

விளக்கைப் போட்டுப் பார்த்தால், உடம்பு முழுவதும் சிகப்பு சிகப்புத் திட்டுக்களாய் இருந்தது!

''என்ன பேபி இது? ஏதாவது பூச்சி கடிச்சதா?''

''இல்லையே...''

''காலையில தோட்டத்தில ஏதோ பண்ணிட்டு இருந்தியே...''

''இல்ல... அப்போ சொறியல... இப்போ தான்... ரொம்ப இட்சிங்...'' என்றவள்,

''இட்சிங்க்கு தமில்ல என்னா?'' என்றாள், அந்த நேரத்திலும்.

''ரொம்ப முக்கியம்!'' என்று சலித்துக் கொண்டவன், ''அரிப்பு... அரிக்கிறது!'' என்றான் பொறுமை இழந்து.



உடனேயே ''வேற ஏதாவது புதுசா சாப்பிட்டியா?'' என விசாரணையை, விட்ட இடத்திலிருந்து துவங்கினான்.

''ம்ஹூம்!'' - உதடு பிதுக்கியவாறே, அவள் கையைச் சொறியவும்,

''ஷ், பேபி! சொறியாத!'' என அதட்டி, பட்டென அவளது கையைத் தட்டி விட்டான்.

''முடியல...''

''சரி... இப்போதைக்கு ஒரு மாத்திரை தரேன்! போட்டுக்கோ... காலையில முதல் வேலையா டாக்டர்கிட்ட போவோம்!'' எனக் கூறி, ஒரு மாத்திரையை அவளை விழுங்கச் செய்தான்.

''நீ என்ன டாக்டரா? நீயே மாத்திரை தரே? அமெரிக்கால எல்லாம்... பிரிஸ்க்ரிப்ஷன் இருக்கணும்... அப்போதான் மருந்து தருவா...'' எனக் கண்களை அகல விரித்தவளிடம்,

''சும்மா பினாத்தாம... தூங்கு!'' என்றான் கணவன், அவளை ஒரே அமுக்காய் கட்டிலில் அமுக்கி, அந்த வேகத்திலேயே கண்களையும் வருடி.

ஒரு வழியாய் அவள் உறங்கிவிட்ட போதும், புகழ் நினைத்தது போல் அவளது அரிப்பு ஒரு நாளிலோ... இரண்டு நாளிலோ சரியாக வில்லை! ஏன் ஒரு வாரத்தில்கூட, அதற்கு விடிவு வரவில்லை!

வெயிலினால் வந்தது என்றார்கள்!

பூச்சி கடி என்றார்கள்!

ஒவ்வாமை என்றார்கள்!

Optimized by www.ImageOptimizer.net

ஏதோ ரசாயனத்தைத் தொட்டு விட்டாள் என்றார்கள்!

ஒரு சிலருக்கு, குளிர்ந்த பொருட்களை அடிக்கடி சாப்பிடுவதினால் வரும் என்றார்கள்!

என்னென்னமோ காரணம் சொன்னார்கள்! ஆனால், ஸ்ரீக்கு குணம் தான் ஆகவில்லை!

மருத்துவர்கள் எழுதிக் கொடுத்த மருந்துகளை, அவளது மேனியில் தடவும் போது, புகழுக்கு நெஞ்சமெல்லாம் வலிக்கும்!

''தன்னால் தானே! தன்னால் தானே!'' என்ற பரிதவிப்புக்குப் பிரதிபலனாய் அம்மருந்துகள் நல்லபடியாய் வேலை செய்திருந்தாலும் பரவாயில்லை! ம்ஹூம், ஸ்ரீயின் உடல்நிலையில் எந்த முன்னேற்றமுமில்லை!

அதை விடவும், ஒரு சிலர் எழுதிய மருந்துகளால், அரிப்பின் தாக்கம் அதிகரிக்க வேறு செய்தது!

அதன் உச்சமாய், ஒரு நாள் இரவு ''என்னால முடில... புக்கள்...'' என்று முனங்கியவளைத் திருப்பிப் பார்த்தால், கன்னம் இரண்டும் இரண்டு தேங்காயை வைத்தது போல் உப்பி இருந்தது!

அதன் தீவிரம் தாள முடியாமல், அதை மென்மையாய் வருடிக் கொண்டிருந்த ஸ்ரீயின் கரங்களை விலக்கித் தன் கன்னத்தோடு வைத்துக் கொண்ட புகழ், அழுதே விட்டான்!

''என்னால... உன்னை இப்படிப் பார்க்க முடியல, லட்டு!''

''கடவுளே! உன்னை இவ்வளவு தூரம் கஷ்டப்படுத்தவா கல்யாணம் பண்ணிட்டு வந்தேன்?''



''ஐயோ! என் பட்டு பேபியோட முகம் எப்படி வீங்கிப் போச்சு! சை... உன்னை அங்கிருந்து கூட்டிட்டு வந்தது... இதுக்காகவா? என்னால தாங்க முடியலையே? கடவுளே!'' என்று மருகியவன்,

''நீ... அமெரிக்காவுக்கே போய்டு, லட்டு!'' என்றான் தீவிர முகபாவத்துடன்.



# 21

ஒப்பவும் இல்லாமல், மறுக்கவும் இல்லாமல், அவனை நிமிர்ந்து பார்த்தவள், கண்ணோடு கண் பொருத்தி, விழிகளால் அவனை விழச் செய்து, காதலின் ஸ்பரிசத்தைக் கண்கள் வழி அவனுள்ளே செலுத்தி, ''நீ?'' என்றாள் மெல்ல.

''நான்?'' என்று ஒரு நிமிடம் யோசித்தவன்,

''தெரியல... என்ன பண்றதுன்னு புரியலை!'' என்றான், குழப்பமாக.

அகலவே மாட்டாதவள் போல், அவனது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீயைக் கண்டவனுக்கு, தாய் முகம் காணும் சிறு பிள்ளையாய் தெரிந்தாள் மனையாள்! அக்கண்களில், வார்த்தையால் வடிக்க முடியாத ஓர் எதிர்பார்ப்பு! ஓர் விண்ணப்பம்!

நெஞ்சம் உருகிப் போயிற்று, கணவனுக்கு!

''என்னால உன்னை விட்டுட்டு இருக்க முடியாது, ஸ்ரீ! அப்பாகிட்ட கம்பெனியை விட்டுட்டு, அங்க

Optimized by www.ImageOptimizer.net

வந்துடுறேன்!'' என்றான், அவளை நெஞ்சோடு அணைத்து.

சற்று நேரம், கணவனின் நெஞ்சுச் கூட்டில் இதம் கண்டு படுத்திருந்த ஸ்ரீ, மெல்லத் தலை நிமிர்த்தினாள்.

வலது கையால் அவனது தாடையை அழுந்தப் பிடித்து, கன்னத்தில் ஓர் முத்தம் வைத்தவள்,

''இல்ல. நீ வரவேண்டாம்!'' என்றாள் தீர்க்கமாய்.

அவன் ஏதோ சொல்லத் துவங்கவும், ''நானும் போக வேண்டாம்!'' என்றாள் அதை விட தீர்க்கமாய்.

''ஏன்?'' என்ற கேள்வியை அவனது உதடுகள் உதிர்க்கும் முன்னர், கண்கள் திகைப்பில் அகல விரிந்திருக்க, இரு கண்களிலும் தலா இரண்டு என்ற கணக்கில் முத்தங்களைப் பரிமாறியவள்,

''எனக்கு இங்க பிடிச்சிருக்கு...''

''உன்னை... அத்தையை... மாமாவை...'' என ஆரம்பித்தவள்,

''என்னைவிட... எனக்கு நீ ஹாப்பியா இருக்கணும்...''

புகழின் இதழ்கள் எதற்காகவோ பிரியவும், ''நா கம்ப்ளீட் பண்ணிடுறேன்!'' என்று அவனது உதடு மூடியவள்,

''எனக்காக நீ அமெரிக்கா வந்தா... நா ஹாப்பியா இருப்பே... ஆனா நீ!'' எனக் கேட்டுக் கேள்வியாய் நிறுத்தினாள்.

''ஐ நோ... உனக்கு இந்தக் கம்பெனி எவ்ளோ பிடிக்கும்னு...''



''நெறைய வொர்க் இருந்தா கூட... யூ லவ் டூயிங் இட்!''

''என் மேல வச்ச லவ்க்காக... உன்னோட ஆம்பிஷன்... ஆம்பிஷன்னா லட்சியம் தானே?'' என்றவள், அவன் சட்டென பூத்தப் புன்னகையுடன் தலையசைக்கவும்,

''ஹான்... என் மேல வச்ச லவ்க்காக... உன்னோட லட்சியம் கெடக்கூடாது... நா அதை லைக் பண்ணலை...''

''அப்றம்... ஒரு முக்கியம் விஷயம்... நா இதை சொன்னா மணி... அதாம் பணம்காக நா பேசுறே நினைக்க மாட்டே தானே?'' என அவனிடம் உறுதி கேட்டவள், அவன் மறுப்பாய் தலையசைக்கவும்,

''ஹான்! இங்க பிரான் பிசினஸ்ல... எவ்ளோ டர்ன் ஓவர்! க்ரோஸ் அண்ட் க்ரோஸ்!'' என்று வியந்தவள்,

''அமெரிக்கா வந்தா... உனக்கு பிக் ஜாப் கிடைக்கும்! எம்.பி.ஏ. படிச்சா... பிக் சாலரி கூட கிடைக்கும்... ஆனா... இங்க கிடைக்கிற பணம்... நோ சான்ஸ்!'' என அவள் உதடு பிதுக்கிய அழகில்,

''இதைத்தான் அன்னைக்கு நடு ராத்திரியில ஆராய்ச்சி பண்ணிட்டு இருந்தியா?'' என்று மூக்கைத் திருகினான், புகழ்.

''ஹ்ம்ம். யா! ஒரு டைம்... அமெரிக்கா போனும் பீல் ஆகுது! நெக்ஸ்ட் டைம் இங்கே இருக்கலாம் திங்க் பண்றே... அதான்... ரிசர்ச் பண்ணினே...'' என்று விளக்கியவள்,

''அப்புறம்... அடுத்து முக்கியம் விஷயம்... அத்தை!'' என்றாள் கண்ணில் பாசத்துடன்.

Optimized by www.ImageOptimizer.net

''அத்தை லவ்ஸ் மீ... அத்தைக்கு என் மேல நெறைய... நெறைய பாசம்... ஹ்ம்ம்... நம்... நம்பிக்க...''

''அவங்களை விட்டு எப்படிப் போறது?'' என்று அவனையே எதிர்கேள்வி கேட்டவள்,

''நா இங்கவே இருக்கேன்... ப்ளீஸ்... ப்ளீஸ்... ப்ளீஸ்...'' என்றாள் கணவனின் இடுப்பைக் கட்டிக் கொண்டு.

''என்னமோ... நான் உன்னைத் துரத்தி அடிச்ச மாதிரி பேச்சைப் பாரு. பேச்சை!'' என்று செல்லம் கொஞ்சியவன்,

''ஆனா... உன்னோட உடம்பு இருக்கிற நிலைமையை என்னால பார்க்க முடியலையே, பேபி! எப்படி ஆகிடுச்சு, பாரு!'' என்றான் வருத்தம் மேலோங்க.

''சரி ஆகிடும்...'' என்றவளின் குரலிலும், அவ்வளவாய் நம்பிக்கை இருக்கவில்லை. உடம்பெல்லாம் அரிப்பெடுத்து, ரணமாய் வலித்தது!

''சரி... பேபி! இப்போ தூங்கு! நாளைக்குக் காலையில, திருநெல்வேலில ஒரு ஸ்கின் டாக்டர் இருக்காராம். அவர் கிட்ட போய்டலாம்!'' எனக் கூறி, அவளைப் படுக்க வைத்த புகழ், தன்னை நெருக்கிக் கொண்டு படுத்திருந்த மனைவியின் முகத்தை மெல்ல வருடிக் கொடுத்தான். சிறிது வேதனையாவது போக்கலாமே என்று எண்ணினான் போலும்!

சற்று நேர அமைதிக்குப் பின், ''ஹே கேட்கவே மறந்து போய்ட்டேன் பாரேன்! உனக்குத் தான் இங்க இருக்கிறவங்களை... அதாவது மக்களைப் பிடிக்காதே! நாகரீகம் இல்லாதவங்கன்னு சொல்லிட்டு திரிவ!



இப்போ... என்ன? அவங்களோட வாழலாம்ன்னு முடிவு பண்ணிட்டே?'' என்றான் சிரிப்புடன்.

''எல்லா நாட்லும் ஸ்டுப்பிட் ஆள் இருப்பாங்க. இப்போ... ரீசண்ட்டா அமெரிக்கால ஒரு ஸ்கூல்ல, குட்டிக் குட்டிப் பசங்களை ஷூட் பண்ணி இருக்கான் ஒரு ராஸ்கல்! எங்க இருந்தாலும்... நாம இப்படி ஸ்டுப்பிட் ஆள் பார்க்கத் தான் வேணும்... நாம எப்படி அந்த சொசைட்டில அட்ஜஸ்ட் பண்ணி இருக்கோம் தா பார்க்கணும்!'' என அவள் விளக்கிய போது, பெரிய மனித வள மேதையிடம் பேசுவது போல் தோன்றியது புகழுக்கு!

''இந்தக் குட்டி மூளைக்குள்ள எம்புட்டு அறிவு! எம்புட்டு அறிவு!'' என்று சிலாகித்தவன், அவளது தலையில் மெல்ல முட்டி நிமிர்ந்தான்.

மேலும், ''இங்கு வாழ்ந்தாலும் வாழ்க்கை நிரந்தரமற்றது! அதை, மனதிற்குப் பிடித்த இடத்தில் வாழ்ந்து விட்டுப் போகலாமே!'' என்று ஸ்ரீ ஆங்கிலத்தில் வேகமாய் கூறவும்,

''உன்னோட மனசுக்குப் பிடிச்ச இடம் அமெரிக்கா தானே?'' என்றான் புகழ், அவளது பூனை முடி கோதி.

''ஹ்ம்ம். யா! நா ஒரு பெர்சன்காக... நீ... அத்தை... மாமா எல்லாம் கவலைப்படணும். ஆனா... நா இங்க இருந்தா... எல்லாருமே ஹாப்பியா இருக்கலாம். நானும் சேர்த்து ஹாப்பியா இருப்பே(ன்)!'' எனச் செல்லம் கொஞ்சியவள்,

''உனக்காக இங்க இருக்கே இல்ல... சோ... நீ என் கூட ஃபைட் பண்ண மாட்ட... பேபி மாதிரி பாத்துப்ப... நெறைய சாக்லேட் வாங்கித் தருவ... நெறைய டிரஸ்...

Optimized by www.ImageOptimizer.net

நெறைய ஜுவல்ஸ்... ஹாப்பி! ஹாப்பி!'' எனக் குதூகலித்தவள், நிமிட நேரத்தில் குழந்தையாய் மாறிப் போனாள்!

''கடைசியில எல்லாம் சுயநலம்!'' என்று வாய் விட்டுச் சிரித்த போதும், புகழின் மனதில் சந்தோஷமே நிரம்பி இருந்தது! அதே நிம்மதியுடன், மெல்ல அவளை உறங்க வைத்தான்.

ஆனால், புகழும் ஸ்ரீயும் எண்ணியது போல், அவளது அரிப்போ வீக்கமோ குணமாகவே இல்லை!

ஒரு கட்டத்தில், மருத்துவரை நம்புவதை விடவும் கடவுளை நம்பும் நிலைக்கு அனைவரும் செல்ல, அந்த நேரம் பார்த்து கந்தர் சஷ்டி வந்து சேர்ந்தது!



## 22

திருச்செந்தூருக்கு அருகே வசிப்பவர் என்பதால், முருகன் மேல் அலாதி பக்தி கொண்டிருந்த மாதங்கி, வருடம் தோறும் கந்தர் சஷ்டி விரதம் இருப்பார். அழகன் முருகன், சூரனை வதம் செய்த திருச்செந்தூருக்கே, சூரசம்ஹாரம் பார்க்கவும் செல்வார்!

''நாளையில இருந்து, நான் சஷ்டி விரதம்!'' என்று மாதங்கி கூறியதும்,

புகழும் ''நானும் இந்த முறை விரதம் இருக்கிறேன்மா!'' என்றான் அறிவிப்பாய்.



''வாட் ஃபாஸ்டிங்கா?'' என்ற ஸ்ரீ கேட்கும்போதே,

''விரதம்ன்னு ஆரம்பிச்சுட்டா ஆறு நாளும் சிரத்தையா இருக்கணும் புகழ்! கடவுள் விஷயத்தில விளையாடக் கூடாது!'' என்று மாதங்கி எச்சரித்தார்.

''என்னது? ஆறு நாளா? சிக்ஸ் டேசா? சாப்பிடாம எப்படி இருப்பே? வேணாம் புகல்...'' என்று ஆணத்தரமாய் ஸ்ரீ மறுக்கவும்,

''இல்ல, நான் இந்த முறை விரதம் இருக்கத்தான் போறேன்! இவளோட பிரச்னை குணமாகுறதுக்கு டாக்டரை நம்புறதை விடவும் முருகன் மேல நம்பிக்கை வச்ச, கண்டிப்பா ஒரு நல்ல வழி கிடைக்கும்!'' என்றான், புகழ் இருமடங்கு நம்பிக்கையுடன்.

''எனக்கு சரியாக... நீ ஏன் சாப்பிடாம இருக்க?'' - ஸ்ரீயால் இதை ஒப்புக் கொள்ளவே முடியவில்லை. ஒரு மனிதனால், ஆறு நாட்கள் உணவுண்ணாமல் இருக்க முடியுமா? இவன் என்ன லூசா?

''நீ கொஞ்ச நேரம் சும்மா இரு, ஸ்ரீ!'' என்று அவன் அடக்கும்போதே,

''நோ! மாட்டேன்! நீ ஃபாஸ்ட் பண்ணா எனக்கு எப்படி சரியாகும்? ப்ளீஸ் வேணாம் புகல்!''

''சரியாகும்! முருகன்... இதைக் குணப்படுத்த ஒரு வழி காட்டுவார்!'' என்று புகழ், மறுத்துப் பேசத் துவங்கியவளைக் கையமர்த்தி,

''ஒரு வாட்டி, அப்பாக்கு கிட்னி ஸ்டோன் இருக்குன்னு டாக்டர் சொன்னார். ரொம்ப வலி ஜாஸ்தியா, ஆபரேஷன் அளவுக்குப் போகும்ன்னு சொல்லியிருந்தார்! ஆனா... அம்மா சஷ்டி விரதம் இருந்து, சூரசம்

Optimized by www.ImageOptimizer.net

ஹாரம் பார்த்திட்டு வந்த மறுநாள், டாக்டர்கிட்ட போறோம்... கல்லெல்லாம் கரைஞ்சு போச்சு!''

''ஹூசா நீ? மாமா டாப்லெட் சாப்பிட்டு இருப்பாங்க... அதான் சரியாச்சு!''

''முன்னாடியும் அதே டாப்லெட் சாப்பிடத் தான் செய்தாங்க!''

''டாப்லெட் எல்லாமே... லாங் டெர்ம் தா சரியாகும்!''

''என்னமோ ஒண்ணு! என்னோட நம்பிக்கை... முருகனால் தான்னு! நீ ஏன், நடுல குழப்புறே?''

''உனக்கு ஹனுமான் தானே பிடிக்கும்? இப்போ... என்ன முருகன்?''

''இப்பவும் ஹனுமான் தான் பிடிக்கும்! அதுக்காக மித்த சாமியைக் கும்பிடக் கூடாதா என்ன?''

''சரி... அப்போ ஹனுமானுக்கு ஃபாஸ்ட் பண்ணு! எதுக்கு... சிக்ஸ் தேச பண்றே?'' - என்ன சொல்லி யாவது, அவன் ஆறு நாட்கள் விரதம் காப்பதைத் தடுக்க வேண்டும் ஸ்ரீக்கு!

ஆனால், அவன் சொன்ன அடுத்த வார்த்தையில் கப்சிப் என அடங்கிப் போனாள் மனையாள்.

''இருக்கலாமே! இது ஆறு நாள்! அது நாற்பத்தஞ்சு நாள்! என் பொண்டாட்டிக்காக எத்தனை நாள் வேணும் னாலும் இருக்கலாமே!'' என அவன், சாதாரணமாய் கூறவும் ஆறு நாளே மேல் என்று வாய் மூடிக் கொண் டாள் ஸ்ரீலஷ்மி.

சஷ்டி விரதத்தின் முதல் இரண்டு நாட்களும், மாமி யாரையும் கணவனையும் விட ஸ்ரீலஷ்மி உருகி மறுகிப் போனாள்!



அவர்கள் பசி துறக்கிறார்கள் என்ற எண்ணத்தை விடவும், அது ''தனக்காக... தன் உடல் நிலைக்காக... தன் நலனுக்காக!'' என்ற எண்ணமே, அவளை சந்தோஷமும் கவலையும் ஒருங்கே பட வைத்தது!

அவர்களுக்காகவேனும், தனது அரிப்பு குணமாகிவிட வேண்டும் என்ற வேண்டுதலுடன், அவர்களுடன் சேர்ந்து தினமும் ஆறு முறை சஷ்டி கவசம் படித்தாள்.

''அம்மா... இவ சஷ்டி கவசம் படிக்கிற அழகைப் பார்த்திட்டு, முருகனே ஓடி வந்து... ''பக்தாய், உன் நோயை யாம் குணமாக்குவோம். தயவு கூர்ந்து, என் இறையடி தேடும் கவசத்தை தாங்கிலத்தில் படிக்காதே''ன்னு சொல் லப் போறார்'' என்று புகழ் கிண்டல் செய்ததும்,

''போடா போடா! உன்னோட எருமைத் தமிழை விட, என் மருமகளோட மழலைத் தமிழ்ல பாடுற கவசத்தைத் தான் முருகன் விரும்புவார்! நீ வேணும்னா பார்த்திட்டே இரு... இன்னும் ரெண்டு நாளில் அவளுக்கு சரியாகுதா இல்லையான்னு!'' என்றார் மாதங்கி, மருமகளைத் தோளோடு அணைத்து.

மூன்றாம் நாள் காலையில், புகழின் கண்களில் சிறு சோர்வு தெரியவும், ஸ்ரீக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது!

குளித்து முடித்ததும், சாமி படத்தின் முன்னே சென்று, அங்கிருந்த சந்தனத்தை எடுத்து முகத்தில்... கைகளில்... காலில் என எல்லா இடத்திலும் தடவியவள், ''ப்ளீஸ்... இதை சரி பண்ணிடு!'' என்று மனதார கை கூப்பி நின்ற வேளையில், வரவேற்பறையில் தொலைபேசி குரல் கொடுத்தது.

Optimized by www.ImageOptimizer.net

கண்ணைத் துடைத்துக் கொண்டு, அதை எடுத்தவள், அந்தப் பக்கம் இருப்பது இலக்கியா என்று அறிந்ததும் ''ஹே இலா! எப்படி இருக்கே?'' என்றாள் சந்தோஷமாய்.

''நான் இருக்கிறது இருக்கட்டும்! உனக்கு... இங்க ஒரு பெரிய டாக்டர்கிட்ட அப்பாயிண்ட்மென்ட் வாங்கியிருக்கேன். எம்.எம்.சி-ல டெர்மடாலஜி டிபார்ட்மென்ட்ல பெரிய போஸ்ட்ல இருக்கார். நாளைக்கு இங்க இருக்கணும். கிளம்பி வா!'' என்றாள் அவள் வேகமாய்.

''நாளைக்கா? புகல்... ஃபாஸ்ட் பண்றான்...'' என்று ஸ்ரீ தயங்கவும்,

''அவன் தானே விரதம் இருக்கான்... நீ என்ன பண்ற அங்க? கூடவே, கூஜா தூக்குரியா? நானே கஷ்டப்பட்டு, அவரைப் பிடிச்சு... இவரைப் பிடிச்சு ஒரு நாளை வாங்கி வச்சிருந்தா?'' என்று பல்லைக் கடித்தவள்,

''நாளைக்குக் காலையில பதினோரு மணிக்கு அங்க இருக்கணும்! நீ வர!'' என்று தொலைபேசியை வைத்துவிட்டாள்.

ஸ்ரீ, விஷயத்தைக் கூறியதும், கோவர்த்தன் அவளை அழைத்துக் கொண்டு விமானத்தில் சென்னை செல்வது என்றும், புகழும் மாதங்கியும் கந்தர் சஷ்டி விழாவுக்காக திருச்செந்தூர் போவது என்று முடிவானது!

ஓர் நம்பிக்கையில்லாத மனதுடனே, கிளம்பிய ஸ்ரீக்கு அங்கே ஓர் ஆச்சரியம் காத்திருந்தது!

அவர்கள் பார்க்கச் சென்ற தோல் மருத்துவர், ஓராயிரம் பரிசோதனை செய்யச் சொல்லவில்லை! நூற்றியெட்டுக் கேள்விகள் கேட்கவில்லை! இதைச் சாப்பிட்டாயா?



அதைச் சாப்பிட்டாயா? என்று குடையவில்லை! இந்த மருந்தைப் போடு... இந்த மாத்திரையைச் சாப்பிடு என்று படுத்தவில்லை! இந்த உணவைத் தொடவே கூடாது என்று உத்தரவு போடவில்லை!

அவர் கேட்டதெல்லாம் ஒரே ஒரு கேள்வி! ''உங்க பல்லுல எதாவது பிரச்னை இருக்கா?'' என்பதுதான். (துக்கினியூண்டு பல்லுலையா இம்புட்டு பிரச்சனையும்? அடக்கடவுளே!)

ஸ்ரீ முழிக்கவும், அவரே அங்கிருந்த பல் மருத்துவப் பிரிவிலிருந்து மருத்துவரை அழைத்து, ஸ்ரீயின் வாயைப் பார்க்கச் சொன்னார்!

என்ன அதிசயம்! மருத்துவர் சொன்னது போலவே இருந்தது!

''கடவா பல்லு ரெண்டும் பூச்சி வந்திருக்கு சார். இன்னும் கொஞ்ச நாள் போனா... வேர் வரை போயிருக்கும்!'' என்றார் பல் மருத்துவர்.

''அதான், எல்லா பிரச்சனைக்குக் காரணம்!'' என்றபெரியவர்,

''இந்தப் பல்லு இரண்டையும் எடுத்திடுங்க! அரிப்பு உடனே நின்னுடும்!'' என்றாரே பார்க்கலாம், ஸ்ரீக்கு ஏனோ சிரிப்பாய் தான் வந்தது.

''ஒரு பல்... கேவலம் ஒரு கல்... இத்[illegible] பிரச்சனைக்கு எப்படி காரணமாய் இருக்க முடியும்'' என்று மனதில் தோன்றியதைக் கேட்க வாயெடுத்தவள், மருத்துவரின் வயதையும் அனுபவத்தையும் மனதில் வைத்து கேள்வியை மாற்றிப் போட்டாள்.

Optimized by www.ImageOptimizer.net

"பட்... டாக்டர்... எனக்கு டூத் பெயின் வரவே இல்லையே?" என அவள் விசாரிக்கவும்,

"அப்பப்போ வலி இருந்திருக்கும்... அந்த பூச்சி வேர் வரைக்கும் போயிருந்தா, உங்களால ஒரு நிமிஷம் கூட படுத்திருக்க முடியாது! வலியிலேயே பெரும் வலி, பல் வலி தான்மா! உயிர் போனா கூட பரவாயில்லைன்னு தோண வச்சிடும்!" என்றவர், (இதனால், நான் சொல்ல வருவது என்னவென்றால், அனைவரும் பல்லை நன்றாக பார்த்துக் கொள்ளுங்கள்!)

அவளது சந்தேகத்தைச் சரியாகப் படித்த அந்த அனுபவஸ்தர், "உங்களோட அரிப்புக்கு எந்த மருந்தும் வேண்டாம்! பல்லை எடுத்திட்டு, ரெண்டு நாளைக்கு வலி மாத்திரை தருவாங்க. அதைப் போடுங்க போதும்! அரிப்பு இருந்த இடம் தெரியாம போகுதா இல்லையா பாருங்க? அப்படி போகலைன்னா... நான் என்னோட பதவியை ராஜினாமா பண்ணிடுறேன்!" என்றார், ஆணித்தரமாக.

ஒரு விதமான தயக்கத்துடனே, பல் மருத்துவப் பிரிவுக்குச் சென்றார் ஸ்ரீலஷ்மி!

பல்லை எடுக்கும்போது, வலியே இல்லாமல் இருக்க, "வலிக்கவே இல்லையே?" என அவள் வினவவும்,

"அதான் பாதி பல்லை பூச்சியே சாப்பிட்டுடுச்சே! மீதி இருக்க... துண்டு துணுக்கைத் தானே எடுக்கிறேன்!" என்றார் மருத்துவர், சிறு புன்னகையுடன்.

அசடு வழிய தலை குனிந்தவள், அதன் பின்னர் வேறெதற்கும் வாயைத் திறக்கவில்லை! திறக்க முடியவில்லை! மரப்பூசியின் வேகம் குறையக் குறைய, வாய்க்குள் கடப்பாறையை வைத்தது போல் வலித்தது!



பல் மருத்துவர் எழுதிக் கொடுத்த மாத்திரையைப் போட்டுக் கொண்டு படுக்கப் போனவள், சைகையில் புகழுக்கு அழைப்பு விடுக்குமாறு இலாவிடம் வேண்டினாள்.

அண்ணன் கைப்பேசிக்கு அழைத்த இலா, அவன் எடுத்ததும் "ஹலோ புக்கி! உன்னோட லட்டு பேசணுமாம்!" என்றாள்.

"ம்ஹூம்..." என மெல்ல முனங்கியவள், வாயில் கை வைத்து "வலிக்குது" என்றாள் சைகையில்.

"அவளுக்கு வலிக்கும் எருமை! நீ போனை வை..." என அண்ணன் வைய,

"எனக்கு இதுவும் வேணும்... இன்னமும் வேணும்! அவ தான்... சும்மா போன என்னைக் கூப்பிட்டு உன்னைக் கூப்பிடச் சொன்னா! நீ என்னடான்னா? ராஸ்கல்! உன்னை அடிக்க முடியாது... அதனால உன் பொண்டாட்டியை அடிக்கவா?" என்றாள் தங்கச்சி, கோபத்துடன்.

"ஹே வேண்டாம்! வேண்டாம்! பாவம்... அது ஒரு பச்சை மண்ணு! உன்னோட முரட்டு நாத்தனார் தனத்தை அவகிட்ட காட்டாத!" என்றவன்,

"லட்டு! ஏற்கனவே ரெண்டு பல் அவுட்டு! எதுக்கு வீணா... அவளை வம்புக்கு இழுப்பானே? அடி வாங்குவானே? போ, போய் படு!" என்றான் அக்கறையாக.

"ம்ம்... ம்ம்" என மண்டையாட்டியவள், "சாக்லேட்... கட் பண்ணக்கூடாது... சொல்லு!" என்றாள் மிக மிக மெல்லிய குரலில், மெல்ல உதடு பிரித்து.

"ஆரிய கூத்தாடினாலும் காரியத்தில கண்ணு!" என்று அண்ணியின் கன்னம் கிள்ளிய இலக்கியா, "உன

Optimized by www.ImageOptimizer.net

பொண்டாட்டிக்கு தினம் அஞ்சு சாக்லேட் வேணுமே வேணுமாம்!'' என்றாள் தமையனிடம்.

''அடிங்க! பிச்சிடுவேன்... பிச்சு! இனிமேல் சாக்லேட்ன்னு வாயால கூட அவ சொல்லக் கூடாது!'' என்று அதட்டிவிட்டு, ''தூங்கப் போ, ஸ்ரீ! வலி அப்பதான் குறையும்!'' என்றான் கண்டிப்பாக.

அரை மனதாய், கிடைக்காத சாக்லேட்டைப் பற்றியே எண்ணிக் கொண்டு, உறங்கிப் போனாள் ஸ்ரீ!

என்ன அதிசயம்!

அவளது மேனியில் இருந்த வீக்கங்கள், சிகப்பு தடுப்புக்கள், அதற்கும் மேலாய் எப்போதும் சொரிந்து கொண்டே இருக்க வேண்டும் போலிருக்கும் உணர்வு அனைத்துமே குறைந்திருந்தன! ம்ஹூம், மறைந்திருந்தன!

''வாவ்!'' என்று கூவிய ஸ்ரீயுடன் சேர்ந்து, அக்குடும்பமே குதூகலித்தது!

''புகழோட நம்பிக்கை வீண் போகலை! காலை முழுசும், பச்சைத் தண்ணி கூட கிடைக்காம அவன் விரதம் இருந்ததுக்கு, உரிய பலன் கிடைச்சிடுச்சு!'' என கோவர்த்தன் உரைக்கவும்,

''அப்படித் தான்பா எனக்கும் தோணுது! எவ்வளவு நாலா... இவரோட அப்பாயிண்ட்மெண்ட்காக முயற்சி பண்ணினேன் தெரியுமா? ரெண்டு நாள் முன்னாடி, அவரோட ஜூனியரே போன் பண்ணி, நாளைக்கு வந்து சாரைப் பாருங்கன்னு சொன்னார்!'' என்று வியந்தாள், இலா.

''அதுவும் பாரேன், அவர் ஸ்ரீயோட கையைக் கூடத் தொட்டுப் பார்க்கலை! உடனேயே, பல்லில தான் பிரச



சனைன்னு சொல்லு... ஒரே நாளில சரியாகிடுச்சு!'' என கோவர்த்தன் ஆச்சரியப்படவும் உடனே தூத்துக்குடி செல்ல வேண்டும்'' என்றாள் ஸ்ரீ.

''இப்பவேவா? அம்மாவும் புக்கியும் திருச்செந்தூர் போயிருக்காங்க!'' என இலா தயங்க,

''நோ! போணும்!'' என்று பிடிவாதம் பிடித்த மருமகளைக் கூட்டிக் கொண்டு, தூத்துக்குடி சென்றார் கோவர்த்தன்.

வரும் வழியாவும், அவள் வாய்க்குள்ளேயே இதையே சொல்லிப் பார்த்துக் கொண்டே வர, தேவையற்று மூக்கை நுழைக்காமல் பெரிய மனிதராய் பயணித்தார் பெரியவர்.

அங்கே போயும், திருச்செந்தூருக்கு காரை விடச் சொன்னாள் மருமகள்.

''இப்போ ரொம்ப கூட்டமா இருக்கும்மா, அவங்க எப்படியும் ராத்திரிக்கு வந்திடுவாங்க!'' என்று அவள் எவ்வளவோ கூறியும், ஸ்ரீக்குப் பொறுமை காக்க முடியவில்லை.

ஒரு நிலைக்கு மேல், மறுக்க முடியாமல் ஸ்ரீயை அழைத்துக் கொண்டு, திருச்செந்தூருக்கு அவர் வந்திறங்கிய நேரம், முருகன் சூரனை சம்ஹாரம் செய்வதற்காக வந்து கொண்டிருந்தான்.

கடவுளே!

என்ன கூட்டம்! என்ன கூட்டம்!

எள்ளைப் போட்டால் எண்ணெயாகி விடும் என்ற அளவிற்கு, அக்கடலோர அறுபடை வீட்டைத் தலைகள் சூழ்ந்திருந்தனர்!

இந்தக் கூட்டத்தில், புகழையும் மாதங்கியையும் எப்படி கண்டுபிடிப்பது?

Optimized by www.ImageOptimizer.net

அவர்கள் வருவதை கைப்பேசியில் கோவர்த்தன் தெரிவித்து இருந்தார் தான்!

"இங்க பயங்கர கூட்டம்பா! வேண்டாமே!" என்று மறுத்தது மட்டும் தான் கேட்டது!

அதன் பின்னர், "நீங்கள் தொடர்பு கொள்ளும் வாடிக்கையாளர் எண் தொடர்பு எல்லைக்கு வெளியே உள்ளார்" என்பதைத் தவிர, வேறெந்த சத்தமும் அதில் வரவில்லை.

"ஹோ மை காட்! என்ன மாமா இது... எவ்ளோ பீபில்!" என்று வியந்த ஸ்ரீயிடம்,

"நான் சொன்னதைக் கேட்டியா நீ? இதில் எப்படி புகழைக் கண்டு பிடிக்கிறது?" என்றார் கோவர்த்தன் ஆயாசமாக.

ஸ்ரீக்கும் புரிந்தது! சாத்தியமே இல்லாத விஷயம்!

முகம் முழுக்க ஏமாற்றத்துடன் நின்றிருந்தவளை, ரட்சிக்கவென முருகன் தன் தாயிடம் வாங்கிய சூலாயுதத்துடன், சூரனை அழிக்க அவனது சின்னதியிலிருந்து புறப்பட்டு வெளியே வந்தான்!

"முருகா!" என்ற கூவலும்,

"அரோகரா!" என்ற கோஷமும் விண்ணைப் பிளக்க, ஆடி வந்த முருகனிடம் பார்வைத் திருப்பியவள், ஒரு நிமிடம் இமைக்க மறந்து போனாள்.

கைகள் தானாக மெலெழும்ப, மனம் மெய்யுருகி நின்றது!

"என்ன ஒர தெய்வீகம்! அந்தக் கண்கள்... ஆயிரமடி தூரத்தில் இருந்தும் பார்ப்பவரின் கண்களைத் துளைத்துச் செல்கின்றனவே!" என்று வியந்தவள்,

"என் கணவனிடம் என்னைச் சேர்த்துவிடு, முருகா! அவனை நான்... நீ சூரனை சம்காரம் செய்வதற்குள்



கண்டுவிட வேண்டும்!" என்று வேண்டுதலை, வேண்டுகோளை விடுத்து நின்றது மனம்!

அவள் கண் திறந்த வினாடி, "ஸ்ரீ... புகழ் மாதியும் நல்ல தண்ணிக் கிணத்து கிட்ட இருக்கான்கலாம்! நம்ம கம்பெனில வேலை பார்க்கிற ஒருத்தர் சொன்னார்!" என்றார் கோவர்த்தன்!

தெய்வ சங்கல்பமோ அல்லது தற்செயலாய் நடந்ததோ, அது தெய்வத்தின் மீது நம்பிக்கை வைப்போரைப் பொறுத்து, மாறுபடும் அல்லவா!

தெய்வங்கள் பலவகை இருப்பினும், மனதின் நம்பிக்கையே இங்கு முக்கியப் பங்கு வசிக்கிறது! சிலருக்கு, நம்பிக்கையை வைக்க ஓர் இடம் தேவைப்படுகிறது... அது தெய்வமாகிப் போகிறது! வேறு சிலரோ, தெய்வமில்லை என்ற கூற்றை நிருபிப்பதற்காகவே, தங்களது செயல்களைக் கவனத்துடன் செய்வதால், அப்போதும் நம்பிக்கை கை கூடியே விடுகிறது! மனிதர்கள் பல விதம், ஒவ்வொருவரும் ஒரு விதம்!

இங்கு ஸ்ரீயோ, முருகன் மேல் கொண்ட பக்தி பாதியும், கணவன் மேல் கொண்ட காதல் மீதியுமாய் முன்னேறினாள்!

முருகன் சூரனை முதல் சுற்றி பந்தாடிவிட்டு வந்த போது, ஸ்ரீ நல்ல தண்ணீர் கிணற்றை நெருங்கியிருந்தாள்! ஆனால், கண்ணுக்கு எட்டிய தலைகள் எல்லாம் கணவனாய் இருக்கவில்லை!

இரண்டாம் சுற்றில், கந்தன் சூரனை ஒரு கை பார்த்துவிட்டு, மீண்டு வந்தபோது, மாதங்கியின் தலையோ என்ற சந்தேகம் எழும்ப, ஓர் இடத்தைக் குறி வைத்து முன்னேறினாள், அப்பாவை!

மூன்றாம் சுற்றில், முருகன் சூரனை நெருங்க, ஸ்ரீ புகழிற்கு இரண்டு பேர் தள்ளி நின்றிருந்தாள்!

Optimized by www.ImageOptimizer.net

உமைபாலன் அரக்கனின் தலையைக் கொய்ய,

''அரோகரா!''

''அரோகரா!''

''முருகனுக்கு அரோகரா!'' என்ற கோஷம் அக்கடலை நிறைக்க,

அக்கூச்சலுக்கு இடையே,

''புகழ்ழ்ழ்ழ்!'' என்ற ஸ்ரீயின் அழைப்பு, காற்றைக் கிழித்துக், கணவனின் செவி நிரம்பியது!

''புகழ்!'' ''புகழ்!'' ''புகழ்!'' என்ற அவளது அழகு தமிழின் பின்னணியில், அழகன் முருகனின் வேல் பட்டு, சூரனின் தலையிலிருந்து சேவல் பறந்து வர,

''அவன் மேல் நான் கொண்ட காதலால் இங்கு இருப்பதாய் கூறினேன்! அது போல், அவன் என் மீது காதல் கொண்டானா?'' என்று ஸ்ரீயின் மனதோரத்தில் புதைந்திருந்த சிறு சந்தேகத்தையும் அந்தக் கந்தசஷ்டி விழா களைந்து எரிந்தது!


தமிழ் கடவுளாம் முருகனின் சந்நிதியில், தமிழின் அழகாம் 'ழ'கரத்தை, அவள் சரியாக உச்சரிக்க, அவர் களுள் இருந்த சிறு உறுத்தலும் கரைந்து போனது!

''புகழ், புகழ்!'' என அவள் வாயாரக் கூப்பிட்டு மகிழ, புகழோ தனது லட்டு பேபியின் முகத்தில் மீண்டு வந்த அழகில் லயித்து நின்றான்!

இதே லயிப்பும், காதலும், பக்தியும், பாசமும் அவர் களது வாழ்வில் நீக்கமற நிறைந்திருக்க வேண்டும் என்ற பிரார்த்தனையை முருகனிடம் மாதங்கியும் கோவர்த் தனும் வைக்க, அந்த வேண்டுதல் நிறைவேற வேண்டு மென நாமும் வாழ்த்தி, விடை பெறுவோம்!

✱

Optimized by www.ImageOptimizer.net




Optimized by www.ImageOptimizer.net